உ

கணபதி துணை

## வேலணை மேற்கு பெரியபுலம்
## மகாகணபதிப்பிள்ளையார் (முடிப்பிள்ளையார்) ஆலயம்

# மகாகும்பாபிஷேகம்



University of Jaffna
235.405
VEL
107500(AR; Main)

# சிறப்பு மலர்

சுக்கில வருஷம் பங்குனி 29 (11-04-1990)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"MLS"

''கும்பாபிஷேகம் காண்போம்
கோடிபுண்ணியம் பெறுவோம்''

## நீயாக நானிருந்தால்?

உலகத்து மாந்தரெல்லாம் உன்னை இங்கே
உண்டென்றும் இல்லையென்றும் உரக்கப்பேசிக்
கலகத்தில் வாழ் நாளைக் கழிக்கின்றார்கள்!
கடவுளிங்கே பலவென்று கண்டவர்போல்
பல கற்றும் சொல்லுபவர் வாழுகின்றார்!
பார்த்தபடி இருக்கின்றாய் பதற்றமின்றி!
நிலவுலகில் கண்ணெதிரே தோன்றி உண்மை
நிலையுரைத்தால் உன் வாய்முத் துதிர்ந்தா போகும்?

-சௌந்தரா கைலாசம்.

MALAVANS - மாலவன்ஸ்

Importers, Exporters and
Commission Agents.

214, 4th CROSS, St.
COLOMBO-11.
Telephone: 27951.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதிதுணை

வேலணை மேற்கு, பெரியபுலம்,

மகா கணபதிப்பிள்ளையார் (முடிப்பிள்ளையார்) ஆலயம்.

## மகா கும்பாபிஷேக

# சிறப்பு மலர்

**மகா கும்பாபிஷேகம்**

சுக்கில ஆண்டு பங்குனித்திங்கள் 29-ம் நாள் புதன்கிழமை.

**(11 - 04 - 1990)**

**மண்டலாபிஷேகம்**

பிரமோதூத ஆண்டு, வைகாசித்திங்கள் 11-ம் நாள் வெள்ளிக்கிழமை.

**(25 - 05 - 1990)**

பிரதம மலராசிரியர்:

செ. பாலச்சந்திரன்

வெளியீடு:

ஆலய பரிபாலன சபை.

25 - 05 - 1990

University of Jaffna
107500
Library

107500

ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் ஆசிரியர் குழு

※ **திரு. செ. பாலச்சந்திரன்**
சிரேஷ்ட விரிவுரையாளர், புவியியற்றுறை,
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*
*(பிரதம மலராசிரியர்).*

※ **சைவப்புலவர். மு. திருஞானசம்பந்தபிள்ளை,**
*அதிபர், இந்து ஆரம்ப பாடசாலை, யாழ்ப்பாணம்.*

※ **திரு. பொன். அருணகிரிநாதன்**
*உபஅதிபர், கணேச வித்தியாசாலை, நாரந்தனை ஊர்காவற்றுறை.*

# ஆலய பரிபாலன சபை

## 1. பதவி தாங்கும் உறுப்பினர்கள்

1: தலைவர்: ச. நல்லநாதன், *(ஒய்வு பெற்ற தபாலதிபர்).*
2. *துணைத் தலைவர்:* க. இராசகோபால்,
3. *செயலாளர்:* யா. இராமநாதன்,
4. *துணைச் செயலாளர்:* பொ: கமலநாதன்,
5. *பொருளாளர்:* மு. மகேந்திரன் *(ஆசிரியர்)*
6. *துணைப்பொருளாளர்:* ப. ஆரூரன் *(ஆசிரியர்),*

## 2. பதவி தாங்கா உறுப்பினர்கள்

7. ந. கணேசபிள்ளை,
8. சி. அருளம்பலம்,
9. பொ. மாசிலாமணி,
10. ச. சத்தியானந்தர்,
11. ஆ. பொ. சண்முகநாதன்,
12. க. நற்குணசீலன்,
13. சி. சாம்பசிவம்;
14. தி. பாலச்சந்திரன்.

ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. மஹோற்சவ உபயகாரர்கள் சார்பில் உறுப்பினர்கள்

15. க. பேரின்பநாயகம் - கொடியேற்றத் திருவிழா,
16. நா. முத்துலிங்கம் - 2-ம் திருவிழா,
17. அ. வரதராசா - 3-ம் திருவிழா,
18. க. செல்வநாயகம் - 4-ம் திருவிழா,
19. சி. சுப்பிரமணியம் - 5-ந் திருவிழா,
20. கு. இராமச்சந்திரன் - 6-ம் திருவிழா,
21. ம. விநாயகமூர்த்தி - 7-ம் திருவிழா,
22. ச. கணேசலிங்கம் - வேட்டைத்திருவிழா,
23. சி. கந்தசாமி - சப்பரத் திருவிழா,
24. ம. அம்பிகைகுமாரன் (அல்லது) மு. குருநாதலிங்கம் - தேர்த்திருவிழா,
25. சு. ஏரம்பு - தீர்த்தத்திருவிழா.

### கணக்காய்வாளர்கள்

1. பொ. அருணகிரிநாதன் (ஆசிரியர்)
2. மா. இலிங்கப்பிள்ளை (ஓய்வு பெற்ற ஆசிரியர்)

## மஹோற்சவ உபயகாரர்கள்

1. கொடியேற்றத் திருவிழா - அ. கணபதிப்பிள்ளை குடும்பத்தினர்
2. இரண்டாம் திருவிழா - நா. முத்திலிங்கம் (உறவினர் உட்பட)
3. மூன்றாந் திருவிழா - க. ஆ. அம்பலவாணர் குடும்பத்தினர்
   அ. பொன்னம்பலம் குடும்பத்தனர்
4. நான்காம் திருவிழா - க. செல்வநாயகமும் பங்காளரும்
5. ஐந்தாந்திருவிழா - வி. மு. இராசரத்தினம்
   தி. பாலச்சந்திரன், சி. சுப்பிரமணியமும்,
   மற்றும் பங்காளர்களும்,
6. ஆறும் திருவிழா - கு. இராமச்சந்திரனும் பங்காளரும்,
7. ஏழாந்திருவிழா - நா. பரஞ்சோதிநாதனும், உறவினரும்.
8. வேட்டைத்திருவிழா - ம. இராசரத்தினம்,
   வே. செல்லத்துரை,
   சி. சாம்பசிவம்,
   ச. கணேசலிங்கம்,
   நா. மு. சண்முகம், மற்றும் பங்காளர்கள்,
9. சப்பரத்திருவிழா - சி. கந்தசாமியும் பங்காளரும்,
10. தேர்த்திருவிழா - பாக்கியலட்சுமி குமாரசுவாமிப்பிள்ளை,
    பாக்கியலட்சுமி மயில்வாகனம்
11. தீர்த்தத்திருவிழா - ஏரம்பும் உறவினர்களும்
    ந. குருசாமியும் ,,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் முகம்

*வித்தக விநாயக விரைகழல் சரணே!*

சைவமும் தமிழும் ஒருங்கே வளர்ந்து சிறப்புற்ற இடங்களுள் வேலணை மேற்கும் ஒன்று. இங்கு விக்கினங்கள் தீர்க்கும் விநாயகன் எழுந்தருளியுள்ள திருப்பதி, பெரிய புலம் மகா கணபதிப்பிள்ளையார் (முடிப்பிள்ளையார்) ஆலயம். பெரியபுலம் முடிப்பிள்ளையார் நமக்கெல்லாம் குலதெய்வம். கோயில் கட்டு கும்பாபிஷேகம் செய்பவர்களும் அதைத் தரிசித்த தலைமுறையினரும் கொடுத்து வைத்தவர்கள். அத்தகைய மகா கும்பாபிஷேகம், பெரியபுலம் முடிப்பிள்ளையாருக்கு நடந்தேறியது. கோயிலைப் புதுக்கியும் பெருக்கியும் செய்யப்பட்ட புனராவர்த்தனப் பிரதிஷ்டா திருக்குடத் திருமஞ்சன மகா கும்பாபிஷேகம் கடந்த சுக்கில ஆண்டு பங்குனித் திங்கள் 29-ம் நாள் புதன்கிழமை (11 - 04 - 1990) மங்களகரமாக நடந்தேறியது. தொடர்ந்து நாற்பத்து நான்கு நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று, இன்று நாற்பத்தைந்தாம் நாள், நிகழும் பிரமோதூத வருடம் வைகாசித்திங்கள் 11-ம் நாள் வெள்ளிக்கிழமை (25-05-1990) யுடன் மண்டலாபிஷேகப் பூர்த்தி விழா நிறைவெய்துகின்றது. இவற்றினை அடியொற்றி இம்மலர் மகா கும்பாபிஷேக சிறப்பு மலராக எம்பெருமானின் பாதார விந்தத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இதற்கு முன் முடிப்பிள்ளையாருக்கு பல மகா கும்பாபிஷேகங்கள் நடைபெற்று இருந்தாலும் இம்முறையே மகா கும்பாபிஷேக சிறப்பு மலர் வெளியிடப்படுகிறது என்பதையிட்டு நாம் பரவசப்பட வேண்டும். பல சிறந்த திருப்பணிகள் நிறைவெய்தி இரு பக்கமும் எடுப்பான மணிக் கோபுரங்களுடன் இராஜ கோபுரத் திருப்பணியை நினைவுறுத்திக் கொண்டு கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது எமது ஆலயம். இராஜ கோபுரத்தில் இருந்து பார்வையைத் திருப்பினால் சித்திரத் தேர் திருப்பணி ஞாபகம் வருகின்றது. ஆம்! அடுத்த சிறப்பு மலர் இராஜ கோபுர மகா கும்பாபிஷேக சிறப்பு மலராகவும் சித்திரத்தேர் சிறப்பு மலராகவும் அமைய ஐங்கரன் அருள் புரிவாராக.

மகா கும்பாபிஷேகத்தின் பொருட்டு ஒரு சிறப்பு மலர் வெளியிட வேண்டும் என்னும் பெரு நோக்கில் பொதுவாக ஆலய பரிபாலன சபையினரும் சிறப்பாக ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ சோமாஸ்கந்த சர்மா அவர்களும், ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு. ச. நல்லநாதன் அவர்களும், பொருளாளர் திரு. மு. மகேந்திரன் அவர்களும் செயற்பட்டார்கள். அதன் பலனாக பல்சுவையமுதம் கொண்ட இச் சிறப்புமலர் இன்று பெரிய புலத்தானின் அடியார்களின் கரங்களில் தவழ்கின்றது. ஆலயத்துக்கும் அதன் வளர்ச்சிக்கும், ஆலயம் அமைந்துள்ள சூழலுக்கும், வருங்கால தலைமுறைகளுக்கும் இம் மலர் பயன்பட வேண்டும் என்பதே முக்கிய நோக்கமாகும்.

இம் மலர் பல்சுவைத்தேனை பிலிற்றுகின்றது. ஆரம்ப இதழ்கள் சிவாச்சாரியார்கள், சைவாச்சாரியார்கள், அறிஞர்கள், அமைச்சர் ஆகியோரின் ஆசியுரைகளையும் வாழ்த்துரையையும் கொண்டுள்ளன. ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், ஸ்ரீலஸ்ரீ கை. திருஞானசம்பந்தக் குருக்கள், சிவஸ்ரீ ச. பா. வைத்தியநாத சிவாச்சாரியார், பிரம்மஸ்ரீ இ. சோமாஸ்கந்த சர்மா, பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் ஆகியோரின் ஆசியுரையையும்; மாண்புமிகு அமைச்சர் தேவராஜ், சிவத்தமிழ் செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி, அறிஞர் சோ. சிவபாதசுந்தரம் ஆகியோரின் வாழ்த்துரையையும் கொண்டு மலர்ந்துள்ளன.

பகுதி ஒன்றின் இதழ்கள் ஆலயம்; அதன் சுற்றுடல்; ஆலயம் பற்றிய கர்ண பரம்பரைச்செய்திகள், ஆலயத்தின் வரலாறு வளர்ச்சி பற்றியவையாக இருக்கின்றன. இவை ஆலயத்தின் தொன்மையையும் சிறப்பையும் எடுத்துக் காட்டுவன ஆகும். ஆலயத்தின் வரலாறு, வளர்ச்சி பற்றி அறிய விரும்புபவர்களுக்கு இவை ஒரு நல்விருந்து. இன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் ஆலய தொண்டே தம்முடைய இலட்சியமென இயங்கிக் கொண்டிருக்கும் அன்னதானசபையினரும் இந்துஇளைஞர்மன்றத்தினரும் தமது அபிலாஷைகளை எடுத்துக் கூறியுள்ளனர்.

பகுதி இரண்டின் இதழ்கள் மிகப் புனிதமானவை. இவை எம் பெருமான் மேல் பாடப்பட்ட திரு ஊஞ்சல், திருப்பதிகங்களைக் கொண்டுள்ளன. காலத்தால் முந்திய பக்தி இலக்கியங்களான ஔவையார் அருளிய விநாயகர் அகவல்; நக்கீரதேவர் அருளிய விநாயகர் அகவல்; காசிப முனிவர் அருளிய விநாயக கவசம் ஆகியனவும் இங்கு இடம் பெறுகின்றன. இறுதியில் வாழ்த்துரையும், பாரதியாரின் அகவல்களில் இருந்து சில வரிகளும் அமைகின்றன.

பகுதி மூன்றின் இதழ்கள் ஆய்வு ரீதியானவை. இங்கு உலக ரீதியில், தென்னாசியாவில், இந்தியாவில், இலங்கையில்,வடக்கு கிழக்கில் இடம் பெற்று வந்த விநாயகர் வழிபாடு விரிவாக எடுத்துக் காட்டப்படுகிறது. விநாயக தத்துவம் விரிவுபடுத்தப் பட்டுள்ளது. மகா கும்பாபிஷேகத்தை தரிசிப்பதுடன் கும்பாபிஷேக முறைகளையும் விளக்கத்தையும் பெறக் கூடியதாக ஒரு கட்டுரை அமைகிறது. இந்துக்களின் பாரம்பரிய வாழ்வில் பிராமணர்கள் இன்றியமையாதவர்கள். கிறிஸ்து சகாப்தத்துக்கு முன் ஈழத்தில் அவர்களின் நிலை ஆராயப்படுவதுடன் வேதங்களின் வழி வந்த இந்து பண்பாட்டு மரபுகளும் நோக்கப் படுகின்றன. இன்றைய சமுதாய வாழ்வில் கோயில்களின் பங்களிப்பு அவசியம். இது எவ்வாறு அமைய வேண்டும் என்றும் கூறப்படுகிறது. ஆலயம் நிலைக்க வேண்டுமானல் ஆலயம் அமைந்துள்ள பிரதேசம் அபிவிருத்தி செயயப்பட வேண்டும். இயற்கை வளங்கள், முக்கியமாக நீர் வளம் பேணப்பட வேண்டும் என்பதும் எடுத்துக் காட்டப்படுகிறது. நிறைவாக எம் பெருமானின் ஆலய திருப்பணி பற்றி ஒரு கண்ணோட்டம் இடம் பெறுகிறது.

இம் மலர் மலர ஆலய பரிபாலன சபையினர், பல வழிகளிலும் நிதியுதவிய ஐங்கரன் அடியார்கள், தம் படைப்புகளை தந்துதவிய அறிஞர்கள் ஆகியோர் காரணமாகின்றனர். மலர் ஆசிரிய குழுவில் இடம் பெற்றுள்ள சைவப் புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை, திரு. பொன். அருணகிரிநாதன் ஆகியோரும் தமது பங்களிப்பைச் சிறப்பாகச் செய்துள்ளனர். சமயத்துக்கு மலர் வெளிவர யாழ்ப்பாணம் - கொழும்பு விஜயா அழுத்தகத்தினர் சேவையாற்றியுள்ளனர். யாழ்ப்பாணம், விஜயா அழுத்தக முகாமையாளர் திரு. ப. அரசரத்தினம் அவர்களும், ஊழியர்களும் சிறப்பாகத் தமது பங்களிப்பைச் செய்துள்ளனர். லங்கா போட்டோ, சித்ராலயா நிறுவனத்தினர் திண்மப் படங்களை ஆக்கித்தந்தனர். இப்படியாக பலரின் முயற்சியால் இச்சிறப்பு மலர் மகா கணபதிப்பிள்ளையாரின் திருவடிக் கமலங்களில் காணிக்கையாக்கப் படுகிறது. இம் மலரில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் மற்றெல்லோருக்கும் அவரது திருவருள் கிட்டுவதாக. நீண்ட ஆயுளும், ஆழமான அறிவும், குறையாத செல்வமும், மாறுத பக்தியும் பெற்று பெருவாழ்வு வாழ எம் பெருமான் திருவருள்பாலிக்கட்டும். நமது இனம், மொழி, பண்பாடு, பிரதேசம் சிறக்க எல்லாம் வல்ல எம் பெருமான் திருவருள் புரியட்டும்.

'விக்கின விநாயக தேவே! ஓம்!! ஓம்!!!

பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார் ஆலயம்,
வேலணை மேற்கு. 25 - 05 - 1990.

**செ. பாலச்சந்திரன்**
(பிரதம மலராசிரியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரின் இதழ்கள்


★ மலர்க்குழு — பக்கம்
★ ஆலய பரிபாலன சபை
★ மலர்முகம்
1. வாழ்த்துரை திரு. ச. நல்லைநாதன், ஆலய பரிபாலன சபைத் தலைவர்,
2. ஆசியுரை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், 01
3. நல்வாழ்த்துச் செய்தி - மாண்புமிகு. பி. பி. தேவராஜ் 02
4. ஆசியுரை - சிவஸ்ரீ. ச. பா. வைத்தியநாத சிவாச்சாரியார் 03
5. ஆசியுரை - பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் 04
6. வாழ்த்துரை - சிவத்தமிழ் செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி 05
7. திருத்தொண்டு வளர்க- ஸ்ரீலஸ்ரீ. கை. திருஞான சம்பந்தக் குருக்கள் 06
8. வாழ்த்துரை - அறிஞர் சோ. சிவபாதசுந்தரம் 07
9. ஆசியுரை - பிரம்மஸ்ரீ. இ. சோமஸ்கந்தசர்மா 08

பகுதி ஒன்று

1.1. முடிப்பிள்ளையார் கோயில் ஓர் அனுபவ நோக்கு:- திரு. ச. மகாலிங்கம், 09
1.2. வேலணை மேற்கில் சைவமும் தமிழும் :- திரு. பேர. சந்திரசேகரம் 13
1.3. ஆலயமும் கர்ணபரம்பரைச் செய்திகளும் :- திரு. பொன். அருணகிரிநாதன் 16
1.4. ஐங்கரன் அன்னதானசபை :- திரு. செ. தேவராசா 19
1.5. ஆலயமும் இந்துஇளைஞர் மன்றத்தின்பணிகளும் - திரு. இ. கிருபானந்தன் 20
1.6. பெரிய புலம், மகா கணபதிப்பிள்ளையார் ஆலயம்; வரலாறும் வளர்ச்சியும், :- திரு. செல்லத்துரை பாலச்சந்திரன் 23

பகுதி இரண்டு

2.1. பெரியபுலம் மகாகணபதிப்பிள்ளையார் பேரிற் பதிகம் :- ஸ்ரீமத் க. சரவணமுத்துப் புலவர் இயற்றியது 30
2.2. பெரிய புலத்து மகா கணபதிப்பிள்ளையார் பதிகம்:- திரு. ஆ. தில்லைநாதப் புலவர் இயற்றியது 36
2.3. மகாகணபதிப்பிள்ளையார் திருவூஞ்சல்:- ஸ்ரீமான். வி. கந்தப்பிள்ளை இயற்றியது 41
2.4. விநாயகர் அகவல்:- ஒளவையார் அருளியது 46
2.5. விநாயகர் திருவகவல்:- நக்கீரதேவர் அருளியது 48
2.6. விநாயகர் கவசம்:- காசிப முனிவர் அருளியது 52
2.7. வாழி மாநிலம், மன்னுயிர் வாழியே:- திரு. ச. சுப்பிரமணியம் 54
2.8. பாரதியார் பாடலிலிருந்து 56

பகுதி மூன்று

3.1. கணபதி வழிபாட்டு நெறி:- திருமதி சந்திரலேகா வாமதேவா 57
3.2. விநாயக தத்துவம்:- பேராசிரியர் வி. சிவசாமி 68
3.3. கும்பாபிஷேக முறைகளும் விளக்கமும்:- சிவஸ்ரீ. ஐ. கைலாசநாதக் குருக்கள் 72
3.4. வேதங்களின் வழிவந்த இந்துப் பண்பாட்டு மரபுகள் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் 80
3.5. கிறிஸ்து சகாப்தத்துக்கு முன் ஈழத்தில் வாழ்ந்த பிராமண குலங்கள் பற்றிய இலக்கியச் சான்றுகள்:- கலாநிதி. சி. க. சிற்றம்பலம் 81
3.6. இடஞ் சார்பு அபிவிருத்தித் திறமுறைகள்:- பேராசிரியர். பொ. பாலசுந்தரம்பிள்ளை 88
3.7. பண்பாட்டுத் தரத்துக்கு கோயில்களின் பங்களிப்பு:- கவிஞர். இ. முருகையன் 98
3.8. நீர்வளத்தைப் பேணுவோம்:- திரு. செல்லத்துரை பாலச்சந்திரன் 109
3.9. திருப்பணி வளர்ச்சிக் கண்ணோட்டம்:- திரு. பொ. கேதாரநாதன் 115
★ இதயம் கனிந்த நன்றி உரித்தாகுக: தி. மு. மகேந்திரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதிதுணை

வேலணை மேற்கு,

பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார் ஆலய பரிபாலன சபைத் தலைவர்

திரு. சே. நா. ச. நல்லைநாதன் அவர்கள் வழங்கிய

# வாழ்த்துரை

"ஆனைமுகத்தான் அடியினைத்தான் தொழ
ஞான மணைத்தும் வரும்.
வேழ முகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுந்து வரும்"

முடிப்பிள்ளையார் வேலணை மேற்கு மக்களின் கண்கண்ட முதற் தெய்வம். அவர்களின் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் பின்னிப் பிணைந்துள்ளவர் அவர். அவரின் திருவிளையாடல்கள் எண்ணற்றவை. வேண்டுவார் வேண்டுவன அவரவர் தகைமைக் கேற்ப அருள்பவர்.

முடிப்பிள்ளையார் குடி கொண்ட ஆலயம் மகத்தானது. ஆலய வளர்ச்சிப் பாதையில் காலத்துக்குக் காலம் பரிபாலன சபையினர் பல திருப்பணிகளைச் செய்து வந்துள்ளனர். கடந்த காலங்களில் பரிபாலன சபைத் தலைவர்களாக கடமையாற்றிய சே. பொன்னையா, சே. கந்தையா, க. இராசதுரை ஆகியோரின் காலங்களில் அண்மைக் காலத் திருப்பணிகள் இடம்பெற்றன.

கடந்த ஒரு சில வருடங்களில் விரும்பியோ விரும்பாமலோ சில துரதிஷ்ட சம்பவங்கள் நடைபெற்றுவிட்டன. பரிபாலன சபைத் தலைவராக இருந்த க. இராசதுரை காலமாகியபின் ஆலய நிர்வாகத்தில் மாற்றம் தேவைப்பட்டது. இதற்கமைய வேலணை மேற்கு நல்லிணக்க சபையின் முடிவின்படி தற்போதைய பரிபான சபையில் அங்கம் வகிக்கும் பெரும்பாலானோரையும் அதன் முன்பு இயங்கி வந்த பரிபாலன சபையினரில் சிலரையும் கொண்டு 1986-ம் ஆண்டு எனது தலைமையின்கீழ் ஆலய பரிபாலன சபை அமைக்கப்பட்டது. நிர்வாகம் சிறிது காலம் சுமுகமாக நடைபெற்றது. ஆயினும் பின்பு பரிபாலன சபைக்குள் கருத்து வேற்றுமைகள் தலைதூக்கின. இதன்காரணமாக பொதுக்கூட்டத்தைக் கூட்டி நல்லிணக்கச் சபையின் முடிவிற்கமைய 1988-ம் ஆண்டு திரும்பவும் பரிபாலனசபை தெரிவு செய்யப்பட்டது. இந்த மகாசபை ஐங்கரனுக்கு மகாகும்பாபிஷேகம் செய்வதற்கும் ஆணையைப் பிறப்பித்தது.

மகா சபையின் தீர்மானங்களுக்கு அமைய இன்றைய பரிபாலன சபை தனது செயற்பாடுகளை ஆரம்பித்தது. இதன் முதற்படியாக சுவாமியைப் பாலஸ்தானம் செய்தனர். பொதுக்கூட்டத்தில் சமூகம் தந்தவர்கள் கணிசமான நிதியைத் தருவதாக வாக்களித்து இருந்தனர். அதைத்தொடர்ந்து ஊர்மக்களும் மிகத்தாராளமாக நிதியுதவி வழங்கினர். கோவிலில் எஞ்சியுள்ள கருங்கல் திருப்பணியையும் நிறைவேற்றவும் தீர்மானித்தோம். பல அடியார்கள் தாம் பரிவார மூர்த்திகளுக்குக் கோயில் கட்டுவித்து விக்கிரங்களையும் செய்வித்துக் கொடுக்கவும் முன்வந்தனர்.

நிதி தருவதாக வாக்களித்திருந்தும், பரிவாரமூர்த்திகளுக்குக் கோயில்கள் கட்ட முன்வந்தும் தேவைப்படும்போது பணம் கைக்கு வரவில்லை. திருப்பணி வேலைகளுக்கு அமர்த்தப்பட்ட கருங்கற் தொழிலாளர் மற்றும் நிர்மாண வேலைத் தொழிலாளர் தொடர்ந்து வேலையில்லாவிட்டால் வேறு வேறு இடங்களில் அமர்த்தப்பட்டுவிடுவார்கள். இப்போது எல்லா ஆலயங்களும் புனருத்தாரணம் செய்யப்படும் வேளை. இதை மனதிற் கொண்டு எல்லா வேலைகளையும் ஆரம்பிக்கத் தீர்மானித்தோம். இந்நேரத்தில் அருமருந்து போல் தன் சொந்தப்பணத்தை முன்விட்டு, தனது வாகனத்தைத் தேவைப்படும்போதெல்லாம் உபயோகப் படுத்தியதல்லாமல் தன்னுடைய தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களை வேண்டிய நேரமெல்லாம் கோவில் வேலையில் ஈடு

படச் செய்து, தன் கருமங்களில் செலவிடும் நேரமெல்லாம் ஓயாது கோவிலடியில் வரு கைதந்து கும்பாபிஷேகத்தை இத்தனை விம ரிசையாக நடாத்தக் காலாயிருந்தது எங் கள் பொருளாளர் திரு. மு. மகேந்திரன். அந்தோடல்லாமல் பொதுசன தொடர்பில் அவர்காட்டிய வல்லமை ஒரு அகில இலங் கைப் பரிசு கொடுத்தாலும் போதாது. அண்ணை, தம்பி, மச்சான், அத்தான், என்று எவரையும் கவரும் விதத்தில் பொதுமக்க ளுடன் பழகி அவர்களுடைய ஒத்தாசை யைப் பெற்று திருப்பணி வேலையை நிறை வேற்ற வேறு எவருக்கும் இயலாது. இத் தனைக்கும் தற்பெருமை ஏதுமின்றி, தன்னை விளம்பரப்படுத்திக் கொள்ளாமல் பின்னணி யில் மறைந்திருந்து கருமமாற்றிய கர்மவீரன் என்றால் மிகையாகாது.

எங்கள் முடிப்பிள்ளையார் தன் திருப்பணிக ளுக்குத் தேவைபடும்போது அதற்கேற்றவர் களை முன்வரச் செய்து அவற்றை நிறை வேற்றுவது அனைவரும் அறிந்தது.

தற்போதைய நிர்வாகசபையின் ஒத்து ழைப்பும் ஒற்றுமையும் கும்பாபிஷேகம் இனிது நிறைவேற இன்னொரு காரணம். கோவில் பிரதம குருவின் அயராத உழைப் பும் ஊக்குவிப்பும் இல்லையெனில் கும்பாபி ஷேகம் செய்விக்கும் எண்ணமே தோன்ற மலிருந்திக்கலாம்.

இத்தனைக்கும் மேலாக ஐங்கரன் அடி யார்கள் செய்த தொண்டு மிகப் பெரியது. இந்த ஆலயம் அவர்களுடையது. அவர்க ளுடைய ஆன்மஈடேற்றமே ஐங்கரன் விரும் புவது. கோவில் தொண்டு செய்ய முன்வரு பவர்கள் மனதில் அடியார்களுடைய நன்மை என்றும் மனதில் இருத்தல் வேண்டும்.

நிர்மாண வேலையிலும் புனருத்தாரண வேலையிலும் ஈடுபட்டிருந்த அனைவரும் தங் கள் முழுத் திறனையும் செலுத்தித் திருப்பணி களை நிறைவேற்றி காண்போர் வியக்கும்படி கோவிலை அழகுபடுத்தியுள்ளனர்.

சிவாச்சாரியர்கள் கும்பாபிஷேகத்தை மிகச் சிறப்பாக நடாத்தித் தந்தமைக்கு நாம் என்றும் அவர்களுக்குச் கடமைப்பட் டுள்ளோம். அவர்கள் ஆலயத்திற்கு வந்து சிறப்பித்தது மனதிற்குப் பேருவகை கொ டுத்தது.

கணபதி துணை.

**திரு. சே. நா. ச. நல்லைநாதன்,**
(ஓய்வு பெற்ற தபாலதிபர்)
பெரியபுலம், மகாகணபதிப்பிள்ளையார் ஆலய பரிபாலன சபைத் தலைவர்.

திருக் கோவிலில்லாத திருவிலூரும்
திருவெண் ணீறணியாத திருவிலூரும்
பருக்கோடிப் பத்திமையால் பாடாவூரும்
பாங்கினொடு பல தளிகளில்லா வூரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதாவூரும்
விதானமும் வெண்கொடியுமில்லாவூரும்
அருப்போடு மலர் பறித்திட் டுண்ணாவூரும்
அவை எல்லாம் ஊரல்ல அடவிகாடே.

-அப்பர் சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் திருவுருவம்

திருவருளே திருமேனியாக உள்ளவர் விநாயகன், சர்வ வல்லபரான சிவனிடமிருந்து முதன்முதலாக எழுந்த ஒலியான "ஓம்" என்னும் வரிவடிவமே விநாயகனின் திருவுருவமாகும். யானை முகமும் மூன்று கண்களும், இரண்டு விசாலமான செவிகளும் ஒற்றைக் கொம்பும், ஐந்து கரங்களும், தொந்தி (பெரிய) வயிறும், இரண்டு குறுகிய வடிவமான திருவடிகளும் (பாதங்கள்) விநாயகரது திருவுருவங்களாகும். யானைமுகம் பிரணவ வடிவினன் என்பதையும் மூன்று கண்கள் சூரிய, சந்திர அக்கினிகளையும், ஐந்து கரங்களும் தானே ஐந்து கிருத்தியங்களையும் செய்பவன் என்பதையும் இரண்டு விசாலமான செவிகளும் ஆன்மாக்களை மலவாதனை தாக்காது காத்து வினைவெப்பத்தை போக்கியருளும் என்பதையும் தொந்தி வயிறு எல்லா அண்டங்களும் உயிர்களும் தனக்குள்ளேயே அடங்கியுள்ளன என்பதையும் உணர்த்துகின்றன.

## பிள்ளையார் சுழி

பிரணவத்தின் சொரூபமானவன் விநாயகன் என்பதைத் துதிக்கைவெளிப்படுத்துகின்றது. நாதம், விந்து அகரம், உகரம், மகரமாகிய ஐந்து உறுப்புக்களையும் கொண்டது பிரணவம். முதலாவதான நாதம் தண்ட வடிவமானது. அடுத்து விந்து, விட்ட வடிவமானது. இவ்விரு உறுப்புகளும் சேர்ந்தே பிள்ளையார் சுழி (உ). இது நாதவிந்துக்களின் வடிவமாகும். விநாயகனின் துதிக்கையே நாதவிந்து வடிவம். மற்றைய எழுத்துக்கள் விநாயகனின் முகத்திலடங்கும். இதனுலேயே எதைத் தொடங்கும் போதும் விநாயகரை முதலில் வணங்குவதுடன் எதனையும் எழுதத் தொடங்கும்போதும் பிள்ளையார் சுழி போட்டு ஆரம்பிப்பதும் மரபாகிவிட்டது. 'கணபதி பூசை கைமேற் பலன்' என இது அழைக்கப்படலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

குருபாதம்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்

இரண்டாவது குருமஹா சந்நிதானம் - ஆதீன முதல்வர்

## நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்

# வழங்கிய ஆசியுரை

சைவ செம்மனச் செல்வர்களே!

வேலணை, பெரியபுலம் ஸ்ரீமஹா கணபதிப்பிள்ளையார் தேவஸ்தான மஹா கும்பாபிஷேகம் நிகழவிருப்பதறிந்து பேருவகை எய்துகிறோம். பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை எடுக்கப்படும் இக்குட முழுக்கு பெருவிழா, தவமுடையாருக்கே காணக்கிடைக்கும் திருக்காட்சியாகும். கும்பாபிஷேகம் காண்பது கோடிபுண்ணியம் மற்றும் குற்றம் பொறுக்காத மூர்த்திகள் போலல்லாது எமது பிழைகளை எல்லாம் பொறுத்து அருள் பாலிக்கும் கருணைமூர்த்தி விநாயகப் பெருமான். எந்தவொரு வழிபாடுகளிலோ சடங்குகளிலோ அவருக்கே முதற் பூஜையாற்றி அவைகளைத் தொடங்குகிறோம். யாழ்குடாநாட்டில் விநாயகப் பெருமானுக்கும் வைரவப் பெருமானுக்குமே அநேக ஆலயங்கள் அமைக்கப்பெற்றிருப்பது கண்கூடு. இதனால் சைவமக்கள் இம் மூர்த்திகளின் பால் வைத்திருக்கும் அசைக்க முடியாத பக்தியும் நம்பிக்கையும் வெள்ளிடமலை. ஓங்கார உருவான அவரது வடிவம் பல அரிய தத்துவார்த்தங்களை உள்ளடக்கி விளக்கும். மிக எளிய முறையில் வழிபடக் கூடிய மூர்த்தி விநாயகரே அவரைப் பிரதிஷ்டை செய்ய ஒரு மஞ்சள் உருண்டை, ஒரு கோமய உருண்டைபோதும், எனவே அவருக்கு நாம் எடுக்கும் விழாக்கள், கைங்கரியங்களின் அருமை, பெருமைகளை விளக்குவது எளிதல்ல. இவ்வாலயத்தில் மேலும்பல திருப்பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. இதற்கு அன்பர்கள் நிறையப் பொருள் உதவி புரிந்து இனிதே நிறைவு பெறச் செய்யவேண்டும்.

இதில் பங்கு கொள்ளும் அன்பர்களை உளமார வாழ்த்தி எல்லாம் செவ்வனே நிறைவுற விநாயகப் பெருமானின் பொன்னார் திருவடிகளைத் தியானித்து எமது நல்லாசிகளை வழங்குகிறோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

21-03-90

ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துசமய, கலாசார தமிழ் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்
மாண்புமிகு பி. பி. தேவராஜ் அவர்களின்

# நல்வாழ்த்துச் செய்தி

வினைகளைத் தீர்த்து வைப்பவர் வினாயகர். அந்த வினாயகருக்கு மறுபெயராக அமைந்த பெரியபுலம் மகா கணபதிப் பிள்ளையார் ஆலயம் மிகவும் பழமை மிகுந்தது என சொல்லக் கேள்விப்பட்டிருக்கின்றேன். ஊரில் கோவில் அமைத்து மகா கும்பாபிஷேகம் செய்வதும் / செய்விப்பதும் மகா புண்ணியங்களில் ஒன்றாகும். இந்த வகையில் பெரியபுலம் மகா கணபதிப் பிள்ளையார் ஆலய திருப்பணிகள் முடிவுற்று மகா கும்பாபிஷேகம் 11-04-90 புதன்கிழமை காலையில் நடைபெறுவதையிட்டு மிகவும் மனமகிழ்ச்சியடைகிறேன். இப்பணி சிறக்க அல்லும் பகலும் உழைத்த ஆலய பரிபாலன சபையினரையும் இவ்வூர் பொது மக்களையும் நான் மனதாரப் பாராட்டுகின்றேன்.

இக் கும்பாபிஷேகத்தையொட்டிச் சிறப்பு மலர் வெளியிடுவது மிகவும் வரவேற்கத்தக்கது. மகா கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற்று ஆலயம் சுடர்விட்டுப் பிரகாசிக்க மகா கணபதியின் திருவருளை வேண்டுகிறேன்.

இங்ஙனம்
**பி. பி. தேவராஜ்**
இந்துசமய, கலாச்சார, தமிழ் அலுவல்கள்
இராஜாங்க அமைச்சர்.

5 - 4 - 90

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய பிரதம குருக்கள்

சிவஸ்ரீ ச. பா. வைத்தியநாத சிவாச்சாரியார் அவர்கள் (ஊரெழு) வழங்கிய

# ஆசியுரை

பெருகலாம் தவம் பேதமை திரலாந்
திருகலாகிய சிந்தை திருந்தலாம்
பருகலாம் பரமாய தோர்ஆனந்தம்
மருகலானடி வாழ்த்தி வணங்கவே.

உலகத்து உயிர்கள் எல்லாம் உய்ய வேண்டி பரம கருணைநிதியாகிய இறைவன் அருளிச் செய்த நூல்கள் வேத சிவாகமங்களே. வேதம் பொது என்றும் ஆகமம் சிறப்பென்றும் சொல்லப்படுகின்றது. வேதங்களில் இறைவனின் பொது இலக்கணங்களும் வழிபாடுகளும் கூறப்பட்டுள்ளன. ஆகமத்திலே மூர்த்திகளும் வடிவங்களும் இவற்றிற்குரிய தியானங்களும் அமைத்து வழிபடவேண்டிய முறைகளும் ஆலய அமைப்பு விதிகளும் பரவக் காணலாம். வேதங்கள் எப்படி நான்காக அமைந்துள்ளனவோ அதேபோல் ஆகமங்களும் 28 ஆக இடம் பெற்றுள்ளன. இவற்றுள் கர்ஷணதிப் பிரதிஷ்டாங்கம், பிரதிஷ்டாதி உற்சவாங்கம், உற்சவாதிப் பிரயாச்சித்தம் என பகுதிகள் அமைந்துள்ளன.

சொரூபத் திருமேனியாகிய இறைவனைத் தடத்தத் திருமேனியாக வேண்டுவதே கும்பாபிஷேகம். இதில் சொரூபநிலை மனத்தால் நினைக்கவும் வாக்கால் சொல்லவும் முடியாத அநாதி முத்தசித்து உருவாய நிலை ஆகும். இந்நிலையில் இறைவன் ஒன்றிலும் தோய்வின்றித் தானே சுயம் பிரகாசமாய் தன் உண்மை நிலையில் நிற்பான். சொரூபநிலையில் உள்ள இறைவன் ஐந்தொழில்களைச் செய்யத் திருமேனி கொண்ட நிலையே தடத்த நிலையாகும். இவ் வழிபாட்டை செய்யும் இடம்தான் யாகசாலை ஆகும். அநாதி மல முத்தராகிய (விடுபட்டவராகிய) இறைவன் ஏகனாய் இருந்தபோதிலும் அநாதி மலபெத்தராகிய (அநாதியே கட்டுப்பட்டவர்) ஆன்மா வழிபட்டுய்ய இறைவன் அட்ட மூர்த்தியாய் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆத்மா என்ற அட்ட வடிவங்களையும் குறிப்பதே யாக சாலையில் அமைக்கப்படும் எட்டு குண்டங்களாகும். வட்டக் குண்டத்து எரியோம்பி என்றவாறு வட்டக் குண்டம் பிரதான குண்டமாக அமையும். இக் குண்டத்தில் வேண்டும் இறைவனை மந்திரத்தியானதிகளால் வழிபாடாகுதிகள் செய்வர். இவ் யாகசாலையில் ஒற்றித்த நாட்களும் இரட்டித்த காலங்களுமாக பூஜை முறைகள் அமையும். இவ்வாறு பூஜை செய்யப் பெற்ற கும்பமூர்த்திகள் நன்னாளிலே ஸ்தூல லிங்கமாகிய விமானத்திற்கும் சூக்கும லிங்கமாகிய மூல மூர்த்திக்கும் மந்தர ஆராதனைகளுடன் அபிஷேகித்தல் கும்பாபிஷேகம் ஆகும்.

இக் கும்பாபிஷேகத்தைச் செய்யும் ஆலய அமைப்பிலும் பல விதிகள் இடம் பெற்றுள. புதிதாக ஆலயம் அமைத்தல், காலத்தினுல் மறையப் பெற்ற பின் நிட்சயித்து ஆலயத்தை அவ்விடத்தில் அமைத்தல், அழிந்த ஆலயத்தைப் புதிதாக அமைத்தல் என்பனவும் பிராயச்சித்தாதி கருமங்களுக்காகச் செய்யப்படும் கும்பாபிஷேகமும் ஆவர்த்தம், அநாவர்த்தம், புநராவர்த்தனம், அந்தரிதம் என நான்காகும். கிரியைகளும் அறுபத்து நான்கு, முப்பது, பதினெட்டு என்ற கணக்கினை உடையதாக அமையும். இவ்வாறு கும்பாபிஷேகம் செய்யப் பெற்ற மூர்த்திகளை நிலைக்களமாகக் கொண்டு ஆன்மாக்களின் வழிபாடுகளுக்கு அமைய அவரவர் பக்குவ நிலைக்கேற்றவாறு முத்தி நிலையை அருளுவர். எனவே கும்பாபிஷேகத்தைத் தரிசிப்பது மானிடப் பிறவியின் பெரும் பயனாகும். வேலணை மேற்கில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி அருள் பாலித்து வருகின்ற மஹா கணபதிப்பிள்ளையார் பூரண பொலிவுறும் இவ் வாலய மஹா கும்பாபிஷேகத்தைக் கண்டு களிக்கப் பேரார்வத்துடன் இருக்கும் தொண்டர்கள் நிர்வாக அன்பர்கள் சிவனடியார்கள், பொருளுதவிய தர்ம சீலர்கள் யாவருக்கும் இந்த நன்னாளில் எல்லாம் வல்ல மஹா கணபதிப் பிள்ளையாரின் திருவருளால் சகல நலன்களும் பெற்று இனிது வாழும் வண்ணம் வேண்டி நல்லாசிகள் கூறுகின்றேன்.

''மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''

சுபமஸ்து.

15 - 03 - 90

பா. வைத்தியநாத சிவாச்சாரியார்.
ஊரெழு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறைப் பேராசிரியர்*

## கா. கைலாசநாதக் குருக்கள் அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

யாழ்ப்பாணம், வேலணை மேற்கில் பெரியபுலம் என்னும் பகுதியில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ மஹா கணபதிப் பிள்ளையாரின் ஆலயம் ஜீர்ணோத்தாரணம் செய்யப்பட்டுக் கும்பாபிஷேகத்தை எதிர்நோக்குகின்றது. இவ்வாலயத்தில் மூலத்தானம், அர்த்த மண்டபம், மகா மண்டபம் என்பன கருங்கற்றிருப்பணியால் எழுந்து நிற்கின்றன. வீதி முழுவதும் பழுது பார்க்கப்பட்டுப் புது மெருகுடன் விளங்குகின்றன. இரண்டு மணிக்கூட்டுக் கோபுரங்களுடன் கம்பீரமாக நிற்கும் இவ் வாலயத்தில் இராஜ கோபுரமும் மூலத்தானத் திருப்பணிக்கமைய கருங்கல்லால் அமைக்கப்பட்டு வருவதாக அறிந்து பெரு மகிழ்ச்சியடைகிறேன். *11 - 04 - 1990* அன்று விநாயகப் பெருமானுக்கு மகா கும்பாபிஷேக வைபவம் நிகழ இருப்பது இன்னும் மகிழ்ச்சியை அதிகரிக்கின்றது.

''அத்தினத்தில் கும்பாபிஷேகம் சிறப்புற நிறைவேறல் வேண்டும். வேலணை வாழ் மக்களுக்கு சர்வாபீஷ்டங்களையும் விநாயகப் பெருமான் வாரி வழங்கி அநுக்கிரகிக்க வேண்டும்'' எனப் பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

மக்களிடம், கும்பாபிஷேகப் பெருவிழாவில் பக்தி சிரத்தையுடனும் ஊக்கத்துடனும் ஈடுபாடு வளர வேண்டும் எனவும், நித்திய நைமித்திகங்களிலே மக்கள் தொடர்ந்து ஈடுபட வேண்டும் எனவும் வாழ்த்தி, மக்கள், கல்வி, செல்வம், உடல் வலிமை ஆகியவற்றை விநாயகப் பெருமான் திருவருளால் பெற்றுய்ய வேண்டும் என ஆசி கூறுகிறேன்.



28 - 03 - 90

கா. கைலாசநாதக் குருக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருள்மிகு துர்க்காதேவி தேவஸ்தான தலைவர், துர்க்கா துரந்தரி, சிவத்தமிழ் செல்வி, பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின்

# வாழ்த்துரை

''கணபதி பூசை கைமேற்பலன்'' என்று சொல்லுவார்கள். அது முற்றிலும் உண்மை. அவரை நினைத்து எந்தக் கருமத்தைத் தொடங்கினாலும் அதிலே வெற்றி நிட்சயமாக உண்டு. எமது சைவசமய வழிபாட்டில் ஒரு ஒழுங்கு பேணப்படுகிறது. அதற்கேற்ப முதல் வணக்கம் விநாயகருக்குச் செலுத்தப்படுகிறது. உள்ளத்தை ஒருமுகப்படுத்தி கும்பிடுவதற்கு எம்மை ஆயத்தப்படுத்தி விடுவது குட்டிக் கும்பிடுவதாலும் தோப்புக் கரணம் போடுவதாலும் நிறை வேறுகிறது. மேலும் இவை தேகத்துக்குச் சிறந்த பயிற்சியுமாகிறது. பிள்ளையாருக்குத் தோப்புக் கரணம் போட்டால் இந்த உலகத்தில் வேறு எவருக்கும் பணிய வேண்டிய நிலைமை ஏற்படாது. இவ்வாறு சமய ஒழுக்கம் வாழ்க்கை முழுவதிலும் கலந்து விடுவதால் எமது சொல்லும் செயலும் தூய்மையடைகிறது.

குடமுழுக்குப் போன்ற பெரு விழாக்களால் தேவர்கள் பிரீதியடைந்து மானிடரை வாழ்த்தி ஆசி கூறுகிறார்கள். இவற்றிலமைந்த ஒவ்வொரு கிரியைகளும் தேவர்களை மகிழ் விப்பனவாகும். இதனால் இறைவனுடைய திருவருட் பிரவாகம் ஆலயங்களிலும் விக்கிரகங் களிலும் பெருகுகிறது. இதனால் மக்கள் நலமடைவதோடு ஊரும் உயர்வடைகிறது. இதனா லேயே இவ்விழாவுக்குப் ''பெருஞ்சாந்தி விழா'' என்று குறிப்பிடப்படுகிறது. மனிதன் மனத்தையுடையவனாக மாத்திரமிருக்காது மனத்தை ஆள்பவனாக விளங்க வேண்டும்.

''சென்ற விடத்துச் செலவிடாது தீதொரீஇ
நன்றின் பாலுய்ப்பது அறிவு''

என்பதை உற்று உணரும்போது அதற்கு வழி காட்டுவது தெய்வ நம்பிக்கையும் வழிபாடுமேயாகும். இதனாலேயே எம் முன்னோர் ஆலயங்களை அமைத்தும் விழாக்களை எடுத் தும் அருட்பணிகள் புரிந்தும் வழிகாட்டிச் சென்றனர். இந்த வழி தூர்ந்து போகாது இன் றும் எம் மத்தியில் திருக்கோயிற் பணிகள் சிறப்பாக நிறைவேறிக் கொண்டு வருவது எமது மக்கள் செய்த தவப்பயனாகும்.

வேலணை வாழ் சைவ மக்கள் மேற்காட்டிய பணிகளில் முன்னின்று உழைப்பவர் கள். கோயில் கட்டி, கோபுரம் அமைத்துத் திருத் தொண்டு செய்பவர்கள். இதனாலேயே மகா கணபதிப்பிள்ளையார் திருக்கோயில் இன்று குடமுழுக்குக் காணும் சிறப்புக்குரியதாக விளங்குகிறது. பிள்ளையார் தனது அடியார்களுக்கு அள்ளி அள்ளிக் கொடுப்பவர். அன்பர் களை அரவணைத்து அருள் பொழிபவர். இவ்வனுபவத்தை ஆலய அந்தணப் பெருமகனார் தொடக்கம் அனைவரும் அறிவர். ஆகவே நாமனைவரும் எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வணங்கிக் குடமுழுக்குத் தரிசனத்தாலான பயனையும் பெற்று உய்தியடைவோமாக.

28 - 03 90

தங்கம்மா அப்பாக்குட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருத்தொண்டு வளர்க

இப்பூவலகில் பற்பல சமயங்கள் உள. அதில் தலைசிறந்த சமயம் சைவசமயமாகும். சைவசமயத்திற்கு கடவுள் சிவபெருமான். இங்கு கடவுளை மட்டும் வழிபடும் சமயம் சைவ சமயம் ஒன்றுதான். முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் சகல ஆன்மாக்களும் உய்ந்து கடைத் தேறும் வண்ணம் திருவுளம் கொண்டு வேதம், ஆகமம் என்னும் விதிப்பிரமாண நூலை அருளிச் செய்தான். அதன் பிரகாரம் வேத ஆகமங்களில் விதிக்கப்பட்டதன்படி ஒழு குதல் புண்ணியம் என்றும், விதிக்கப்படாதவைகளைச் செய்தல் பாவம் என்றும் வலியுறுத் திக் கூறப்பட்டிருக்கிறது. ஆன்மாக்கள் புண்ணியம் செய்யாது விட்டால் மனிதனாகப் பிறந்த இப்பிறவியின் பயனை அடைய முடியாது. பிறப்பதற்கே தொழிலாகி இறந்து உழல வேண் டும். புண்ணியத்தின் பயனால்த்தான் மெய்ப்பொருளாகி இறைவனை உணரமுடியும். உணர்ந்த விடத்து ஆண்டான் அடிமைத்திறம் கைவரப்பெறும். பின்பு சரியை, கிரியை, யோகம் என்கிற நிலை கைவரப் பெற்று ஞானம் என்கிற உயர்ந்த நிலை கைகூடும்.

புன்னெறி அதனிற் செல்லும் போக்கினை
விலக்கி மேலாம் நன்னெறி ஒழுகச் செய்து.

ஆண்டான் அடிமைத் திறத்தை உணர்ந்து செய்யும் செயல் அத்தனையும் சிவ தொண்டாகும். இந் நெறி முறையை நாயன்மார் காட்டிய வழிநின்று அறியலாம்.

தொண்டு மக்களைக் குறித்தும் தேசத்தைக் குறித்தும் செய்பவர்களும் உண்டு. அது வும் சிவதொண்டின் ஒரு கூற்றாக அமைந்து பின் நல்வழிக்கு ஏதுவாக அமையும் ஆன்மா வுக்கு ஒரு சிறப்புநிலை ஒன்று உண்டு. அதுதான் சார்ந்ததன் வண்ணமாகும் நிலை. ஆன்மா எப்பொருளோடு சேர்ந்து கொண்டு செயற்படுகிறதோ அப்பொருள் வண்ணமாக கலந்து அதன் பயனை அனுபவிக்கும் இந்நிலையை உலகியலிலும் தெய்வீகஇயலிலும் உற்று நோக் குவார் அறிவர்.

ஆகமமாகி நின்று அண்ணிப்பான்

விதிப்பிரமாண நெறிநின்று செய்யும் செயல் அத்தனையும் சிவதொண்டாகும். செய்யும் செயலே தெய்வமாகும். உலகியற் தொண்டு ஆன்மா முனைந்து செய்யும் தெய்வீ கத் தொண்டு முனைக்காது தொண்டாற்றும். இதைக் கசிந்த தொண்டென்பர். இந் நெறி இறைலன் அருளைப்பெற எளிய வழியாகும். கடவுள் எல்லா உயிர்கள் மாட்டும் வியாபக வியாப்பியமாக கலந்து தோன்றாத் துணையாக இருந்து அருள் செய்கிறான். இந்நிலையை உணர்ந்து உயிர்களிடத்து அன்பு வைத்து அவர்கட்கு தொண்டு உதவி செய்தல் அதுவும் இறைபணியாகும். இறைபணி செய்து நிற்பவர்மாட்டு அன்பின்றி இறைவனிடத்து அன்புள் ளவர் போல் நடப்பவர் போலியாக நடப்பவர் ஆவார்.

ஈசனுக்கு அன்பிலார் அடியவர்க்கு அன்பிலார்
எவ்வுயிர்க்கும் அன்பிலார் தமக்கும் அன்பிலார்.

உதவி, தொண்டு அன்பு என்பன என்றல்ல இருப்பினும் இறை அருள்பெற வாய்ப் பைத் தரும். இப்பிறப்பில் தான்பெற்ற செல்வத்தைக் கொண்டு சிறந்த வழித் தொண்டு செய்ய வேண்டும். தவறக்கூடாது. விதிமுறைப்படி செய்யப்படும் தொண்டு சிவதொண்டா கும். தொண்டு செய்யாது இறை அருளைப் பெற முடியாது. மணிவாசகப் பெருமான் தம் கையில் உள்ள பணத்தை இறைபணியான சிவதொண்டிற்குச் செலவு செய்யக் கொடுத் தார். அதனால் மேன்மேலும் இறை அருள் ஆட்கொண்டது எனவே நாம் இறைத் தொண்டு செய்து இறை அருளைப் பெறுவோமாக.

அவனே தானே ஆகிய அந்நெறி
ஏகனாகி இறைபணி நிற்க.

எல்லாம் வல்ல ஐங்கரப் பெருமானின் திருவடி வணங்குவோமாக.

வேதாகம — நெறி வாழ வழித் தொண்டு வளர்க.

18 - 03 - 90

ஸ்ரீலஸ்ரீ. கை. திருஞானசம்பந்தக் குருக்கள்.
கரணவாய், வேலணை
ஆதீனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழுலகின் மூத்த எழுத்தாளரும், சிறந்த இலக்கிய விமர்சகரும் ஆகிய அறிஞர் சோ. சிவபாதசுந்தரம் அவர்களின்

# வாழ்த்துரை

வேலணை மேற்கு, முடிப்பிள்ளையார் கோவில் கும்பாபிஷேகம் நடப்பது பற்றி மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அறுபது, எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் புளியங்கூடல் மாரியம்மன் கோயிலுக்கும் வேலணை பிள்ளையார் கோயிலுக்கும் ஆண்டுதோறும் தவருது போய்வந்தது இன்றும் ஞாபகத்தில் இருக்கிறது.

பின்னொரு காலத்தில் ஒரு சந்ததி பல காரணங்களால் கோயில்களையும் தெய்வங்களையும் மறந்ததுண்டு. அதன் பின் மீண்டும் ஒரு பக்தியலை பிரவாகித்து, பழைய கோயில்களைப் புதுப்பித்தும் புதிய கோயில்களை ஸ்தாபித்தும் வரும் இயக்கத்தைப் பார்க்க ஆனந்தமாய் இருக்கிறது. இளைஞர்களுடைய முயற்சி பாராட்டத்தக்கதாய் இருக்கிறது.

யாழ்ப்பாணத்துக் கந்தபுராண, பெரியபுராண சம்பிரதாயங்கள் மறைந்து போகுமோ என்று அஞ்சினேன். இன்றைய கெடுபிடி நிலையிலும் சைவமும் ஸ்தல வழிபாடுகளும் காப்பாற்றப்பட்டிருப்பதையறிந்து பரவசப் படுகிறேன்.

வாழ்க.

16 - 03 - 90

**சோ. சிவபாதசுந்தரம்**
காமராசர் அவென்யூ,
அடையாறு,
சென்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியபுலம் மஹா கணபதிப்பிள்ளையார் கோயில் பிரதம அர்ச்சகர்

## பிரம்மஸ்ரீ இ. சோமாஸ்கந்த சர்மா அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

ஈழவள நாட்டின் வடமேற்கிலுள்ள தீவுக் கூட்டங்களில் வேலணைத் தீவு பல்வேறு வழிகளில் சிறப்புற்று விளங்குகிறது. சைவமும் தமிழும் ஒருங்கு சேர வளர்ந்து சிறப்புற்று விளங்கும் வேலணை மேற்கின் பெரியபுலப் பதியில் கோயில் கொண்டருளி வேண்டு வார்க்கு வேண்டுவன வழங்கி அருளாட்சி புரிந்து வருகிறார் ஐங்கரப் பெருமான். மிகப் புராதன வரலாற்றுச் சிறப்புக் களைக் கொண்டு விளங்கி வரும் இவ்வாலயத்தில் எழுந்தருளியிருக்கும் விநாயகனுக்கு 1965ம் ஆண்டிலிருந்து நித்திய நைமித்திய கிரியைகளில் பங்கு கொண்டு நித்திய பூஜை செய்யக்கூடிய பெரும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் பேரருளாகும். ஏறக்குறைய கால் நூற்றாண்டு காலம் எம்பெருமானுக்கு நித்திய பூஜை செய்து இன்று இரண்டாவது (எனது நித்திய பூஜைக் காலத்துள்) மகா கும்பாபிஷேகத்தை காணவும் அதில் பங்குகொள்ள வைத்த எம்பெருமானின் கடாச்சத்தை நினைத்து பெருமகிழ் வெய்துகிறேன்.

இந்த சந்தர்ப்பத்தில் இவ்வளவு காலமும் எனது கடமைகளை சரிவரச் செய்வதற்கு பெரிதும் உதவிய பல்வேறு கால கட்டங்களில் ஆலயத்தை பரிபாலனம் செய்து வந்த பரிபாலன சபையினர்களுக்கும், ஐங்கரனின் திருப்பணித் தொண்டில் என்னையும் அர்ப்பணிக்க ஆக்கமும், ஊக்கமும், தந்த ஐங்கரன் அடியார்களுக்கும், குறிப்பாக ஆலயத்தில் இராஜ கோபுரத் திருப்பணியை ஆரம்பித்து அதில் ஆசாரிமாருடன் தொடர்பு கொண்டு திருப்பணியை நிறைவேற்ற மிகப்பாரிய பொறுப்பை என்னிடம் ஒப்படைத்த அமரர் திரு. க. இராசதுரை அவர்களுக்கும் அவரது குடும்பத்தார்க்கும், இவ்வூர் மக்கள் அனைவருக்கும் எனது நன்றிகளும் நல்லாசிகளும் என்றும் உரியதாகும்.

நிறைவாக ஐங்கரன் அடியார்களுக்கு எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் அருட்கடாச்சம் என்றென்றும் கிடைத்து எல்லோரும் எந்நாளும் பெருவாழ்வு வாழ்ந்திடவும், மஹா கும்பாபிஷேகம் சிறப்புடன் நிறைவேறவும் ஐங்கரப் பெருமானின் திருவடிகளை இறைஞ்சுகிறேன்.

சுபம்.

16 - 03 - 90

இ. சோமாஸ்கந்தசர்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி ஒன்று

- ★ ஆலயம்
- ★ சைவம்
- ★ தமிழ்
- ★ வரலாறு
- ★ வளர்ச்சி
- ★ பரிபாலனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிப்பிள்ளையார் கோயில்:
## ஓர் அனுபவ நோக்கு

யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென் மேற்றிசையிலே உள்ள தீவுக் கூட்டங்களுள் லைடன் தீவு முதன்மையானது. இங்கு உலகில் புகழ் பெற்ற இயற்கைத் துறைமுகங்களில் ஒன்றாய ஊர்காவற்றுறையும் நீதிமன்றமும், சங்கக் கந்தோர்களும் உண்டு. இந்தத் தீவுகளுக்கெல்லாம் ஆட்சி புரியும் மணியகாரன் பதவிவகித்தோர் நிலைகொண்டிருந்த இடம் வேலணை ஆகும். எனவே தீவுகளுக்கு வேலணை ஒரு தலைநகர் போல விளங்குகிறது. வேலணைப்பகுதி வேலணை கிழக்கு, வேலணை மேற்கு என இரு பிரிவுகள் உடையது.

வேலணை மேற்கின் இருதயம்போல உள்ளது முடிபபிள்ளையார் கோயில். முற்காலத்தில் இலங்கையை பறங்கியர்கள் ஆண்டபோது சைவக் கோயில்களை அழித்து வந்தார்கள். அப்பொழுது இந்தக் கோயில் அவர்களுடைய வரிசைக்கு அகப்படாமல் முடியோடு நித்திய நைமித்திசம் நடைபெற்று விளங்கியிருந்த காரணத்தால் முடிப்பிள்ளையார் கோயில் என வழங்கப்படலாயிற்று. இந்த ஆலயத்தில் தாபிக்கப்பெற்ற மூர்த்திக்கு மகா கணபதியென்று கும்பாபிஷேக காலத்தில் நாமகரணம் செய்யப்பட்டதனால் மஹா கணபதிப்பிள்ளையார் என்று வழங்கப்படுகின்றது. கோயில் தாபிக்கப்பட்டிருக்கும் தலத்தின் பெயர் பெரியபுலம் என்பதாகும். ஆகவே பெரியபுலம் மஹா கணபதிப்பிள்ளையார் கோயில் என்பது உரிய பெயர்.

திருக்கோயிலைச் சூழ சமய விசேட நிருவாண தீட்சை பெற்ற சைவர்கள் வசித்து வந்ததாலும் அச் சைவர்களாலே நித்திய பூஜை செய்யப்பட்டு வந்ததாலும் அவர்களுடைய பரம்பரையாலே தாபிக்கப்பெற்ற காரணத்தாலும் "சைவப் பிள்ளையார் கோயில்" என்றும் பேசப்படுவதுண்டு.

இந்த விநாயகப் பெருமான் கரசரணாதி அவயவங்கள் வியக்தமாக தோற்றமளிக்க செய்யப்பட்டிருக்காடிவினும் இம் மூர்த்தியை யாழ்ப்பாணத்து ஊரெழுவிலே பெரியவர் என்று எல்லோராலும் போற்றப்பட்ட சோமசுந்தரக் குருக்கள் அவர்கள் சுயம்பு மூர்த்திக்கு நிகரானது என்று பாராட்டிச் சொல்லியிருக்கின்றார்.

வேலணை மேற்கு என்னும் கிராமத்தில் வேதாரணிய ஆதீனத்தை சேர்ந்த வரணி, கரணவாய் சைவக் குருமார் ஆன்மார்த்தம், பரார்த்தம் என்னும் இரு நெறிகளுக்கும் குல குருவாய் அமைந்து தீட்சை, கோயில் உற்சவம் முதலிய கிரியைகளை செய்து வந்தார்கள். இந்தக் குருமார்கள் உள்ளே சந்திரசேகரக் குருக்கள் என்று ஒருவர் அக்காலத்தில் இருந்தார். அவருக்கு முல்லைத்தீவுப் பகுதியிலும் கோயில் கும்பாபிஷேகம் செய்யும் தொடர்பு இருந்தது அவர் தனக்கு உதவிக்காக இத் திருக் கோயிலுக்கு பக்கத்தே உள்ள சுப்பிரமணியர் என்னும் சைவ உத்தமர் ஒருவரை உடன் அழைத்துச்சென்று முல்லைத்தீவில் இருந்து திரும்பி வரும்போது நடந்து வரும் வழியில் ஒரு மரத்தடியில் நிழலுக்கு இருக்கும் நோக்கில் சருகுகளைக் கூட்ட இந்தப் பிள்ளையாருடைய சிலை அங்கு காணப்பட்டது அப்பொழுது குருக்கள் "சுப்பிரமணியா இதை எடு, பெரியபுலத்தில் கொண்டுபோய் தாபிப்போம்" என்று சொன்னபடியே சுப்பிரமணியர் மூர்த்தியை ஒரு சாக்கில் கட்டிக் கொண்டு வந்தார். வரும்பொழுது குருக்கள் ஐயாவுக்கு மண்டைதீவுக்குப் போக வேண்டிய தேவையிருந்தது. இன்றுபோல் அன்றும் கரணவாய்க் குருமாருக்கு மண்டைதீவிலும் புரோகிதம் இருந்தது.

மண்டைதீவுக்கு போகும்போது மூர்த்தியை வழியில் ஒரு ஆலமரத்தடியில் வைத்துவிட்டு மீள அங்கிருந்து வரும்போது பிள்ளையாரையும் தூக்கிக்கொண்டு வந்தனர்.

சைவத்தமிழ் அறிஞர்

## ச. மகாலிங்கம் J. P.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றும் மண்டைதீவில், போகும் வழியில் வைக்கப்பட்டிருந்த இடத்தில் ஆலடிப்பிள்ளையார் என்று பொங்கல் பூஜை நடைபெறுகிறது.

குருக்களும் சுப்பிரமணியரும் வேலணைக்கு வந்து இப்பொழுது பிள்ளையார் தாபிக்கப்பெற்று இருக்கும் இடத்தில் சூழ உள்ள காணி முழுவதும் சுப்பிரமணியருடைய நிலம் ஆகையால் அங்கு ஒரு ஓலைக் குடிசை அமைத்து பிள்ளையாரை வைத்து சுப்பிரமணியர் பூஜித்து வந்தார்.

சுப்பிரமணியர் என்பவருக்கு அம்பலவாணர், முருகப்பர், குமாரவேலர் என மூன்று பிள்ளைகள் இருந்தனர். சுப்பிரமணியரின் மனைவி கேணிக்கரையில் உள்ள கந்தர் என்பவரின் மகளாவர். கந்தர் பெரும் பொருள் வசதியுள்ளவராக இருந்தபடியால் தனது மருமகன் சுப்பிரமணியருடைய இந்தக் கோயிலைச் சுதையினாலே கட்டுவதற்கு தொடங்கினர்.

இப்பொழுது இருக்கும் கருங்கற் கோயிலுக்கு முன்னிருந்த கோயில் அதுவாகும்.

சுப்பிரமணியருடைய பிள்ளைகள் மூவருள் முருகப்பர் என்பவரின் மகன் ஆறுமுகம் நெடுங்காலமாக பிள்ளையாருக்கு நித்திய பூஜை ஆகம விதிப்படி கரணவாய் சைவக் குருக்கள்மாருடைய உதவியால் பூஜை விதியை அறிந்து செய்துவந்தார். இவருக்கு முன் முருகப்பர் பூஜை செய்தார். முருகப்பரை பெரிய பூசாரியார் என்றும் ஆறுமுகத்தை பூசாரியார் என்றும் அழைப்பர். சுப்பிரமணியருடைய மகன் அம்பலவாணரும் பூஜை செய்து வந்தார். மற்றைய மகன் குமாரவேலருடைய பங்கிற்கு குமாரவேலரும் அவருடைய பேரன் செல்லர் அப்பாவும் பூசை செய்து வந்தவர்கள். இவ்வாறு மூன்று சகோதரர்களும் அவர்களுடைய வழியினரும் கோயில் பரிபாலனத்தையும் பூஜையையும் நடத்தி வந்தனர்.

நைமித்தியமாகிய உற்சவம், அபிஷேகங்கள் கரணவாய் குருக்கள்மார் வந்து செய்வார்கள். 1840ம் ஆண்டு (?) முதற் கும்பாபிஷேகம் நடைபெற்ற போது ஆவணி மூலத்தில் வருடா வருடம் உற்சவம் நடந்து வந்தது. யாழ்ப்பாணம் கச்சேரியில் ஆலயங்களின் பதிவு இடாப்பில் இந்த விபரம் எழுதப்பட்டிருக்கிறது. பூசாரியார் ஆறுமுகத்தின் மகன் முருகேசு உபாத்தியாரும் கோயிலுக்கு பூஜை செய்து வந்தவர். இந்த முருகேசு உபாத்தியாருடைய மகளைத்தான் பேரம்பல உபாத்தியாயர் விவாகம் செய்தார்.

இது இவ்வாறிருக்க பூசாரியார் ஆறுமுகத்தின் தம்பி வைரவநாதரின் ஒரு மகளின் மகன் கனகசபை வைத்தியலிங்கம் என்பவர் யாழ்ப்பாணத்தில் வர்த்தகம் செய்து கொண்டு பணவசதியோ இருந்தார். இவரோடு இவரது சிறியதாயின் புதல்வர்களாகிய சோமசுந்தரம், படிகலிங்கம் கார்த்திகேசு ஆகிய மூவரும் துணையாய் வேற்றுமையின்றி வர்த்தகத்தை நடாத்தினர். வைத்திலிங்கம் கருங்கல் திருப்பணிக்காக சே. பொன்னையா என்பவரின் உதவியோடு காலியிலிருந்து கப்பல் மூலம் ஊர்காவற்றுறை துறைமுகத்திற்கு கருங்கல்லை ஏற்றிவந்தார்.

இதிலும் ஒரு புதுமையான நிகழ்ச்சி என்னவென்றால் கப்பற்காரன் கல்லை ஏற்றப் பயந்து முதலில் மறுத்தும் பிள்ளையார் சொப்பனத்தில் தோன்றி ஆனைவடிவமாக வெருட்டியதன் பேரில் கல்லை ஏற்றுவதற்கு மீண்டும் சம்மதித்து விட்டார்.

இந்தக் கற்களையெல்லாம் ஊர்காவற்றுறையில் இருந்து கோயில் வீதிக்கு கொண்டுவர சுருவில் தம்பியர் என்பவர் (வைத்திலிங்கத்திற்கு சித்தப்பா) செய்த உதவி மகத்தானது. தம்பியருக்கு புளியங்கூடலில் நிறைந்த செல்வாக்கு இருந்தது. புளியங்கூடலில் பெரிய மாட்டு வண்டில்கள் எல்லாரிடமும் இருந்தன தம்பியருடைய சொற்படி கருங்கல் முழுவதையும் வண்டிகள் மூலம் ஏற்றி வரப்பட்டது. வேலணையில் இருந்து ஊர்காவற்றுறை வரையும் ரோட்டில் கருங்கற்கள் தன்னல் தன்னலாக இறக்கி ஏற்றப்பட்டபோது சிலகாலம் ரோட்டுகளில் கருங்கற்களாகவேகாட்சியளித்தன.

கோயிலுக்கு தென்புறத்தில் பூஜைசெய்யும் ஐயர் வசிக்கும் காணி அப்பொழுது கொழும்பு கொம்பனித் தெருவில் வசித்து வந்த சங்கீத வித்துவான் இராசையர் என்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவருக்கு இருந்தது. அவர் அதனை எனது தகப்பனுர் சதாசிவம்பிள்ளை விதானையாரிடம் ஒப்படைத்து விட்டார். தகப்பனுரிடம் இக்காணியை கோயிற் தேவைக்கு விடும்படி கரணவாய் நமசிவாயக் குருக்கள் அவர்களும் வைத்திலிங்கம் என்பவரும் கேட்டு தகப்பனுர் அதற்கு உடன்பட்டு விட்டுவிட்டார். இந்நிலத்தில் மிகப் பெரிய புளிய மரங்கள் பல இருந்தன. அந்த மரங்களையெல்லாம் தறித்து சுண்ணும்புச் சூளை வைத்து திருக்கோயிலுக்கு அத்திவாரம் இடப்பெற்றது. இந்த வளவில் மண்சுவரோடு கூடிய ஒரு வீடு இருந்தது. அந்த வீட்டில் கருங்கல் வேலை செய்யும் அராலி வாசிகளாகிய ஆசாரிமார் 40 பேர் வரையில் தங்கியிருந்து சமைத்து சாப்பிட்டு கருங்கல் வேலை செய்தார்கள். தலைமை ஆசாரிக்கு பெயர் வீரவாகு. அப்பொழுது கோயிற் பூசை செய்து வந்தது எனது தாயாரின் தகப்பன் செல்லப்பா ஆவர். இவர் பெரும் பக்திமான் 50 வருடத்திற்கு மேல் பிள்ளையாருக்கு நித்திய பூசை செய்து வந்தவர். இவருக்கு வயது முதிர்ந்ததும் உடல்நிலை இடங்கொடுக்காத காரணங்களால் இவருக்குப் பின் அனலைதீவில் பிறந்தவரும் புங்குடுதீவில் விவாகம் செய்தவருமான வேதையர் என்பவர் நித்திய பூசை செய்து வந்தார். வேதையர் பெரிய பக்திமான். வேலணை மேற்கில் கரணவாய் குருக்கள்மாருக்கு ஒரு மடம் தங்குமிடமாக இருக்கிறது. அங்கு ஆரிய திராவிட பண்டிதர் கைலாசநாதக் குருக்கள் வந்து நிற்கும் போதெல்லாம் வேதையர் அவர்கள் போய் குருக்களை சந்தித்து உரையாடுவது வழக்கம். குருக்களிடம் பூசை முறைகளையும் கேட்டு அறிவார்.

கோயில் கட்டும் வேலை திருப்பணிகள் கருப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம் ஆகிய மூன்றும் கட்டி முடிந்தவேளை சிறிது காலம் சோர்வு அடைந்தது. வைத்திலிங்கம் என்பவர் செலவுகளையெல்லாம் உலகத்தை நம்பி தானே செய்து நடாத்தி வந்தார். தன்னுடைய காணிகள் பலவற்றை ஈடு வைத்தும் பணத்தை கடையில் சேர்த்து வியாபாரத்தை நடத்திவரும்போது 1927ம் ஆண்டு அவருடைய தம்பியார் படிகலிங்கம் காலஞ்செல்ல அதன்பின் வியாபாரம் நடத்த முடியாமல் தொழில் வீழ்ச்சியடைந்தது. சில வருடங்களில் வைத்தியலிங்கம் கடையைப் பூட்டி வீட்டில் இருந்தார். இந்தத் தருணத்தில் எனக்கொரு ஞாபகம் பெரிய வாத்தியார் என்று போற்றப்படும் மருதையினுர் அவர்கள் க. வை. அவர்களின் கடை முறியவில்லைஅது கோயிலாக காட்சியளிக்கிறது என்று செல்லிய வார்த்தை நினைவுக்கு வருகிறது.

இந்நிலையில் வைத்திலிங்கம் வாளாவிருக்கவில்லை. வேலணை தபாலதிபர் சரவணமுத்துவையும் மு. குமாரசாமிப்பிள்ளையையும் கண்டு கண்டு தூண்டி ஊக்குவித்து கோயில் வீதியில் ஒரு கூட்டம் கூட்டி சரவணமுத்தின் சிறிய தகப்பன் கருங்கல்லை கொண்டு வர உதவியாக இருந்த சே. பொன்னையா அவர்களை தலைவராக அமைத்து திருப்பணியைத் தொடரச் செய்தார், அவர்கள் தலைவராக அமைத்த செ. பொன்னையா அவர்கள் காலமாக சே. கந்தையாவைத் அவர்களைத் தலைவராகக் கொண்டு பரிபாலனசபை 1940இல் இருந்து இயங்க ஆரம்பித்தது,

திரு. மு. குமாரசாமிப்பிள்ளை ஒரு கார் வாங்கி வைத்திலிங்கம் சே. கந்தையா அவரகளையும் உடன் கூட்டிக் கொண்டு தென்னிலிங்கைக்கு போய் நிதி சேகரித்து வந்து மிகுதி வேலைக்கு வவுனியாவில் இருந்து கருங்கல் எடுப்பித்து சபாமண்டபத்தை கட்டத் தொடங்கினுர்கள். வவுனியாவிற்கும் கருங்கல் எடுப்பதற்கு வைத்திலிங்கம் சென்றவர். இந்த வேலையை நடத்தியபொழுது தான் வே. பேரம்பலம் ஆசிரியர் அவரகள் மேற்பார்வை செய்வதில் ஈடுபட்டிருந்தார்.

திரு. ஆ. வி நாகலிங்கம் அவர்களையும் நாம் மறக்க முடியாது. அவர் திருப்பணி வேலைக்கு இறுதிக் கட்டத்தில் கணக்காளராக இருந்து துரிதமாக வேலைகளைச் செய்தார் வசந்த மண்டபம், யாகசாலை. என்பனவற்றை கட்டாமல் கும்பாபிஷேகத்திற்கு நாள் வைக்க முயன்றபோது ஆ.வி. நாகலிங்கம் அவர்களிடம் நான் இந்த இரண்டிற்கும் அஸ்த்திவாரம்|போடுவதற்கு செலவு கொடுத்தேன். அவர் உடனே அதைப் போடுவித்தார்.

கும்பாபிஷேகத்திற்கும் தென் இலங்கையில் போய் நிதி சேகரிக்கப்பட்டது. இந்த இடத்தில் பெரியகடை வர்த்தகர் மு. சின்னையாபிள்ளை அவர் தமையன் நாகநாதபிள்ளை இவர்களும் செய்த உதவிகளையும் துணைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவியாக நின்றதையும் நாம் மறக்க முடியாது.

1948ம் ஆண்டு மகாகும்பாபிஷேகம் ஊரெழு சிவஸ்ரீ பாலசுந்தரக்குருக்கள் அவர்களால் மகாவிமரிசையாக நடாத்தப்பெற்றது. தொடர்ந்து ஆண்டுதோறும் மஹோற்சவங்கள் நிகழ்ந்து வருகின்றன.

இத்திருக் கோயிலுக்கு சிலகாலம் நடராச வித்தியாசாலை அதிபர் செ. கனகசபாதிப்பிள்ளை அவர்களும் அவருடைய மாமன் சா. நமசிவாயபிள்ளை உபாத்தியார் அவர்களும் நடாத்துனர்களாக பணியாற்றினர். அக்காலத்தில் ஒவ்வொரு மாசமும் சதுர்த்தி உற்சவம் நியமமாக நடைபெற்றது. அப்பொழுது செ. கனகசபாபதிப்பிள்ளை ஆகிய இராசா வாத்தியார் அவர்களும் என்னுடைய தகப்பனுரும் மல்லிகை மாலை தொடுப்பதை நான் நேரில் பார்த்திருக்கிறேன். திருக்கோயிலில் முன் ஒரு தேர் இருந்தது. அந்தத் தேர் வேலணை கிழக்கில் கந்தபுராண மடத்தடியில் இருந்த ஒரு வாகைமரத்தை நமசிவாயபிள்ளை உபாத்தியார் அவர்கள் இலவசமாக வாங்கிவந்து தேர் செய்வித்தவர்.

கும்பாபிஷேகத்தின்பின் கோயிலுக்குதேர் ஒன்றை மு. குமாரசுவாமி அவர்கள் செய்வித்து தேர்உற்சவத்தை நடாத்திவந்தார். சே. கந்தையா அவர்கள் காலமாக திரு. நா. சரவணமுத்து அவர்களைத் தலைவராக கொண்ட பரிபாலனசபை தெரிவு செய்யப்பட்டது. 1969ம் ஆண்டு மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. வேலணை மேற்கு வாசியும் யாழ்ப்பாணம் பிரபல வர்த்தகராகவும் இருந்த 'பிள்ளையார் விலாஸ்' கணபதிப்பிள்ளை அவர்கள் இராசகோபுரத்திற்கு அத்திவாரம் இட்டார். தொடர்ந்து அதன் பின் அவர் மகன் இராசதுரை அவர்களால் இன்றுள்ளவரை இராஜகோபுரம் அமைக்கப்பட்டது. தொடர்ச்சியாக இராசதுரையின் மகன் இராஜகோபுரத் வேலைகளில் ஈடுபட்டுள்ளார். ★

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

-திருஞானசம்பந்தர்

வேழ முகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுந்து வரும் வெள்ளைக் கொம்பற்
விநாயகனைத் தொழத் துள்ளி யோடும்
தொடர்ந்த வினைகளே அப்பம் முப்பழம்
அமுது செய்தருளிய தொப்பை யப்பனை
தொழவினை யறுமே.

卐

-திருஞானசம்பந்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணை மேற்கில்

# சைவமும், தமிழும்

சங்கீத பூஷணம்
பேர. சந்திரசேகரம்

எமதூர், நாம் பிறந்து வளர்ந்து தவழ்ந்து விளையாடி மகிழ்ந்த ஊர் வேலணை மேற்கு. எமது வாழ்க்கைக்கும் வேலணை மேற்கு பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளை யாருக்கும் சம்பந்தமிருக்கிறது. ஆலய சம்பந்தமில்லாத வாழ்க்கை பயனற்றது. தவசிகள், சைவர்கள் புளியமரம், வில்வமரம் என்பவற்றின் கீழ் அமர்ந்து பெரியபுல ஐங்கரனை நோக்கித் தவமிருந்தனர். காலை வேளைகளில் தினமும் சிவபூஜை செய்யத் தவறமாட்டார்கள். பெரும்பாலானோர் பண்டிதர்கள், புராணிகர்கள், புலவர்கள், இலக்கிய ஆராய்ச்சி விற்பன்னர்கள், மகான்கள் காலடி பட்ட இடங்கள் புண்ணிய ஸ்தலங்களாக விளங்குகின்றன. அந்த வகையில் நோய் நொடி தீர்க்கும் ஸ்தலமாக பெரியபுலம் போற்றப்பட்டது.

சைவர்கள் அனைவரும் சேர்ந்து கோயிலில் கூடி வருடம் பூராவும் தொடர்ந்து பெரியபுராணம், திருவாதவூரடிகள் புராணம், கந்தபுராணம் வாசித்து உரை சொல்லுவார்கள். ஊரின் சேமத்திற்காகவும் நாட்டின் சேமத்திற்காகவும் இப் புராணங்களைப் படித்துப் பூர்த்தியாக்குவர்.

அக்காலத்தில் எத்தனையோ பெருமக்கள் வேலணை மேற்கிலிருந்து கோயிலுக்குப் பெருந்தொண்டுகள் செய்து வந்துள்ளனர். கந்தப்பு உபாத்தியார், பொன்னையா உபாத்தியார், சட்டம்பியார், முருகேசு உபாத்தியார், நாகலிங்க உபாத்தியார், இராஜா உபாத்தியார், தம்பு உபாத்தியார் இவர்களின் வரிசையில் பிற்காலத்தில் முத்து உபாத்தியார், சதாசிவம் விதானையார், அப்பாத்துரை உபாத்தியார், வே. பசுபதிப்பிள்ளை, ச. மகாலிங்கம் விதானையார் ஆகியோர் புராணப் படலக் குழுவில் அவ்வப்போது தமது பங்கைச் செலுத்தி சைவ, தமிழ் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றினர்.

வினைகள் தீர, செய்கின்ற காரியங்கள் செம்மையாக, விநாயகரை வணங்கி எல்லா நலன்களும் பெற்றவர்கள் சைவர்கள். சைவர்கள் தாங்கள் வேறு, பிள்ளையார் வேறு என்ற எண்ணமில்லாதவர்கள். பிள்ளையாருக்கே அடிமைத் தொழில் பூண்டு அவருக்கு பூஜை, அபிடேகம் மற்றும் சகல கைங்கரியங்களையும் செய்து வந்தனர்.

இப்போதுள்ள கோயிலின் தெற்கு வீதியில் ஏராளமான புளியமரங்கள் நெருங்கி வளர்ந்திருந்தன. இத்தலத்தின் தல விருட்சமாக புளியமரமும், வில்வமரமும் விளங்கியதாக கூறப்படுகிறது. புளியமரங்கள் வானளாவி உயரமாக வளர்ந்திருந்தன. இப் புளியமரங்கள் அக்கால திண்ணைப் பள்ளிக்கூடமாக விளங்கின. முருகேசு உபாத்தியார் அவருடன் மேற்கூறிய உபாத்தியார்களும் சைவ சித்தாந்த சாஸ்திரங்களையும் படித்துப் பெரும்பாலானவற்றை கையெழுத்துப் பிரதிகளாகவும் எழுதி வைத்துப் படித்தும் பிறருக்கும் உபதேசித்தும் வந்தார்கள். புளிய மரத்தின் கீழ் அக்காலம் ''திண்ணைப் பள்ளிக்கூடம்'' நடைபெற்று வந்தது. அக்காலப் பழம்பெரும் பண்டிதர்கள் இப் புளியமரச் சோலையின் கீழிருந்தே பாடங்கள் படித்து வந்தனர். இவர்கள் கரம்பன் - யாழ்ப்பாணம் மகா தேவாச்சிரம மகாதேவ சுவாமிகள் முருகேசர் மாணவராவர்.

கோயிலுக்கு அருகில் வாழ்ந்த சைவர்களுக்கும் வேதாரணியம் - வரணி - கரணவாய் ஆதீனகர்த்தாக்கள், சைவக்குருமாருக்கும் இடையில் மிக நெருங்கிய தொடர்புகள் இருந்தன. கைலாயநாதர், திருஞானசம்பந்தர், நமசிவாயதேசிகர், திருஞானசம்பந்தர் ஆகியோரின் பரம்பரையினர் வேலணையை வதிவிடமாக கொண்டு இக்கோயிலைச் சூழ உள்ள பகுதிகளில் சைவாச்சிரமம் அமைத்து ஆலய வளரச்சிக்கும் பொறுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக இருந்து வந்துள்ளார்கள். இக்குருமார் பரம்பரையினரே பெரியபுலம் மகாகணபதிப் பிள்ளையார் கோயில்வருடாந்திருவிழா கொடி யேற்றம் போன்ற கிரியைகளை செய்து வந் தனர். அந்த நேரத்தில் வேலணை மேற்கு சைவர்களே கோயில் பூஜைகளை செய்து வந்தனர்.

இச்சைவர்கள் தமிழ்நாட்டு சைவர்க ளோடும் மிக நெருங்கிய உறவு கொண்ட வர்கள். வேலணை, ஊர்காவற்றுறை, சுருவில் கழிமுக பகுதிகளில் இருந்தோ, நெடுந்தீவுக் கரையிலிருந்தோ கட்டுமரம் தோணிமூலம் தென்னிந்திய கோடிக்கரை, வேதாரணியத் திற்கு சிலமணி நேரத்தில் சேர்ந்துவிடுவர். சிதம்பரம், சிவபுரி, திருத்திலப்பூண்டி ஆகிய இடங்களில் வேலணைச் சைவர்களும் தென் னிந்திய சைவர்களும் உறவு கொண்டு வந் துள்ளார்கள். சிதம்பரம் புகையிரத நிலையம் தொடக்கம் பச்சையப்பன் கல்லூரிவரை செல்லும் தெரு யாழ்ப்பாணத்தார் வேல ணைச் சைவர் (சிதம்பர வாசியானோர்) குடி யிருந்து வருமிடமாகும்.

தென்னிந்திய சைவ ஓதுவார்கள் வேல ணைச் சைவர்களோடு உறவாடி வந்தவர்கள். வேதாரணிய அடங்கன்முறை அப்பாசாமி ஓதுவார் ஒருமுறை வேலணைக்கு வந்தபோது வேலணை மேற்கு சைவசித்தாந்தசிரோமணி நாகலிங்க உபாத்தியார் வீட்டு (நெல்லா வில்) பூஜை வேதிகையில் சிவபூஜை செய்து அங்கு சிலகாலம் தங்கியிருந்து திரும்பிப் போயிருக்கிறார்.

நாவலர் மாணவர் அமரர் கந்தப்பர் ஸ்தாபித்த சைவப்பிரகாச வித்தியாசாலை, அமரர் இரராஜா உபாத்தியார் (செ. கனக சபாபதிப்பிள்ளை) ஸ்தாபித்த நடராஜா வித் தியாசாலை,வேலணைஸ்பீக்கர் சேர்.வை.துரை சாமி அவர்கள் ஸ்தாபித்த வேலணை மத்திய கல்லூரி என்பனவும் வேலணை மேற்கில் உள் ளன. இப்பிரதேசக் கல்விப் பாரம்பரியத்தில் இந்த நிறுவனங்களின் பங்களிப்பு குறிப்பி டத்தக்கது.

சைவம் வளர ''சைவ சூக்குமார்த்த போதினி'' யாழ்ப்பாணத்தின் முதல் சைவப் பத்திரிகை இராஜா உபாத்தியாரால் அவ ரது சொந்த நடராஜா அச்சுயந்திரசாலையில் அவர்தம் மைத்துனர் வே. பேரம்பலம் (அப் பாத்துரை உபாத்தியார்) செல்வி சௌந் தரநாயகி தம்பு ஆசிரியை இவர்களது அச் சுக் கோர்வையின் உதவியால் வெளிவந்தது.

வேலணை மேற்கு பெரியபுலம் மகாகண பதிப்பிள்ளையார் கோயிலை முதலில் ஸ்தாபித் தவர் வேலணை மேற்கு சைவ சுப்பிரமணியப் பெரியாராவர். அவரின் சொந்தக்காணியி லேதான் இவ்வாலயம் அமைக்கப்பட்டது. அதைச்சூழ இருந்த சைவக் குடும்பங்களுக் குரிய காணி இன்றும் கோயில் வளர்ச்சிக் காக விடப்பட்டுள்ளது. கோயிலைச்சூழஉள்ள காணிகள் இக்கோயிலின் பாவனையில் இரு ந்து வருகின்றது. கால வளர்ச்சியில் இக்கோ யில் வேலணை மேற்கில் மக்களின் அயராத முயற்சியினால் பெருவளர்ச்சி கண்டு வருகி றது.

மேலே கூறிய உபாத்தியார் பரம்பரை யினர் இக்கோவில் பரிபாலனங்களில் முக்கிய பங்காற்றி வந்துள்ளார்கள். காலத்திற்கு காலம் ஆலயத்தில் சீர்திருத்தங்கள் ஏற்பட்டு வந்தன. அந்தவரிசையில் இவ்வூர்ப் பெரியார் கள் பலர் நினைவு கூரப்படவேண்டியவர்கள். கோயிலை நல்லமுறையில் கட்டி பராமரிப்ப தற்கு பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. ம. தம்பு(ஆசிரியர்), க. வயித்திலிங்கம்,படிகலிங் கம்மு.சின்னையா, சே. பொன்னையா, க. துரை யப்பாபிள்ளை, நா. சரவணமுத்து, (தபாலதி பர்), மு. குமாரசாமிப்பிள்ளை, (மு. கு), பிள் ளையார் விலாஸ் கணபதிப்பிள்ளை, இராச துரை (இராஜகோபுர ஸ்தாபகர்) ஆகியோர் எமது ஆலய வளர்ச்சியில் நினைவுகூரத்தக்க வர்கள். இன்னும்பலர் இவர்களுக்கு துணை யாக இருந்தனர். அண்மைக் காலத்தில் பலர் தமது பங்களிப்பை செய்து வருகின்றனர்.

அமரர் மு. குமாரசாமி அவர்களின் தொண்டு சிறப்பானது. அவர்காலத்தில் வரு டாந்த தேர்த் திருவிழா மிகச்சிறப்பானதும் உள்ளத்தை நெகிழ வைத்ததுமாக இருக் கும். ''தேர்த்திருவிழாவில் எம்பெருமான் உள்வீதியில் வீதியுலாவரும் காட்சியை எழுத் தில் வடிக்க முடியாது'' அதை அனுபவித்த வர்களுக்குமட்டுமே தெரியும். பக்திபூர்வ மாக பக்தர்கள் எல்லோரும் உள்ளம் உருகி இறைவனுடன் ஒன்றாகிவிட்ட ஒரு ஆனந்த நிலையை அந்த நேரத்தில் காணமுடியும்.

தேர்த்திருவிழா அன்று பிள்ளையார் உள்வீதியில் எழுந்தருளும் போது யாழ்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாணத்தில் உள்ள பிரசித்திபெற்ற நாதஸ்வர தவில் வித்துவான்கள் எல்லாம் அன்று வருவார்கள். பக்தர்களின் எண்ணிக்கையைப் போல நாதஸ்வர தவில் வித்து வான்களும் இருப்பார்கள். இவர்களின் நாதக்கடலில் பிள்ளையாரும் பக்தர்களும் மூழ்கி விடுவார்கள். இவர்களுக்கு உற்சாகம் கொடுப்பவராக அமரர் மு. கு. அவர்கள் கைகளை உள்ளும்புறமுமாக பிரட்டி தாளம் போடுவதும், கண்ணை மூடுவதும், வெட்டித்திறப்பதும் அவரது சைகைகளும் நாதஸ்வர கலைஞர்களை உற்சாகமூட்டும். இந்நிகழ்ச்சி உள்ளத்தை உருக்குவதாகும். இன்றும் இந்நிகழ்ச்சி எல்லோர் மனதிலும் நிழலாடுகிறது. மு. கு, வின் சைகைக்கும் மேளகாரர் வாசிப்புக்கும் ஏற்ப மகாகணபதிப்பிள்ளையாரும் தேர்த்திருவிழாவன்று நிர்த்தன்கணபதியாகி விடுவர். இது பிரத்தியட்சமானது.

மேலும் மு. கு. அவர்களின் நடவடிக்கைகள் கோவிலின் வளர்ச்சியில் பலமாற்றங்களை உண்டாக்கின. இலங்கை போக்குவரத்து சபையுடன் தொடர்பு கொண்டு திருவிழா காலத்தில் ஆலயத்திற்கு இ. போ, ச. பஸ்வண்டிகளை ஒழுங்கு செய்திருந்தார். இன்றும் பல முயற்சிகளை எடுத்திருந்தார்.

அண்மையில் பிள்ளையார் விலாஸ் க. இராசதுரை அவர்கள் இராஜகோபுரத் திருப்பணியை ஆரம்பித்துஏறக்குறைய அரைவாசி வேலை பூர்த்தியாகிவிட்டது. அவர் திடீரென காலமாகிவிட்டமை கோயிலுக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும். அவர்களின் குடும்பத்தார் விரைவில் கோபுரத்தை பூரணமாக்கிவிடுவார்கள். இவ்வாறு ஒவ்வொருவரைப் பற்றியும் விரிவாகக் கூறலாம். அவர்களின் பணிஅளவிடமுடியாதது. தீவுப்பகுதியிலேயே கருங்கல் திருப்பணியை நிறைவேற்றிய பெருமை எமது ஊர் மூதாதையர்களையே சாரும். அவர்களின் பணி மலையைவிட உயர்வானது. அவர்களை நினைவு கூறுவது இன்றைய தலைமுறையின் கடமையாகும்.

மேற்கூறில் சைவ தமிழ்ப்பாரம்பரியம் எமது முடிப்பிள்ளையார் ஆலயத்தை மையமாக வைத்தே வளர்ந்து வந்துள்ளது. அதன் தொடர்ச்சி இன்றும் காணப்படுகிறது கோயிலை தளமாகக் கொண்டு இன்றும் பல நிறுவனங்கள் வளர்ந்து வருகின்றன.

எமது ஆலயம் மிகப்பிரமாண்டமான வகையில் புதுப்பொலிவுடன் திருப்பணி வேலைகள் நடைபெற்று இன்று கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. தொடர்ந்தும் எமது பகுதி சைவ, தமிழ் வளர்ச்சிப்பாரம்பரியத்தில் எமது ஆலயத்தின் பங்கு தவிர்க்கப்பட முடியாதது ஆகும்.

卐卐

திருவாக்கும் செய்கருமம்
கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும்
பெருக்கும் - உருவாக்கும்
ஆதலாம் வானேடும்
ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

-கபிலதேவநாயனர்

卐卐

விநாயகனே வெவ்வினையே
வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி
விப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும்
நாதனுமாந் தன்மையினல்
கண்ணிற் பணிமின் கனிந்து.

-கபிலதேவநாயனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயமும் கர்ணபரம்பரைச் செய்திகளும்

பொன். அருணகிரிநாதன்
(B. A. Jaffna)

"வேலணை மேற்கு பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார் கோயிலின் பூர்வ வரலாற்றைதெளிவாகஅறியத்தக்க சாதனங்கள் எவையுமில்லை. ஆயினும் மிகப் பழமையான தென்பதனை மறுக்க முடியாது..." மேற்படி கூற்று 09 - 04 - 1939ல் வெளியிடப்பட்ட பரிபாலன சபையாரின் "இரப்புரை" பற்றிய துண்டுப் பிரசுரமொன்றில் காணப்படுகிறது. இக்கூற்று எமது ஆலயத்தின் சரியான வரலாற்று ஆதாரங்கள் இதுவரை எமக்கு கிடைக்கவில்லை என்பதை காட்டி நிற்கிறது. இன்றுவரை வரலாற்றாதாரங்களை பெறுவதற்கான முயற்கிகள் செய்யப்படவில்லை என்பது துரதிஷ்டவசமானது.

இந்த முயற்சியில் ஈடுபட முனைந்தபோது கர்ண பரம்பரைச் செய்திகளை ஆங்காங்கு ஊர்ப் பெரியவர்களிடம் கேட்க முடிந்தது. அந்த செய்திகளும் பல சந்தேகங்களை மனதில் எழுப்புபவையாகவே இருக்கின்றன.

கோயில் வரலாறு பற்றிய தகவல்கள் பல்வேறு சுய விருப்பு சார்ந்த ஆதாரங்களை காட்டி நிற்பதையும் அவதானிக்க முடிகிறது. தாம் சார்ந்த பரம்பரைச் செய்திகளை உள்ளடக்கியதான தகவல்கள் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு துண்டுப் பிரசுரங்கள் மூலம் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றில் பல முரண்பாடுகளும் காணப்படுகின்றன. இந்நிலையில் கர்ண பரம்பரைச் செய்திகள் பற்றிய ஒரு ஆய்வாக இக்கட்டுரை அமைகிறது.

ஏறக்குறைய 350 வருடங்களுக்கு முன்னைய வரலாற்றைக் கொண்டதாக எமது ஆலயம் உள்ளது. இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் பிள்ளையார் விக்கிரகத்தை வன்னிப் பிரதேசத்தில் இருந்து சுப்பிரமணியம் என்பவர் கொண்டு வந்ததாக கூறப்படும் செய்தியை பலர் ஏற்றுக் கொள்கிறார்கள்.

வன்னிப் பிரதேசம் என்று கூறும்போது முல்லைத் தீவைச் சேர்ந்த பகுதி எனக் கொள்ள இடமுண்டு. ஏனென்றால், குமுழமுனை ஸ்ரீமத் க. சரவணமுத்துப் புலவர் அவர்கள் பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார் பேரில் பதிகம் ஒன்று பாடியுள்ளார். இப்பதிகம் இன்றும் வழக்கில் உள்ளது.

பிள்ளையார் விக்கிரகம் சுயம்பு விக்கிரகத் தன்மையை ஒத்ததாக காணப்படுகிறது. சிற்ப கலைகள் வளர்ச்சியடையாத ஒரு ஆரம்பகாலத்தில் செதுக்கப்பட்ட ஒரு அம்சத்தை அவதானிக்க முடிகிறது. இயற்கையாகவே உருவாகிய அமைப்பினை முற்றுமுழுதாக ஏற்க முடியாதுள்ளது. அத்துடன் வன்னிப் பிரதேச சூழலைப் புலப்படுத்தும் பாறை அமைப்பினை ஒத்த பாலியாற்றுப் பிரதேச அமைப்புத் தன்மைகள் இருப்பதாக பலர் கூறுகின்றனர்.

இவ்விக்கிரகத்தை மாற்றி புதிய விக்கிரகம் ஒன்று பிரதிஷ்டை செய்ய பலர் விரும்பி பிள்ளையாரிடம் பலமுறை உத்தரவு கேட்டபோது உத்தரவு கிடைக்கவில்லையாம். இதனால் அவரே இன்று இவ்வாலயத்தின் மூல மூர்த்தியாக விளங்குகிறார். விநாயகரின் அருளின் பெருமை பற்றி இவ்வூர்ப் பெரியவர்கள் பலர் பல கதைகள் கூறுகின்றனர்.

## 1. கப்பல் உரிமையாளரின் மனதை மாற்றியது

எமது ஆலயத்தின் கட்டிட அமைப்பினை முழுதும் கருங்கல்லினால் செய்ய வேண்டுமென்று எமது மூதாதையர்கள் பெருமுயற்சி செய்தனர். அதற்காக காலி நகரத்தில் இருந்து கப்பல் மூலம் கருங்கல்லை பெறுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. இவ்வூர்ப் பெரியவர்கள் பலர் காலியில் வர்த்தகத் தொடர்புகளை வைத்திருந்ததனால் இம்முயற்சி அவர்களுக்கு கைகூடியது. காலியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூலமூர்த்திக்கும் பரிவார மூர்த்திகளுக்குமுரிய கும்பங்கள் வீதியுலா வருதல்



பாபிஷேகத்தில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றியவர்கள்:- ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாதப்தம்
ரன், துர்க்கா துரந்தரி, திரு. ஜெயராஜ் ஆகியோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மலர்க்குழுவுடன் பரிபாலன சபைத்தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர்



15. பிரதம அர்ச்சகரும் பரிபாலனசபையினரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து ஊர்காவற்றுறைக்கு கப்பலில் கருங்கல் ஏற்றி வருவதற்த கப்பல் சொந்தக்காரரிடம் ஏற்பாடுகள் செய்யப்பட்டது. ஒரு கப்பல் சொந்தக்காரன் கடலில் அச்சம் காரணமாக மறுத்துவிட்டாராம். மற்றுமொரு கப்பல் சொந்தக்காரரும் மறுத்துவிட்டாராம் ஒருநாள் இரவு இரண்டாவது கப்பல்க் காரரின் கனவில், ஒருவர் சென்று நான் வேலணை மேற்கில் இருந்து வருகிறேன். உனது சப்பலுக்கு எந்தவித கஷ்டமும் ஏற்படாது. கோயிலுக்கு கருங்கல்லை ஏற்றித் தருமாறு கூறினாராம். உடனே கப்பல் சொந்தக்காரர் தாமாகவே முன்வந்து கருங்கல் ஏற்றுவதற்கு சம்மதித்து எந்தவித இடையூறும் இல்லாது ஊர்காவற்றுறைக்கு கப்பல் கருங்கல்லுடன் வந்து சேர்ந்ததாம். அதே வேளை முன்னைய கப்பல்காரரின் கப்பல் கடலில் பல கஷ்டத்திற்குள்ளாகி சுக்கான் அறுந்து தத்தளித்து கரையேறியதாகவும் பிள்ளையாரின் செயல்தான் அதற்கு காரணமென்று கப்பல் சொந்தக்காரன் கூறியதாகவும் எமது ஊர்ப் பெரியவர்கள் எம்பெருமானின் அருளை வியந்து கூறுகின்றனர்.

2. பிள்ளையாரின் விருப்பங்கள் சில சம்பவங்கள் மூலம் வெளிக்காட்டப்பட்டமை.

எமது மூதாதையர்கள் பிடி அரிசி சேமிப்பு மூலம் நிதி சேகரித்தும், பலரிடம் பல ஊர்களுக்கும் சென்று நிதி சேர்த்து இவ்வாலயத் திருப்பணிகளை மேற்கொண்டு வந்தனர். ஒரு சந்தர்ப்பத்தில் ஊர்ப் பொதுவான கோயிலை ஒருவருக்கு சொந்தமாக எழுதுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டனவாம். பிள்ளையார் ஏதோ ஒரு வகையில் தனது வெறுப்பைக் காட்டி அச் செயலை நிற்பாட்டினார் என்று கூறுவர். இது விநாயகரின் அற்புதச் செயலுக்கு ஒரு சான்றாகும். இன்றுவரை பொதுமக்கள் எல்லோருக்குமான ஒரு சொத்தாகவே இவ்வாலயம் விளங்குகிறது.

முடிப்பிள்ளையார் என்ற பெயர்க் காரணம்

அன்னியர்கள் இலங்கையை கைப்பற்றி ஆண்டபோது அவர்கள் தமது சமயத்தை பரப்புவதற்காக இங்கு சைவ சமயத்தை அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டனராம். அப்போது இருந்த சைவ ஆலயங்களின் முடிகள் எல்லாம் அன்னியர்களினால் இப்பகுதியிலும் அழிக்கப்பட்டன. ஆனால் எமது ஆலயத்தின் முடி மாத்திரம் உடைக்கப்படாததனால் "முடிப்பிள்ளையார்" என்ற பெயர் வழங்குவதாக கூறுகின்றார். இன்னொரு சாரார், அந்தக் காலத்தில் கோயில்கள் கட்டும்போது முடி வைத்து தூபி அமைத்து கட்டும் வழக்கம் இல்லாமல் அநேகமான கோயில்கள் மாடக் கோயில்களாகவே கட்டப்பட்டனவாம். ஆனால் எமது ஆலயந்தான் அக்காலத்தில் முடி வைத்து தூபி அமைத்து கோயில் கட்டப்பட்டதனால் "முடிப்பிள்ளையார்" என்ற நாமம் நிலவுவதாக சிலர் குறிப்பிடுகின்றனர். முன்னைய காரணமே பொதுவானதாக பலராலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

3. இன்னுமொரு பிள்ளையார் கோவிலின் உருவாக்கம்.

முற்காலம் தொடக்கம் எமது ஆலயத்தில் பல்வேறு புராணங்கள் படித்து பயன் சொல்லப்படுவது வழக்கம். இது அண்மைக் காலம் வரை தொடர்ந்து வந்துள்ளது. புராண பயனைக் கேட்பதற்காக பலர் கோயிலில் வந்து கூடுவார்களாம். அவ்வாறு பயன் கேட்கும் போது ஒவ்வொருவரும் தமக்கென்று ஒவ்வொரு இடத்தை ஒதுக்கி வைப்பார்களாம். ஒவ்வொரு தூணையும் தமது இருப்பிடமாக வரித்துக்கொண்டு அந்த இடத்தில் இருந்து பயன் கேட்பார்களாம். அவ்வாறு நடைமுறை இருக்கும்போது ஒரு நாள் ஒருவர் இருக்கும் இடத்தில் வேறொருவர் வந்து அமர்ந்து பயன் கேட்டுக் கொண்டிருந்தாராம். அதைப் பார்த்து விட்டு அந்த இடத்தில் வழமையாக இருந்து புராணம் கேட்பவர் கோபித்துக்கொண்டு பயன் கேட்காமல் திரும்பிச் சென்றுவிட்டாராம். அவர் பின்னர் தனக்கென்று ஒரு கோயில் கட்ட வேண்டும் என்று முயற்சிகள் செய்து அயலில் உள்ள புளியங்கூடல் கிராமத்திற்கு சென்று தமது காணியில் சிறிய குடில் ஒன்று அமைத்து பிள்ளையார் விக்கிரகம் வைத்து வழிபட்டு வந்தாராம். அந்த பிள்ளையாரே இன்று புளியங்கூடல் இந்தன் முத்து விநாயகர் என்ற பெயரில் கோயில் கொண்டருளியுள்ளார். இந்தன் பிள்ளையார் கோயில் என்றும் அழைப்பார்கள். இக்கதையும் இன்று செவி வழிக் கதையாக எமது சமுதாயத்தில் நின்று நிலைத்து வருகிறது. மகாகணபதிப்பிள்ளையார் கோயில் ஸ்தாபக பரம்பரையைச் சேர்ந்த உறவினர்கள் வரிசையில் உள்ளவர்களே அக் கோயிலையும் அமைத்தார்கள் என்றும் கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. தேர்வடம் ஒன்று கடலில் வந்தமை.

மிக அண்மைக் காலத்தில் 7,8 வருடங்களுக்கு முன்னர் எமது ஆலயத்திற்கு தென் பகுதியில் உள்ள கடலில் நீளமான தேர் வடம் ஒன்று கடலில் மிதந்து வந்து கரை சேர்ந்தது இது இப் பிள்ளையாரின் புதுமை யென்று கூறுகிறார்கள் கடலில் இவ் வடத்தைக் கண்ட ' செட்டியெ' பகுதியில் உள்ள மீனவத் தொழிலாளர்கள் எமது பிள்ளையாருக்குத்தான் இவ்வடம் உரியது என்று கூறி பிள்ளையாரின் புதுமையை வியந்து ஆலயத்திற்கு கொண்டுவந்து ஒப்படைத்துள்ளார்கள். இந்த வடம் இப்போதும் எமது ஆலயத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. பிள்ளையாரின் அருட் செயலுக்கு இந்த நிகழ்ச்சி நல்ல சான்று என ஊர்ப் பெரியவர்கள் கூறுகின்றார்கள்.

5. கனவில் சென்று பலருக்கு திருப்பணிகளை செய்யுமாறு கூறுவது.

பிள்ளையார் எமது ஊரிலுள்ள பல வசதி படைத்தவர்களிடம் கனவில் சென்று தனக்கு தேவையான திருப்பணிகளைச் செய்யுமாறு கேட்டுள்ளார். தனக்கு அது வேண்டும் இது வேண்டும் என்று கனவில் சென்று கூறுவாராம். இதனால் இவ்வூரில் வாழ்ந்த பலர் தாமாக முன்வந்து திருப்பணிகள் செய்ததை காணமுடிகிறது. இன்றும் பிள்ளையாருக்கு பயந்து பல சிறப்புகளையும் திருப்பணிகளையும் பலர் செய்து வருகின்றனர். அதுபோல பிள்ளையாரும் பலரை நல்ல முறையில் வேண்டியதை வேண்டியாங்கு கொடுத்து சிறப்பிப்பதையும் பலர் ஏற்றுக் கொள்கிறார்கள். இவ்வூரில் வாழ்ந்து அமரரான பலர் பிள்ளையாரின் அற்புதங்களையும் புதுமைகளையும் எப்போதும் பேசிக்கொண்டே இருப்பார்கள். அவர்களின் கருத்துகளை பல தடவைகளில் சொல்லக் கேட்ட பலர் அந்த சம்பவங்களை இன்றும் குறிப்பிடுகின்றனர்.

எமது ஆலயத்தின் வளர்ச்சிகளைப் பார்க்கும்போது 1940ம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேகத்தின் போது கருப்பக் கிரகமும் அர்த்த மண்டபமும் கருங்கல்லினால் கட்டி பூர்த்தியாக்கப்பட்டிருந்தன. அதன் பின்னரே படிப்படியாக ஏனைய மண்டபங்கள் கருங்கல்லினால் கட்டப்பட்டு வந்துள்ளன. இதற்கான சான்றை 05 - 4 - 1944ம் ஆண்டு ஆலய பரிபாலன சபையினரால் வெளியிடப்பட்ட திருப்பணி விஞ்ஞாபனம் ஒன்று காட்டி நிற்கிறது. 10 - 04 - 1944ல் மகா மண்டபத்தின் நிலையின் மேற்புறத்துக்குப் பாவுகல் வைக்கும் வைபவம் நடைபெற்றுள்ளது. இத் திருப்பணிகள் நிறைவேறி மீண்டும் 1948ம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதற்கான சான்று இன்றும் எமது ஆலயத்தின் சபா மண்டபத்தின் சுவரில் எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் மேலும் பல திருப்பணிகள் நடைபெற்று 21 வருடங்களுக்கு பின்னர் அதாவது 25 - 06 - 1969ம் ஆண்டு சம்புரோக்ஷண மகா கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. இதில் இன்னுமொரு புதுமை என்னவென்றால் மீண்டும் 21 வருடங்களுக்கு பின் இப்போது 11 - 04 - 1990ல் மகா கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் பாலித்துள்ளது. இதிலும் ஒரு சிறப்பு 25 - 6 - 1969 புதன்கிழமை சுவாதி நட்சத்திரத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. 11-04-1990லும் புதன்கிழமையிலும் சுவாதி நட்சத்திரத்திலும் கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது.

எமது ஆலயம் பற்றிய வரலாறு இன்றுவரை எமக்கு ஆதாரபூர்வமாக கிடைக்காதிருப்பது மனவருத்தத்திற்குரியது. வரலாறு தெரிந்த காலத்துக்குரிய சான்றுகள், ஆவனங்கள் பதிவேடுகள் கூட இன்னும் சரியான முறையில் ஆலயத்தில் பேணப்படவில்லை. எமது ஆலயத்தின் வளர்ச்சியை முழு நோக்காக கொண்டு அத்தகைய சான்றுதாரங்கள் யாரிடத்தில் எங்கிருந்தாலும் அது உரிய இடத்திற்கு வந்து சேர வேண்டும். அதற்கு அதனுடன் சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டும். அத்தகைய தொரு முன்னுதாரணமான பங்களிப்பை இவ்வாலயத்துடன் பங்குகொண்டு உழைத்த அன்பர்கள் அனைவரும் இந்த சந்தர்ப்பத்தில் செய்ய வேண்டும். அத்தகைய சான்றுகள் வரலாற்றுப் புகழ் மிக்க எமது ஆலயத்திற்கு மிகவும் அத்தியாவசியமாக உள்ளன. இந்த ஆலயத்தின் வளர்ச்சிக்கு உழைத்தவர்கள் எல்லோரும் மனப்பூர்வமாக, மானசீகமாக தங்களை எதுவித பிரதி பலனும் எதிர்பாராது அர்ப்பணித்தது உண்மையானால் கோயிலுக்குரிய சொத்துகள் ஆதாரங்கள் பிள்ளையாரிடம் வரவேண்டியது இன்றைய காலத்தின் ஒரு தேவையாகும் அதற்கு எல்லாம் வல்ல எம்பெருமான் நல்வழி காட்ட வேண்டும் என்பது பலரது விருப்பமுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐங்கரன் அன்னதானசபை

வேலணை மேற்கின் உயிர்நாடிபோன்று விளங்கும் முடிப்பிள்ளையார் என்று அழைக்கப்படும், அருள்மிகு பெரியபுலம் மகாகண பதிப்பிள்ளையார் ஆலய மகாகும்பாபிஷேக மலருக்கு, ஐங்கரன் அன்னதான சபையின் சார்பில் வாழ்த்துக்கள் வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். ''அரிது அரிது மானிடப்பிறவி அரிது'' என்பர் பெரியோர். அப்படி அரிய மானிடப் பிறவியைப் பெற்ற எங்களுக்கு இப்பிறவியில் தெய்வ வழிபாடு முக்கிய இடம் பெறுகின்றது. ''கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்ற ஆன்றோர் வாக்கு மேலும் இதை உறுதிப்படுத்துகின்றது. ஆரம்பத்தில் சிறு ஆலயமாக ஆரம்பிக்கப்பட்டு ஊர்மக்களின் அயராத முயற்சியால் படிப்படியாக முன்னேறி, கருங்கல்லால் திருப்பணி செய்விக்கப்பட்டு இராஜ கோபுர ஆரம்ப வேலைகள் தொடக்கப் பெற்றுப், புதுப்பொலிவுடன், இன்று கண்கொள்ளாக் காட்சியாக அமைந்து, ஊருக்கும், மக்களுக்கும் சிறப்பைக் கொடுக்கின்றது.

'' மக்கள் சேவை மகேசன் சேவை '' என்று சமயப் பெரியோர்கள் கூறுவார்கள். இந்த மக்கள் சேவையில் அன்னதானம் முதலிடம் வகிக்கின்றது. இவ்வாலயத்திற்கு வருகைதரும். அடியார்கள் நலன்கருதி 1986ம் ஆண்டு ''ஐங்கரன் அன்னதானசபை'' உருவாகியது. ஆலயத் திருவிழாக் காலங்களில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கிப், பெரும் சேவை செய்துவரும் இச்சபை தற்பொழுது இருபத்தைந்து நிர்வாக உறுப்பினர்களைக் கொண்டு சேவையைச் செய்து சிறப்படைகின்றது.

இப்பெரும் கைங்கரியத்தைச் செய்வதற்கு உறுதுணையாக இவ்வாலயத்தின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டுழைத்த அமரர் திரு.மு. குமாரசாமிப்பிள்ளை அவர்களின் இவ்வாலயத்திற்கு அண்மையில்உள்ள காணியும் அன்னதான சபைக்கு உதவுகின்றது.

**செ. தேவரர்ஜா**
**ஓய்வு பெற்ற தபாலதிபர்**

மேலும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்குவதோடு மட்டுமல்லாமல் அதற்கொரு நிரந்தரக் கட்டடம் தேவையென்று உணர்ந்து அதற்காக இலங்கை வங்கியில் ஒரு சேமிப்புக் கணக்கையும் ஆரம்பித்துள்ளது. சபையானது சிறப்புப்பெற்று மேலும் மேலும் வளர்ச்சி அடைவதற்கு எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் திருவருளை வேண்டிநிற்கின்றோம்.

''மேன்மை கொள் சைவநீதி விளங்குக
உலகமெல்லாம்''

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகந்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

-திருமூலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத் திருநாட்டின் வடமேற்குத் திசையில் அமைந்துள்ள தீவுக் கூட்டங்களுள் வேலணை பல்வேறு வழிகளிலும் சிறப்புற்று விளங்குகிறது வேலணை என்றால் சைவமும் தமிழும் ஒருங்கே வளர்ந்த இடம் என்று சான்றோர் கூறுவர் இதற்கு இப்பகுதியில் பல ஆதாரங்களை கூறமுடியும். வேலணை மேற்கில் பெரியபுலப் பகுதியில் கோயில் கொண்டருளி அருளாட்சி புரியும் மகாகணபதிப்பிள்ளையார் ஆலயம் இப்பகுதியில் வரலாற்றுச் சிறப்புக்கள் பலவற்றைக் கொண்டதாகும். மூலஸ்தானம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், சபாமண்டபம் அத்தனையும் கருங்கல்லால் அமைக்கப்பட்ட பெருஞ் சிறப்பைக் கொண்டதாகும்.

# ஆலயமும் இந்து இளைஞர் மன்றத்தின் பணிகளும்

எமது ஊரின் வளர்ச்சி இந்த ஆலயத்தை மையமாகக் கொண்டதாக அமைந்துள்ளது. எமது மூதாதையர்கள் முதற்கொண்டு இன்றைய தலைமுறைவரை உள்ளவர்கள் இவ் ஆலயத்தின் வளர்ச்சியில் பெரும் பங்கு கொண்டு உழைத்து வருகிறார்கள். இவ்வூர் இளந்தலைமுறையினர் இவ்வாலய வளர்ச்சிப் பணியில் பல்வேறு கால கட்டங்களில் தம் மாலியன்ற பணியினை ஆற்றி வந்துள்ளார்கள். அவர்கள் வரிசையில் அண்மைக்கால இளைஞர்களின் பணி குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

கடந்த 15 வருடங்களுக்கு மேலாக இவ்வூர் இளைஞர்கள் திருவெம்பாவை நாட்களில் அதிகாலை 3 மணியளவில் எழுந்து ஆலயத்தில் திருப்பள்ளி எழுச்சி பாடி பின்னர் கிராமமெங்கும் சென்று திருவெம்பாவை பாடி அடியார்களை துயிலெழுப்பி வந்துள்ளார்கள். இன்றும் அப்பணி தொடர்கிறது. இவ்வாறு இறைபணியுடன் தம்மை இணைத்துக் கொண்டு ஆலய வளர்ச்சியில் தமது பங்களிப்பை அவ்வப்போது வழங்கி வந்தனர். இவ்வாறு இளைஞர்கள் தமது செயற்பாடுகளையும் சிந்தனைகளையும் ஒன்றிணைத்து அதன் பலத்தைப் பெருக்குவதற்கு ஒரு அமைப்பு அவசியமானது என்பதை உணர்ந்தனர். அதன் வெளிப்பாடாக 25-04-1974ல் ''முடிப்பிள்ளையார் இந்து இளைஞர் மன்றம்'' என்ற ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டது. அதனூடாக இளைஞர் பணி புதுப் பொலிவு பெற்று வளர்ச்சி அடையத் தொடங்கியது. ஆலய வளர்ச்சியில் ஏற்பட்ட பல திருப்புமுனைகளுக்கு காரணமாக இருந்தவர்கள் இந்து இளைஞர் மன்றத்தினர் என்பதை இவ்வாலயத்திதின் அண்மைக்கால வரலாற்றைப் பார்ப்பவர்கள் விட்டுவிட முடியாது.

இந்த மன்றத்தின் அமைப்பு விதியில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களில் ஒன்று ''இந்து சமய தலங்கள் ஆலயங்கள் சமய முக்கியத்துவம் வாய்ந்த புராதன நிலையங்கள் முதலியவற்றை பேணுதல் காத்தல் புதுப்பித்தல்'' இந்த நோக்கத்தை அடைய எமது மன்றத்தினர் பல வழிகளில் செயற்பட்டு வந்துள்ளனர். எந்தப் பணியாக இருந்தாலும் எமது மன்றத்தின் செயற்பாடுகள் எமது ஆலயத்தை தளமாக வைத்தே வளர்ந்து வந்துள்ளன. சுவாமி காவுதல், குடை, தீவர்த்தி பிடித்தல், வீதிகளை துப்பரவாக்குதல், சிரமதான அடிப்படையில் திருப்பணிக்கு உதவுதல், தண்ணீர்ப் பந்தல் வைத்தல், ஆலய வீதிகளுக்கு நீர் தெளித்தல், ஆலய வீதிகளை புனிதமாக வைத்திருப்பதற்கு பல நடவடிக்கைகள் எடுத்தல், ஆலய சூழலில் பல்வேறு நிழல் மரங்களை நாட்டுதல், பூந்தோட்டத்திற்குநீர் இறைத்தல், ஒலி, ஒளி அமைப்பில் பங்கேற்றல் என்று எமது மன்றத்தின் பணிகளை தொடர்ந்து கொண்டே போகலாம். இவை வெறும் புகழுக்காக கூறப்பட்டவை அல்ல. எமது ஊர்மக்கள் இவையெல்லாவற்றையும் ஏற்றுக் கொள்வார்கள்.

அடியார்கள் ஒரு புனிதமான ஆன்மீக அறிவினை பெறத்தக்கவகையில் இறை பக்தியில் ஆழ்த்துவதற்காக சமய இலக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்சங்களை உள்ளடக்கிய சொற்பொழிவு நிகழ்ச்சிகளை ஆலய திருவிழாக் காலங்களில் இடம் பெறச் செய்வதற்கு விழா உபயகாரர்களின் ஆதரவுடன் முன்னின்று உழைத்தவர்கள் எமது மன்றத்தின் ஆரம்பகால உறுப்பினர்கள். அவர்களின் இந்தப் பணி எமது ஆலயத்தின் வளர்ச்சியில் ஒரு முக்கிய திருப்பு முனை எனக் கூறலாம்.

மன்றத்தினர் எமது ஆலயத்தின் வளர்ச்சியுடன் தம்மை இணைத்துக் கொண்ட பல சமயப் பெரியார்களின் பணியினைப் பாராட்டி அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவமளித்துப் பாராட்டியுள்ளார்கள். சிவராத்திரி விழா போன்ற விழாக்களில் இத்தகைய செயல்களை ஆற்றி வந்துள்ளார்கள். இதைவிட மாணவர்களின் சமய அறிவினை மேம்படுத்துவதற்காக திருவெம்பாவை தினத்தின் இறுதி நாளில் சமய அறிவுப் போட்டிகளை நடாத்தி பரிசில்களை வழங்கி மாணவர்களுக்கு ஊக்கமளித்து வந்துள்ளார்கள்.

எமது மன்றம் தனது நிருவாக நடைமுறையினை விஸ்தரித்து பல்வேறு நிறுவனங்களுடனும் தம்மை இணைந்துக் கொண்டு செயலாற்றுவதிலும் பின்னிற்கவில்லை. அகில இலங்கை இந்து இளைஞர் மன்றத்துடன் சேர்ந்து இந்து இளைஞர் கொடி நாள் நிகழ்ச்சியை நடாத்தியது. கலாச்சாரத் திணைக்களத்திலும் பதிவு செய்யப்பட்ட தோடு இலங்கை அரசாங்கத்திலும் பதிவு செய்யப்பட்டு அனுமதியளிக்கப்பட்ட ஒரு மன்றமாக இன்று விளங்குகிறது. மன்றத்தின் நிதிக் கணக்குகள் யாவும் சரியான முறையில் பேணப்பட்டு வங்கிக் கணக்கும் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. எமது மன்றத்தினர் கிடைக்கின்ற நிதியை மிகக் கவனமாக கையாண்டு வந்து அபிவிருத்திக்கு வழிவகுத்துள்ளார்கள். அதிருஸ்ட இலாபச் சீட்டு, நன்கொடைகள், போட்டி நிகழ்ச்சிக்குரிய பரிசுகள் என்ற வகையில் நிதி சேகரிப்புக்கான வழிகளாக எமது மன்றத்தினர் பல வழிகளை கையாண்டுள்ளனர். இவ்வூர்ப் பெரியவர்கள், வர்த்தகப் பிரமுகர்கள், அன்பர்கள் எல்லோரினது உதவியாலும் ஆண்டுதோறும் எமது ஆலய தேர்த் திருவிழாவின் போது தாக சாந்திக்காக தண்ணீர்ப் பந்தல் அமைத்து அடியார்களுக்கு உதவி செய்து வருகிறார்கள்.

இதைவிட மன்றத்திற்கு ஒரு நிலையான நிரந்தர அலுவலகம் அமைய வேண்டும் என்றும் அது எமது ஆலயத்திற்கு அண்மையில் அமைய வேண்டும். என்ற எண்ணம் எமது மன்றத்தின் ஆரம்பகால உறுப்பினர்களிடையே இருந்தது. அதற்கான முயற்சிகளை அவர்கள் மேற் கொண்டார்கள். இதற்காக மன்றத்திற்காக சொந்தமாக நிலம் அமைய வேண்டும் என்ற நோக்கத்தில் கோயிலுக்கு முன்னால் அமைந்துள்ள, அமரர் திரு செ. கனகசபாபதிப்பிள்ளை ஆசிரியர் (இராசா உபாத்தியாயர்) அவர்களின் ஆதனத்தின் உரிமையாளர்களிடம் மன்றத்திற்காக காணியை நன்கொடை செய்யுமாறு கேட்டபோது எவ்வித மறுப்பும் தெரிவிக்காது எமக்கு அக் காணியை நன்கொடையாக எழுதித் தந்தார்கள். அந்த நிகழ்ச்சி 15 - 06 - 1977ல் நடைபெற்றது. அன்று காணிக்கான உறுதி மன்றத்தின் பெயரில் எழுதப்பட்டது. காணி உரிமையாளருக்கு எமது மன்றம் என்றென்றும் கடமைப்பட்டிருக்கும்.

---


## இ. கிருபானந்தன்

செயலாளர்

முடிப்பிள்ளையார் இந்து இளைஞர் மன்றம்.


---

மன்றத்திற்கான சொந்த நிலம் எமது ஆலயத்தின் தென்கிழக்கு மூலையில் அமைந்துள்ளது. அதில் மன்றத்திற்கான நிரந்தர கட்டிடத்திற்கான அடிக்கல் 20 - 10 - 1978 வெள்ளிக்கிழமை எமது ஆலய பிரதம அர்ச்சகர் பிரம்மஸ்ரீ இ. சோமாஸ்கந்த சர்மா அவர்களால் நாட்டப்பட்டது. இந்த நாள் எமது மன்ற வளர்ச்சிப் பாதையில் மிக முக்கியம் வாய்ந்த ஒரு வளர்ச்சி நிலையாகும். அது வளர்ந்து பூரண பொலிவு பெறுவது அன்பர்கள், பெரியோர்கள், செல்வந்தர்கள் ஆகியோரின் கைகளிலேயே தங்கியுள்ளது. எமது ஆலயம் புதுப் பொலிவு பெற்று பிரமாண்டமான வகையில் கும்பாபிஷேகம் காணும் இக்காலத்தில் ஆலயத்தின் முன்னாலுள்ள இந்து இளைஞர் மன்ற கட்டடமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்த்தியாக வேண்டும் என்பது எமது மன்றத்தினரின் நீண்ட நாள் எண்ணமாகும் அந்நாள் விரைவில் வர பிள்ளையார் அருள் புரிவார் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

எமது ஆலய வளர்ச்சி என்ற ஒரே குறிக்கோளைக் கொண்டு இயங்கும் எமது மன்றம் எப்பொழுதும் அதற்காக உழைப்பதற்கு தயாராக இருக்கிறது. அந்த ஆலயத்தில் நடைமுறைகள் சிறப்பாக சீராக இயங்குவதற்கு எமது மன்றம் என்றென்றும் தமது பங்கைச் செய்து கொண்டே இருக்கும். நல்லவை நடக்கும் போது அதற்கு ஆதரவளித்தும், தீயவை நிகழும் போது அதை சுட்டிக் காட்டி நல்லவை ஆக்குவதற்கும் பல முயற்சிகளை எமது மன்றம் எடுத்து வந்துள்ளது. இதை மக்கள் நன்கு அறிவார்கள். எதிர்காலத்திலும் இந்த மன்றத்தில் இணையப்போகும் எமது இளந் தலைமுறையினர் இந்தப் பணியை செவ்வனே செய்வார்கள். செய்து வரவேண்டும் என்பது எமது பணிவான எண்ணமாகும். ஆலயத்தின் வளர்ச்சிக்காக எதனையும் எந்த நேரத்திலும் செய்வதற்கு எமது மன்றம் எந்த வேளையிலும் பின் நின்றதில்லை. இனிமேலும் பின் நிற்கப் போவதுமில்லை. எமது மன்றத்தின் ஆரம்பகால உறுப்பினர்கள் இன்றும் தோன்றாத் துணையாக இணைந்து எம்மை வழிகாட்டிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களின் பணி என்றும் எமக்கு கிடைக்க வேண்டும். ஏனையோரும் எம்மை நல்வழி காட்டி வளர்க்க வேண்டுப்.

திருக்குடமுழுக்குப் பெருவிழாக் காணும் இந்நன்னாளில் எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் எங்கள் எல்லோருக்கும் நல்வரம் அருளி நாம் சிறக்க எமது ஊர் சிறக்க எமது இனம் சிறக்க அருட்கடாட்சம் எமக்கு கிடைக்க அவன் கழல் துதிப்போம்.

மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்.

---

கைத்தல நிறைகனி
அப்பமொடு அவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணி
கற்றிடும் அடியவர்
புத்தியில் உறைபவர்
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமும் மதியமும்
வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை
உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு
பணிவேனே

முத்தமிழ் அடைவினை
முற்படு கிதரினில்
முற்பட எழுதிய
முதல்வோனே
முப்புரம் எரிசெய்த
அச்சிவன் உறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துயரது கொடு
சுப்பிரமணி படும்
அப்புனம் அதனிடை
இபமாகி
அக்குறை மகளுடன்
அச்சிறு முருகனை
அக்கணம் மணமருள்
பெருமாளே.

-அருணகிரிநாதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியபுலம், மகா கணபதிப்பிள்ளையார் ஆலயம்: வரலாறும், வளர்ச்சியும்:-

**1.0 அறிமுகம்.**

வேலணை மேற்கில் கோயில் கொண்டு எழுந்தருளி அடியார்களுக்கு எளியவராகக் காட்சி அளிக்கின்றார் பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார். இவர் எழுந்தருளியிருக்கும் இடம் 'பெரியபுலம்' எனப்படும். இதனால் பெரியபுலம் பிள்ளையார் எனவும் வழக்கு உண்டு. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தில் பல சைவக் கோயில்கள் இடித்துத் தள்ளப்பட்டன என்பது வரலாறு. அவ்வாறு இடிக்கப்பட்ட சமயம் அச்செயலினின்றும் தப்பி, தொடர்ந்தும் முடியோடு பிள்ளையார் ஆலயம் காணப்பட்டதன் காரணமாக ''முடிப்பிள்ளையார்'' எனச் சிறப்பாக வழங்கப்பட்டு வருகின்றார். கடந்த, மூன்று நூற்றாண்டுகளாக முடிப்பிள்ளையார் ஆலயம் விளங்கி வருகின்றது என அறியப்படுகிறது. இதற்கு கர்ண பரம்பரைக் கதை ஆதாரமாகக் கூறப்பட்டபோதிலும், நொத்தாரிசுமார்களின் சாசனங்கள் சான்றுகளாக எடுத்துக் காட்டப்பட்ட போதிலும் அவை எல்லாவற்றுக்கும் மேலாகப் பிள்ளையார் மேல் பாடப்பட்டுள்ள திருப்பதிகங்கள், திருஊஞ்சல் போன்றவை தகுந்த மேற்கோள்களாக உள்ளன. இற்றைக்கு ஒரு நூற்றாண்டுக்கு முன் வி. கந்தப்பிள்ளை ஆசிரியர் அவர்களால் இயற்றப்பட்ட மகா கணபதிப்பிள்ளையார் திருவூஞ்சல் மேற்கூறிய கூற்றுக்கு தகுந்ததோர்எடுத்துக்காட்டுஆகும்.(1).மேலும் முல்லைத்தீவு,குமுழமுனையைச்சேர்ந்தசரவணமுத்துப் புலவராலும், வேலணை மேற்கு, மகா கணபதிப்பிள்ளையார் திருப்பதிகம் ஒன்று பாடப்பட்டுள்ளது.(2) இதனால் முல்லைத்தீவுவரையும் பிரபலமாகஇக்கோயில் இருந்ததென்றும் பக்திமான்கள் தீவுப்பகுதில் மட்டுமல்ல அதற்கப்பாலும் இருந்தும் முடிப்பிள்ளையாரைப் பூசித்து வந்தார்கள் என்பதும் தெரியவருகிறது. பிள்ளையாருக்கு மேலும் ஒரு திருப்பதிகம் சரவணையைச் சேர்ந்த ஆ. தில்லைநாதப் புலவர் அவர்களாலும் இயற்றப்பட்டது.(3). இப்பதிகம் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் பாடப்பட்டிருக்க வேண்டும். ஒரு ஆலயம் அமைக்கப்பட்டு பல வருடங்களின் பின்பே புகழ் பெறும். அந்தவகையில் எம் பெருமான் மேல் பாடப்பட்ட திருஊஞ்சல் திருப்பதிகங்கள் ஆகியனவும் பிள்ளையார் ஆலயம் தோன்றி இரண்டொரு நூற்றாண்டுகளின் பின்பே பாடப்பட்டிருக்க வேண்டும் என்பது ஊகிக்கக் கூடியதாகும். அப்படியாக இருந்தால் கர்ண பரம்பரைக் கதையும் உண்மையாக அமையலாம்.

ஆயினும் எம் பெருமானின் ஆலயத்திற்கு ஒரு ஒழுங்கான வரலாறு இதுவரை யாராலும் எழுதப்படவில்லை என்பது ஒரு விசனப்பட வேண்டிய விடயமாகும். சைவமும் தமிழும் ஒருங்கே போற்றப்பட்டது வேலணை மேற்கில் தான் என்று கூறப்படுகிறது. பெரும் அறிவாளிகளாகத் திகழ்ந்த கந்தப்பு உபாத்தியாயர், தம்பு உபாத்தியாயர், நாகலிங்க உபத்தியாயர், இராசா உபாத்தியாயர், அப்பாத்துரை உபாத்தியாயர் ஆகியோர் வாழ்ந்த பூமி. அது மட்டுமல்லாமல் யாழ்ப்பாணத்தின் முதல் சைவப் பத்திரிகையான சைவ சூக்குமார்த்த போதினியை நடராசா அச்சகத்தில் (வேலணை மேற்கு) அச்சிட்டு வெளியிடப்பட்ட பெருமையைப்பெற்றது வேலணை மேற்கு.(4). அவ்வாறு இருந்தும் கூட முடிப்பிள்ளையார் ஆலய வரலாறு யாராலும் கூறப்படவில்லை. ஆகவே பல சந்ததியினரின் திருப்பணியை ஏற்றுக்கொண்டு வீற்றிருக்கும் எம் பெருமானின் ஆலய வரலாறு ஓரளவுக்காவது அறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகம் செய்யப்பட வேண்டும். இந்த அறிமுகம் எதிர்கால சந்ததியினருக்கு ஒரு வழிகாட்டியாகவும் ஊன்று கோலாகவும் அமைய வேண்டும் என்பது ஒரு பொதுவான வெளிப்பாடாகும்.

**2.0 ஆரம்பகாலம்:-**

முடிப்பிள்ளையார் ஆலயம் எப்போது உருவாக்கப்பட்டது. யார், யாரால் அமைக்கப்பட்டது. தொடர்ந்து திருப்பணிகள் எவ்வெப்போது நிறைவேற்றப்பட்டன என்பன வற்றுக்கு ஆதாரபூர்வமான செய்திகள் உள்ளன. ஏறத்தாழ முற்றைம்பது வருடங்களுக்கு முன் இக் கோயில் அமைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. அக்காலத்தில் சுருவில், ஊர்காவற்றுறை, நெடுந்தீவு ஆகிய துறைகளில் இருந்து தமிழ் நாட்டிற்கு கடல் மூலமான போக்குவரவு இருந்தது. 1948ம் ஆண்டுவரை இந்தப் போக்குவரவு தொடர்ந்து நடைபெற்றது. இதன் காரணமாக திருமணம், உறவினர் வருகை போன்ற சமுதாயத் தொடர்புகள் என்பன பரஸ்பரம் இடம்பெற்று வந்தன.

இந்த வகையில் சோழ நாட்டில் உள்ள திருப்பூண்டியில் இருந்து வந்து வேலணை மேற்கில் வாழ்ந்தவர் பூண்டி மாமுதலி என்பவர் ஆகும். 17-ம் நூற்றாண்டின் ஆரம்ப ஆண்டுகளில் இவர் இங்கு வாழ்ந்ததாகச் செய்தி. பூண்டி மாமுதலியின் சிரேஷ்ட புத்திரர் பெரிய நீலயினார். இவர்தான் முதன் முதலில் முடிப்பிள்ளையார் ஆலயத்தை அமைத்தார் எனப்படுகிறது.(5). இவ்வாறு இவர் அமைத்ததற்கு இன்னொரு சிறப்பான காரணமும் ஒன்றுண்டு. அதாவது மண்டை தீவைச் சேர்ந்தவரும் சுப்பிரமணியம் என அழைக்கப்பட்டவருமாகியபக்திமான் ஒருவர் வன்னிப் பிரதேசத்திலிருந்து எடுத்துவந்த பிள்ளையாரின் கருங்கற் திருவுருவம் காரணமாகியது.

சுப்பிரமணியம், வியாபார நிமித்தம் அடிக்கடி மண்டைதீவில் இருந்து வன்னிக்குச் சென்றுவருவது வழக்கம். இவ்வாறு, வழமையாகச் சென்று திரும்பிவரும்போது, வழியில், மரஇலைச் சருகுகளுக்குள் மறைந்து கிடந்த பிள்ளையாரின் கருங்கல் திருவுருவம் காணப்பட்டது. மரநிழலிற் இளைப்பாறிய சுப்பிரமணியம் புறப்பட்டபோது "சுப்பிரமணியா! நானும் வருகிறேன்!" என்ற அசரீரி கேட்க, சுப்பிரமணியம் பிள்ளையாரின் கருங்கற் திருவுருவத்தையும் சாக்கில் போட்டுக்கொண்டு வந்ததாகவும் கூறப்படுகிறது. திருவுருவத்தை மண்டைதீவுக்குக் கொண்டுசென்று அங்கு மக்கள் எதிர்ப்பு காட்ட பெரியபுலத்துக்கு கொண்டுவந்ததாகவும் கூறப்படுகிறது. இது கர்ண பரம்பரைச் செய்தி ஆகும்.

இவ்வாறு கொண்டுவரப்பட்ட பிள்ளையாரின் திருவுருவம் பூண்டி மாமுதலியின் சொந்தக் காணியில் அவரது புத்திரர் பெரிய நீலயினார் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. இது இன்றைய முடிப்பிள்ளையார் ஆலயத்தில் மூலஸ்தானத்தில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் பிள்ளையாரின்திருவுருவம்ஆகும்.(6).சுப்பிரமணியத்தின் சொந்தக் காணியில்தான் பிள்ளையார் கோயில் அமைக்கப்பட்டது என்றும் பூண்டி மாமுதலி பரம்பரைக்கும் இக்கோயிலுக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை என்றும் கூறுவாருமுளர். (7).

---

**செல்லத்துரை பாலச்சந்திரன்**
**B. A. Hons (Cey), MSc. (Birm).**
**சிரேஷ்ட விரிவுரையாளர் 1. புவியியற்றுறை**
**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.**

---

இவ்வாறு அமைக்கப்பட்டு எம்பெருமான் இடம் கொண்ட ஆரம்ப ஆலயத்தை பெரிய நீலயினாரின், இரண்டாம் புத்திரர் பெரிய சேதுபதியார் என்னும் சிவபூஜா துரந்தரர் புதுப்பித்து அமைத்தார். இவர் ஆலயத்தில் நித்திய நைமித்தியங்கள் குறையின்றி நடைபெற்றுவர ஏற்பாடு செய்தார். இதேகாலத்தில் பெரிய நீலயினாரின் சிரேஷ்ட புத்திரர் ஆறுமுக முதலியார், புங்குடுதீவு இறுப்பிட்டி சென்று அங்கு ஒரு பெரியபுலம் பிள்ளையார் ஆலயத்தை அமைத்தார் என்பதும் ஒருகதை. இன்றும் இக்கோயில் அங்கு இருப்பதைக் காணலாம்.

பெரிய சேதுபதியார் காலத்தின்பின் அவருடைய புத்திரர் இராசசேகர முதலியாரால் முடிப்பிள்ளையார் ஆலயம் பரிபாலிக்கப் பெற்றது. பின்பு பொது மக்களின் பங்களிப்பும் பரிபாலனத்தில் இடம்பெற ஆரம்பித்தது. இக்கோயில் அமைந்துள்ள இடம் பரம்பரையாக சைவர்கள் வாழும் பகுதியாகும். சிதம்பரம், கரண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்,வரணி, காரைநகர், வேலணை மேற்கு சைவர்கள் மிக நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள். வேத, ஆகமங்கள், தேவாரங்கள், புராணங்களுடன் இணைந்தவர்கள், நித்தியம் சிவபூசை செய்து ஆண்டவனை வணங்குபவர்கள். இவர்களுடன் முன்கூறிய சுப்பிரமணியம் அவர்களும் இணைந்துகொண்டார். எம்பெருமானின் ஆலயத்துக்கு முதலாவது பூசகராக திருத்தொண்டு செய்யும்பாக்கியம் பெற்றவர் இந்தச் சுப்பிரமணியம் அவர்கள். சைவர்கள் முடிப்பிள்ளையாரின் பூசகர்களாகவும், ஆலயத்தில் தேவார புராண படலங்களை ஓதும் புரவலர்களாகவும் ஆலய தொண்டையே தமது முழுமுதற் சேவையாகக் கருதிய ஆர்வலர்களாகவும் இருந்தனர். இவர்களும் ஆலய நிர்வாகத்திலும், நித்திய நைமித்தியங்களிலும் தம்மை இணைத்துக் கொண்டனர்.

*1790*-ம் ஆண்டையடுத்த காலப்பகுதியில் இராசசேகர முதலியார் வாழ்ந்ததாகவும் கருதப்படுகிறது. *1840*ம் ஆண்டு முதற் கும்பாபிஷேகம் நடைபெற்றதாகவும் பின்பு அவரின் வழித்தோன்றல்களாலும் பொதுமக்களாலும் இக்கோவில் பரிபாலிக்கப்பட்டு வந்ததாக அறியப்படுகிறது. இதனைச் சென்ற நூற்றுண்டில் அதாவது *1880*ம் ஆண்டில் முடிக்கப்பட்ட சாசனம் எடுத்துக் காட்டுகின்றது. இந்தச் சாசனம் *1880*-ம் ஆண்டு கார்த்திகைத் திங்கள் *15*-ம் நாள் நொத்தாரிசு ஆ. முருகேசு முன் முடிக்கப்பட்டது.இந்தச்சாசனத்தின் இல.*1022*ஆகும்.*(9)* இவ்வாறு இல்லை, சுப்பிரமணியம் வழியினரே இக்கோயிலை பரிபாலித்து வந்தனர் என்று கூறுவாருமுளர். *(8,10)*.

*2.0.* இடைக்காலம்.

பொதுமக்கள் முற்றுமுழுதாக நிர்வாகத்தில் பங்குபற்ற ஆரம்பித்த காலமாக இது அமைகின்றது. இன்று பெறப்பட்ட அறிவின்படி இக் கோயிலுக்கான பரிபாலன சபை முதன் முதலாக *1880*-ம் ஆண்டு அமைக்கப்பட்டது. இந்தச் செயற்குழுவில் சின்னக்குட்டியர், சண்முகம் கணபதிப்பிள்ளை ஆகியோர் இடம்பெற்றிருந்ததாக அறியப்படுகிறது. (இன்று, வேலணை மத்திய கல்லூரிக்கு அண்மையில் வீதிக்கு வடபுறம் அமைந்திருக்கும் சமாதி சின்னக்குட்டியர் அவர்களுடையதாகும்.) பின்பு *1902*-ம் ஆண்டு தை மாதம் எழுதப்பட்ட *1702*-ம் இலக்க சாதனப்படி இச்சபை உறுதிப்படுத்தப்பட்டது. இச் சாசனம் நொத்தாரிசு ஐ. அம்பலவாணர் அவர்களால் எழுதப்பட்டது ஆகும் *(11)*.

*1902*-ம் ஆண்டு கூட்டப்பெற்ற கூட்டத்தில் பின்வரும் ஐவர்கொண்ட பரிபாலன சபை தெரிவு செய்யப்பட்டது.

1. க. அம்பலவாணபிள்ளை.
   *(கந்தப்பு உபாத்தியாயர் மகன்)*
2. செ. கனகசபாபதிப்பிள்ளை.
   *(இராசா உபாத்தியாயர்)*
3. வை. செல்லப்பா.
4. சீ. கதிரவேலு. *(ஈச்சம்புலம்)*
5. நா. முருகர்.

இந்தப் பரிபாலன சபையின் காலத்தில் தான் பிள்ளையாரின் ஆலயத்துக்கு கருங்கல்லால் திருப்பணி செய்ய வேண்டும் என்னும் முயற்சி ஆரம்பமானது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்த நூற்றுண்டின் ஆரம்ப ஆண்டுகளில் ஆலயத்துக்கு மடப்பள்ளி, யாகசாலை, வசந்தமண்டபம், சுற்றுமதில் ஆகியன சுதையால் கட்டப்பட்டன. ஆலயத்தில் இன்னும் ஒலித்துக் கொண்டிருக்கும் கண்டாமணி இக்காலத்தில் தான் இணைக்கப்பட்டது. இது அக்காலத்தில் ஆலயத் திருவாசலின் இடப்புறத்தில் அமைக்கப்பட்டிருந்தது. மணிக்கான கட்டடம் ஹற்றன் நா. சபாபதிப்பிள்ளை அவர்களாலும் மணி நாகலிங்க உபாத்தியாயர் அவர்களாலும் உபயமாக்கப்பட்டது.*(12)*. இன்றும் எழுந்தருளி, அருள் பாலிக்கும் எழுந்தருளிப் பிள்ளையார், திருவிக்கிரகம்கூட இக்கால கட்டத்தில் உருவாக்கப்பட்டது ஆகும். க. அம்பலவாணபிள்ளைஅவர்களால் இந்தத்திருவிக்கிரகம் உருவாக்கப்பட்டது. இக்காலத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்ற ஆண்டு தெரியவில்லையாயினும் கொடியேற்றம், தேர் உள்ளிட்ட *10* தினங்கள் கொண்ட திருவிழாக்கள் நடைபெற்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த நூற்றுண்டின் ஆரம்ப ஆண்டுகளில் இருந்து கருங்கல் திருப்பணிக்கென *22* வருடங்கள் நிதி சேகரிக்கப்பட்டது. ஆயினும் திருப்பணி ஆரம்பம் ஆகவில்லை. *1920*களில் ஸ்ரீலஸ்ரீ. கை. நவசிவாயக் குருக்கள் தலைமையில் கருங்கல் திருப்பணி ஆரம்பமானது. கோயிலின் கற்பக்கிரகம், சபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டபம், மகா மண்டப வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆயினும் இந்த வேலைகள் கூரை வைக்கும் அளவுக்கு சென்றது. இக்காலகட்டத்தில் இத்திருப்பணிக்கு வை. பொ. சோமசுந்தரம், க. வைத்தியலிங்கம், படிகலிங்கம் ஆகியோர் பெரும் பங்கு வகித்தனர் எனப்படுகிறது. 1930களின் ஆரம்ப காலத்தில் க. வைத்தியலிங்கம், சே. பொன்னையா, மு. குமாரசுவாமி, சே. கந்தையா, நா. சரவணமுத்து ஆகியோர் இந்தக்கருங்கல் திருப்பணியில் பெரும் பங்கு வகித்தனர். எனப்படுகிறது(13). பூசகர்களாக ஆரம்பத்தில் சைவர்களும் பின்பு பிராமணர்களும் இடம் பெற்றனர்.

தொடர்ந்து 1938-ம் ஆண்டு ஸ்ரீலஸ்ரீ. தி. கைலாசநாதக் குருக்கள் தலைமையில் கூட்டம் கூட்டப்பெற்று பதினைந்து உறுப்பினர் கொண்ட பரிபாலன சபையும் தெரிவு செய்யப்பட்டது. இதனை 1938-ம் ஆண்டு ஆனித் திங்கள் 16-ம் நாள் நொத்தாரிசு கா. விஞசித்தம்பி முன்பாக எழுதப்பட்ட சாசனம் உறுதிப்படுத்தப்படுகிறது(14). பின்வரும் பதினைந்து அங்கத்தவர்கள் பரிபாலன சபையில் இடம் பெற்றனர்.

1. ம. தம்பு
2. சே. பொன்னையா
3. மு. சின்னையா
4. நா. சுப்பிரமணியம்
5. சு. ஏரம்பு
6. ம. கணபதிப்பிள்ளை
7. வே. பேரம்பலம்
8. கு. சங்கரப்பிள்ளை
9. க. வைத்தியலிங்கம்
10. நா. அமிர்தலிங்கம்
11. ச. திருஞானசம்பந்தபிள்ளை
12. த. அருளம்பலம்
13. வே. தருமலிங்கம்
14. வ. அம்பலவாணபிள்ளை
15. வி. நாகலிங்கம்

இந்தப் பரிபாலன சபைக்கு சிறிதுகாலம் சே. பொன்னையா. தலைவராகஇருந்தார். பின்பு ஒரு சில ஆண்டுகளில் அவர் காலமாக 1940-ம் ஆண்டு சே. கந்தையா தலைவரானார். 1940களில் தொடர்ந்து திருப்பணிகள் இடம் பெற்றன. எஞ்சிய கோயில் ஸ்தூபி, கருங்கல் திருப்பணி வேலைகள் நிறைவேற்றப்பட்டன. 1948-ம் ஆண்டு ஊரெழு சிவஸ்ரீ பாலசுந்தரக் குருக்களால் மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இந்த நிகழ்வில் சைவக் குருக்கள் மாறி பிராமணக் குருக்கள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். தொடர்ந்து திருவிழாக்கள் நடைபெற்றன.

## 4.0 அண்மைக்காலம்.

1950களின் பிற்பகுதியில் மீண்டும் திருப்பணி வேலைகள் ஆரம்பமாகின. வசந்தமண்டபம், யாகசாலை, மடப்பள்ளி, சுற்றுமதில் ஆகியன சற்று இடம் பெயர்த்துக் கட்டப்பட்டன. 1960களில் உள்வீதிக் கொட்டகைகள் அமைக்கப்பட்டன. முற் கொட்டகை மணிக்கூண்டு வரை அமைக்கப்பட்டது. முன்பு கருங்கல் திருப்பணிக்கு பொதுமக்களின் பணம் உதவியது போல இந்தத் திருப்பணிக்கும் பொதுமக்கள் நிதி உதவியது. இந்தத் திருப்பணிக்கு சோ. சிவரத்தினம் ஆற்றிய சேவை, குறிப்பாக வீடு வீடாகச் சென்று பிடியரிசி (மாதாமாதம்) சேர்த்து, அதை விற்று பிள்ளையார் திருப்பணி நிதிக்கு அளித்தமை பாராட்டத்தக்கது. அதே போல மனேஜராக கடமையாற்றிய ஆ. வி. நாகலிங்கம் அவர்களும் குறிப்பிடத்தக்கவர். 1960களின் ஆரம்பத்தில் நா. சரவணமுத்து தலைவரான பின் மேற்குறிப்பிட்ட திருப்பணிகள் நிகழ்ந்தமையையும் குறிப்பிட்டாக வேண்டும். 1938-ம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட பரிபாலன சபையில் அவ்வப்போது பரிபாலனசபையில் சிலர் சேர்க்கப்பட்டனர். இவர்களுள் நா.சரவணமுத்து மு.குமாரசாமி, க. செல்வநாயகம், க. சண்முகலிங்கம்போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். 1960களிலும் தொடர்ந்து 1970களிலும் நா. சரவணமுத்து தலைவராகவும், க. சண்முகலிங்கம் தனதிகாரியாகவும் நீண்டகாலம் சேவையாற்றினர். இக் காலத்தில் முடிப்பிள்ளையார் ஆலயம் புதுப் பொலிவு பெற்றது மட்டுமல்லாமல் 1969-ம் ஆண்டு புதிய மகா கும்பாபிஷேகம் சிவஸ்ரீ வைத்தியநாதக் குருக்களால் நிறைவேற்றப்பட்டு தொடர்ந்து திருவிழாக்கள் நடைபெற்றன. மிக நீண்டகாலமாக ஆலய வளர்ச்சியில் பங்கு கொண்டவர் மு. குமாரசுவாமி. இவர் முயற்சியால் 1950களிலேயே தேர் ஒன்று அமைக்கப்பட்டது. 50ஆண்டுகளாக அவர் ஐங்கரனுக்குச் சேவை செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

235.405
VEL
AR

1960களில் திருப்பணிகள் தொடர்ந்தன. புதிய மணிக்கூட்டுக்கு ஆலயத் திருவாசலின் இடப்பக்கத்தில் அஸ்திவாரம் இடப்பட்டது(15). பொ. சண்முகநாதன் அவர்கள் ஆரம்பித்து சேதுபதி குடும்ப உபயமாக இது இடம்பெற்றது. தொடர்ந்து இராசகோபுரத்துக்கும் அஸ்திவாரம் 'பிள்ளையார் விலாஸ்' கணபதிப்பிள்ளை அவர்களால் இடப்பெற்றது(16). 1974-ம் ஆண்டு அம்பலவாணர் கணபதிப்பிள்ளை அவர்களால் வசந்த மண்டபம் மீண்டும் புதுக்கி புதுப் பொலிவுடன் அமைக்கப்பெற்றது. இவ்வாறு பலரால் (பெயர் குறிப்பிடாதவர்கள் உட்பட) திருப்பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன.

1976-ம் ஆண்டு பல ஆண்டுகளின் பின் ஆலய பரிபாலன சபை மீண்டும் தெரிவு செய்யப்பட்டது. இருபத்துநான்கு அங்கத்தவர்கள் இந்தப் பரிபாலன சபையில் இடம் பெற்றனர்.. அவர்கள்

1. க. இராசதுரை - தலைவர்
2. நா. வீரசிங்கம் - உபதலைவர்
3. ப. அரசகேசரி - செயலாளர்
4. மு. சுந்தரலிங்கம் - உபசெயலாளர்
5. க. நாகநாதபிள்ளை - பொருளாளர்
6. க. செல்வநாகம்
7. வே. பேரம்பலம்
8. ம. இராசரத்தினம்
9. மு. இராசரத்தினம்
10. நா. பரஞ்சோதிநாதன்
11. க. இராசலிங்கம்
12. த. கார்த்திகேசு
13. செ. சச்சிதானந்தன்
14. வீ. கனகநாயம்பிள்ளை
15. சி. தாண்டவநாதன்
16. அ. சிவராசா
17. அ. பொன்னம்பலம்
18. க. துரையப்பா
19. சா. தவயோகராசா
20. சி. ஐயம்பிள்ளை
21. ஆ. யாதவராயர்
22. வே. பாலச்சந்திரன்
23. ந. பாலச்சந்திரன்
24. ச. சாந்தலிங்கம் (17)

இந்தப் பரிபாலன சபையின் காலத்திலும் பல திருப்பணிகள் இடம்பெற்றன. குறிப்பாக வசந்த மண்டபத்துக்கு நேரே தெற்கு வாசலும் மண்டபமும் அமைக்கப்பட்டன. ஆலயத் திருவாசலுக்கு வலப்புறம் இன்னொரு மணிக்கூட்டுக் கோபுரம் அரையா மணிக்கென அமைக்கப்பட்டது. இதனை து. சிற்சொரூபன் அமைந்துக் கொடுத்தார். இராசகோபுர வேலை மேலும் உயர்ந்தது. இராசகோபுரத்துக்கு அப்பால் முற்கொட்டகை அமைக்கப்பட்டது. உள் வீதிக்கொட்டகைகளின் சுவர்களுக்கும் தரைக்கும் சீமெந்து இடப்பட்டது. வெளிப்புறச் சுவர்கள் சீரமைக்கப்பட்டன. மின்சக்தி இயந்திரம் ஒன்று ஆலயத்துக்கென வழங்கப்பட்டு உரிமையாக்கப்பட்டது. பின்பு மின்சக்தி இணைப்பும் அரசாங்கம் மூலம் பெறப்பட்டது. லண்டன் மு. தியாகராசா அவர்கள் ஆலயத்துக்கென ஒலிபெருக்கிச் சாதனங்களை வழங்கினார். கிக்கடுவ நா. சண்முகநாதன் நினைவாக அவர்களுடைய மக்கள் பூந்தோட்டப் பகுதியைக் கட்டி முடித்தனர். இன்னும் பல அன்பர்கள் திருப்பணி செய்துள்ளனர். இந்தப் பரிபாலனசபையிலும், சிலர் பதவி மாறினர். ப. அரசகேசரி இராஜிநாமாச் செய்ய மு. சுந்தரலிங்கம் செயலாளர் ஆனார். க. நாகநாதபிள்ளை இராஜிநாமாச் செய்ய ச. சாந்தலிங்கம் கடமையாற்றிய பின்பு அவர் இராஜிநாமாச் செய்ய ந. பாலச்சந்திரன் பொருளாளரானார். 1985ம் ஆண்டு தலைவர் இராசதுரை அவர்கள் காலமாக நா. வீரசிங்கம் அவர்கள் தலைவரானார், இவர் முதலில் உபதலைவராக இருந்து திருப்பணிக்கு ஆக்கம் அளித்தமை குறிப்பிடத்தக்கது,

4.0 இன்றைய காலம்:-

1986-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் புதிய பரிபாலனசபை பொறுப்பு ஏற்றது. புரிந்துணர்வு அடிப்படையில் இப்பரிபாலன சபை உருவாக்கப்பட்டு அதன் தலைவராக ச. நல்லநாதன் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். இப்பரிபாலன சபையில் பின்வருவோர் அங்கம் வகித்தனர்.

1. ச. நல்லநாதன் - தலைவர்,
2. நா. வீரசிங்கம் - உபதலைவர்,
3. மு. சுந்தரலிங்கம் - செயலாளர,
4. பொ. பரராசசிங்கம் உபசெயலாளர்
5. மு. மகேந்திரன் - பொருளாளர்,
6. ந. பாலச்சந்திரன்
7. க. செல்வநாயகம்,
8. சி. திருவிளங்கம்,
9. க. இராசகோபால்,
10. நா. முத்துலிங்கம்,
11. அ. வரதராசா,
12. தி. பாலச்சந்திரன்



107500
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. சே. சித்திவிஞயகம்பிள்ளை
14. ஏ. சிவரெத்தினம்
15. சி. கந்தசாமி
16. சு. ஏரம்பு
17. பொ. கமலநாதன்
18. க. பேரின்பநாயகம்
19. சி. சாம்பசிவம்
20. மு: இராசரத்தினம்
21. சி. பூபாலகுணசிங்கம்
22. ந: கணேசபிள்ளை

இப்பரிபாலன சபையினர் ஒருமுகமாகச் சேவையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

மீண்டும் 1988-ம் ஆண்டு புதிய பரிபாலன சபை தெரிவு செய்யப்பட்டது. இது இன்றைய பரிபாலன சபையாகும்.

இன்றைய பரிபாலன சபையினர்.

1. ச. நல்லநாதன் - தலைவர்
2. க. இராசகோபால் - உபதலைவர்
3. யா. இராமநாதன் - செயலாளர்
4. பொ: கமலநாதன் - உபசெயலாளர்
5. மு. மகேந்திரன் - பொருளாளர்
6. ப. ஆரூரன் - உபபொருளாளர்
7. ந. கணேசபிள்ளை
8. சி. அருளம்பலம்
9. பொ. மாசிலாமணி
10. ஆ. பொ. சண்முகநாதன்
11. ச. சத்தியானந்தர்
12. க. நற்குணசீலன்
13. சி. சாம்பசிவம்
14. தி. பாலச்சந்திரன்
15. க. பேரின்பநாயகம் கொடியேற்றத் திருவிழா சார்பில்
16. நா முத்துலிங்கம் - 2-ம் ,, ,,
17. அ வரதராசா - 3-ம் ,, ,,
18. க. செல்வநாயகம் - 4-ம் ,, ,,
19. சி. சுப்பிரமணியம் - 5-ம் ,, ,,
20. கு. இராமச்சந்திரன் - 6-ம் ,, ,,
21. ம. விஞயகமூர்த்தி - 7-ம் ,, ,,
22. ச. கணேசலிங்கம் - 8-ம் ,, ,,
23. சி. கந்தசாமி - 9-ம் ,, ,,
24. ம. அம்பிகைகுமாரன் தேர்த் திருவிழா சார்பில்
25. சு. ஏரம்பு தீர்த்தத் திருவிழா ,, (18)

மகாகும்பாபிஷேகம் செய்ய வேண்டும் என்ற பெருநோக்கில் இச் சபை செயற்பட்டது. ஆலயத் திருவாசலின் இடது பக்க மணிகூண்டுத் திருப்பணி நிறைவெய்தியது: இருபக்கமும் ஏறத்தாழ 75 அடிகள் உயரம் கொண்ட இரு மணிக்கூண்டுகள் கொண்டு எடுப்பான தோற்றத்துடன் எதிர்காலத்தில் எஞ்சிய இராசகோபுரத் திருப்பணியை ஞாபகப் படுத்திக்கொண்டுளம்பெருமானின் ஆலயம் காட்சியளிக்கிறது. இன்று உள் வீதியில் 5 உபகோயில்கள் பரிவார மூர்த்திகளுக்கு அமைக்கப்பட்டுள்ளன. (லட்சுமி; கௌரி அம்பாள்; வள்ளி - தெய்வானை சமேத சுப்பிரமணியர்; சந்தானகோபாலர்; நவக்கிரக மூர்த்திகள்) மேலும் மூலஸ்தான ஸ்தூபி, வசந்தமண்டப ஸ்தூபி ஆகியன புனரமைக்கப்பட்டுள்ளன. சபாமண்டபம், மகாமண்டபம் ஆகியவை மீண்டும் கருங்கல் உயர்த்தப்பட்டு மேற்கூரை அகற்றப்பட்டு சிற்ப வேலைப்பாடுகளால் நிறைவு செய்யப்பட்டுள்ளன: வீதிகளின் உட்புறங்களில் திருமுறைகள் பதிக்கப்பட்டுள்ளன, மொத்தத்தில் ஆலயம் புதுப்பொலிவு பெற்று விளங்குகின்றது என்று கூறலாம் இருபது வருடங்களின் பின் நடைபெற்ற புனராவர்த்தனப் பிரதிஷ்டா திருக்குடத் திருமஞ்சன மகா கும்பாபிஷேகத்தை சிவஸ்ரீ வைத்திய நாதக் குருக்கள் நடாத்தி வைத்தார்: தொடர்ந்து மண்டலாபிஷேகமும் மகோற்சவமும் நடைபெறவுள்ளன.

இவற்றுக்கெல்லாம் எம்பெருமானின் அடியார்கள் உவந்தளித்த, அளித்துவருகிற உதவிகள் காரணமாகின்றன: காலாகாலம் எம்பெருமானின் ஆலயத் திருப்பணிக்கும் அதன் அபிவிருத்திக்கும் இந்த உதவிகள் காரணமாகின்றன: இன்று திருப்பணிக்கும் கும்பாபிஷேகத்துக்கும் பெரும் தொண்டாற்றிய வருபவர்கள் ஆலய பரிபாலன சபையின் தலைவர் ச. நல்லநாதன், செயலாளர் யா. இராமநாதன், பொருளாளர் மு. மகேந்திரன் ஆகியோராவர். கடந்த கால் நூற்றுண்டு காலமாக பிள்ளையாருடன் சேர்ந்திருப்பவர் ஆலய குரு, பிரம்மஸ்ரீ. சோமாஸ்கந்த சர்மா அவர்கள் அவருடைய உத்வேகமும் உற்சாகமும் எவரிடமும் காண முடியாதது: ஆகவே அவரின் சேவைகளும் காலத்துக்கு காலம் நிலவிய பரிபாலன சபையினரின் சேவையும் ஆலயத்தின் இன்லைய நிலையைப் பிரதிபலிக்கின்றன. மொத்தத்தில் மகாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி இரண்டு

(30-ம் பக்கத்தில் ஆரம்பிக்கிறது)

★ திருப்பதிகம்

★ திருவூஞ்சல்

★ திருவகவல்

★ திருக்கவசம்

★ வாழி மாநிலம்

★ பாரதியார் அகவல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாபிஷேகத்தை இவ்வளவு சிறப்பாக ஆற்றும் பரிபாலன சபையினர் பாராட்டுக்குரியவர்கள்.

5.0 நிறைவு:

இதுவரை கூறப்பட்ட வரலாறும் வளர்ச்சியும் பின்னிப்பிணைந்தவை. இந்த நூற்றாண்டில் பிறந்து இன்றும் வாழ்ந்து கொண்டிருப்பவர்சள். சைவ அறிஞர்களின் கருத்துக்களை தொகுத்துநோக்கி கூறப்பட்டவை: ...1960களின் பின் நேரில் அவதானிக்கப்பட்டவை (1950களின்பின் இளம்வயதில் உள்ளத்தில் பதிந்ததவை). எவரையும் அல்லது யாரையும் பாகுபாடாக நோக்காமல் வஞ்சனை செய்யாமல் நிதர்சனமாக கூறப்பட்டவை. அனைத்தையும் ஐங்கரன் அவதானித்துக் கொண்டிருக்கிறார்: ஆகவே சத்தியமே ஜெயம்.

1. திருவூஞ்சல் - கந்தப்பிள்ளை ஆசிரியர்,
2. திருப்பதிகம் - சரவணமுத்துப் புலவர்,
3. திருப்பதிகம் - தில்லைநாதப் புலவர், ஆகியன இம்மலரில் இடம்பெற்றுள்ளன.
4. சைவ சூக்குமார்த்த போதினி – வெளியீடு இராசா உபாத்தியாயர் (செ. கனகசபாபதிப்பிள்ளை) நடராசா அச்சியந்திரசாலை. இது வேலணை மேற்கு, நடராசா வித்தியாசாலையில் அமைந்திருந்தது. பழைய கட்டடம் இப்போது இல்லை. பழையன பேணுவார் யாருமிலர்.
5. மகா கணபதிப் பிள்ளையார் பதிகமும், திருஊஞ்சலும்: வி. கந்தப்பிள்ளை உபாத்தியாயர் அவர்களின் ஞாபகார்த்தமாக வெளியிடப் பெற்றது. 1948.
6. வேலணை மேற்கு, ந சபாரத்தினம், 85 வயதை கடந்துவிட்டவர். அவருடைய கருத்துக்கள்.
7. வேலணை மேற்கு, சைவத்தமிழறிஞர், திரு. ச. மகாலிங்கம் அவருடையகருத்துக்கள்:
8. விரிவை இம்மலரில் இடம்பெற்றுள்ள "வேலணை மேற்கில் சைவமும் தமிழும்" என்னும் கட்டுரையில் காண்க.
9. சாசனம் கைவசம் இல்லை.
10. விரிவை இம்மலரில் இடம்பெற்றுள்ள 'முடிப்பிள்ளையார்கோயில் ஓர் அனுபவ நோக்கு' என்னும் சட்டுரையிற் காண்க
11. சாசனம் கைவசம் இல்லை,
12. இன்று இந்த மணி திருஆலய வாசலின் வலப்புறத்தில், இன்னொருவரால் உருவாக்கப்பட்ட கோபுரத்தில் பொருத்தப்பட்டுள்ளது.
13. இந்தத் திருப்பணியுடன் கூடிய வர்ணனையை 'முடிப்பிள்ளையார் கோயில் ஓர் அனுபவ நோக்கு' என்னும் கட்டுரையில் காண்க.
14. சாசனம் கைவசம் இல்லை.
15. 1990-ல் நிறைவேற்றப்பட்டுள்ளது:
16. தொடர்ந்து அவரின் மகன் இராதுரை அவர்களாலும் பின்பு இராசதுரையின் மகன் அவர்களாலும் இராசகோபுரத் திருப்பணி இடம்பெற்று வருகின்றது.
17. கணக்காய்வாளர்கள் 1. செ. பாலச்சந்திரன் (விரிவுரையாளர்), 2. ப. கந்தப்பபிள்ளை - சிறிதுகாலம், பின்பு ஐ. தனபாலசிங்கம்.
18. கணக்காய்வாளர்: 1. பொ. அருணகிரிநாதன் (ஆசிரியர்) 2. மா. இலிங்கப்பிள்ளை. (ஆசிரியர்)

ஒரு கோட்டன் இரு செவியன்
முப்மதத்தன் நால்வாயைங்
கரத்தன் ஆறு
தருகோட்டம் பிறை இதழித்
தாசடையான் தருமொரு
வாரணத்தின் தாள்கள்
உருகோட்டன் பொடும் வணங்கி
ஓவாதே இரவு பகல்
உணர்வோர் சிந்தைந்
திருகோட்டும் அயன் திருமால்
செல்வமும் ஒன்றோ வென்னச்
செய்யும் தேவே.

-அருணந்தி சிவாச்சாரியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலணைமேற்குப் பெரியபுலம்

# மகாகணபதிப் பிள்ளையார் பேரிற்

# ப தி க ம்.

குழுழமுனை ஸ்ரீமத் க. சரவணமுத்துப் புலவர்

## ஆசிரிய விருத்தம்

1. திருமருவு நவரத்ன மணிவிலகி வில்லிடுஞ்
   செம்பொன் மாமுடி மோலியுஞ்
   செழுமணிக் குழையுமொளிர் பருமணிச் சுட்டியணி
   சிந்துரத் திலக நுதலும்
   உருமருவு மொருகோடு மிருசெவியு முக்கண்ணு
   முபவீத மணிமார் புநீ
   டுதரபந் தனமுமரை, ஞாணுமொண், செம்பட்,
   டுடுத்த திரு வரையு மழகார்
   மருமருவு கமலமலர் பொருவுமிரு பதமுமென்
   மனதிலெந் நாளு மறவா
   வரமுமிரு வினைவசப் பட்டுற் பவித்தினும்
   வருந்துதற் கேது வாய
   கருமருவி டாதுமருள் வேலணையின் மேற்றிசைக்
   காமருவு பெரிய புலம்வாழ்
   கரதரட விகடமத கரிமுகவ சிவமகா
   கணபதிப் பிள்ளை யாரே.

2. பனிமதி முடித்தபர னருளின னொருதினம்
   பாலர்கா ணும்மி லார்முன்
   பார்வலம் வருபவ ரவர்க்கே கொடுப்பதெம்
   பாணிமாங் கனிய தெனவே
   யுனியதனை யரிமருக னொருமுருகன் மயிலேறி
   யுலகைவலம் வருதன் முன்னே
   யொய்யென வெழுந்தரனை யொருநொடியின் வலம்வந்
   துவந்துமு னிறைஞ்சி நின்றே
   யினியகனி- வாய்மலர்ந் தெவ்வுலகு மெவ்வுயிரும்
   யாவுமுன் வடிவ மதனு
   லெந்தையே சொன்னபடி தந்தருள்க வெனமொழிந்
   திறைமகிழ்ந், துதவி, யிடுமாங்,
   கனியைவாங் கமலவருள் வேலணையின் மேற்றிசைக்
   காமருவு பெரிய, புலம்வாழ்,
   கரடதட விகடமத கரிமுகவ சிவமகா
   கணபதிப் பிள்ளை யாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. சங்கரி சுமங்கலி தயாபரி புராதனி
சராசர வுயிர்த்தொ கையெலாம்
தந்தருள் சுதந்தரி சவுந்தரி நிதம்புரி
தருந்தரும வஞ்சி தகுசீர்
மங்கல மிகுங்கயிலை யங்கிரி யிடத்துமென்
மனத்தினு முவந்து வதியும்
மங்குறவ டுங்கமலை மங்கையொரு பங்கிலுறை
வள்ளறரு தெள்ள முதமே.
இங்குனடி யேன்படு மிடும்பைக டெரிந்துமெற்
கெள்ளள விரங்கி லைகொலோ
வெண்ணரிய வானவரு மண்ணுலக மானவரு
மெண்ணிய வரங்க ளுதவிக்
கங்கருகு முத்தொளிரும் வேலணையின் மேற்றிசைக்
காமருவு பெரிய புலம்வாழ்
கரதட விகடமத கரிமுகவ சிவமகா
கணபதிப் பிள்ளை யாரே.

4. அன்னையுத ரக்கருப் பைச்சிறைச் சாலையி
லடைத்தென்னை வைத்தி டாதே
யந்தகன் றூதர்கைப் பட்டவர்செய் தண்டனைக்
காளாக வும்வி டாதே
யின்னறரு மிருபதிற் றெண்கோடி நரகத்
திருத்தியும் வருத்தி டாதே
யெண்ணரிய கோடிபிழை செய்தாலு முனைமறந்
தேதமுறு பேதையர்கள் போம்
புன்னெறி யெனுங்கொடிய படுகுழியின் மால்கொண்டு
போய்விழவும் விட்டி டாதே
போதமா தவர்பரவு வேதநா, யக கருணை,
பூத்தெனைக் காத்தருளுவாய்
கன்னல் வயல் வளமருவு வேலணையின் மேற்றிசைக்
காமருவு பெரிய புலம் வாழ்
கரடதட விகடமத கரிமுகவ சிவமகா
கணபதிப் பிள்ளை யாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. தத்தலை தலைத்தலை யலைத்திட, நிலத்தலை,
தலைப்படு துரும்ப தெனயான்
சத்தசன னச்சலதி யிற்பயில் வினைக்கிசை
தரத்தலை கொடுத்து நெடுநா
ளெத்தனை மலப்புல வுடற்சுமை யெடுத்தது
மிறக்கியது மெண்ண வெளிதோ
வெனையுமுனை யும்மறந் தினுமுற் பவித்திறந்
திடரு ருதருள் கூருவாய்
சித்தபரி சுத்தசிவ சித்தர்ப்பூ சித்துயா
சித்துநே சித்து வேண்டுஞ்
சித்தியொடு புத்திகழ் முத்தியுத, விக்கவலை,
தீர்த்திரட் சிக்கு மாதி
கத்தனே யத்தனே வேலணையின் மேற்றிசைக்
காமருவு பெரிய புலம் வாழ்
கரடதட விகடமத கரிமுகவ சிவமகா
கணபதிப் பிள்ளை யாரே.

6. ஐயனே துய்யனே ஆதியே சோதியே
யானந்த பூர்த்தி யான
வமலனே யமையமைத் தோளுமையொர் பாகனே
யத்த னேபரி சுத்தனே
சையநே ரெண்டடம் புயபராக் கிரமமிகு
சயதுங்க னேதற்பரா
சசகளங், கச்சசி, தராதரா தலசரா
சரவுயிரெ லாம்பு ரக்குஞ்
செய்யனே சிறிதருள்செ யென்றரி யயன்முதற்
மறவர்க ளிரந்து வேண்டத்
திருவருள் சுரந்தன்று கயமுகனை வென்றிடச்
சிவனுதவ வந்த தும்பிக்
கையனே யெற்குமருள் வேலணையின், மேற்றிசைக்,
காமருவு பெரிய புலம் வாழ்
கரடதட விகடமத கரிமுகவ சிவமகா
கணபதிப் பிள்ளை யாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7\. விரையேறு செங்கமல மீதேறு வேதனும்
விண்டுவும் வெருவி யோட
விண்ணேறு போலவார்த் தெண்ணேறு தரியலரை
விண்ணேற வேவிடுக்கும்
நரையேறு மீதேறி நற்றவர்மு னுற்றருள்செய்
நாத னருளிய பாலகா
நானென்னு மாணவப் பேய்கொண் டலைந்துகொடு
நல்வினைசெய் தீவினை யெனுந்
திரையேற நாளுக்கு நாள்வளர்ந் தேறிவரு
செல்லலார் கலியி லாழுஞ்
சிறியனே னுக்குமுன் றிருவுள மிரங்கியருள்
செய்துகை தூக்கி யின்பக்
கரையேறி யுய்ந்திடவை வேலணையின் மேற்றிசைக்
காமருவு பெரிய புலம் வாழ்
கரடதட விகடமத கரிமுகவ சிவமகா
கணபதிப் பிள்ளை யாரே.

8\. கோலமிகு சாகரகிர் பாகரர் சுதாகரன்
குலவு சேகரர் கோதை தாழ்
கோதையுமை பாகரரி கோலவுரு நாடரு
குலாசலவில் லீச ருதவும்
பாலகனெஞ் ஞானபரி பூரணபன் னிருகோடி
பாற்கரோ தயசொரூப
பாலமுது மேனவு மருத்திவழி பாடுபுரி
பக்த ருக்கருள் முதல்வனே
சாலவரு காலமுழு தேலும்வகை நானுனிரு
தாள்கள் மற வாது நினையத்
தாவறுமெய் யன்பறிவு பேதமற வேயினிது
தந்து தமி யேனையாளக்
காலமி திரங்கியருள் வேலணையின் மேற்றிசைக்
காமருவு பெரிய புலம் வாழ்
கரடதட விகடமத கரிமுகவ சிவமகா
கணபதிப் பிள்ளை யாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. வட்டமுலை மீதுபணி வடமாட வளைகளொடு
வள்ளை வார் குழைக ளாட
மைக்குழல் குலைந்தாட வாதாடி யெதிராடி
வடபத்ர காளி யோடி
யட்டதிசை யாருயி ரனைத்தினையு முண்ணவெணி
யன்றுவர நாடி யெதிர்போ
யம்புயமலர்த் தாளி லொன்றினை மிதித்தொன்றை
யண்டமுக டளவு தூக்கி
மட்டுலவு மிதழிமலர் மாலைதாழ் சடையாட
மாதுமன நாணி யோட
மாறுபுரி, யாடலால், வென்றசிவ, ஞர்தந்த
மைந்தனே பந்த வினைதீர்
கட்டழகு வேலியுள வேலணையின் மேற்றிசைக்
காமருவு பெரிய புலம் வாழ்
கரதட விகடமத கரிமுகவ சிவமகா
கணபதிப் பிள்ளை யாரே.

10. பொன்னெளியி ஞலீழ மெனவுமர தனநிழற்
பொலிவா லிலங்கை யெனவும்
பொருவரிய நாமம் புனைந்தவிப் புவிமாது
போற்றுமறு பாடி கட்கோர்
சென்னிதிரு முகமியாழ்ப், பாணமா, ரியமொடு
திராவிடமெ னிருபாடையுஞ்
செப்பிலிரு கண்மற் றுறுப்பெலா மெய்ந்நூல்கள்
சிவசமயமே நாயகன்
மன்னுசிவ னன்பரே மைந்தர்களம் மைந்தரொடு
மகிணனெடு மூழிபேரும்
வரையுமடர் பகைதுரந் தகமகிழ்வொ டறநெறி
வழாதுவாழ்ந் திடவு வந்திக்
கன்னிகைக் கின்னருள்செய் வேலணையின் மேற்றிசைக்
காமருவு பெரிய புலம் வாழ்
கரடதட விகடமத கரிமுகவ் சிவமகா
கணபதிப் பிள்ளை யாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. பார்வாழி யானினம் வாழிபழ மறைவாழி
பனவர் முனி வரரும் வாழி
பரமபதி யாமுயப் பகர்சிவா கமமுதற்
பாவாழியந்த விதழித்
தார்வாழ், சடாடவித், தற்பரனை வழிபடுஞ்
சற்சைவ சமயம் வாழி
தருமநெறி தவறுது செங்கோல் செலுத்திடுந்
தரணிமன் னவரும் வாழி
பேர்வாழ்வு பெற்றுமிளிர் வேலணையின் மேல்பாற்
பிறங்கரிய பெரிய புலம் வாழ்
பேசரு, மகாகணப, திப்பிள்ளை யார் வாழி
பேணருளின் மாரி பொழியுங்
கார்வாழி யிக்கவிதை கேட்பவர் படிப்பவர்
கருத்தின் மனனஞ் செய்குவோர்
கருதிட்ட சித்தியைங் கரனருளி னெய்தியெக்
காலமும் வாழி வாழி.

முற்றிற்று.

பாசத் தளை அறுத்ததுப்
பாவக் கடல் கலக்கி
நேசத் தளைப்பட்டு
நிற்குமே - மாசற்ற
காரார் வரை ஈன்ற
கன்னிப் பிடி அளித்த
ஓரானை வந்தென் உளத்து.

வாக்குண்டாம் நல்ல
மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி
நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித்
தும்பிக் கையான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

பாலுந் தெளிதேனும்
பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு
நான் தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத்
தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றுந் தா.

அல்லல் போம் வல்வினை போம்
அன்னை வயிற்றிற் பிறந்த
தொல்லை போம் போகாத்
துயரம் போம் - நல்ல
குணமதிகமான அருணைக்
கோபுரத்துள் மேவும்
கணபதியைக் கைதொழுதக் கால்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

யாழ்ப்பாணத்தைச் சார்ந்த

# வேலணை மேற்குப் பெரியபுலத்து

# மகாகணபதிப் பிள்ளையார் பதிகம்.

ஆக்கியோன்:- சரவணையூர், ஆ. தில்லைநாதப் புலவர்.

பன்னிரு சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

சீரேறு திக்கெட்டு மெட்டொளி யிரத்தினத்
திருமுடி சிரத்திலுதயஞ்
செய்யநற் றிருநெற்றி யுற்றோடையாம்பணி
திருத்தக்க வழகையீய
வேரேற வருமரிய கிம்புரிப் பூணேக
தந்தத்தி னிலவெறிப்ப
விலகுதிரு வருபிரண வக்களிற் றுனனத்
திழிபெருங் கருணை வெள்ளம்
பாரேற வுயிர்கள்பெற் றின்படைய வந்தருட்
படிவம தெடுத்தபதியே
பகலலோ சனவிமல வேரம் வோர்கொம்ப
பாசாங்கு சக்கரத்த
காரேறு களனுமை குமாரவேள் சோதார
கமலபத மலர்நிழற்று
கரியபொழில் புலமிலகு பெரியபுல மமர்மகா
கணபதிப் பிள்ளையாரே. (1)

மாசான தற்றநற் பவளாசலங்கள் போல்
வளரீ ரிரண்டு புயமும்
வருவதன கரமுமங்குசபாச லட்டுகங்
கொம்புவதி கைகளுன்குந்
தேசார் கஜானனமு மாபெருங் கருணைபொழி
திரிநேத் திரங்களுஞ் சீர்ச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கஞ்ச வலரினெழி றங்குதிரு வடிகளுஞ்
சிந்தைதனி னென்று முறுமா
றீசாவெ னக்கருளி யாசான தைத்துரந்
தின்னருள்செய் விக்னராச
வெந்தையே முந்தைமறை தந்தமுதல் வடிவே
யெவர்க்குமுத லாயபொருளே
காசாரு மொளிபோல நீக்கமற வெங்குங்
கலந்துநிறை கின்றபொருளே
கரியபொழில் புலமிலகு பெரியபுல மமர்மகா
கணபதிப் பிள்ளையாரே. (2)

மாதளவ முகைநகையர் மண்பொரு யுள்ளழு
வாசையெனு மாயமாய
வலையிடைப் பட்டுவளி வழிவந்த பஞ்செனு
மயங்கியொரு கணமதென்னும்
போதளவு நிலைநிலா தென்னுள்ள மையவேர்
போம்வழிப் புகுமலம்போற்
பொல்லாத தீயவைம் புலவாறு செல்லாது
புண்ணியா வுனது புனிதத்
தாதளவு முபயபா தாரவிந் தங்களைச்
சாரத் திருப்பி யருளைத்
தந்தான வாதிகள் வறுத்தவித் தாகநற்
றயைவைப்ப தெந்தநாளோ
காதளவு செல்கடைக் கண்வல்ல பாதேவி
காதல கணேசராச
கரியபொழில் புலமிலகு பெரியபுல மமர்மகா
கணபதிப்பிள்ளையாரே. (3)

வயமிகு கஞதிபதி யேயைங் கராவாகு
வாகஞ விக்னராச
வரதவொரு தந்தவுமை மைந்தவே ரம்பதந்
தாவளா னனமனத்தார்ப்
புயமா றிரண்டுடைய குமரவேள் வள்ளிமலை
புக்கபொழு தினினிணைக்கப்
போய்த்துணைவ னென்னல்கண் கூடாக நற்றுணை
புரிந்தகிரு பாமூர்த்தியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுயலரிதெ னப்பரிவொ டோலமிட வமரர்விண்
ணூரினைமு ருக்கியதில்வாழ்
வுற்றவர்க டானிடுங் குற்றேவல் செயவாழ்வொ
டுற்றதவ வலிபடைத்த
கயமுகனை யமரில்வென் றவர்களிடர் கெடுமாறு
காத்தநீ யெற்குமரணே
கரியபொழில் புலமிலகு பெரியபுல மமர்மகா
கணபதிப் பிள்ளையாரே. (4)

தந்தையா ரதுகைத் தலத்திலொரு மாதுளங்
கனிகண் டெனக்கிதைத்தா
தாவிதை யெனக்கெனச் சேயுநீ யுங்கேட்ட
தருணத்தி லொருபழத்தை
வந்திரு மகார்கேட்கி லீவதெவ் வாறென
மதித்தொரு கணத்திலுலகை
வலமாக வருமவர்க் கேயீது மென்னவேள்
மயிலயத் திற்சவாரி
தந்துலகை வலமாக வருமுன்ன ருலகெலாந்
தலைவநீ தானேயெனச்
சாற்றிப்ர தட்சணஞ் செய்துமுன் வந்துகனி
தனைவாங்கி யுண்மகிழ்ந்த
கந்தையடு சிந்துரச் சுந்தரமுகா நினடி
கட்கடிய ளுக்கியருள்மா
கரியபொழில் புலமிலகு பெரியபுல மமர்மகா
கணபதிப் பிள்ளையாரே. (5)

ஐயாறெ னும்முகாக் கக்கர வரன்றந்த
வாதியே சோதியேந
லானந்த மானபரி பூரண காரண
வாரண திக்கடவுளே
மையாறு செல்லுமெ னுளத்தைநித் யாநித்ய
வஸ்துவை யறிந்துபதியாய்
மலமகற் றுன்பாத மலர்மீதி லேபத்தி
வைத்துத் தியானஞ்செய
வையாறு வாழ்துய்ய முடியுடைய வையனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வம்பையறி யுங்கையனே
மாதயா நிதியே கயானனு மெய்ஞ்ஞான
மௌனவடி வானகுருவே
கையா றிரண்டுடைய கந்தவேட் குத்தமைய
ஞயகரு ணைக்கிருப்பே
கரியபொழில் புலமிலகு பெரியபுல மமர்மகா
கணபதிப் பிள்ளையாரே. (6)

ஆக்கையோ வரிதரிய பேற்றினுக்குக் கருவி
யாவது மறிந்துமந்தோ
வையபர தெய்வமே யுய்யுநெறி யோராம
லேவேட ரால்மயங்கிப்
பூக்கையொடு நின்னையன் பொடுபூசை செய்து துதி
புகலாத தீயனேனு
பொன்னல மதைக்கொண்டு வரகினுக் குழுமவர்கள்
போலலா தாரையொப்பேன்
மாக்கைமுக வள்ளலே தெள்ளுஞா னனந்த
மாயகிரு பாவாரியே
வானவர்க டானவர்கள் மானவர்கள் வேட்டவை
வழங்கிவதி தேவதருவே
காக்கைதன திரையென்ற வாக்கை நீங்கவதியிற்
கடவுளே தஞ்சமெனவான்
கரியபொழில் புலமிலகு பெரியபுல மமர்மகா
கணபதிப் பிள்ளையாரே. (7)

பரமலை விலைக்கொண் டவரனுனை நினைக்காத
படிபடித் தேரிவிவரப்
பார்த்தப் படித்தேரி னச்சினை யறுத்தமா
பரதெய்வ பேசொல்பத்துச்
சிரமலையு ளானுதவ வொருவனைத் தேடமறை
தேர்சிறுவ னுகியேமுன்
சென்றுகண் டொப்பரிய சிவதலம தொன்றையா
செவியெனச் செய்தபதியே
வரமலைவி லாதமெய் யன்பர்க டமக்கீய
வந்தகிரு பாவாரியே
மாசைநிகர் மெய்யனே தேசையுத வையனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமறைமுக ஞயதூய
கரமலேமு காவிநா யககால ஞர்வருங்
கால்நீயு மென்முனம்வா
கரியபொழில் புலமிலகு பெரியபுல மமர்மகா
கணபதிப் பிள்ளையாரே. (8)

வாகோடு வளமில கிலக்குமி வரும்மார்ப
மால்பெற்ற சர்ப்பசாப
மானதக லச்செய்த வாதவிக் கினராச
மாதங்க வதனதேஞே
பாகோவெ னுஞ்சொலுள வல்லபை மஞ்ஞளபர
னம்பிகை மகிழ்ந்தபால
பற்றுற்ற வன்பரிட ரற்றுற் றிடக்கிருபை
பாலித்திடுங் கணேச
மாகோடு கொண்டுநான் கின்பின்ன ருளமறையை
மகமேரு வேட்டி லெழுதி
வைத்தலே ககநல்ல வித்தக விநாயக
வனப்புள சதுர்ப்புயத்திற்
காகோத ராபரண மணிதிருக் கோலநின்
கமலபத நிழலதருள்மா
கரியபொழில் புலமிலகு பெரியபுல மமர்மகா
கணபதிப் பிள்ளையாரே. (9)

பூப்பொருது திருவதன வல்லபை யிரங்கியருள்
புரிபெருங் கருணைவாழ்க
பொருப்பையு மலட்சியம தாகக் கறிக்கும்வலி
பொலியுமுன தூர்திவாழ்க
கூப்புகை மெய்யடியர் தந்திருக் கூட்டமருள்
குலவிநல மாகவாழ்க
கூறுதிரு வாபரண முதலிய வுபாங்கமெழில்
குறையாது பெருகிவாழ்க
மாப்பெரிய புவியிலுயிர் முழுவதுமு ஞதரம்
மருவியருள் பெற்றுவாழ்க
மருவரிய சுத்தாத்து விதசைவ சித்தாந்த
வழியினர் சிறந்துவாழ்க
காப்பென்ற கவிகளா லுனைவணங் கும்புகழ்க்
கவிஞர்கள் தினமும்வாழ்க
கரியபொழில் புலமிலகு பெரியபுல மமர்மகா
கணபதிப் பிள்ளையாரே. (10)

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலணை மேற்கு.

# மகாணபதிப் பிள்ளையார்

# திரு ஊஞ்சல்

ஆசிரியர் ஸ்ரீமான் வி. கந்தப்பிள்ளை

திருமருவி யாழ்ப்பாண மாதி ஞேங்கு
    திலகமெனும் வேலணைநன் னகர மேற்கில்
தருமருவு பெரியபுலத் தருளின் மேவுந்
    தந்தைமகா கணபதிமே லூஞ்சல் பாடக்
கருமருவு மடியர்மல மிரிய நீடு
    கருணைமழை பொழிபரனு முமையு மீன்ற
உருமருவு கடதடகும் பக்க ளிற்றின்
    உபயமலரடி தினமுங் காப்ப தாமே. (1)

சீர்பூத்தமறை நான்குங் கால்களாகச்
    சிறந்தஉப நிடதமுயர் சட்ட மாக
நேர்பூத்த சிவாகமங்கள் பலகை யாக
    நிறையறுபா ஞன்குகலை கயிற தாகப்
பேர்பூத்த உபாகமங்கள் விட்ட மாகப்
    பிறங்குபிர ணவமிலங்கு தவிச தாக
ஏர்பூத்த பெரியபுலத் தருளோ டோங்கும்
    இறைவமகா கணபதியே யாடீ ரூஞ்சல். (2)

திருமகளு யகளுதி யமரர் தங்கள்
    சிந்தைமய லறவுதித்த வடுகன் ருனும்
வருவீர பத்திரனுஞ் சூர ஞேடு
    மலைபிளக்க வேல்விடுத்த குமரன்ருனும்
மருவியிரு புறமுமலர் தூவிப் போற்ற
    மலைமகளொ டிறைவனருள் மாரி தூற்ற
அரிகரபுத் திரனுதி முதல்வ ரேத்த
    ஆதிமகா கணபதியே யாடீ ரூஞ்சல். (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்திமகா காளர்பிருங் காதி யாக
நண்ணுசிவ கணங்கணறு மலர்தூ யேத்த
விந்தைபெறு மட்டவித்தே சுரர்க ளோடு
விளங்குபிர ணவர்முதலோர் விரவிச் சூழ
அந்தமில்சீ ருருத்திரருஞ் சனக ருதி
அரியமுனி வரரேழு கோடி யாக
வந்தமகா மந்திரங்கள், வணங்கித் தேங்க
மருவுமகா கணபதியே யாடீ ரூஞ்சல். (4)

ஆரணமா கமங்கடெய்வ் வுருக்கொண் டேத்த
அரியநவ சத்திகளு மன்பாற் போற்றச்
சீரணவு சத்தமட மாதர் தேங்கச்
சித்திபுத்தி யிருபுறமுஞ் சிறந்தே யோங்க
ஆரபரா பரைபேத மாகி யோங்கும்
அமலசிவ சத்திகள் பாங்கன்பு கூரக்
காரணகா ரியமாகி, யதீத மாகக்
கருதுமகா கணபதியே யாடீ ரூஞ்சல். (5)

மங்கலமார் பூதமைந்துங் கரண நான்கும்
மருவுதனமாத் திரைகன்மேந் திரிய மைந்துந்
துங்கமிகு ஞானவிந் திரிய மைந்துந்
துலங்குகலை காலமுத லேழி னோடு
தங்குசுத்த வித்தைமுத லைந்து மாகத்
தத்துவமுப் பத்தாறிற் கப்பா லாகி
அங்குதித்தே பெரியபுலத், தருளோ டோங்கு
மாசிமகா கணபதியே, யாடீ ரூஞ்சல். (6)

இந்திரனல் லடைப்பைகொள வங்கி தீப
மேந்தயம னுடைவாளோ டினிது மேவ
வந்துகளாஞ் சியைநிருதி யெடுப்ப நல்ல
வருணனெழிற் சிவிறிகொடு மருங்கிற் றூவ
நந்தனிலன் கவரிகொளக் குபேர னோடு
நலங்குலவீ சானனறு மலர்தூ யேத்தச்
சுந்தரமார் பெரியபுலத் தருளோ டோங்கு
சோதிமகா கணபதியே யாடீ ரூஞ்சல். (7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமாலு மலரயனு மிருகை கூப்பச்
சிறந்தமுனி வரரமரர் வணங்கிப் போற்ற
வருமிரவி மதிகவிகை தாங்கி மேவ
வரமுறுநல் லடியர்மலர் மாரி தூவ
உருகவரு தும்புருநா ரதர்கள் பாட
வுயர்கணநா தர்கடுதிசெய் யோசை நீட
அருளுருவாய்ப் பெரியபுல மமர்ந்தே யோங்கு
மாதிமகா கணபதியே யாடீ ரூஞ்சல். (8)

சங்கமொடு துடிமுரசு சின்ன மோங்கத்
தயங்குகொடி யாலவட்டம் பீலி தேங்க
மங்கையர்க ளெண்வகைமங் கலங்க டாங்க
மணமலர்தூ யரமகளிர் மகிழ்ச்சி தூங்கத்
துங்கமுறு வேலணைநன் னகரில் வாழுந்
துரியபர சிவனடியா ரெவரு மோங்க
அங்கெழில்சேர் பெரியபுலத் தருளோ டோங்கு
மாதிமகா கணபதியே யாடீ ரூஞ்சல். (9)

ஆதிசிவ பாலகரே யாடீ ரூஞ்சல்
அன்பருளத் தமர்முதலே யாடீ ரூஞ்சல்
வேதசிவா கமப்பொருளே யாடீ ரூஞ்சல்
விளங்குமுமை திருமகனே யாடீ ரூஞ்சல்
ஓதபர பரஞானத் துண்மை யாகி
யோங்குசுத்த நிட்களரே யாடீ ரூஞ்சல்
சோதிசுயஞ் சோதிபரஞ் சோதி யாகித்
துலங்குமகா கணபதியே யாடீ ரூஞ்சல். (10

அந்தணரா தியர்வாழி யறங்கள் வாழி
யாவினமு மடியவரு மமர்ந்தே வாழி
சந்தமிகு வேதசிவா கமங்கள் வாழி
தயங்குதிரு நீறுருட்டக்க மணியும் வாழி
வந்துமழை மும்மாரி பொழிந்து வாழி
வளமுறுவே லணைநகரோ ரெவரும் வாழி
சுந்தரமார் பெரியபுலத் தருளோ டோங்குஞ்
சோதிமகா கணபதியின் றுணைத்தாள் வாழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எச்சரிக்கை

கடமார் கயமுகனே சிவன்மகனே யெச்சரீக்கை
கண் மூன்றுடையவனே கணபதியே யெச்சரீக்கை
திடமார்வரை யுமையா ட்குசெல்வா வெச்சரீக்கை
தேசார் கணராசா செகதீசா வெச்சரீக்கை
படமார்பணி மணியாலொளிர்முடியா யெச்சரீக்கை
பரனே யருள்வடிவே முத்திமுதலே யெச்சரீக்கை
தடமார்பொழிற் பெரிய புலஞ்சார்வா யெச்சரீக்கை
தகுமாருயி ரெவர்க்குமருள் தருவா யெச்சரீக்கை.

பராக்கு

ஓசைதரு மோங்கார வொளியே பராக்கு
உண்மை நிறை நாதவிந்தி னுருவே பராக்கு
தேசுதரு சூரியப் பிரகாசா பராக்கு
சித்தி புத்தியான சத்தி நேசா பராக்கு
மாசிலுயிர்க் கருள்கனிந்த வரதா பராக்கு
மாமறையி னுருமுதலில் வருவாய் பராக்கு
பாசமவை நீக்கியருள் பரமா பராக்கு
பத்தர் நினைவொத்தவருள் பரனே பராக்கு

மங்களம்

சீரேறு பரமசிவ னருளுருவ தாய்வந்த
செகதீச திருமங்களம்
தெய்வமறை முதலிலகு பிரணவப் பொருளாய்ச்
சிறந்தமுத திருமங்களம்
பேரேறு மடியரிடர் கெடவருள்செ யைங்கரப்
பெருமநற் றிருமங்களம்
பிரசவிழி யரியரவி னுருவகல வருள்செயும்
பிள்ளையடி திருமங்களம்
பாரேறு மலவிரு ளுரந்துபர ஞானமருள்
பாசாங்குச திருமங்களம்
பரவுமம் பிகைபால கயமுக கணேசபர
பகவசுக திருமங்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரேறு மெயிலயி லணைப்பதியி னர்க்கருள்
கனிந்தருள்க திருமங்களம்
கவினிலகு பெரியபுல மமர்மகா கணபதிக்
கருணைநிதிக் கடவுளே.

வாழி

தேமேவு கமலமல ரெனவிலகு கருணைபொழி
திருவதன மாறும் வாழி
திருவேர கரதியறு தலமோடு பலதளி
சிறந்ததிரு வருளும் வாழி
பூமேவு மருண்மாரி பொழிபனிரு நயனமொடு
பொலிவுபெறு தோள்கள் வாழி
பொருவி றெய்வத யானையொடு வள்ளிநாயகி
பொலிந்தினிது தினமும் வாழி
மாமேவு கிரஞ்வுச மலைகீறு வேலினெடு
மயில்சேவ ருனும் வாழி
மலர்மேல வர்க்குமுயர் குறுமா முனிக்குமருள்
வரதசிவ குமர வாழி
காமேவு மயிலணையி லமரடியர் பவநோய்
களைந்தொழுகு கருணை வாழி
கருதுதமி ழாசிரிய பரமகுரு நாதனிரு
கழலிணைகள் வாழி வாழி.

முற்றிற்று

திகட சக்கரச்
செம்முகம் ஐந்துள்ளான்
சகட சக்கரத்
தாமரை நாயகன்
அகட சக்கர
வின்மணி யாவுறை
விகட சக்கரன்
மெய்ப்பதம் போற்றுவாம்.

திருவும் கல்வியுஞ்
சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும்
தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நம
துள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப்
பிள்ளையைப் பேணுவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# விநாயகர் அகவல்

ஔவையார் அருளிச்செய்தது.

## நிலமண்டில ஆசிரியப்பா

திருச்சிற்றம்பலம்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழகு எறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்

வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்

இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே!
முப்பழ நுகரும் மூஷிக வாகன!.

இப்பொழுது என்னை ஆட்கொள்ள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற்
புகுந்து

குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டி என்
செவியில்

தெவிட்டா ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணை இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்குங் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்துஇருள் கடிந்து

தலமொரு நான்குந் தந்தெனக்கு அருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும். 53

பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்து
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனை கபாலமுங் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்

குண்டலி யதனிற் கூடிய அன்று
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலாதா ரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்

குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக்கு அருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து

முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்தி
இருள்வெளி இரண்டுக் கொன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத் தழுத்திஎன்
செவியில்

எல்லை யில்லாத ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவுக் கணுவாய் அப்பா லுக்
கப்பாலாய்க்

கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலை அறிவித்துத்

தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக! விரைகழல் சரணே.

திருச்சிற்றம்பலம்.

---

உள்ளமெனும் கூடத்தில்
ஊக்கமெனுந் தறிநிறுவி
உறுதி யாகத்
தள்ளரிய அன்பெனுந்
தொடர்பூட்டி இடைப்படுத்தித்
தறுகட் பாசக்
கள்ளவினைப் பசுபோதக்
கவளமிடக் களிந்துண்டு
கருணை யென்னும்
வெள்ளமதம் பொழி சித்தி
வேழத்தை நினைந்து வரு
வினைகள் தீர்ப்பாம்.

சத்தியாய் சிவமாகித் தனிப்பர
முத்தியான முதலைத் துதி செய்யச்
சுத்தியாகிய வாற்பொருள் நல்குவ
சித்தியானை தன் செய்ய பொற் - பாதமே.

★

மண்ணுலகத்தினிற்
பிறவி மாசற
எண்ணிய பொருளெல்லாம்
எளிதின் முற்றுறக்
கண்ணுதல் உடையதோர்
களிற்று மாமுகப்
பண்ணிவன் மலரடி
பணிந்து போற்றுவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# விநாயகர் திருவகவல்

## நக்கீரதேவர் அருளியது.

சீர்தரு மூலச்
  செழுஞ்சுடர் விளக்கே
கார்நிற மேனிக்
  கற்பகக் களிறே
அல்லல் வினையை
  அறுத்திடு ஞான
வல்லபை தன்னை
  மருவிய மார்பா
பொங்கர வணிந்த
  புண்ணிய மூர்த்தி
சங்கர னருளிய
  சற்குரு விநாயக
ஏழையடியேன்
  இருவிழி காண

வேழ முகமும்
  வெண்பிறைக் கோடும்
பெருகிய செவியும்
  பேழை வயிறும்
திருவளர் நுதலில்
  திருநீற்றழகும்
சிறுத்த கண்ணுஞ்
  சீதளப் பார்வையும்
நறுந்திகழ் நாசியும்
  நாண்மலர்ப் பாதமும்
நவமணி மகுட
  நன்மலர் முடியும்
கவச குண்டல
  காந்தியும் விளங்கச்
சிந்துரத் திலகச்
  சந்தனப் பொட்டும்
ஐந்து கரத்தின்
  அழகும் வீற்றிருக்க
பாச வினையைப்
  பறித்திடும் அங்குச
பாசத் தொழியும்
  பன்மணி மார்பும்

பொன்னு பரணமும்
  பொருந்து முந்நூலும்
மின்னு மெனவே
  விளங்கு பட்டழகும்
உந்திச் சுழியும்
  உரோமத் தழகும்
தொந்தி வயிறுந்
  துதிக்கையுந் தோன்ற
வேதனும் மாலும்
  விமலனும் அறியாப்
பாதச் சலங்கை
  பலதொனி யார்ப்பத்
தண்டைச் சிலம்பும்
  தங்கக் கொலிசும்
எஃ்டிசை மண்டலம்
  எங்கும் முழங்கத்
தொகுது துந்துமி
  தொந்தோ மெனவே
தகுதகு திந்திமி
  தாளம் முழங்க
ஆடிய பாதம்
  அண்டர்கள் போற்ற

நாடிமெய் அடியார்
  நாளும் துதிக்க
கருணை புரிந்து
  காட்சி தந்தருள
இருளைக் கடிந்து
  எங்கும் நிறையப்
பொங்குபே ரொளியாய்
  பொன்மலை போலத்
திங்கள் முடியான்
  திருவுளம் மகிழ
வந்த வாரண
  வடிவையும் காட்டி

சிந்தை தளர்ந்த
  சீரடி யார்க்கும்
இகபர சாதனம்
  இரண்டு முதவி
அகவினை துன்பம்
  அகந்தை அறுத்து
மூலா தார
  முச்சுடர் காட்டி
வாலாம்பிகை தன்
  வடிவையுங் காட்டி
மாணிக்க மேனி
  மலர்ப்பதங் காட்டிப்
பேணிப் பணியப்
  பீசாட் சரமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓமென் றுதித்த
ஓங்கா ரத்துள்ளே
ஆமென் றெழுந்த
அட்சர வடிவும்
இடைபிங் கலைகள்
இரண்டின் நடுவே
கடைமுனை சுழுமுனைக்
கபாலமும் குறித்து
மண்டலம் மூன்றும்
வாயுவோர் பத்தும்
குண்டலி யசைவில்
கூறிய நாடியும்
பூதமும் பொறியும்
புகழ் குணம் மூன்றும்
வாதனை செய்யும்
அறிவையுங் காட்டி
ஆறு தார
அங்குச நிலையைப்

பேறுகி நின்ற
பெருமையுங் காட்டிப்
பஞ்ச மூர்த்திகள்
பாகத் தமர்ந்த
பஞ்ச சக்திகளின்
பாதமுங் காட்டி
நவ்விட மெவ்வும்
நடுவணை வீட்டில்
அவ்வும் ஆக்கினை
அனாதி சதாசிவம்
மைவிழி ஞான
மனோன்மணி பாதமும்
நைவினை நணுகா
நாத கீதமும்
கண்டு வணங்கக்
கண்ணைத் திறந்து
விண் தலமான
வெளியையுங் காட்டி
ஐம்பத் தோரெழுத்
தட்சர நிலையை
இன்பச் சக்கர
விதிதனைக் காட்டி

புருவ நடுவினைப்
பொற் கமலாசான்
திருவிளை யாடலின்
திருவடி காட்டி
நாதமும் விந்தும்
நடுநிலை காட்டிப்
போதம் நிறைந்த
பூரணம் காட்டி
உச்சி வெளிதனில்
உள்ளொளி காட்டி
வச்சிரம் பச்சை
மரகத முத்துப்
பவளம் நிறைந்த
பளிங்கொளி காட்டிச்
சிவ கயிலாயச்
சேவையுங் காட்டி
சத்தம் பிறந்த
தலத்தையுங் காட்டித்
தத்துவந் தொண்ணூற்
றாறையும் நீக்கி
கருவி கரணக்
களங்க மறுத்து

மருவிய பிறவி
மாயையை நீக்கி
உம்பர்கள் இருடிகள்
ஒருவருங் காணா
அம்பர வெளியின்
அருளையுங் காட்டிச்
சத்தி பராபரை
சதனந்தி நிராமய
நித்திய ரூபி
நிலைமையுங் காட்டி
அடியவர் ஞானம்
அமிர்தமா யுண்ணும்
வடிவை யறியும்
வழிதனைக் காட்டி
நாசி நுனியில்
நடக்குங் கலைகள்
வாசிவா வென்று
வாங்கிப் பிடித்து
நின்மல வடிவாய்
நிறைவித் தப்புறம்
வின் மயமான
விதத்தையும் காட்டித்

தராதல முழுதும்
தானாய் நிறைந்த
பராபர வெளியைப்
பணிந்திடக் காட்டி
என் உடல் ஆவி
யிடம் பொருள் யாவும்
தன்னுடை வசமாந்
தவ நிலை காட்டி
நானெனும் ஆணவம்
நாசம தாகத்
தானென வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயக்கந் தீர
ஆன குருவாய்
ஆட் கொண்டருளி
மோன ஞானம்
முழுது மழித்து
சிற்பரி பூரண
சிவத்தைக் காண
நந்சிவ நிட்கள
நாட்டமுந் தந்து
குருவும் சீடனும்
கூடிக் கலந்து
இருவரும் ஒருதனி
இடத்தினிற் சேர்ந்து
தானந்த மாகித்
தற்பர வெளியில்
ஆனந்த போத
அறிவைக் கலந்து
புவனத் தொழிலைப்
பொய்யென் றுணர்ந்து
மவுன முத்திரையை
மனத்தினில் இருத்திப்
பெண்டு பிள்ளை
பண்டு பதார்த்தம்
கண்டது மாயைக்
கனவெனக் காட்டி
பாச பந்தம்
பவக் கடல் நீக்கி
ஈசன் இணையடி
யிருத்தி மனத்தே
நீயே நானாய்
நானே நீயாய்
காயா புரியைக்
கனவென உணர்ந்து.
எல்லாம் உன்செயல்
என்றே யுணர
நல்லாய் உன்னருள்
நாட்டந் தருவாய்
காரண குருவே
கற்பகக் களிறே
வாரண முகத்து
வள்ளலே போற்றி.
நித்திய பூசை
நைவேத் தியமும்
பத்தியாய்க் கொடுத்தேன்
பரமனே போற்றி.
ஏத்தி அனுதினம்
எளியேன் பணயக்
கூற்றினை யுதைத்த
குளிர்பதம் தந்து

ஆசு மதுர
அமிர்தம் அளித்துப்
பேசுஞ் ஞானப்
பேறெனக் கருளி
மனத்தில் நினைத்த
மதுர வாசகம்

நினைவிலும் கனவிலும்
நேசம் பொருந்தி
திருவள் ளுவரும்
அவ்வையும் போலக்
கருத்து மிகுந்து
கவிமழை பொழிய
வாக்குக் கெட்டா
வாழ்வை யளித்து
நோக்கும் ஞான
நோக்கு மளித்து
இல்லற வாழ்வை
யிடையூ றகற்றிப்
புல்ல ரிடத்தில்
புகுந்து உழலாமல்
ஏற்ப திகழ்ச்சி
என்ப தகற்றிக்
காப்ப துனக்குக்
கடன் கண்டாயே
நல்வினை தீவினை
நாடி வருகினும்
செல்வினை யெல்லாஞ்
செயலுன தாமால்

தந்தையும் நீயே
தாயும் நீயே
எமரும் நீயே
ஈசனும் நீயே
போத ஞானப்
பொருளும் நீயே
நாதமும் நீயே
நான்மறை நீயே.
அரியும் நீயே
அயனும் நீயே
திரிபுர தகனம்
செய்தவன் நீயே
சக்தியும் நீயே
சதாசிவம் நீயே
புத்தியும் நீயே
புராந்தகன் நீயே
பத்தியும் நீயே
பந்தமும் நீயே
முத்தியும் நீயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோட்சமும் நீயே
ஏகமும் நீயே
என்னுயிர் நீயே

தேகமும் நீயே
தேகியும் நீயே
உன்னரு ளன்றி
உயிர்த்துணே காணேன்
பின்னொரு தெய்வம்
பேசவும் அறியேன்
வேதனை கொடுத்த
மெய்யிது தன்னில்
வாத பித்தம்
வருத்திடு சிலேத்துமம்
மூன்று நாடியும்
முக்குண மாக்கித்
தோன்றும் வினையின்
துன்பம் அறுத்து
நாலாயி ரத்துநா
நூற்று நாற்பத்தெண்
மேலாம் வினையை
மெலியக் களைந்து
அஞ்சா நிலைமை
அருளியே நின்தன்
பஞ்சாட் சரநிலை
பாலித் தெனக்குச்
செல்வமும் கல்வியும்
சீரும் பெருக
நல்வரமே தரும்
ஞான விநாயகா
சத்திய வாக்குச்
சாந்தா யுதவிப்
புத்திரனே தரும

புண்ணிய முதலே
வெண்ணீ றணியும்
விமலன் புதல்வா
பெண்ணும் உமையாள்
பெற்றெடுந் தேவே
அரிதிரு மருகா
அறுமுகன் துணைவா
கரிமுக வாரணக்
கணபதி சரணம்
குருவே சரணம்
குணமே சரணம்
பெருவயிற் றோனே
பொற்றாள் சரணம்
கண்ணே மணியே
கதியே சரணம்

விண்ணே யொளியே
வேந்தே சரணம்
மானத வாவி
மலர்த்தடத் தருகில்
தானத்தில் வாழும்
தற்பரா சரணம்
உச்சி புருவத்
துதித்துல களிக்கும்
சச்சி தானந்த
சற்குரு சரணம்
விக்கின விநாயக
தேவே ஓம் ஓம்
அர அர சண்முக
பவனே ஓம் ஓம்
சிவ சிவ மகாதேவ
சம்போ ஓம் ஓம்.

உச்சியின் மகுடம் மின்ன
ஒளிர்தர நுதலின் ஓடை
வச்சிர மருப்பின் ஒற்றை
மணிகொள் கிம்புரி வயங்க
மெய்ச் செவிக் கவ்ரி தூங்க
வேழமா முகங்கொண் டுற்ற
கச்சியின் விகட சக்கரக்
கணபதிக் கன்பு செய்வோம்.
-கந்தபுராணம்

வானுலகும் மண்ணுலகும்
வாழ மறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ்
பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர
மூன்றுவிழி நால்வாய்
யானைமுக னைப்பரவி
அஞ்சலி செய் கிற்பாம்
சேக்கிழார் புராணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயக கவசம்

## காசிபமுனிவர் அருளியது

வளர்சிகையைப் பராபரமாய்
வயங்கு விநாயகர் காக்க
வாய்த்த சென்னி

அளவுபடா அதிகசவுந்
தரதேக மதோற் கடர்தாம்
அமர்ந்து காக்க

விளரற நெற்றியை என்றும்
விளங்கிய காசிபர் காக்க
புருவற் தம்மைத்

தளர்வில் மகோதர் காக்க
தடவிழிகள் பாலச்சந்
திரனர் காக்க

கவின்வளரும் அதரம் கச
முகர் காக்க தால் அங்கணங்
கிரீடர் காக்க

நவில்சிபுகம் கிரிசை சுதர்
காக்கநனி வாக்கை விநா
யகர்தாம் காக்க

அவிர் நகை துன்முகர் காக்க
அள்ளெழிற் செஞ்செவி
பாசபாணி காக்க

தவிர்தலுறு திளங்கொடி போல்
வளர்மணி நாசியைச் சிந்தி
தார்த்தர் காக்க

காமருபூ முகந்தன்னைக்
குணேசர் நனிகாக்க களம்
கணேசர் காக்க

வாமமுறும் இரு தோளும்
வயங்குகந்த பூரவசர்தாம்
மகிழ்ந்து காக்க

ஏமமுறு மணிமுலைவிக்
கினவிநாசன் காக்க
இதயற் தன்னைத்

தோமகலுங் கணநாதர்
காக்க அகட்டினைத்துலங்கே
ரம்பர் காக்க

பக்கம் இரண்டையும் தரா
தரர் காக்க பிருட்டத்தைப்
பாவம் நீக்கும்

விக்கின கரன் காக்க
விளங்கி லிங்கம் வியாளபூ
டணர் தாங் காக்க

தக்ககுய்யந் தன்னைவக்
கிரதுண்டர் காக்கசக
னத்தை அல்லல்

உக்கணபன் காக்க
ஊருவை மங்களமூர்த்தி
உவந்து காக்க

தாழ் முழந்தாள் மகாபுத்தி
காக்க இருபதம் ஏக
தந்தர் காக்க

வாழ் கரங்கப் பிரப்பிரசா
தனர் காக்க முன்கையை
வணங்குவார் நோய்

ஆழ்தரச்செய் ஆசாபூ
ரகர் காக்க விரல்பதும
அத்தர் காக்க

கேழ்கிளரும் நகங்கள் விநா
யகர் காக்க கிழக்குனிற் புத்
தீசர் காக்க

அக்கினியிற் சித்தீசர்
காக்க உமாபுத்திரர் தென்
ஆசை காக்க

மிக்க நிருதியிற் கணே
சுரர்காக்க விக்கினவர்த்
தனர் மேற் கென்னுந்

திக்கதனிற் காக்கவா
யுவிற் கசகன்னர் காக்க
திகழ் உதீசி

தக்க நிதிபன் காக்க
வடகிழக்கில் ஈசநந்
தனரே காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சண்டேசுரர்



கௌரி அம்பாள்



சந்தான கோபாலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எழுந்தருளும் பரிவார மூர்த்திகள்



வள்ளி-தெய்வானை உடனமர் சுப்பிரமணியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூலஸ்தானத்தில் பிரதம அர்ச்சகர் ஆராதனை



வசந்த மண்டபத்தில் [பிரதம குருக்கள் ஆராதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரதான கும்பம் வீதியுலா



மூலஸ்தான ஸ்தூபி அபிஷேகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகநந்தர் பகல்முழுதுங்
காக்க இரவினும் சந்தி
இரண்டன் மாட்டும்

ஓகையின் விக்கினகிருது
காக்க இராக்கதர் பூதம்
உறுவேறு தாளம்

மோகினிப்பேய் இவையாதி
உயிர்த்திறத்தால் வருந்துயரம்
முடிவிலாத

வேகமுறு பிணிபலவும்
விலக்குபு பாசாங்குசர் தாம்
விரைந்து காக்க

மதிஞானம் தவம் தானம்
மானம் ஒளி புகழ்குலம்
வண்சரீரம் முற்றும்

பதிவான தனம் தானியம்
கிருகம் மனைவி மைந்தர்
பயில் நட்பாதிக்

கதியாவும் கலந்து சர்வா
யுதர் காக்க காமர்பவத்
திரர் முன்னை

விதியாரும் சுற்றமெலாம்
மயூரேசர் எஞ்ஞான்றும்
விரும்பிக் காக்க

வென்றிசீ விதங் கபிலர்
காக்க கரியாதி யெலாம்
விகடர் காக்க

ஒன்றிவ்வாறிதுதனை முக்
காலமும் ஓதிடின் நும்பால்
இடையூ றென்றும்

ஒன்றுரு முனிவரர்காள்
அறிமின்கள் யாரொருவர்
ஓதினும்

மன்ற ஆங்கவர் தேகம்
பிணியற வச்சிரதேக
மாகி மன்னும்

---

காலைப் பிடித்தேன் கணபதி! நின்பதங் கண்ணிலொற்றி
நூலைப் பலபல வாகச் சமைத்து நொடிப்பொழு(தும்)
வேலைத் தவறு நிகழாது நல்ல வினைகள் செய்துன்
கோலை மனமெனும் நாட்டின் நிறுத்தல் குறியெனக்கே.

卐 卐 卐

எனக்கு வேண்டும் வரங்களை இசைப்பேன் கேளாய் கணபதி!
மனத்திற் சலன மில்லாமல் மதியில் இருளே தோன்றாமல்
நினைக்கும் பொழுது நின்மவுன நிலைவந் திடநீ செயல் வேண்டும்
கனக்குஞ் செல்வம், நூறுவயது இவையும் தரநீ கடவாயே.

卐 卐 卐

புகழ்வோம் கணபதிநின் பொற்கழலை நாளும்
திகழ்வோம் பெருங்கீர்த்தி சேர்ந்தே — இகழ்வோமே
புல்லரக்கப் பாதகரின் பொய்யெலாம்; ஈங்கிதுகாண்
வல்லபை கோன் தந்தவரம்.

—பாரதியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழி மாநிலம்; மன்னுயிர் வாழியே.

**பண்டிதர் ச. சுப்பிரமணியம்,**
சிவன்வீதி, ஆவரங்கால், புத்தூர்.

## வெண்பா

ஆறா றமைந்தாரும் ஆமாமுன் அர்ச்சிப்ப
வேறாயொன் றாய்மேவி வேண்டருள் செய் - ஆறாரும்
சென்னியான் சேயாய சேட்டாநின் சேவையெல்லாம்
முன்னியாங் கெய்தமுந் தேவு.

## ஆசிரியம்

செந்நெறி எவர்க்கும் சென்னெறி என்பதும்
புன்னெறி யலாததும் பொன்னெறி யாவதும்
தவநெறிச் சார்பினும் சிவநெறி தான்; அதன்
இருகண் திருமுறை சாத்திரம் என்பரால்;
ஒருகண் திருநாரை யூருடைப் பிள்ளையார்,

நம்பியாண் டார்நம்பி தாம்பெற நல்கினர்;
ஒருகண் வெண்ணெய்நல் லூரமர் பிள்ளையார்,
பொய்கண் டகன்ற மெய்கண்ட தேவர்பால்
உய்வுண் டாக உவந்துமுன் உதவினர்
வைதிக சைவம் வையகம் வளரச்

செய்தருள் முகத்தால் திறந்திரு கண்ணையும்
கைத்தல நெல்லியில் மெய்ப் பொருள் காட்டினர்
கைத்தல மோதக் கணேசப் பிரானே;
உன்னும் உளந்தொறும் ஊர்தொறும் உறைந்தவர்,
முன்னர் முன்னுனர் முன்னிய முயற்சிகள்

முற்றுவித் தருளிமுன் நிற்கும் முன் னவராம்:
அன்னவர் கனிட்டன் தன்னருட் பெயர்கொள்
சுப்பிர மணியர் தோளமர்ந் தூர்ந்தே
தப்பறச் சூரனைச் சாடிநீ ராடியே
மீண்டறு முகன்கரம் வேலனை ஊரில்

வந்தனர்; வாகன மானவர் வளவில்
ஓலைக் கொட்டிலில் உவந்தமர்ந் தருளிக்
காலை மாலையில் கருத்துடன் அவர் செய்யும்
பூசனை ஏற்றருள் புரிந்தனர்; நேசமார்
காலி வர்த்தகர் ஊரிலுள் ளவரொடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலினர் கற்றளி; கும்பாபி ஷேகமும்
இருபத் தொருடாண் டின்முன் நடத்தினர்;
ஏற்பச் சிறப்பொடு பூசனை எனைத்தும்
அந்தணர் ஆற்றுவர்; இந்நாள் எல்லையில்
ஆலய அமைப்பில் பரிவார தேவர்க்கும்

ஆலய முடனமை சுற்றால யங்களும்
மண்டபம் மற்றவும் விண்டொட விதித்தே;
சுக்கில ஆண்டு பங்குனிச் சோதிநாள்
புந்தியின் வாரம் புணரும்நல் ஓரையில்
தந்தி முகப்பிரான் தமதருள் வழிதரப்

பெருஞ்சாந்தி எனப்பெறும் குடமுழுக் காட்டலை
அருஞ்சாந்தி அணையும் ஆர்வமோ டன்பினர்
ஆறறி அந்தணர் ஆறமைந் தாற்ற
ஆற்றுதல் நன்றே; போற்றுதும் நன்றே;
புத்தி சித்தி சகாயர்மெய்ப் பொருளாம்

அத்தி முகத்தவர் ஆதியில் சிவநெறி
காட்டிவாழ் வித்தவர் கற்பக விநாயகர்
சதாகா லத்திலும் சாந்நித்ய மாகிச்
சதாசா ரத்தொடும் சர்வமங் களத்தொடும்
சர்வ ஜனங்களும் சர்வ உலகமும்

வாழ வரங்களை வழங்கியிக் கோயிலில்
வாழ வருக வந்தமர்ந் தருள்கென
ஒருதலை தாழ்த்தி இருகரம் எடுத்தே
முக்கர ணங்களும் அந்தநாற் கரணமும்
ஐந்து புலன்களும் ஒன்றநின் றுருகி

வல்லவா றேத்தி வணங்கி வேண்டுதும்;
இவ்வரும் பணியில் ஈடுபட் டுழைத்தோர்
எவ்வெவர் களையும் ஏத்தலும் எங்கடன்;
''அப்பா லும்அடிச் சார்ந்தார்க்கும் அடியேன்''
இப்பா அடியே எம்வழி பாடுமாம்;

வணங்குவ தல்லால் வாழ்த்தும் தரமலோம்;
கணங்களின் நாயகன் கழலிணை பற்றுவோம்
அணங்கிலா தெமைத்துறை அணைக்கும்நா வாயே.

வாழி வேலணை; வாரண னாருள்
வாழி வாய்த்த வழித்துணை யாகவே
வாழி தொண்டரும் தொண்டும் வழிவழி;
வாழி மாநிலம்; மன்னுயிர் வாழியே.

卐 卐 卐



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியார் பாடலிருந்து...

கற்பக விநாயகக் கடவுளே, போற்றி!
சிற்பர மோனத் தேவன் வாழ்க!
வாரண முகத்தான் மலர்த்தாள் வெல்க!
ஆரண முகத்தான் அருட்பதம் வெல்க!
படைப்புக் கிறையவன், பண்ணவர் நாயகன்,

இந்திர குரு, எனது இதயத் தொளிர்வான்
சந்திர மவுலித் தலைவன் மைந்தன்
கணபதி தாளைக் கருத்திடை வைப்போம்;
குணமதிற் பலவாம்; கூறக் கேளீர்!
உட்செவி திறக்கும்; அகக்கண் ஒளிதரும்;

அக்கினி தோன்றும்; ஆண்மை வலியுறும்;
திக்கெலாம் வென்று ஜயக்கொடி நாட்டலாம்
கட்செவி தன்னைக் கையிலே யெடுக்கலாம்
விடத்தையும் நோவையும் வெம்பகை யதனையும்
துச்சமென் றெண்ணித் துயரிலா திங்கு

நிச்சலும் வாழ்ந்து நிலைபெற் றோங்கலாம்;
அச்சந் தீரும், அமுதம் விளையும்;
வித்தை வளரும்; வேள்வி ஓங்கும்;
அமரத் தன்மை எய்தவும்
இங்குநாம் பெறலாம்; இஃதுணர் வீரே

卐 卐

செய்யுந் தொழிலுன் தொழிலேகாண்;
சீர்பெற் றிடநீ அருள்செய்வாய்,
வையந் தனையும் வெளியினையும்
வானத் தையும்முன் படைத்தவனே!
ஐயா! நான்முகப் பிரமா!
யானை முகனே! வாணிதனைக்
கையா லணைத்துக் காப்பவனே!
கமலா சனத்துக் கற்பகமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி மூன்று

- ★ கணபதி வழிபாடு
- ★ விநாயக தத்துவம்
- ★ வேதங்கள், இந்துப் பண்பாடு
- ★ கும்பாபிஷேகம்
- ★ பிராமண குலங்கள்
- ★ அபிவிருத்தி
- ★ ஆலயம் - பங்களிப்பு
- ★ நீர்வளம்
- ★ திருப்பணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதியார் பாடலிருந்து...

# கணபதி வழிபாட்டு நெறி

சந்திரலேகா, வாமதேவா
விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

கணபதி வழிபாட்டு நெறி பற்றிப் பேசும்போது இந்தியா முழுவதிலும் மட்டுமன்றித் தென்கிழக்காசிய நாடுகள் பலவற்றிலும் பரவிச் செறிந்துள்ள ஒரு வழிபாட்டு நெறி பற்றியே பேசுகிறோம் எனலாம். கணபதி என்ற தெய்வத்தை முழுமுதற் கடவுளாகக் கொண்டு அதன் காரணமாக காணபத்தியம் என்று அழைக்கப்படும் இப்பிரிவு இந்தியாவிலே தோன்றி வளர்ந்து ஒரு சமயமாக முழுமைபெற்றது. நேபாளம், சீனத் துருக்கி, ஜாவா, போர்ணியோ ஆகிய நாடுகளில் கணபதியின் செல்வாக்குப் பரந்தது. ஜப்பான், இந்தோசீனா, சீனா, சீயம், பர்மா, திபெத் ஆகிய நாடுகளும் அவனது வழிபாட்டை அறியாதிருக்கவில்லை. பல்வேறு நாடுகளில் மட்டுமன்றி இந்தியாவிற் தோன்றிய அவைதிக மதங்களான பௌத்தம், சமணம் போன்றவற்றிலும் அவனது செல்வாக்குப் பரந்தது குறிப்பிடத்தக்கது. இந்து தெய்வங்களுள் இவ்வாறு பல்வேறு நாடுகளிலும், பல்வேறு மதங்களிலும் செல்வாக்குப் பெற்றவன் கணபதி ஒருவன் மட்டுமே என்று கூறலாம்.

இந்தியாவில் இமயமலையிலிருந்து கன்யாகுமரி வரை கணபதி சிறப்புப் பெற்றுள்ளான். சகல இந்துக்களும் ஒவ்வொரு மங்கள காரியத்தின் ஆரம்பத்திலும் இவனை வழிபடுவர். எழுத ஆரம்பிக்கும் போதும் பிள்ளையார் சுழியிட்டு கணபதியை வழிபட்டே ஆரம்பிப்பர். சிறப்பாகத் தமிழ் நாட்டில் கணபதி வழிபாடு மக்களது வாழ்வுடன் பின்னிப் பிணைந்துள்ளது எனலாம், அங்கு ஏறக்குறைய ஒவ்வொரு வீதியிலும் ஆலமரங்களின் கீழோ அன்றிச் சிறிய கோயில்களிலோ இவனைத் தரிசிக்கலாம். காணபத்தியம் இந்துசமயத்தின் ஆறு பிரிவுகளுள் ஒன்றாகவும் இடப்பெற்றுள்ளது. இந்து சமய சிந்தனையில் கணபதி என்ற யானைமுகக்கடவுள் பெற்றுள்ள முக்கியத்துவவத்தையே இவை குறித்து நிற்கின்றன எனலாம்.

இந்தியாவிலே கணபதி ஆரம்பத்தில் ஒரு திராவிடத் தெய்வமாகவே இருந்தான் என்றும் சூரியனை வழிபட்ட இந்தியாவின் தொல்பழங்குடி மக்களால் வழிபடப்பட்டான் என்றும் எலி வாகனத்தில் உள்ள அவனது உருவம் பண்டைய தெய்வீக வரலாற்றியலில் இரவின் சின்னமாகிய மிருகத்தைச் சூரியதெய்வம் வெற்றி கொள்வதையே குறிக்கின்றது என்றும் சில அறிஞர்கள் கருதுகின்றனர். தொல்குடித் தெய்வீக வரலாற்றியலிலிருந்து அவன் எடுக்கப்பட்டிருக்கலாம் என்பதை அவனது யானைத் தலையும் எலியில் அவன் ஏறியமர்ந்திருக்கும் நிலையும் புலப்படுத்துகின்றன என்றும் அவன் ஆரம்பத்தில் ஒரு மிருக வழிபாட்டு நெறியைச் சேர்ந்தவனயிருந்திருக்கலாம் என்றும் வேறு சில அறிஞர்கள் கருதுகின்றனர். (Crooke. W, Popular Religion and Folk-lore of Northern India London, 1896.P 287) ஆயினும் அவனது பண்டைய திராவிடப் பண்பு குறித்த பெயர் என்னவென்பது தெரியவரவில்லை. யானையின் பல் அல்லது தந்தத்தைக் குறிக்கும் திராவிடச் சொற்களான பல்லு, பெல்ல ஆகியவற்றிலிருந்து தோன்றிய அவனது பண்டைய பெயரின் திரிபே தற்போது தமிழில் அவனைக் குறிக்க வழங்கப்படும் பிள்ளையார் என்று கருதப்பட்டபோதும் இன்றைய வடிவில் அச்சொல் தந்தத்தைக் குறிக்காது பிள்ளையைக் குறிக்கிறது என்பதும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியதே (Alice Getty, Canesa, Oxford, University Press, 1936 P. J)² ஆரியர் இந்தியாவிற்கு வருவதற்கு முன் அங்கு நிலவிய தெனக் கருதப்படும் சிந்துவெளி நாகரிகத்துக்குரிய சின்னங்களிலே யானை பொறித்த முத்திரைகளும் கிடைத்துள்ளன. இதனையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு கிடைத்த வெவ்வேறு சின்னங்களிலே பொறிக்கப்பட்டுள்ள வேறு மிருகங்களையும் பிற்காலத்தில் இந்துக்கடவுளருக்குரியதாகக் கூறப்படும் வாகனங்களுடன் தொடர்புபடுத்தும் முயற்சி காணப்பட்டபோதும் அதனை நிறுவுவதற்குப் போதிய ஆதாரங்கள் கிடையாது. வெவ்வேறு விலங்குகளின் உருவங்கள் பொறிக்கப்பட்டிருப்பது இனக்குழுக்களின் மரபுச் சின்னங்களைக் குறிப்பதாகலாம் என்று சில அறிஞர்கள் கருதுவது ஓரளவு பொருத்தமாகக் காணப்படுகிறது. (அன்தோவா. கொ. அ, போன்காரத் - லேவின் கி. ம. இந்தியாவின் வ ர லா று, பகுதி 1, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1987. பக். 34) சி ந் து வெ ளி நாகரிகத்திற்குரிய எழுத்துக்கள் வாசித்து விளங்கிக்கொள்ளப் படும்வரை இவ் யானை உருவத்தை கணபதி வழிபாட்டுடன் இணைப்பது பொருத்தமற்றது என்றே கூறலாம். உண்மையில் கணபதி என்ற தெய்வத்தின் தோ ற் று வா ய் பற்றி அறிவதற்கு நிச்சயமான சான்றுகள் கிடைக்கவில்லை என்றே கூறவேண்டும். இத் தெய்வம் பற்றிய கருத்து உருவாகுவதற்கு மிருகத் தலைகளுடனும் மனித உடல்களுடனும் காணப்பட்ட ரோம் நாட்டு ஜேனூஸ் எகிப்திய ஜேநேய் ஆகிய தெய்வங்கள் பற்றிய கருத்துக்கள் உதவியிருக்கலாம் (Alice Getty, முற்கூறிய நூல், பக் 13, 14)

வடமொழி இலக்கியங்களை பொறுத்த வரையில் கணபதி என் ற தெய்வத்துடன் தொடர்புடையன எனக் கருதக்கூடிய சில ஆதாரங்கள் மிக ஆரம்பகால இலக்கியங்களிலேயே காணப்படுகின்றன. இ ரு க் கு வேதத்தில் இடம்பெற்றுள்ள பிரஹ்மணஸ்பதி பற்றிய பாடலிலும் (II. 23 1) இந்திரனைக் குறித்துப் பாடப்பட்ட பாடலொன்றிலும் (X. 112.9) காணப்படும் சில அடைமொழிகள் பிற்காலத்தில் கணபதிக்குரியனவாகக் கூறப்பட்ட இயல்புகளுடன் ஒத்துக் காணப்படுகின்றன. 'கவின் கவினும், கவிஞர்களுட் சிறந்த கவிஞன் அல்லது ஞானிகளுட் சிறந்த ஞானி, 'ஜ்யேஷ்டராஜா' அரசர்களுள் மிகப் பிரதானவானவன் அல்லது மூத்தவன் போன்ற அடைமொழிகள் கணபதிக்கும் பொருத்தமானவையே.

கிருஷ்ணயசுர் வேதத்திலுள்ள சதருத்திரீயம் (45.41) வாஜசனேயி ச ம் ஹி தை (22.30) ஆகியவற்றிலும் கணபதி பற்றிய சில குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. சதருத்திரீயம் 'கணபதிக்கு வணக்கம்' என்று உருத்திரனையே வணங்குகிறது. உருத்திரன் கணங்களின் தலைவனாக இங்கு கூறப்பட்ட போதும், புராணங்களில் இவ்வியல்பு கணபதிக்குரியதாகவே குறிப்பிடப்படுவதால் இதனை இங்கு கணபதியுடன் தொ ட ர் பு படுத்தி நோக்குவதிற் தவறில்லை எனலாம்

தைத்திரீய ஆரண்யகத்தில் கணேஷன் பற்றிய தவறில்லாத குறிப்பொன்று காணப்படுகிறது. இந்த கணேஷ காயத்திரி மந்திரம் தந்தத்துடன் கூடிய தெய்வத்தை நோக்கிப் பாடப்பட்ட ஓர் அனுபூதி நிறைந்த பிரார்த்தனையாக அமைந்துள்ளது.

''தத்புருஷாய வித்மஹே வக்ரதுண்டாய
தீமஹி

தன்னோ தந்தி: பிரசோதயாத்'' (X1.5)

இம்மந்திரம் கார்த்திகேயனும் ந ந் தி யு ம் விளிக்கப்பட்டுள்ள ஒ ரு மந்திரத்தொகுதியுள் இடம்பெற்றிருப்பதாலும், இவர்களுடன் புராணங்களில் மட்டுமன்றி மி க ப் பழைய சிற்பங்களிலும் கணபதி இணைந்திருப்பதாலும், பிற்காலத்திற் தந்தத்துடனும் துதிக்கையுடனும் தொடர்புடைய பெ ய ர் களை அவன் பெற்றிருப்பதாலும்; த ந் தி. வக்ரதுண்டன் ஆகிய பெயர்களைக் கொண்ட இப்பாடல் கணபதியை நோக்கியே பாடப் பட்டுள்ளது என்று கொள்ளலாம். (Alice Getty., மேற்படி பக் 2) மாணவ்ய கிருஹ்ய சூத்ரத்தில் நாலு தெய்வங்கள் இணைந்த குழுவாக விநாயகர் குறிப்பிடப்படுகிறார். (2. 14) அதர்வாசிரஸ் உபநிடதம் உருத்திரனை விநாயகனுடன் அடையாளம் காண்கிறது. கணபதியைக் குறிப்பதாகக் கருதப் படும் இ த் த கை ய சில குறிப்புகள் வேத இலக்கியங்களில் ஆங்காங்கே காணப்பட்ட போதும், வேத தெய்வக்குழுவில் கணபதி என்ற பெயரிலோ அல்லது அவனுக்குரிய வேறு எந்தப் பெயரிலோ தனித்தெய்வமாக அவன் இடம்பெறவில்லை என்பது கவனத்திற்குரியது. ம னு த ர் ம சாஸ்த்திரத்தில் இடம்பெற்றுள்ள குறிப்பொன்று சிவனைப் பிராமணர்களின் தெய்வமாகவும், கணேஷனைச் சூத்திரர்களின் தெய்வமாகவும் கூறுகிறது. இ வ் வா று கணபதி முக்கியமற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத் தெய்வமாக, கீழ் வகுப்பினரால் வழிபடப்பட்டவனாக இருந்ததாற் போலும் அவன் வேததெய்வக் குழுவில் தனியாக இடம்பெறவில்லை.

கணபதி, இதிகாசங்கள் கூறும் தெய்வக் குழுவிலும் இடம்பெறவில்லை. அவற்றிற் காணப்படும் 'கணேஷ', 'கணேஷ்வர' ஆகிய பெயர்களும் சிவனையே குறித்தன. புராணங்களில் அறியப்படும் மிக முந்திய குறிப்பில் அவன் கணபதி விநாயகன் என்று குறிப்பிடப்படுகிறான். 'சரியான முறையில் இணக்குவிக்கப்படாவிடின் தடைகளையும் கஷ்டங்களையும் உருவாக்குவான்' என்ற இயல்பு அவனுக்கு வழங்கப்பட்டது. புராண இலக்கியங்களில் கணபதியின் படைப்புத் தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் காணப்படுகின்றன. ஸ்கந்தபுராணம் பார்வதியை மட்டும் அவனது படைப்புடன் தொடர்பு படுத்திக்கூறும் கருத்தைக் கொண்டுள்ளது. ஆனால் பிரமவைவர்த்தம் போன்ற புராணங்களில் சிவன் பார்வதி ஆகிய இருவரும் கணபதியின் படைப்புக்குக் காரண கர்த்தர்கள் என்று கூறப்பட்டுள்ளது. இமய மலைச்சாரலில் ஓர் ஆண்யானையும் பெண் யானையும் இணைந்து இன்பம் அனுபவிப்பதைக் கண்ணுற்ற சிவனும் பார்வதியும் யானைகளாக மாறிக் கூடியதாலேயே யானைத்தலையுடன் கணபதி பிறந்தான் என்று கூறப்படும் புராணக் கதைதான் பொதுவாகப் பலராலும் ஏற்றுக்கொள்ளப் படும் அவனது படைப்புப் பற்றிய கதை யாகும். கணபதியின் பிறப்பு, கணங்களின் தலைவனாதல் பிரணவமந்திரத்தின் வடிவமாதல், கஜமுகாசுரனை வதம் செய்தல் போன்ற வீரதிரச்செயல்கள் போன்ற அவனைப்பற்றிய பல விஷயங்களைப் புராணங்கள் விரிவாகக் கூறுகின்றன.

கணபதி, புராணத் தெய்விகவரலாற்றில் மட்டுமன்றி கி. பி. 5ம் நூற்றாண்டிலிருந்து பிராமணிய, பௌத்த அனுபூதி மந்திரநூல்கள் பலவற்றிலும் குறிப்பிடப் படுகிறான். அவனைப் புகழும் நோக்கிற் பல தோத்திரப் பாடல்கள் பாடப்பட்டன. தந்திர சாதனைகளில் அவன் போற்றப் பட்டுள்ளான். சாரதா திலக தந்திரத்தில் அவன் அனுபூதி முறையில் முக்கோணங்களுடனும் வட்டங்களுடனும் இணைந்துள் ளான். இவனை நோக்கிப் பாடப்பட்ட சிறிய பாடல்கள் மந்திரப்பண்பு வாய்ந்தனவாகக் கருதப்படுகின்றன. மற்றைய தெய்வங்களுக்குரியது போல கணபதிக்கும் 'கண்' ('gan') என்ற தாந்திரியவீஜம் குறிப்பிடப்பட்டுள்ளது.

வேதங்களிலிருந்து இவ்வாறாகக் கணபதியைப் பற்றிய பல இலக்கியச் சான்றுகள் கிடைத்துள்ள போதும் கி. பி. 5-ம் நூற்றாண்டிற்கு முன் இந்தியாவில் அவனுக்குரிய வழிபாட்டுமுறை இருந்ததென்பதற்கு எவ்வித வரலாற்று ஆதாரங்களும் கிடைக்கவில்லை. கல்கத்தா நூதனசாலையில் வைக்கப்பட்டுள்ள ஹூவிஷ்கனின் நாணயத்தின் இயல்புகள் வின்சன்ற் ஸ்மித் நம்புவது போல கணபதியைக் குறிக்கும் பண்டைய பிராமியாக இருப்பின் 'கணேஷ' என்ற பெயரில் அவன் குறைந்தது கிறீஸ்தவ சகாப்தத்தின் ஆரம்பத்திலிருந்து அறியப்பட்டிருக்கலாம் என்பதற்கு முடிவான ஆதாரமாக அது விளங்கும். ஆனால் நாணயத்தில் உள்ள உருவம் சிவனுடையதே. எனவே அதிலுள்ள பெயரும் அவனையே குறித்திருக்கவேண்டும் என்பதில் சந்தேகமில்லை. கி.பி. 4ம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்குரிய அலகபாத் தூணில் உள்ள குப்த கல்வெட்டில் 'கணபதி' என்ற பெயர் காணப்படுகிறது. (Fleet J: F. ced) Gupta Inscriptions, P 6) அதில் கணபதி நாகன் என்ற அரசனை பூண்டோடழித்ததாக சமுத்திரகுப்தன் குறிப்பிடுகின்றான். கணபதி என்ற பெயரில் ஓர் அரசன் அழைக்கப்படுவது இதுவே முதற்றடவை. பின்னர் 19ம் நூற்றாண்டிற்குப் பின்னர் வரை இப்பெயர் இடம்பெறவில்லை. கி. பி. 5ம் நூற்றாண்டிலிருந்து அவனது செல்வாக்குக்கு சிற்ப ஆதாரம் காணப்படுகிறது. குப்தர் காலத்தின் பின் வரை கணேஷன் அல்லது கணபதி தெய்வப் பெயராகக் குறிப்பிடப்பட்டதற்குக் கல்வெட்டுச் சான்றுகள் இல்லை.

குப்தர் காலத்திலிருந்து கணபதியின் இன்றுவரை அவனை அடையாளங்காணும் வடிவுடன் அல்லது அவனது ஒப்புக்கொள்ளப்பட்ட மேம்பாடுடைய வடிவுடன்கூடிய சிற்பங்கள் கிடைக்கின்றன. இலங்கையில் மிஹிந்தலைக்குஅருகில் அகழ்ந்தெடுக்கப்பட்ட தூபியில் அமராவதி பாணியை ஒத்த சிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றுள் ஒருருவம் யானைமுகம், தந்தம், துதிக்கை ஆகியவற்றுடன் கூடியதாக அருகில் இரு புறமும் இரு கணங்கள் உடனிருக்கக் காணப்படுகிறது. இது ஒரு தந்தத்தை மட்டும் கொண்டிருப்பதால் பரணவிதான என்ற அறிஞர் இவ்வடிவம் வரலாற்றுக்கு முற்பட்ட விநாயக வடிவமாயிருக்கலாம் என்று கருதுகிறார். அப்படியாயின் இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள விநாயக வடிவங்களுள் இதுவே மிகப் பழமையானதாக இருக்கவேண்டும். இவ்வடிவம் கண்டுபிடிக்கப்பட்ட சையித்தியம் முதலாம் இரண்டாம் நூற்றாண்டிற்குரியது என்று அதன் கல்வெட்டுகளிற் குறிப்பிடப்பட்டுள்ளது. அங்குள்ள சிற்பங்கள் பிந்திய காலத்திற்குரியவை எனின் இவ்வடிவம் கிறீஸ்த்து சகாப்தத்தின் முதல் நூற்றாண்டுக்குரியது என்று கூறலாம் (Alice Getty, முற்குறிப்பிட்ட நூல் ,பக் 27)

5-ம் நூற்றாண்டுக்குரியதாகக் கூறப்படும் புமாரா என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட சிலையொன்று மிகவும் தனித்துவமானது. அதன் துதிக்கையின் நுனி முறிந்துள்ளது. வட்டவடிவ மணிகள் கொண்ட மாலையொன்று மார்பின் குறுக்காகத் தொங்குவது இவ்வுருவின் தனித்துவமான அம்சமாகும். கரண்ட தலையலங்காரத்திலும் கையணியிலும் வீரக்கழலிலும் மணி அணிகலன்கள் காணப்படுகின்றன. இவ்வடிவம் கோவிலின் வாயிற்காவலனாக அமைக்கப்பட்டது. ஆனந்தகுமாரசாமி இவ்வடிவத்துடன் வைசாலியில் ஒரு யக்ஷன் மலைவடிவமாக மணியுடன் நின்று எதிரிகளிடம் இருந்து அம்மக்களைக் காப்பாற்றிய தீபெத்தியக் கதையைத் தொடர்புபடுத்துகிறார். ஆறும் நூற்றாண்டிற்குரியது என்று நம்பப்படும் இன்னொரு ராமாவைச் சேர்ந்த கணபதிசிலை இடது இடையில் பற்றிய சக்தியுடன் கூடியது. 6-ம் நூற்றாண்டில் சாக்தம் செல்வாக்குப் பெற்றுக் காணப்பட்டதால் கணபதியுடன் சக்தியை இணைக்கும் மரபு தோன்றிற்று.

கி. பி. 5க்கும் 8க்கும் இடைப்பட்ட நூற்றாண்டுகளுக்குரியதாக தக்கணத்திலும் சாளுக்கிய நாட்டிலும் கண்டுபிடிக்கப்பட்ட கணபதி சிலைகளில் அவன் தனித்துக் காணப்படாது. முக்கிய தெய்வங்களுடனோ அல்லது சிறிய தெய்வக் குழுக்களுடனோ இணைந்து காணப்பட்டான். சாளுக்கிய கோயில்களில் சப்த மாதர்களுடன் அவர்களது இடது பக்க எல்லையில் கணபதி காணப்படுவார். லக்கண்டி என்ற இடத்தில் உள்ள காசிவிஸ்வேஸ்வரா கோவிலில் சப்த மாதர்களுடன் கணபதி காணப்படுகின்றமைக்கு ஒரு சிறந்த உதாரணம் காணப்படுகிறது. பண்டைய அரசர்களின் தலைநகரான பாதாமியில் உள்ள சைவக்குகைக் கோவில் ஒன்றில் வெளியே தூண்கள் நிறைந்த மண்டபத்திற்கு இடதுபுறம் காணப்படும் சிவதாண்டவத்தின் குவி ஓவியம் ஒன்றில் அவனது காலடியில் கணேஷனின் சிறிய வடிவம் காணப்படுகிறது. தக்கணத்தில் 5ம் நூற்றாண்டிற்குரிய கோவில்களில் சப்த மாதர்களுடன் இணைந்து கணேஷன் காணப்படுகின்றான். 5ம் நூற்றாண்டிற்கும் 10ம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டவை என்று கருதப்படும். எல்லோரா குகைக் கோவில்களில் சப்த மாதர்களுடன் இணைந்து கணபதி சிற்பங்கள் நான்கு காணப்படுகின்றன.

குஜராத்திலும் சப்தமாதர்களுடன் கணபதி கணப்படுவதுடன் அவன் விருப்புக்கந்த தெய்வமாயிருந்ததால் சண்டோர் போன்ற ஜைனக்குகைக் கோயில்களிலும் இடம் பெற்றுள்ளான். மத்திய இந்தியாவில் ஜபல்பூருக்கு அருகில் பேரா - கட் என்ற இடத்தில் 16ம் நூற்றாண்டுக்குரிய கௌரி சங்கரரின் கோயிலில் சிறிது நடனமாடும் நிலையிலுள்ள கணபதியின் குவி ஓவியம் ஒன்று உள்ளது. நவக்கிரகங்களுடன் கூடியதாகக் கணபதி செதுக்கப்பட்டுள்ள கற்பாளம் ஒன்று கங்கண்டீகி என்ற இடத்தின் பண்டைய இடிபாடுகளுக்கிடையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான சிற்பங்கள் ஒரிஸியன் கோவில்களிலும் தென்னிந்திய, வங்காளக் கோவில்களிலும் காணப்பட்டன. ஜோட்பூருக்கு அருகில் கட்டியாலா என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட தூண் ஒன்றின் மேற்பகுதியில் நான்கு திசைகளை நோக்கிய வண்ணம் நான்கு கணபதி சிலைகள் செதுக்கப்பட்டுள்ளன. 11ம் 12ம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்துக்குரிய கணபதி சிலை ஒன்று 30 அடி உயரமுள்ளதாக அமைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பட்டுள்ளது. இது வங்காளத்தில் திரிபுரா என்ற இடத்தில் காணப்படுகின்றது. ஹம்பி என்ற இடத்தில் 20 அடி 30 அடி உயரம் கொண்ட இரு கணபதிசிலைகள் காணப்படுகின்றன. எலிபென்ரு குகையிலும் இவ்வாறான பிரமாண்டமானசிலை உள்ளது.

திருச்சியில் வல்லம் என்ற இடத்தில் 7ம் நூற்றுண்டுகளுக்குரியவை என்று நம்பப்படும் கணபதியின் புடைப்புச் சிற்பங்கள் காணப்படுகின்றன. டாக்காவில் 11 அல்லது 12ம் நூற்றுண்டுக்குரிய ஐந்து தலைகள் கொண்ட கணபதியின் மிக அரிதான வடிவமொன்று காணப்படுகின்றது. இவ்வாறுக கி. பி. 5-ம் நூற்றுண்டிலிருந்து கணபதியின் பல்வேறு நிலையிலுள்ள சிற்பங்கள் ஓவியங்கள் என்பன இந்தியா முழுமையும் காணப்பட்டன. இதிலிருந்து அவன் ஒரு பிரதேசத்திற்குரியவனுகவன்றி இந்தியா முழுமையும் வழிபடப்பட்டான் என்பது புலனுகிறது.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் கணபதி வழிபாட்டுமுறை ஆரம்ப காலங்களில் இடம்பெருத போதும் பல்லவர் காலத்தின் பின் ஓரளவு சிறப்புப் பெறுவதையும் காலப்போக்கில் தமிழ் மக்களது வாழ்வுடன் இரண்டறக் கலப்பதையும் காணலாம். சிறுத்தொண்டராகிய பரஞ்சோதியே தமிழ் நாட்டிற்குக் கணபதி வழிபாட்டை அறிமுகப்படுத்தியதாக பொதுவாக நம்பப் படுகிறது. நரசிம்மவர்மன் வாதாபிச்சாளுக்கியரை கி.பி. 7ம் நூற்றுண்டிலே வென்று திரும்பியபோது அவனது சேனுதிபதியாகிய பரஞ்சோதி ஒரு கணபதிசிலையைக் கொண்டு வந்ததாகவும் அச்சிலையைத் தனது சொந்தக் கிராமமான திருச்செங்காட்டங்குடியில் தாபித்து வழிபட்டதாகவும் கூறப்படுகின்றது. இத்தகைய கருத்தினை தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர் கொண்டிருந்த போதும் (மீனுட்சி சுந்தரனுர் தெ. பொ., பிறந்தது எப்படியோ? சென்னை, 1971 பக். 1-8) தண்டபாணிதேசிகர் இக் கருத்தினை மறுத்து அதற்கு முன்னரே தமிழ்நாட்டில் விநாயக வழிபாடு இடம்பெற்றுள்ளது என்று கூறியுள்ளார். (தண்டபாணிதேசிகர், கணபதி. திருவாவடுதுறை ஆதீனம் 1956) வீரராஜேந்திரன் கல்யாணியை வென்று அங்கிருந்து துவாரபாலகரைக் கொண்டு வந்ததற்குக் கல்வெட்டுச் சான்று உள்ளது போல, பரஞ்சோதி கணபதியைக் கொண்டு வந்ததற்குக் கல்வெட்டாதாரம் இல்லை. அவர் வாதாபியிலிருந்து ,பன்மணியும் நிதிக் குவையும் பகட்டினமும் பரித்தொகையும் மின்னெவெண் ணிலகவர்ந்தே யிகலரசன் முன்கொணர்ந்தார்' (சிறுத்தொண்டர் புராணம். 6) என்று கூறும் சேக்கிழார் அவற்றுடன் கணபதி சிலையைக் கொண்டு வந்ததைக் குறிப்பிடவில்லை என்பதும் கவனத்திற்குரியது. சம்பந்தரால் போற்றப் படும் கணபதீச்சரம் அக்காலத்தில் மிகப் பழக்கப்பட்ட பெயர் போல காணப்படுவதாகவும் பரஞ்சோதி ஏற்கனவே தான் அறிந்ததொரு வழிபாட்டிற்குரிய சிலை ஒன்றையே கொண்டு வருவாரன்றி முற்றிலும் புதியதொன்றைக் கொண்டு வந்திருக்க மாட்டாரெனவும் கூறப்படுகிறது. ஆயினும் பல்லவர் காலத்தின் முன் தமிழ்நாட்டில் கணபதி அறியப்பட்டிருந்தான் என்பதற்கு எவ்விதமான ஆதாரமும் கிடைக்கவில்லை. அத்துடன் புராணங்களின் மூலம் கணபதி பற்றிய விபரங்களைப் பரஞ்சோதி அறிந்திருந்து வாதாபியில் அவனது சிலைகளைக் கண்ணுற்றபோது அவற்றில் ஒன்றைக் கொண்டு வந்திருக்கலாம் என்று கருதுவதிலும் தவறில்லை. வாதாபியில் கணபதி வழிபடப்பட்டது ஏற்கனவே நோக்கப்பட்டது. மற்றும் சம்பந்தர் கணபதீச்சரத்தில் கணபதியையன்றிச் சிவனையே போற்றுகிறுர். அங்கு கணபதிசிலை இருந்திருப்பின் அதுபற்றி அவர் குறிப்பிடுவதற்குச் சாத்தியம் அதிகமுண்டு. ஆயினும் சம்பந்தர் தனது வேறுசில தேவாரப் பதிகங்களில் கணபதியைப் போற்றியுள்ளார். மற்றைய நாயன்மாரும் குறிப்பிட்டுள்ளனர். எனவே இவர்களது பாடல்களில் இடம்பெறும் குறிப்புக்களே தமிழில் கணபதி பற்றியுள்ள நிச்சயமான ஆதாரங்கள் என்று கூறலாம் போலுள்ளது. இத்தேவாரப் பதிகங்களில் கணபதி பற்றியுள்ள குறிப்புகள் அவன் சிவனின் மகன் என்பதையும், யானைமுக முடையவன் என்பதையுமே பெரிதும் குறிப்பிடுகின்றன எனலாம். சம்பந்தரின் பிடியதனுருவுமை என்றுரம்பமாகும் பாடலே அவனது பிறப்புப் பற்றியும் விக்கினங்களை நீக்குபவன் என்பது பற்றியும் மேலதிகமான சில விபரங்களைத் தருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவார காலத்தின் பின்னர் தமிழ் நாட்டில் கணபதி பற்றிய கருத்துக்கள் தொடர்ச்சியாக ஆங்காங்கே இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. தேவாரங்களைத் தேடிக் கண்டு பிடிக்கும் முயற்சியில் சோழ அரசன் ஈடுபட்டிருந்த போது திருநாரையூர் பொள்ளாப் பிள்ளையாரே அவற்றின் இருப்பிடம் பற்றி நம்பியாண்டார் நம்பிக்கு உணர்வூட்டியவர் என்று நம்பப்படுகிறது. இவ்விபரத்தைத் திருமுறை கண்ட புராணம் கூறுகிறது. மேருவின் உச்சியில் தமிழ் பாரதத்தை விநாயகரே எழுதியதாக அருணகிரிநாதர் தனது திருப்புகழில் குறிப்பிடுகிறார். விநாயகரில் மிகுந்த பக்தி பூண்ட ஔவையார், விநாயகர் அகவல் என்ற தனது பாடலில் அனுபூதி நிலையில் கணபதியைப் போற்றுகின்றார். சகல இலட்சியங்களுடனும் செயற்பாடுகளுடனும் கூடிய யோகசாத்திரங்களின் வடிவாக எவ்வாறு கணபதி உள்ளார் என்பதனை இந்நூல் விளக்குகிறது. கபிலதேவரின் மூத்த பிள்ளையார் திருவிரட்டை மணிமாலை நெஞ்சையுருக்கும் பக்திப் பாடல்களைக் கொண்டது. இது பதினோராம் திருமுறையில் இணைக்கப்பட்டுள்ளது. குமரகுருபரரும் துண்டி விநாயகரைப் போற்றிப் பாடியுள்ளார். கி. பி. எட்டாம் நூற்றாண்டளவில் வாழ்ந்த ஆதி சங்கரர் சண் மதங்களைத் தாபித்ததுடன் கணபதியைப் போற்றி 'கணேஷ பஞ்சரத்திரம்' என்றழைக்கப்படும். வடமொழியிலமைந்த தோத்திரப் பாடல்களையும் பாடியுள்ளார்.

தமிழ் நாட்டில் முருக வழிபாடு போன்று கணபதி வழிபாடு சிறப்புப் பெறாவிடினும் தமிழ் மக்களது வாழ்வுடன் இரண்டறக் கலந்துள்ளது எனலாம். எக்காரியத்தையும் கணபதியை வழிபடாது தமிழ் மக்கள் ஆரம்பிக்க மாட்டார்கள். தமிழ் எழுத்தான 'ஓம்' விநாயகனது வடிவை ஒத்துள்ளது. அவனது விருப்பத்துக்குகந்த மோதகம் தமிழ் நாட்டிற்கு மட்டுமுரிய தின்பண்டமாகும். 'கவவு' என்ற பெயரில் மோதகம் பற்றிய குறிப்புகள் மிகப் பண்டைய தமிழ் இலக்கியங்களில் உண்டு. தமிழ் நாட்டிலுள்ள முக்கிய கணபதி கோயிலாகத் திருச்சியிலுள்ள உச்சிப் பிள்ளையார் கோயிலைக் குறிப்பிடலாம். ஏனைய கோயில்களில் பெரும்பாலானவற்றில் கணபதி ஒரு முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளான். காஞ்சி காமாட்சி கோயிலில் பல்வேறு பெயர்களுடன் பல்வேறு கணபதி வடிவங்கள் காணப்படுகின்றன. தேர் வடிவில் அமைந்துள்ள ராமேஸ்வர சங்கர மண்டபத்தின் எண்கோண வடிவில் அமைந்த மண்டபத்தின் ஒவ்வொரு மூலையிலும் இவ்விரண்டு கணபதிகளாக 'சோடச கணபதிகள்' எனப்படும். பதினாறு வடிவங்கள் ஸ்தபபிக்கப்பட்டுள்ளன.

கணபதியை உயர் தெய்வமாக வழிபடும் சமயம் காணபத்தியம் எனப்படும். இப்பெயரில் தமது வழிபாட்டை நிறுவியோர் மற்றையோரிலிருந்து தம்மை வேறுபடுத்திக் காட்டும் நோக்கத்துடன் தமது நெற்றியில் ஒரு சிவப்பு வட்டமிடுவர். மும்மூர்த்திகளை விட உயர்ந்தவனாக இவர்களது தோத்திரப் பாடல்களில் கணபதி போற்றப்படுகிறான். 'நீயே பிரம்மா, நீயே விஷ்ணு நீயே உருத்திரன்' நீயே மும்மூர்த்திகளிலும் மேம்பட்டவன். ஓம் கணபதியே உன்னைப் போற்றுகிறோம். இவன் ஒலியின் நுண்ணிய வடிவமாகிய பிரணவத்தின் உருவமாகக் கணிக்கப்படுவதால் ஓங்காரத்தைக் குறிக்கும் எழுத்தினை வடித்து எடுத்தது போன்ற உடலமைப்பைக் கொண்டுள்ளான். இவனது வழிபாட்டில் ஓம் என்ற பிரணவ மந்திரம் முக்கியம் பெற்றுள்ளது. அ. உ. ம்-என்ற மூன்றெழுத்துக்கள் இதிலுள்ளன. அ பிரமாவையும், உ விஷ்ணுவையும், ம் சிவனையும் குறிப்பதாகக் கருதப்படும். இது சமஸ்கிருத ॐ என்ற அடையாளத்தால் குறிக்கப்படும்.

உயர்ந்த பிரமம் எப்போதும் பால்வேறுபாடற்றது. கணபதி தனது வலது தந்தம் உடைந்த நிலையில் வலது பக்கத்தால் பெண்மைக் கோட்பாட்டையும் இடது பக்கத்தால் ஆண்மைக் கோட்பாட்டையும் பிரதிநிதித்துவப் படுத்துகிறான். இவனது மகா கணபதி வடிவில் ஒரு பகுதியிலுள்ள ஐந்து கரங்களும் விஷ்ணு, சிவன், வராஹ, மன்மதன், கணபதி ஆகியோருக்குரிய ஆயுதங்களை ஏந்த மறு பக்கத்திலுள்ள ஐந்தும் அவர்களின் துணைவியரின் ஆயுதங்களை ஏந்துகின்றன. இதே போல மிருகத்தின் முகமும் மனிதனின் உடலும் கொண்டவனாகவும் அமைந்து விளங்குகிறான்.

கணபதி ஐந்து தொழில்களையும் செய்கிறான். அவன் ஏந்தியுள்ள பாசம் படைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையும், தந்தம் காத்தலையும், அங்குசம் அழித்தலையும், மோதகம் அருளலையும், துதிக்கை முத்தொழில்களையும் குறிக்கிறது. இதற்கு வேருக முறிந்த தந்தம் சம்ஸாரத்திலிருந்து முற்றிலும் ஒழிந்த நிலையைக் குறிக்கிறது. மோதகம் பிரமத்தின் பூரணத்தை உருவகமாகக் குறிக்கிறது. மோதகத்தினுள் இருக்கும் இனிக்கும் பருப்பு கலவை பூரணம்என்றே அழைக்கப்படுகிறது. எனவே கணபதி உலகியல் வாழ்வை முறித்து பூரண நிலையடைதலைக் குறித்து நிற்கிருன். என்று கொள்ளலாம்.

கணபதி பிரமாச்சாரிய தெய்வமாகும். அவனது சக்திகளான வல்லபை, நீலசரஸ்வதி. சித்தி பற்றிக் கூறப்பட்ட போதும் அவன் பிரமாச்சாரி என்பதே பிரபல்யமான கோட்பாடாகும். மூலாதாரத்திற்குத் தலைவனுக இருப்பதால் மூலாதாரத்தில் இணைந்துள்ள சக்தியை விளுக்கு வதை அவனது உபாசனை தடுக்கிறது.

இவ்வாறு உயர்ந்த தெய்வமாக அவன் கூறப்பட்டபோதும் அவனை வழிபடுதல் மிகவும் இலகுவானது. வெல்லம், மஞ்சள், பசுஞ்சாணம் ஆகியவற்றில் ஒன்றின் உருண்டையில் அறுகம்புல் சூட்டி அவனை எங்கும் வழிபடலாம். இது அவனது எளிமையான இயல்பினைக் காட்டுகிறது. தலையின் இரு பக்கங்களிலும் கைகளால் குட்டுதல், தோப்புகரணமிடுதல், தேங்காயுடைத்தல் ஆகியன அவனை வழிபடும் முறைகளில் முக்கியமானவை. தலையைக் குட்டுதல், தோப்புக்கரணமிடுதல் ஆகியவற்ருல் மனிதனின் ஆத்ம ஞானம் தூண்டப்படுவதாகவும் சிரட்டை போன்ற ஞானத்தின் தடித்த கோதுகளை உடைப்பதன் மூலம் உணர்வு என்ற பருப்பையும் அறிதல் என்ற இளநீரையும் அருந்த முடியும் என்பதைத் தேங்காய் உடைத்தல் குறிப்பதாகவும், இவற்றிற்குத்தத்துவ விளக்கம் கூறப்படுகிறது.

கணபதியை அடைதல் மிகவும் இலகுவானது என்பது பூமியிற் கிடைக்கும் மிகச் சாதாரண பொருட்களை அவன் விரும்புவதிலிருந்து நிருபணமாகிறது.மலர், புல், இலை என்பன அவனது விருப்பத்துக்குகந்தன. ஆகமங்களில் குறிக்கப்பட்டுள்ள இருபத்தொரு இலைகளால் அவனை வழிபாடு செய்வதன் மூலம்இருபத்தொரு பலன்களைப் பெறலாம் என்று கூறப்பட்டுள்ளது. தர்மம், செல்வம், மகிழ்ச்சி, மங்களம், கல்வி, க்ஷேமம் பாடு, உலகியல் - ஆன்மீகப் பலன்கள். அழகு பேராண்மை, வெற்றி, கவரும் சக்தி, கெடு முடிவு அல்லது தோல்வியை நீக்குதல், நல்ல சந்ததி, பலதுறைப் புலமை, புகழ், உள்ளச் சமநிலை, மங்களமல்லாவற்றை அழித்தல், வாதத் திறமை, கோபத்தை சாந்தப்படுத்தும் சக்தி, கெட்ட மந்திரங்களை நீக்குதல் சகல துன்பங்களையும் அழித்தல் ஆகியன வற்றை அவனது வழிபாட்டின்மூலம் பெறலாம்.

கணபதிக்கு குறிப்பிட்ட வடிவம் கொடுக்கப்பட்டுள்ள போதும் அதில் தலைகள், கைகளின் எண்ணிக்கை, கைகளில் ஏந்தியுள்ள அடையாளங்களின் வேறுபாடு, தலை ஆடை அலங்காரங்களின் மாறுபாடுகள் ஆகியவற்ருல் அவனுக்குப் பல்வேறு வடிவங்கள் கொடுக்கப்படுகின்றன. தியானங்களில் கணபதி தலையுடன் கூடியவனுகவே போற்றப்படுவான். உடலின் முழுநீளத்தின் 1/5 பாகமாகத் தலை அமைந்திருக்க வேண்டுமென்று கூறப்படுகிறது. ஒன்றுக்கு மேற்பட்டு இரண்டு மூன்று நான்கு அல்லது ஐந்து தலைகள் உள்ள வடிவங்களும் காணப்படுகின்றன. இரு தலை வடிவங்கள் கணேஷ-ஜயந்தி எனப்படும். பம்பாயில் கணேஷ விழாவின்போது இவ்வாருன வடிவம் வழிபடப்படுகிறது. மூன்று தலையுடன் கூடிய வடிவம் இந்தியாவிற் காணப்படவில்லை. ஆனுல் ஜப்பானில் உள்ளது. நான்கு தலையுடன் கூடிய வடிவம் இந்தோசினுவிலும் ஐந்து தலைகளுடனுன கணபதி நேபாளம் இந்தியா ஆகிய இடங்களிலும் காணப்படுகிறது, ஒரு தந்தம் முறிந்து காணப்படும் துதிக்கை நேராகத் தொங்குவதாக அல்லது வலது பக்கம் நுனியை நோக்கித் திரும்பியதாக அமைதல் வேண்டும். ஆனுல் இடதுபுறம் திரும்பி பின்னர் நேரே தொங்குவதற்கும், தோள்வரை உயர்த்தியதற்கும் உதாரணங்கள் உண்டு. இடது புறம் திரும்பியிருப்பின் இடது கையிலுள்ள மோதகப் பாத்திரத்திலிருந்து ஒன்றை எடுப்பது போலவும் அமைந்திருக்கும். பொதுவாக இரு கண்களே காணப்படும். ஆனுல் சில வடிவங்கள் மூன்ருவது கண்ணை நெற்றியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு அமைந்திருக்கும். இது நீண்டு மெல்லிதாக அக்கினி வடிவமுள்ளதாக அதிக புடைப்புள்ளதாகக் காணப்படும். தலை யானையின் தலை போல அமைந்திருக்கும். ஆனல் கஷ்மீரிலும் நேபாளத்திலும் நீண்ட மெல்லிய தட்டையான முகமாகவிருக்கும். ஜாவாவில் மனித அம்சம் அதிகம் கொண்ட முகமாகவுள்ளது. காதுகள் பெரியனவா கவும் அகலமானவையாகவும் அமைய வேண் டும். கணபதியின் வழமையான தலையலங் காரம் கரண்ட மகுடத்தைத் தரிப்பதாகும்.

கணபதி வழிபடப்படும் வடிவங்களில் இரண்டு அல்லது நான்கு கரங்கள் கொண் டிருப்பான். ஆனல் அவனது சிக்கல் நிறைந்த சில வடிவங்களில் பத்து அல்லது அதற்கு மேற்பட்ட கரங்கள் காணப்படும். இக் கரங் களில் இவனுக்கே மட்டும் உரியனவான உடைந்த தந்தம், நாரத்தம் பழம், ஜம்பு, எழுது கருவி, முள்ளங்கி, தின்பண்டம் நிறைந்த பாத்திரம், ஒரு மோதகம் ஆகிய வற்றுள் சிலவற்றை ஏந்தியிருப்பான். ஆனல் அவன் மழு, புத்தகம், வாள், பாம்பு, பாசம் ஆகியவற்றையும் ஏந்தலாம். அவனது வயிறு மிகப் பரந்த அண்டவெளியையும், பிரபஞ்சத்திலுள்ள சகல மனித உயிரை யும் குறிக்கும். ஆயிரக்கணக்கான மோதகங் களைக் கொள்ள ஏற்றது என்பதை உருவக ரீதியாகக் குறிக்கும் வகையில் மிகப் பெரிய தாக அமைந்திருக்கும்.

கணபதி வழமையாக அமர்ந்திருக்கும் நிலையிலேயே சித்தரிக்கப்படுவான். அவ்வா ருயின் 'மஹாராஜலீலா' எனப்படும் செய லோய்வு நிலையில் வலது முழந்தாள் உயர்த் தப்பட்டு, மற்றது ஆசனத்தில் உடலுக்குச் சமாந்திரமாக வைக்கப்பட்டுக் காணப்படும். நிற்கும் நிலையிலாயின் நேராகவோ அல்லது இரு வளைவுகள் உள்ளதாகவோ, மூன்று வளைவுகள் உள்ளதாகவோ அல்லது நடன மாடும் நிலையிலோ காணப்படுவான். பொது வாகப் பல அணிகலன்கள் அணிந்த நிலை யிற் காணப்பட்டபோதும் சிலவற்றில் அணி கலன்களின்றிக் காணப்படுவான். சிலவற் றில் இவற்றிற்குப் பதிலாகப் பாம்புகள் அல்லது மண்டையோடுகள் இடம்பெறும். இடுப்புக்கு மேலே வெறுமையாகவும் கீழே உள்ள ஆடை இடுப்புப் பட்டியால் கட்டப் பட்டும் காணப்படும். ஆடை இடத்திற்கு இடம் மாறுபடும். இந்தியாவில் வேட்டி யும், சீனத்துருக்கியில் பிஜாமாவும், நேபா ளத்தில் விறைத்த சுருக்கப்பட்ட ஆடையும் அணிந்திருப்பான்.

இவ்வாருன அவனது பொதுவான வடி வம் அமைந்துள்ள போதும் இவற்றில் ஏற் படும் சிற்சில மாற்றங்களினுல் அவன் பல் வேறு பெயர்களைப் பெறுகிருன். கி. பி. 20ம் நூற்றுண்டில் காணபத்தியம் தாபிக்கப் பட்டபோது அவர்கள் வழிபடும் கணபதியின் வடிவம், நிறம், மந்திரம் ஆகியவற்றின் அடிப்படையில் ஆறுபிரிவாகப் பிரித்தனர். சிவந்த நிறமுடைய உச்சிஷ்ட கணபதியை வழிபடுபவர் ஒரு பிரிவினர், மற்றவர் சிவப்பு நிறமுடைய மகா கணபதியையும், அடுத்த வர் மஞ்சள் நிறமுடைய ஊர்த்தவ கண பதியையும். ஐந்தாவது பிரிவினர் மஞ்சள் நிறமுடைய பிங்கள கணபதியையும்ஆருவது பிரிவினர் வெள்ளை நிறமுடைய லஷ்மி கணபதியையும் வழிபடுபவர். அவர்கள் அனை வரும் கணபதியை வழிபடும் இரு வழிகளை உருவாக்கினர். அவற்றுள் ஒன்று அனுபூதி நிறைந்த தியானத்தால் வழிபடும் முறை, மற்றது தியானமின்றி பக்தி பூர்வமான நடைமுறைகளால் வழிபடும் முறை.

கணபதிக்குப் பல்வேறு வடிவங்கள் கொடுக்கப்படுகின்றன. நான்கு யுகங்களுக் கும் நான்கு வெவ்வேறு வடிவங்களை அவன் ஏற்பதாக நம்பப்படுகிறது. கிருத யுகத்தில் சிங்கத்தை வாகனமாகக் கொண்டு பத்துக் கரங்களுடன் கூடியவனுக விநாயகன் என்ற பெயரிலும் திரேதா யுகத்தில் மயிலை வாக னமாகக் கொண்டு ஆறு கரங்களுடன் தூய வெள்ளை நிறத்தில் மயூரேசன் என்ற பெய ரிலும், துவாபரயுகத்தில் சிவந்தநிறமுடைய வராக நான்கு கைகளுடன் எலியை வாகன மாகக் கொண்டு கஜானனன் என்ற பெயரி லும், கலியுகத்தில் புகை நிறமும் இரு கரங் களுமுடையவராய் குதிரையை வாகனமா கக் கொண்டு தூமகேது என்ற பெயரிலும் தோன்றுவார் என்ற நம்பிக்கை காணப்படு கிறது. கணபதிக்கு ஐம்பத்தொரு வடிவங் கள் உள்ளதாகக் கூறப்பட்டுள்ள போதும் முதல் முப்பத்திரண்டு வடிவங்களே முக்கிய மானவை, அவை வருமாறு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பால கணபதி
2. தருண கணபதி
3. பக்த கணபதி
4. வீர கணபதி
5. சக்தி கணபதி
6. த்வஜ கணபதி
7. சித்தி அல்லது பிங்கள கணபதி
8. உச்சிஷ்ட கணபதி
9. விக்னராஜ கணபதி
10. ஷிப்ர கணபதி
11. ஹேரம்ப கணபதி
12. லஷ்மி கணபதி
13. மகா கணபதி
14. விஜய அல்லது புவனேச கணபதி
15. நிருத்த கணபதி
16. ஊர்த்வ கணபதி
17. ஏகாக்ஷர கணபதி
18. வர கணபதி
19. த்ரியக்ஷர கணபதி
20. ஷிப்ர பிரசாத கணபதி
21. ஹரித்ர கணபதி
22. ஏகதந்த கணபதி
23. ஸ்ருஷ்டி கணபதி
24. உத்தாந்த கணபதி
25. ரிணமோக்ஷ கணபதி
27. த்விமுக கணபதி
28. த்ரிமுக கணபதி
29. சிம்ஹ கணபதி
30. யோக கணபதி
31. துர்க்கா கணபதி
32. சங்கடஹர கணபதி

இவற்றுள்ளும் முதல் பதினறு வடிவங்களுமே முக்கியம் வாய்ந்தவை. இவை சோடஸ கணபதி எனப்படுகின்றன. பொதுவாக அவனுக்குப் பல்வேறு பெயர்களும் வழங்கப்படுகின்றன. கணங்களின் தலைவன் அல்லது வழியினதும் முடிவினதும் தலைவன் என்று பொருள்படும். கணபதி. மேலான தலைவன் என்று கருதப்படும். விநாயகன் தடைகளின் தெய்வம் என்பதால் விக்னேஸ்வரன், திருகப்பட்ட துதிக்கையுடையதால் வக்ரதுண்டன், யானை முகம் கொண்டதால் கஜானனன், முழு வயிறுடையவன் என்பதால் லம்போதரன், ஒரு தந்தம் உடையவனுதலால் ஏகதந்தன், பாதுகாப்பவன் என்பதால் ஹேரம்பன், இருவிதமான உடலுடையவனுதலால் த்விதேஹ என்று அழைக்கப்படுகிருன். அவனது வழிபாட்டில் இப்பெயர்கள் முக்கியம் வாய்ந்தவை.

இக் கணபதி வழிபாடு இந்தியாவில் மட்டுமன்றித் தென்கிழக்காசிய நாடுகள் பலவற்றிலும் செல்வாக்குப் பெற்றது. ஜப்பான் சீனு ஆகிய நாடுகளில் கணபதியின் இருவிதமான வடிவங்கள் காணப்படுகின்றன அவற்றில் ஒன்று இந்தியாவிற் காணப்படுவதைப் போன்றது. மற்றயவடிவில் எதிரெதிராக ஒன்றையொன்று பார்த்தபடி நிற்கும் இரு யானைத்தலைத் தெய்வங்கள் காணப்படுகின்றன ஜப்பானியர் இத் தெய்வங்களை நல்லதிஷ்டத்துடனும் காதலுடனும் தொடர்புபடுத்துகின்றனர். அவர்கள் அதனைக் கொன் கிடென் என்று அழைக்கின்றனர். 13-ஆம் நூற்றுண்டின் பின் யாவாவில் மக்கள் இஸ்லாமிய மதத்தைப் பின்பற்றத் தொடங்கியபோதும் கணேஷன் தனக்குரிய செல்வாக்கை இழக்கவில்லை. இங்கு காணப்படும் இருக்கும் நிலையில் உள்ள கணபதியின் அமைதி சமாதியில் உள்ள மனிதனின் நிலையைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இந்தியாவில் அவனுடன் இணைந்துள்ள பானை வயிற்றை யாவாவில் உள்ள கணபதி வடிவங்களில் காணுதல் முடியாது.

கணபதி வழிபாடு இலங்கையில் வைதீக சமயத்தினூடாகவும் பௌத்த சமயத்தினூடாகவும் பரவியது. மிஹிந்தலைக்கு அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட சிற்பங்களில் யானை முகத்துடன் கூடிய ஒருருவம் இடம்பெற்றுள்ளது. கண்டாக சைத்தியத்தில் 'வாகல்கட' எனப்படும் வாசற்புறத் தூணிற் காணப்படும் கணங்களைக் குறிக்கும் சிற்பங்களிடையே இது காணப்பட்டது. இத்தூபி கிறீஸ்த்து சகாப்தத்தை ஒட்டிக்கட்டப்பட்டதாக அதிலுள்ள கல்வெட்டுக்களிலிருந்து தெரியவந்துள்ளது. சிற்பங்கள் பிந்தியதாயினும் கி. பி. முதலாம் நூற்றுண்டுக்குரியதாகலாம். 1938-ம் ஆண்டுவரை அநுராதபுரத்தில் வெள்ளரச மரத்திற்கு முன்னுற் காணப்பட்ட கணபதி சிலைக்கு பௌத்தர்கள் பாற்சோறு படைத்து வழிபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (Navaratnam C. S. A Short History of Hinduism in Ceylon, Jaffna 1964 P. 71) இது மிக அண்மைக்காலம் வரை பௌத்தத்துடன் இவ்வழிபாடு கொண்ட தொடர்பைச் சுட்டி நிற்கிறது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவ முருக வழிபாடுகளைக் குறிக்கும் பெயர்கள் காணப்பட்டதைப் போன்று கணபதி வழிபாட்டைக்குறிக்கும் பெயர்கள் ஆதிப்பிராமிக் கல்வெட்டுக்களிற் காணப்படாமையால் இவ்வழிபாடு பிற்பட்ட காலத்திலேயே அதிக செல்வாக்குப் பெற்றுள்ளது என்பது புலனாகிறது. அநுராதபுரக் காலத்திலே சிறப்பாக நகரின் வடபகுதியிற் பல இந்து ஆலயங்கள் காணப்பட்டதாகத் தொல்பொருட் சான்றுகள் சுட்டுகின்றன. அவற்றில் கணபதிக்குரிய கோவிலொன்று பாவற்குளத்திற்கு வடக்கே குளத்தின் மடைக்கு அருகே கல் அடித்தளத்தில் அமைந்திருந்ததாகத் தெரிய வருகிறது. (இந்திரபாலா கா. ஆதி இலங்கையில் இந்துமதம், வைரவிழா நினைவு நிலை ஐயரத்தினம் உருவச் சிலை திறப்புவிழாச் சிறப்பு மலர், தெல்லிப்பழை *1978 பக் 20)* வன்னிப் பிரதேசத்தின் எல்லாப் பகுதிகளிலும் விநாயகர் கோயிலுக்குரிய அழிபாடுகள் காணடபட்டன.

கி. பி. *15* ஆம் நூற்றுண்டிலே தேவிநுவரவீவாவில் ஒரு விநாயகராலயம் அமைக்கப்பட்டதற்குச் சான்றுகளுண்டு. யாழ்ப்பாண மன்னர் காலத்திலேயே யாழ்ப்பாணத்தில் பல முக்கிய கணபதி கோயில்கள் கட்டப்பட்டன. இவற்றுள் நல்லூரிலுள்ள வெய்யிலுகந்த பிள்ளையார் கோயில், கைலாயபிள்ளையார் கோயில், மானிப்பாய் மருதடி விநாயகர் கோயில் என்பன முக்கியமானவை. இவை அன்னியரின் ஆதிக்கத்தில் அழிக்கப்பட்ட போதும் பின்னர் கட்டப்பட்டு இன்றும் சிறப்புடன் விளங்குகின்றன. இவற்றுடன் மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் கோயில், முறிகண்டி விநாயகராலயம் ஆகியன சிறப்பு மிகுந்தவை.

இக் கோயில்களை விட 12 ஆம் நூற்றுண்டிற் கருணாகரத் தொண்டமானுல் இணுவிலிற் கட்டப்பட்டதாகக் கருதப்படும் கருணாகரப்பிள்ளையார் கோயில், 15 ஆம் நூற்றுண்டில் VI ஆம் பரராஜசேகரனுல் கட்டுவிக்கப்பட்ட பல விநாயகராலயங்களுள் திருநெல்வேலியிலுள்ள தலங்காவற் பிள்ளையார் கோயில் இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோயில் என்பனவும் சிறப்புடையன. வெய்யிலுகந்த பிள்ளையார், கைலாயபிள்ளையார் கோயில்களும் இவனுலே கட்டப்பட்டன. இவற்றை விட நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார், சுழிபுரம் பறுளை விநாயகர் கோயிலும் சிறப்புவாய்ந்த விநாயகர் கோயில்களாகும்.

இவற்றை விடச் சிறிதும் பெரிதுமாகப் பல பிள்ளையார் கோயில்கள் இப்போது காணப்படுகின்றன. சித்திவிநாயகர் என்ற பெயரில் குரும்பசிட்டி, பருத்தித்துறை, புன்னாலைக்கட்டுவன், புற்றளை, கல்லடி உப்போடை வேலணை கிழக்கு நோர்வூட், மன்னார் உப்புக்குளம் போன்ற இடங்களிலும் கற்பகப்பிள்ளையார் என்ற பெயரில் காரைநகர், பன்னாலை, வரணி, ஊரெழு, கோப்பாய் போன்ற இடங்களிலும், வீரகத்தி விநாயகர் என்ற பெயரில் விடத்தற்பளை, வில்லூன்றி, கரம்பன், புங்குடுதீவு, நல்லூர் ஆகிய இடங்களிலும் மகாகணபதி என்றபெயரில் அளவெட்டி கோண்டாவில் வேலணை மேற்கு ஆகிய ஊர்களிலும்உடுவில், சங்குவேலி ஆகிய இடங்களில்சிவஞானப்பிள்ளையார் என்ற பெயரிலும் விநாயகர்கோயில்கள் காணப்படுகின்றன. ஊரின் பெயருடன் இணைந்தும் பல கோயில்கள் காணப்படுகின்றன இவ்வாறு எண்ணிக்கையில் அதிகமாகக் காணப்படும் கோயில்கள் விநாயகர் வழிபாடு தற்போது இலங்கையிற் பெற்றுள்ள செல்வாக்கையே குறித்து நிற்கின்றன எனலாம்.

பௌத்தத்திலும் கணபதி வழிபாடு செல்வாக்குச் செலுத்தியுள்ளது. இம்மதத்தினூடாக இவ்வழிபாடு இலங்கை, சீயம், கம்போடியா, நேபாளம், திபெத், வியட்னும். சீனு, ஜப்பான் போன்ற நாடுகளில் பரவியுள்ளது. 'கணபதி ஹ்ருதயம்' எனப்படும் கணபதியைப் புகழும் மந்திரம் ராஜகிருகத்திஹ் புத்தரால் ஆனந்தவுக்குப் போதிக்கப்பட்டதாக பௌத்தர்களால் நம்பப்படுகிறது. அவர்கள் மந்திரத்திற்கு மனிதவுருகொடுத்துக் 'கணபதி ஹ்ருதயா' என்ற பெண் தெய்வத்தின் வடிவமாகக் கருதுகின்றனர். அதனைப் பெரும்பாலும் கணேஷனின் சக்தியாகவே அவர்கள் கருதுவதாக பட்டாச்சாரியா என்பவர் கருதுகிருர். (Bhattacharya. Indian Buddhist Iconography London 1924 P. 157) இம் மந்திரம் அவனது வழிபாட்டிற் பயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்த வேண்டிய சாதனையையும் கொண்டுள்ளது அதில் அவன் சிவப்பு நிறமுடைய வனுகவும் நடனநிலையில் நிற்பவனுகவும் 11 கரங்களும் அவற்றிற் தந்திரச் சின்னங்களை ஏந்தியவனுகவும் இரண்டு தந்தங்கள் மூன்ருவது கண் ஆகியவற்றைக் கொண்ட வனுகவும் கருதப்படுகிருன். பௌத்தில் பௌத்த தெய்வமாக மட்டுமன்றி கணபதி இந்து அசுரனுகவும் நோக்கப்படுவதைக் காணலாம்.

இவ்வாருக இந்தியாவிற் தோன்றி வளர்ந்த கணபதி வழிபாட்டு நெறி இந்தியாவில் மட்டுமன்றி வேறும் பல்வேறு நாடுகளிலும் பரவியது. இந்தியாவைப் பொறுத்தவரையில் இது தனியான வழிபாட்டு நெறியாக ஏனைய முக்கிய வழிபட்டு நெறிகளான சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம் போன்று அதிக சிறப்பும் பிரபல்யமும் பெருத போதும், எல்லாப் பிரிவுகளுடனும் கலந்து மக்களின் அன்ருட வாழ்வுடன் பின்னிப் பிணைந்துள்ளது. என்று கூறுவதிற் தவறில்லை. அவனை வழிபடாது எக்கிரியையோ, வழிபாடோ காரியமோ ஆரம்பமாகாது. மஹா நிர்வாண தந்திரத்தின்படி கணேஷனை முதலில் வழிபடாது 'பிரஹ்மா காயத்திரி' என்ற ஒரு மந்திரமே உச்சரிக்கப்படலாம். எனவே அனைத்தும் அவனது வழிபாடின்றித் தொடங்காது. அவன் இடையூறுகளை வழங்குபவனும் தீர்ப்பவனும் என்பதாலேயே இவ்வாறு வழிபடப்படுகிருன் போலும்.

**உசாவியவை**


1. Alice Getty, Ganesa, Oxford University press, 1936.
2. Nadarajan S., Vinayaka abroad and his rare forms Sankara and Shanmata, Madras, 1969
3. Ramasubramaniam V, The origin and development of Ganapatyam, Sankara an· Shanmata, Madras, 1969.
4. Sankara Kinkara, Ganapati, Sankara and Shanmada, Madras, 1969.
5. தண்டபாணிதேசிகர் ச., கணபதி - திருவாவடுதுறை, ஆதீனம். 1956.
6. மகாதேவன், ரி. எம். பி., காணுபத்திய நெறி; இந்து சமயத் தத்துவம், சென்னை 1964 பக். 166-171.
7. சிவசாமி வி.. 'காணபத்யம்' - வரலாறும் சிறப்பும்; கற்பக விநாயகன், குட்பிழான் கற்கரைக் கற்பக விநாயகராலய புனராவர்த்தன கும்பாபிஷேக சங்காபிஷேக மலர் 1973 பக். 23 - 31.


(நன்றி: புங்குடுதீவு - ஸ்ரீ வீரகத்தி விநாயகர் மகா கும்பாபிஷேக மலர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விநாயகர் தத்துவம்

இறைவனை அருவமாகவும், உருவமாகவும், அருவுருவமாகவும் மக்கள் வழிபட்டு வருகின்றனர். இவ்வழிபாட்டு முறைகள் இந்து சமயத்தின் பல்வேறு பிரிவுகளிலும் காணப்படுகின்றன, ஒவ்வொருவரும் தத்தம் மனப்பக்குவம் விருப்பம் முதலியவற்றிற்கேற்ப இம்முறைகளில் ஒன்றையோ பலவற்றையோ பின்பற்றுவர். இறைவனை ஸகுணமாக - குணம், குறி உள்ள பரம்பொருளாகவோ வழிபடலாம். அல்லது நிர்குணமாக - குணம், குறி அற்ற பரம்பொருளாகவோ வழிபடலாம். மிக உயர்ந்த ஞான நிலையில் இறைவன் பரம்சோதியாக நாம ரூபமற்றவனாக விளங்கினாலும் ஸகுண நிலையிலே பிள்ளையார், முருகன், சிவன், சக்தி, விஷ்ணு முதலிய பெயர்களையும் அவற்றோடு தொடர்புள்ள குணாதிசயங்களையும் பெறுவான். இங்கு பரம்பொருள் ஒன்றேயாயினும் பல பெயர்களால் அப்பொருள் அழைக்கப்படுவது கண்கூடு. அடிப்படையில் இந்து மதத் தெய்வங்கள் ஒரே குடும்பத்தை - சிவ குடும்பத்தைச் சேர்ந்தோராகவே கூறப்படுகின்றனர். பிள்ளையார் சிவன், சக்தியாகியோரின் மூத்த திருக்குமாரனாகவும், முருகன் இளைய திருக்குமாரனாக விஷ்ணு சக்தியின் மூத்த சகோதரனாகவும் விளங்குகின்றனர். வைரவர், வீரபத்திரர், ஐயனார் ஆகியோரும் சிவனின் திருக்குமாரர் ஆகவே வருணிக்கப்படுகின்றனர். ஒரே பரம்பொருளாகிய சிவனே பல்வேறு நோக்கங்களுக்காக பல்வேறு வடிவங்களை வெவ்வேறு காலகட்டங்களில் தாங்கி உலகிலே நிலவிய மறத்தையும், தீமைகளையும் களைந்து அறத்தையும் நன்மையையும் நிலை நாட்டினார் எனக் கூறப்படுகிறது. எனினும் ஒவ்வொரு திருவுருவத்திற்குமான தத்துவார்த்த விளக்கங்களும், குறியீடான கருத்துக்களும் உண்டு. இக்கட்டுரையிலே விநாயக கடவுள் பற்றிச் சுருக்கமாக கூறப்படும்.

விநாயகன் எனில் தனக்கு மேலான தலைவன் இல்லாதவன் (விநாயகன்) எனப் பொருள்படும். இவன் இறைவனின் எல்லா வடிவங்களுக்கும் முதன்மையானவன், அனாதியான பரம்பொருளாக, ஆதி அந்தம் அற்றவன். எவருக்கும் ஏற்படக்கூடிய இடையூறுகளின் தலைவனாகவும் (விக்னராஜ) அவற்றை நீக்குபவனாகவும் விளங்குகிறான். இவ்வகையில் எக்காரியத்தை எவர் செய்யினும் அதற்கு ஏற்படக்கூடிய இடையூறுகளை நீக்கும் வண்ணம் முதலில் விநாயகனையே வணங்குவர். மேலும் யாவற்றுக்கும் மேலாக உள்ள மூல காரண மூர்த்தியாக மிளிரும் விநாயகப் பெருமானுக்கு முதலிலே வணக்கம் செய்யப்படுகிறது எனலாம். விநாயகனின் பெருமைகளையும் அன்பரிடத்தும், பிறரிடத்தும் அவர் கொண்டிருக்கும் இயல்பான அன்பு பற்றியும் வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள், பிற்கால நூல்கள் முதலியன விபரிப்பன.

அவரின் திருவவதாரம் பற்றிக் குறிப்பாக புராணங்கள் எடுத்துக் கூறுவன. ஒரு பொதுவான கதையின்படி யானை முகத்தையுடைய கஜாசுரனை அழிப்பதற்காகவே இவர் தோற்றினார். எனக்கூறப்படுகிறது. போரிலே தம்மை எதிர்த்துப் போர் புரிந்த கஜாசுரனை முற்றாக அழித்தவர். ஆனால், அவனுக்கு திரு அருள் பாலித்து அவனை தமது ஊர்தியாக்கினார். ஆன்மாக்களைப் பந்தித்துள்ள ஆணவம் முதலிய மும் மலங்களின் உருவகமே அசுரர்களாம். ஆகவே இறைவன் அவற்றின் மலங்களை நீக்கி சத்திநிபாதம் (திருவருள் பாலித்து) ஏற்படச் செய்வான் எனும் கருத்தே இக் கதைவாயிலாகப் புலப்படுத்தப்படுகிறது. அறியாமையினாலே தன்னை எதிர்த்த அசுரனை முற்றாக அழியாது அவன் மீது கழிவிரக்கம் கொண்டு அருள் நோக்குச் செய்து காப்பாற்றினார். என்பது குறிப்பிடப்பாலது. இறைவன் எத்தகைய கொடியவனையும் அழியாது செம்மைப்படுத்திச் சீராக்குவார். ஆன்மாக்கள் இடத்து அவருக்குள்ள எல்லையற்ற இரக்கம் குறிப்பிடப்பாலது.

விநாயகப் பெருமான் வேதமுதல்வனாகவும், ஞானநாயகனாகவும் மிளிர்கிறான். வேதம் எனில் ''மிகச் சிறந்த அறிவு ''எனப் பொருள்படும். இறைவனைப் பற்றி கூறும் வேதங்கள்'' சிறந்த அறிவுப் பொக்கிஷங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்'' என்பதில் ஓர் ஐயமில்லை. இவ்வேதங்களின் சாரமாகவும், முடிவாகவும் ஓங்காரமெனும் பிரணவமே விளங்குகின்றது. எல்லா வேதங்களும் எப்பதத்தினை அடையத்தகுந்ததாக பரமதாத்பரியத்துடன் உபதேசிக்கின்றனவோ, தவங்கள் யாவும் எதை உத்தேசித்தது எனக் கூறுகின்றனரோ எதனை விரும்பி பிரமச்சாரியத்தை அனுஷ்டிக்கிறார்களோ, அதனை சுருக்கமாக கூறுவேன். அதுவே ஓங்காரமாகும்'' எனக் கடோபநிஷத்தில் யமன் நசிகேதனுக்கு உபதேசித்துள்ளமை கவனித்தற்பாலது. வேதங்களை ஓதற்தொடங்கும் போதும் ஓதி முடிக்கும் போதும், கிரியைகளின் தொடக்கத்திலும் ஓங்காரம் உச்சரிக்கப்படும். இவ் ஓங்காரத்தின் பிரணவத்தின் வடிவமாகவே (ஓங்காரயநமஹ) விநாயகன் விளங்குகிறான். துதிக்கையுடன் கூடிய அவரின் திருமுகம் இக் கருத்தினையே புலப்படுத்துகின்றதென ஞானிகள் கருதுவர். ஓங்காரத்திலுள்ள அகாரம், உகாரம், மகாரம் ஆகிய மூன்று ஒலிகளும் முறையே பிரமா, விஷ்ணு, உருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளைக் குறிக்கும் என்பர். எனவே விநாயகன் மும்மூர்த்திகளின் வடிவமாக விளங்குகிறார். மேலும் பிள்ளையார் சுழியிலுள்ள வட்டமும், நீட்டமும் பிந்துவையும் நாதத்தையும் குறிக்குமென்பர்.


**பேராசிரியர் வி. சிவசாமி**

**தலைவர். சமஸ்கிருதத்துறை, யாழ்பாணப் பல்கலைக்கழகம்.**


அவரின் திருவுருவம் உலகனைத்தையும் உள்ளடக்கியதாக விளங்குகின்றது. அவரின் திருவுருவங்கள் 51, 32, 16 எனப் பலவகைப்படும். எனினும் பொதுவாக காணப்படும் திருவுருவம் ஒன்றிலே வலது பக்கத்திலுள்ள இரு திருக்கரங்களிலும் அங்குசமும் (அபயமாகவுள்ள திருக்கரத்திலே) ஒடிந்த யானைக் கொம்பும் இடது பக்கத்திலுள்ள திருக்கரங்களிலே பாசமும் மோதகமும் (அல்லது லட்டும்) காணப்படும். இவ்விரு கரங்களுக்கிடையே துதிக்கை விளங்கும். எனவே அவர் ஐங்கரன் ஆகின்றார். அங்குசம் தீமைகளை அழிப்பதை குறிக்கும். மோதகம் அல்லது லட்டு அழியாத் தன்மையை குறிக்கும். அமிர்தகலசம் என ஒரு சாரார் கருதுவர். வேறு சிலர் இது இனிமையான மோதகம் அல்லது லட்டு எனவும், பேரின்பத்தைக் குறிக்கும் என்பர். பிறிதொரு சாரார் இது பிரபஞ்சத்தைக் குறிக்கும் என்பர். பாசம் தீயவற்றைத் தடுக்கும், அபயமாகிய திருக்கரத்திலுள்ள ஒடிந்த மருப்பு வியாசர் வேண்டுகோளின்படி மகாபாரதக் கதையை எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்ட எழுதுகோலாகும். இறைவன் தமது அன்பருக்காக எதையும் செய்தருளுவார் என்பதை இது புலப்படுத்தும். மேலும் பாசம் படைத்தலையும், அங்குசம் அழித்தலையும், ஒற்றைக் கொம்பு காத்தலையும், துதிக்கை மறைத்தலையும், மோதகம் அருளுதலையும் குறிக்குமென ஒரு சாரர் கருதுவர். எனவே தந்தை ஆகிய சிவனைப் போலவே இவரும் ஆன்மாக்களின் ஈடேற்றத்திற்காகப் பஞ்சகிருத்தியங்களைச் (ஐந்தொழில்களைச்) செய்கிறார். தந்தையைப் போலவே இவருக்கும் ஐந்து திருமுகங்கள் உள்ளன. இவ் வடிவம் பஞ்சமுக விநாயக வடிவமாகும். நாலு திசைகளை நோக்கியும் மேல் நோக்கியும் உள்ள இத்திருமுகங்கள் இறைவனின் எல்லையற்ற ஆற்றலைக் குறிக்கும்.

விநாயகப் பெருமானின் திருவுருவத்திலே யானைத் தலையும், மனித உடம்பும் கலந்து விளங்குகின்றன. யானை மதிநுட்பமும், கம்பீர நடையும், அழகும் வாய்ந்த மிருகமாகும். அவர் கருணையெனும் மத நீரைப் பொழிந்து கொண்டிருக்கிறார் எனவும், அவரது துதிக்கை மும்மலமாகிய காட்டினை அழித்து நம்பிக்கை ஊட்டுகிறது எனவும் ஞானிகள் கூறுவர். யானை தனது துதிக்கையால் எத்தகைய தடைகளையும் நீக்கி முன்னேறுவது போல விநாயகரும் ஆன்மாக்களின் இடையூறுகளையெல்லாம் நீக்கியருளுவார். அவருடைய அழகினைப் பலர் குறிப்பிட்டுள்ளனர். அவருக்குரிய அஷ்டோத்தரசதநாமாவளி, சகஸ்ர நாமாவளி ஆகியனவற்றிலே அவர் காதல், அழகு ஆகியனவற்றில் தெய்வமாம் மன்மதனையும் வென்ற திருமேனியர் (ஜிதமன்மதவிக்கிரக) அழகு நிறைந்தவர் (ஸௌந்தர்யமண்டித) அழகுள்ளவர் (காந்த), சொந்த அழகு (ஸ்வலாவண்ய) உடையவர் எனப் பலவாறு போற்றப்படுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் திருவுருவத்திற்கும் ஊர்த்திக்கும் இடையில் மிகுந்த வேறுபாடு காணப்படுகின்றது. அவரின் பருத்த திருமேனியும், தோற்றப் பொலிவும், கம்பீரமும் ஒருபுற மிருக்க வியக்கத்தக்க வகையில் அவரின் வாகனமாகிய மூஷிகமோ மிகச் !சிறியதாகும். இங்கு புறத்தோற்றமன்றி அகவுணர்வே பிரதானமாகும். அதாவது, இறைவன் சிறிய பிராணிக்கும் வல்லமையளித்து பெரியனவற்றையும் தாங்கச் செய்வார் என்பதை இது காட்டுகிறது. மேலும் மலங்கள் குறிப்பாக முனைப்பான ஆணவம் நீக்கப்பட்ட ஆன்மாவையே மூஷிகம் காட்டுகிறது எனவும் கொள்ளப்படுகிறது. இவ்வகையில் இது முருகப் பெருமானுடைய சேவலும், மயிலும் ஆக மிளிரும் சூரனுடன் ஒப்பிடப்பாலது.

தமிழகச் சைவமரபிலே விநாயகர் பொதுவாக ''பிள்ளையார்'' எனவே அழைக்கப்படுகிறார். தமிழர் உள்ள பிறநாடுகளிலும் இவ்வாறுதான் அழைக்கப்படுகிறது. பிள்ளையார் என்பது அவரின் குழந்தைத்தன்மையை குறிப்பதாகும். புஷ்டியான குழந்தை பெற்றோர்க்கு மிக மகிழ்ச்சியை ஏற்படுத்தல் இயல்பே. இக் குழந்தைத் தெய்வமும் உலகத்தின் பெற்றோர் ஆகிய சிவனுக்கும் பாரவதிக்கும் மட்டுமன்றி உயிர்கள் அனைத்துக்குமே செல்லக்குழந்தையாக திகழ்கிறார். இவ்வழிபாடு தமிழகத்திலே சங்ககாலம் தொட்டு நிலவி வந்தமைக்கு இலக்கிய தொல்லியல் சான்றுகள் உள்ளன. தமிழ் மக்களின் உள்ளங்களைக் கவர்ந்த தெய்வத் திருவுருவங்களில் இதுவும் ஒன்றாகும்.

ஏற்கனவே குறிப்பிட்டவாறு விநாயகர் அறிவுத் தெய்வமாகவும், பிரபல்யம் அடைந்துள்ளார். ஞானவடிவுடையர் ஞானமுத்திரையினையுடையவர் (ஜ்ஞானமுத்திராவத்) எனவேதான் திருமூலர் திருமந்திரத்திலே பிள்ளையாரை '' ஞானக்கொழுந்து '' என அழகாக கூறியுள்ளார். இக்கருத்திற்கேற்ப வித்தியாரம்ப வேளைகளில் பிள்ளையாருக்கு முதலிடம் அளிக்கப்படுகிறது. தமிழகத்திலே பொதுவாக இவர் பிரம்ச்சாரி எனக் கூறப்படினும் வல்லபா, அல்லது கணேசானி எனும் ஒரு சக்தியுடனும் சித்தி புத்தி எனும் இரு சக்திகளுடனும்' இந்தியாவின் பிற பிரதேசங்களிலே போற்றப்படுகிறார்.

தமிழகத்திலே இத்தகைய சிறப்புக்கள் உண்டு. நக்கீரர் தாம் எழுதிய பிள்ளையார் அகவலிலே.

''அல்லல் வினையறுத்திடு ஞான
வல்லபை தன்னை மருபியமார்பா''

எனக் குறிப்பிடுகிறார். வல்லபா என்பது அன்பு காதல் முதலிய பொருள்படும்- சிவபெருமானைப் போலவே உலகஈடேற்றத்திற்காக சக்தியுடன் (சக்கிஸம்பாத) விளங்குகிறார். இறைவனைப் போலவே இறைவியும் அன்பு வடிவினள். கணேசர், கல்வித்தெய்வம், இடையூறுகளை நீக்கும் தெய்வமாக மட்டுமன்றிக் காதல் தெய்வமாகவும் திகழ்கிறார். ஏற்கனவே தம்பியாகிய முருகன் தன் காதலி வள்ளியைச் சேர உதவிய கதையினுலும் இது புலப்படும். விநாயகர் காதல் தெய்வம் என்ற கருத்து யப்பான் நாட்டிலே இன்றும் நிலவுகின்றது. பெளத்தத்தின் ஊடாக இக்கருத்து பரவியிருக்கலாம். முருகக்கடவுளுக்கு இச்சாசக்தி, கிரியாசக்தியாக வள்ளி, தெய்வானை எனும் இரு சக்திகள் இருப்பதுபோல இவருக்கும் சித்தி, புத்தி எனும்இருசக்திகளும் உள்ளனர். சித்திகாரிய சித்தி (வெற்றி) யையும், புத்தி விவேகத்தையும் குறிக்கும். எக்காரியத்தையும் செய்து முடிப்பதற்கு இறையிரண்டும் தேவை. எனவே இடையுறுகளை நீக்கி இஷ்டசித்திகளைத் தரும் இறைவனுக்கு இவ்விருசக்திகளும் உள்ளனர்.

சிவபிரானைப் போன்றே கணேசரும் கலைகளின் குறிப்பாக இசை, நடனப் பிரியராக விளங்குகின்றார். சாமகோஷப்பிரிய லாஸ்யபிரிய, என நாமாவளிகளாலே போற்றப்படுகின்றார். அவருடைய நர்த்தன வடிவிலான சிற்பங்கள் இந்தியாவிலும், இலங்கையிலும் உள்ளன. மேலும் அவர் நாதப்பிரியர், முரசுத்தெய்வமாகவும் மிளிர்கின்றார்.

இவரை எவரும் எளிதில் வணங்கியருள் பெறலாம். ஆகம முறைப்படி மட்டுமன்றி அதற்குப்புறம்பான வழிபாட்டு முறைகளும் உள்ளன. இவர் தர்மத்தின் வடிவினர். அறம் பொருள், இன்பம், வீடு ஆகியவற்றை ஆன்மாக்களுக்கு வழங்குபவர். அன்பர்களுக்கு எளியர், அவர்கள் விரும்பியவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரிவழங்குவார். அவர் ''குரு வடிவாகி குவலயம் தன்னில்'' எழுந்தருளி அன்பர் களுக்கு தண்ணளி வழங்குவார். அவர் சின்மயானத்தவடிவினராக சச்சிதானந்த வடிவினராக என்றும் ஆன்மாக்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார். இவ ரின் வழிபாடு இந்து சமயத்தின் ஒரு பிரி வாகிய காணபத்தியமாக விளங்குகின்றது. இது ஏனைய பிரிவுகளிலும் சிறப்பாக சைவ த்தில் சிறப்பிடம் பெற்றுள்ளது. இவற்றை விட அவைதீக சமயத்தவர்களான பௌத் தம், சமணத்திலும் கணபதி வழிபாடு இடம் பெற்றுள்ளது குறிப்பிடப்பாலது. அவரு டைய சகஸ்ராநாமாவளியிலே ''புத்த'' எனவும் அழைக்கப்படுகிறார்.

இவ்வாறு விநாயக வழிபாடு குறிப் படப்பாலது. இவ்வழிபாட்டினால் ஒருவன் மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் வழிபடுவதால் எல்லாவகையான இகபர இன்பங்களை பெறுவான்.

வாக்குண்டாம் நல்ல மனம் உண்டாம்
-மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது
-பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

---

நீயே சரணம் நினதருளே சரணஞ் சரணம்
நாயேன் பலபிழை செய்து களைத்துனை நாடிவந்தேன்
வாயே திறவாத மௌனவுத் திருந்துன் மலரடிக்குத்
தீயே நிகர்த்தொளி வீசுந் தமிழ்க்கவி செய்குவனே.

卐 卐

புகழ்வோம் கணபதியின் பொற்கழலை நாளும்
திகழ்வோம் பெருங்கீர்த்தி சேர்ந்தே - இகழ்வோமே
புல்லரக்கப் பாதகரின் பொய்யெல்லாம்; ஈங்கிதுகாண்
வல்லபைகோன் தந்த வரம்.

卐 卐

செய்யுங் கவிதை பராசக்தி யாலே செய்யப்படுங்காண்,
வையத்தைக் காப்பவள் அன்னை சிவசக்தி வண்மையெலாம்
ஐயத்தி லுந்துரி தத்திலுஞ் சிந்தி யழிவதென்னே
பையத் தொழில்புரி நெஞ்சே! கணதிபன் பக்திகொண்டே.

卐 卐

நமக்குத் தொழில்கவிதை நாட்டிற் குழைத்தல்,
இமைப்பொழுதுஞ் சோரா திருத்தல் - உமைக்கினிய
மைந்தன் கணநாதன் நங்குடியை வாழ்விப்பான்;
சிந்தையே! இம்மூன்றும் செய்.

-பாரதியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேக முறைகளும் விளக்கமும்

பிரதிஷ்ட பூஷணம்
நயினை, ஐ.
கைலாசநாதக் குருக்கள்

அனாதிமலமுத்த சித்துருவாகிய பரம்பொருள் கற்பனை கடந்த சோதியாகினும், அனாதிமல பெத்தர்களாகிய ஆன்மாக்கள் வணங்கிப் போக மோக்ஷங்களை அடைய ஆலயத்தில் நிறுவப்படும் சிவலிங்கத் திருவுருவில் கருணையே உருவாகும்படி பிரார்த்தித்து அபிஷேகித்தலே கும்பாபிஷேகமாம்.

''கும்பாபிஷேகம்'' என்பது குடமுழுக்கு, ''குடநன்னீராட்டு விழா'' என்று சொல்லுவார்கள். இது பிரதிஷ்டை என்றும் கூறப்படும். இது நான்கு வகைப்படும். அவையாவன:

*(1) ஆவர்த்தம்* *(3) புனராவர்த்தம்*
*(2) அனாவர்த்தம்* *(4) அந்தரீகம்*

ஆவர்த்தம்: புதிதான ஓர் இடத்தில் சிவலிங்கம் வைத்துப் பாலப்பிரதிஷ்டை செய்து பூஜித்துப் புதிதாகக் கோயில் கட்டி, பாலாலயமூர்த்தியைக் கும்பத்தில் எடுத்து பின்னர் மூலஸ்தானத்தில் இருக்கும் மூர்த்தியில்சேர்த்து அபிஷேகம் செய்வதாம்.

அனாவர்த்தம்: வெகு காலத்துக்கு முன் கோயில் கட்டி பூஜையில்லாமல் அழிய விட்டும், சீர் குலைந்தும் இருந்து, முன்போல் அவைகளைத் திருத்தி ஆலயம் கற்பித்துக் கும்பாபிஷேகம் செய்தலாம்.

புனராவர்த்தம்: கர்ப்பக்கிரகம், விமானம், பிரகாரம், கோபுரம், பலிபீடம் முதலியவைகளில் பழுது ஏற்பட்டாலும், அட்டபந்தனத்தில் பழுது உண்டானாலும், விமானத்தில் உள்ள விக்கிரகங்களில் பழுது நிகழ்ந்தாலும், வர்ணம் அழிந்திருந்தாலும், பாலாலயம் செய்து ஆலயத்தைப் புதுப்பித்து மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்தலாம்.

அந்தரீதம்: ஆலயத்தில் சோரன், சண்டாளன், நாய் முதலியன உட்சென்று தீண்டிய தன் காரணமாக மூர்த்தியின் பிரத்தியங்கள், உபாங்கம் போன்றவைகளில் ஏதாவது பழுது ஏற்பட்டால் அவைகளைத் திருத்தி உடனே செய்வதாகும். இதில் அந்தரீதப் பிரதிஷ்டைக்கு நாள், நட்ஷத்திரம் பார்க்கவேண்டியதில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கேதீச்சரத்தில் நடந்து முடிந்த கும்பாபிஷேகம் அனாவர்த்தம் என்று சொல்லப்படும் அதற்கு: 1. அனுஞ்ஞை 2. தனபூஜை 3. திரவிய விபாகம் 4. ஆசாரியவர்ணம் 5. கணபதி பூஜை 6. கிராமசாந்தி 7. பிரவேச பலி 8. திசா ஹோமம் 9. இரட்சோக்கிர ஹோமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. வாஸ்துசாந்தி 11. ஆயுஷ்மூர்மம் 12. கிரகமகம் 13. கோபூஜை 14. விப்பிரபோஜனம்
15. மிருத்சங்கிரகணம் 16. நூதனகர்த்திகளுக்கு ரத்தின நியாசம் 17. நயனோன்மிலனம்
18 தான்யாதிவாசம் 19. ஜலாதிவாசம் 20. அங்குரார்ப்பணம் 21. ரக்ஷாபந்தனம் 22. சய
ஞாதிவாசம் 23. யாகசாலா நான்யாதிஸ்தாபனம் 24. சூர்யகாந்த சங்கிரகணம் 25. ருக்விக்
சாதகா திவரணம் 26. பிரசன்னாபிஷேகம் 27. கடஸ்தாபனம் 28. கலாகர்ஷணம் 29. யாக
சாலா பூஜைகள் 30. ஹோமம் பூர்ணாகுதி 31. பதவின்னியாசம் 32. தூபிஸ்தாபனம்
33. தீபஸ்தாபனம் 34. ரத்னஸ்தாபனம் 35. யந்திரஸ்தாபனம் 36. பிம்பஸ்தாபனம் 37. அஷ்
டபந்தனம் 38. சுவர்ணபந்தனம் 39. தைலாப்பியங்கம் 40. பிம்பசுத்தி 41. பிம்பரக்ஷாபந்
தனம் 42. பூர்வசந்தானம் 43. விஷேட திரவிய ஹோமம் 44. சாந்திகும்பம் 45. ஸ்பர்சா
குதி 46. சுரோத்திரவந்தனம் 47. ஆசார்யபூஜை 48. அக்கினி சம்யோசனம் 49. மஹா பூர்
ணாகுதி 50. ஆசர்யபூஜை 51. தீபாராதனை 52. வேதகோஷம் 53. அந்தர்பலி - பெகிர்பலி
54. ஸ்தூபி கும்பாபிஷேகம் 55. மகாகும்பாபிஷேகம் 56. பரிவார கும்பாபிஷேகம் 57. சண்ட
ஹோமம் 58. மகாபிஷேகம் 59. ஆசார்ய உற்சவம் 60. எயமான்ய பலப் பிராப்தி 61 மகா
ஆசிர்வாதம் முதலியனவும், இதற்கு அங்கமான சில கிரிகைகளும் உள. இவைகளின்
விளக்கங்களை விரிவாகக் கூறுவிட்டாலும், ஓர் அளவு சுருக்கமாக அறியவேண்டியது நம்
கடமையாம்.

<u>அனுஞ்ஞை:</u> இறைவணக்கம் செய்து சர்வசாதகரிடத்திலும், பரம்பொருள் இடத்திலும் நான் குறித்த காலத்தில் இந்த மகத்துவமான கும்பாபிஷேகத்தை செய்ய உத்தரவு தர வேண்டும் என்று வணங்கி உத்தரவு கேட்பதாம்.

<u>தனபூஜை:</u> புண்ணிய வசத்தால் கிடைத்த திரவியத்தை பூஜை செய்தலாகும்.

<u>திரவிய விபாகம்:</u> பூஜை செய்த திரவியத்தை ஒரு பாகம் ஆலயக் கட்டடவேலைக்கும், இரண்டாவது பாகம் நித்திய பூஜை, மாதாந்த விசேட நட்சத்திர பூஜை, உற்சவம், ஆபரணாதிகட்கும் இராமாதி வாங்கவும், மூன்றாவது பாகத்தை பதினொரு பாகம் செய்தல் வேண்டும். அவை:

| | | | |
|---|---|---|---|
| 1. | யாகம் கட்டுதல் முதலானவற்றிற்கு | — | 2 பாகம் |
| 2. | அபிஷேக திரவியத்திற்கு | — | 1 பாகம் |
| 3. | ஆசாரிய தெட்சணை | — | 2 பாகம் |
| 4. | மூர்த்தி பர்கட்கு | — | 1 பாகம் |
| 5. | வேதாதி திருமுறைகட்கு | | 1 பாகம் |
| 6. | தானாதிகட்கு | — | 1 பாகம் |
| 7. | பிராமண போஜனம், அன்னதானம் | — | 1 பாகம் |
| 8. | சிற்பிக்கும் பரிஜனங்கட்கும் | — | 1 பாகம் |
| 9. | யாக திரவியங்கட்கு | — | 1 பாகம் |
| | | | 11 |

மேற்கூறிய பாகமாகப் பிரிந்து முறையே செலவு செய்தல் திரவியபாகமாம்.

<u>ஆசாரியவர்ணம்:</u> பிரதான ஆசாரியரையும், சர்வசாதகரையும் வணங்கி இத்திரவியத்தைக் மகாகும்பாபிஷேகம் செய்து இறையருளைப் பெற்றுத்தர வேண்டும் என்று எச மான் குருவை வழிபடுதலாகும்.

<u>கணபதி பூஜை:</u> எவ்வகையினராயினும் முதலில் விநாயகரை வழிபாடு செய்தல் வேண்டும்; செய்யாவிடில் அவர்களின் காரியத்தை இடையூறு செய் என்று இறைவன் கட்டளை என்பது ''எவரேயாயினும்'' என்ற திருவிளையாடற் புராணத்தில் விளங்குகின்றது. ஆகவே இங்கு தொடங்கிய மகாகும்பாபிஷேகம் இடையூறு இன்றி நிறைவேற விநாயகப் பெருமானுக்குப் பூஜை அபிஷேகம் ஹோமம் செய்து முதலில் பிரதான சிவாசாரியர் வழிபடுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமசாந்தி: "சர்வலோக இதம் புண்ணியம்
வட்சியே கந்து சடானன
கிராம நூதன காலேது
ஷேத்திரவா மந்திரேவிவா
பிரதிஷ்டோத்துவ காலேச
பூஜாம் கருத்துவாவிசேஷவதா" என்று காரணாகமம் கூறுகிறது. விளக்கம் சகலலோக சுகத்துக்கும்' புதிதானபட்டினம், கிராமங்களில் உள்ள அசுர, ராட்சத, பிசாச, பிரம ராட்சதர்களைத் திருப்தி செய்து சந்தோசப் படுத்தி, கிராம அதிதேவதையான வைரவரைப் பூஜித்தலாம்.

பிரவேசபலி: நாம் பிரவேசம் செய்து மகா கும்பாபிஷேகம் செய்யும் இடத்தில் உள்ள எட்டுத் திக்குகளிலும் வசிக்கின்ற இயக்கர், இராட்சதர், பிசாசர், பிரம இராட்சதர், பூதர், காளி, சரளி, வைரவர் முதலிய தேவதைகளுக்கு உணவு கொடுத்து எழுப்பி, அவர்களை முறையே கடல், மலை, வனம், நதி, மயானம் முதலிய இடங்களிற் சென்று சுகமாய் வீற்றிருங்கள்; இது சிவன் கட்டளை எனக் கூறித் திருப்தி செய்தலாம். இது மகா கும்பாபிஷேகம், திருவிழா, புதுவீடு குடிபுகல் போன்ற காரியங்களிற் செய்ய வேண்டும் என்று ஆகமங்கள் கூறுகின்றன.

திசாஹோமம்: நான்கு திக்குகளில் முறையே பாசுபதாஸ்தம், அஹோராஸ்திரம், பிரத்தியங்கிராஸ்திரம், சிவாஸ்திரம் முதலியவர்களைப் பூசித்துக் காவல் செய்யும்படி கட்டளை இடுதலாம்.

இரட்சோக்கிரஹோமம்: அசுர, ராட்சதர்களின் தொல்லை நீங்குவதற்காக மூன்று மேடைகள் அமைத்து, நடுவில் கும்பம் வைத்து, அதில் ரட்சோக்கிர தேவதையை வடவாமுகாக்கினிக்குச் சமமாகப் பாவித்துப் பூசை செய்து, அதன் தென்புறத்தில் வெள்ளை வஸ்திரம் இட்டு, தேங்காய் ஒன்று வைத்து, வடக்குப் பக்கத்திற் சிவப்பு வஸ்திரம் வைத்து, அதன் மேல் வாள் ஒன்று வைத்து, தேங்காயில் சிவனையும் வாளில் கட்கேசுவரனையும், வாளைச்சுற்றி அசிதாங்க பைரவர், குருபைரவர், சண்டபைரவர் முதலிய எண்மரைப் பூசித்து, அவர்களுக்கு உள் திரவியங்களாலும் சமித்தாலும் ஹோமம் செய்து, சம்யோசித்துக் கும்பஜலத்தை ஆலயத்தைச் சிற்றித் தெளித்தலாம்.

ஆயுஸ் கர்மம்: குருமார் செய்து கொள்ளும் தசவித ஸ்நானமாம்.

நவக்கிரகமகம்: கும்பாபிஷேகத்தால் உலகத்துக்கு அதிக மழையாலும், மழையின்மையாலும், விரோதிகளாலும், துஷ்டர்களாலும் வரும் துன்பம் நீங்கவும், எல்லாப் பிராணிகளின் பயம், நோய், பிணி நீங்கவும் சூரியன் முதலிய நவக்கிரகங்களைப் பூசித்து வணங்கிக் ஹோமம் செய்தலாம்.

வாஸ்து சாந்தி: பூமியானது அசத்தாக, ஜடசம்பந்தம் உள்ளதினால் அதை நீக்கிச் சத்பாவம் உண்டாவதற்குச் செய்வது. அசுத்த சொரூபமான பூமியை பாலாக்கினியால் தகித்துப் பின் பூமிக்கு அதிபதியான பிரமாவின் மூச்சுக் காற்றினாற் சோதிரூபமாக்கிச் சுத்தம் செய்வதாம். நீற்றுப் பூகினிக்காயைப் பூமியின் வடிவமாகத் தியானித்து, அதன் விதைகளை அண்டங்களாக நினைத்து, எல்லாவற்றையும் ஹோமம் செய்து, பின் பூமிக்கு அதிபதியான பிரமாவின் கட்டளையினாற் பரிசுத்தமாகப் பாவித்தல் வாஸ்து சாந்தியாகும். இச் சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பாபிஷேகம், பலஸ்தாபனம், யாக மண்டப கல்பனம், கோபுரம், தடாகம், வீடு, உற்சவம் போன்ற இடங்களில் அவசியம் செய்ய வேண்டும்.

கோபூஜை: பசுமாடு கன்று கட்டுதல்.

விற்பிரபோசனம்: வேதம் அறிந்த பிராமணர் பிருதுவி முதல் சுத்ததத்துவம் வரையுள்ள எல்லாத் தத்துவங்களையும் சுத்தமாக்குகின்றேன்; ஹோமம் செய்கின்றேன்; இது நன்கு சுத்தி அடையட்டும் என்று சிதாக்கினியில் ஹோமம் செய்கின்ற பாவனையில் போறுனம் செய்வித்தலால் அந்த இடம் சுத்தியாகும்.

மிருத்சங்கிரகணம்: கிராமத்துக்குச் சாந்தியையும் தேசம் நன்மையடையவும் நினைந்து, பூமா தேவியைப் பிரார்த்தித்து, இந்தப் பூமி கண்டங்களாகப் பிரிந்து இருப்பதால் ஒவ்வொரு கண்டத்துக்கும் பூசை செய்து, பிரார்த்தித்து, ஞானயாகம் செய்ய முளையிடுவதற்காக மண்வெட்டியை சிவாஸ்திரமாகப் பூசித்து, பூமிதேவியின் வயிற்றில் மூன்று அல்லது ஐந்து முறை மண்ணை எடுத்தலாம். எடுத்த தோசம் நீங்க அந்த இடத்துக்கு வேறு மண் ாபாட்டுச் சப்தவாரிதி கும்பத்தால் அபிஷேகம் செய்தலாம்.

அங்குரார்ப்பணம்: முளையிடுதல், இந்தப் பூமியானது முன்னர் அமிர்தத்தால் நனைந்து சுத்தமானது. ஆகையால் உலகச் சேமத்தின் பொருட்டு நெய் முதலிய நவதானியங்களைப் பாலில் ஊறவிட்டு ''ஔசதி சூக்தம்'' செபித்துச் சந்திரனை வணங்கி முளையிடுதலாம்.

ரஷாபந்தனம்: காப்புக்கட்டுதல், குழந்தையின் வருத்தம் தீர மாதா மருந்துண்ணுதல்போல உலக சேமத்திற்காக ஆசாரியார் எடுத்தகாரியம் செவ்வனே நிறைவேற இடையூறுகள் தடுக்கா வண்ணம் இறைவியின் கர்ப்பநாடியில் நின்றும் உண்டானதாக நாகராசனைப் பூசித்துக் கையில் கங்கணம் கட்டுதலாம்.

இரத்தினநியாசம், நைநோன்மீனனம், தானியாதிவாசம், சயனுரோகணம், கிராமப்பிரதட்ணம்: இவைகள்புதிதான மூர்த்திகளுக்குப் பஞ்சபூத சம்பந்தமான தத்துவங்கள் ஏற்படுத்துவதற்காகச்செய்யபபடும் கிரியைகளாம்
அன்றியும் இறைவன் ''இருநிலனய்த் தீயாகி நீருமாகிய இயமானனாய் எறியுங் காற்றுமாகி''
என்ற தேவாரத்தில் இருந்து இறைவடிவத்தை உண்டுபண்ணும் குறிப்பை உணர்த்துவதும் ஆகும்.

யாகசாலா தானியாதி ஸ்தாபனம்: யாகசாலைற் சப்ததாத்துக்கள் மயமான சப்த தானியங்களைப் பரப்புதல்,

சூரியகாந்தி சங்கிரகணம்: ஞானுக்கினிக்கு சூரிய காந்தத்தில் இருந்து அக்கினியை எடுத்தல்,

ருத்விக் சாதகாதி வரணம்: பிரதான குண்டத்தைத் தவிர ஏனைய குண்டங்களுக்கும் ஏனைய மூர்த்திகளுக்கும் ஏற்ற குருமாரையும் சாதகர்களையும் உபசாதகர்களையும் நியமித்தல்.

பிரசன்ன அபிஷேக பூஜை: எங்கும் நிறைந்த மூர்த்தியைப் பூஜிப்பதற்காகத் தமக்கு நேர் முகப்படுத்தல்.

கடஸ்தாபனம்: குடத்தைச் சுத்தமாக்கிச் சப்ததாதுக்களும் ஜீவனும் உண்டாக்குவதற்காகக் கும்பத்தின் அடியில் ஆன்மதத்துவத்தையும், பிரமாவையும் கும்ப நடுவில் வித்தியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவத்தையும் விஷ்ணுவையும், கும்ப நுனியிற் சிவதத்துவத்தையும் ருத்திரனையும், கும்பத்தில் 9 சக்திகளையும், மூவிளை நூலிற் சரஸ்வதி, இலக்குமி, ரௌத்திரி ஆகியோரையும், கும்பத்திற்குப் பிடிக்கப்படும் தூபத்தில் அர்ச்சினி சக்தியையும், தீர்த்தத்திற் கங்கை முதலிய புண்ணிய நதிகளையும், மத்தியில் வருணனையும், நவரத்தினங்களில் வாமை முதலிய நவசக்திகளையும், தங்கத் தாமரைப் பூவிற் சதாசிவத்தையும், வாசனைத் திரவியங்களிற் சப்த மாதுருக்களையும் பூசித்துக் குடத்தில் இட்டு மாவிலைச் சடையாகவும், தேங்காயைச் சிரசாகவும், கூர்ச்சத்தை முடியாகவும், வஸ்திரத்தைத் தோலாகவும், ஜெஞ்ஞோபவீதத்தைப் பஞ்சப்பிரம மந்திரமாகவும் பூசிப்பதாற் கும்பமானது சர்வதேவதா சொரூபமாகிறது என்று ஆகமங்கள் கூறகின்றன.

கலாகர்சணம்: கலைகளை இருத்தலாம்; சடத்துவன்னியாசமும் கும்பத்திற்குச் செய்ய வேண்டும். சடத்துவாவானது பரமேஸ்வரர் இருக்கும் ஸ்தானத்தை அடைதலுக்கு உரிய வழியாகும். இதில் சர்வ வியாபகராக உள்ள பரமேஸ்வரர் இந்த ஆறு அத்துவாக்களிற் கலந்தும் இருக்கின்றார். பரமேஸ்வரர் சக்தி சொரூபர்; அதீதர்; சக்திக்கும் சக்தனுக்கும் பேதமின்மை ஆதலால் அங்காங்கிபாபம் என்றும் கூறப்படுகிறது. ஆகவே சக்தியின் இடத்தில் இருந்து கலையும், கலையில் இருந்து தத்துவமும், தத்துவத்தில் இருந்து புவனமும், புவனத்தில் இருந்து வர்ணமும், வர்ணத்தில் இருந்து பதமும், பதத்தில் இருந்து மந்திரமும் உண்டாயின. கலையில் தத்துவம் அடங்கியுள்ளதாதலின் தத்துவம் முதல் மந்திரம் இறுதியாக ஒன்றில் ஒன்று அடங்கி இருந்து திரும்ப வந்ததாதலின் இந்தச் சடத்துவாக்களைச் செய்யவேண்டும் என்பதாம். அன்றியும் கலாநியாசத்தால் சர்வஞ்ஞசக்தியும், தத்துவநியாசத்தால் நித்திய திருப்தியத்துவமும், புவனநியாசத்தால் அநாதிபோதத்துவமும், வர்ணநியாசத்தால் சுவதந்திரத்துவமும், பதநியாசத்தால் அலுப்த சத்தித்துவமும், மந்திரநியாசத்தால் அநந்தசத்தித்துவமும் சித்திக்கின்றமையால் அவசியம் செய்ய வேண்டும்.

யாகசாலைப்பூஜை: யாகசாலை கலாமயமாக விளங்குகிறது. நிவிர்த்தி முதலிய நான்கு கலைகளும் நான்கு பக்கநிலைகளாகவு,ம் இதற்கு நான்கு கலசமும், இவைகளுக்கு இருபுறங்களிலும் நந்தி முதலிய எண்மர் வாயில் காப்பாளராகவும், கிழக்கு முதல் 8 திக்குகளில் கீழ், மேல், ஆகிய 10 திசைகளில், இந்திரன் முதல் விஷ்ணு ஈருக தசலோக பாலகர்களும் அக்கினிக்கு வடக்கில் சிவசூரியனும், நிருதிக்கு கிழக்கில் யாகபலனைத்தரும் வாஸ்து பிரமனும், வாயுவுக்கு தெற்கில் உத்தமப்பாக மண்டபரூபமாகிய மகாலட்சுமியும், வாயுவின் வலப்புறத்தில் யாகத்தில் ஏற்படும் விக்கினங்களை நீக்கும் விநாயகரும், ஈசானத்துக்கு மேற்கில் எதையும் உத்தரவு கேட்டுச் செய்ய சதாசிவம் முதல் சப்த குரு மூர்த்திகளையும் பூசிப்பதற்கு, 27 கலசங்கள் வைத்து ஞானவாள் ஏந்தியபடி யாகேஸ்வரன், யாகேஸ்வரியையும் கலசத்தில் அமைத்து, 9 குண்டங்களோடு விளங்குகின்றமையால் யாகசாலை கலாமயமாகும்.

நவகுண்டம்: சிவபெருமானிக்குச் சொரூபம், நடத்தம் என இரு வடிவங்கள் உள்ளன. சொரூபத்திருமேனி சுயப்பிரகாச திருமேனியாகும். அது உலகத்தைக் கடந்த வடிவம், தடத்தவடிவம் என்பது உலகத்தோடு கலந்த வடிவமாம். இந்த உலகம், நிலம், நீர், நெருப்பு, காற்று, நீள்விசும்பு, நிலா, பகலோன், இயமானன் என்னும் எண்வகைப் பொருளிலும் கலந்தது. இதனுல் இறைவனை எண்வகை உருவில் வைத்து வணங்கவேண்டும் என்பது பெற்றும். முதலில் நிலம் என்பது பிருதுவியாகும்; அது சதுரமான வடிவம; அதைக் குறிப்பது கிழக்குத் திக்கில் அமைந்த நாற்கோண வடிவமான குண்டமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர் என்பது அப்பு: இதன் வடிவம் பாதிச்சந்திரனை பிறைவடிவம்; அது தெற்கில் உள்ள பிறை வடிவமான குண்டமாம்.

நெருப்பு என்பது தேயு: இதன் வடிவு முக்கோணம். இது தென்மேற்கு மூலையில் உள்ள முக்கோண வடிவம்.

வாயு, இது அறுகோணவடிவம்; இது வடமேற்கு மூலையில் அமைந்திருக்கிறது.

ஆகாயம்: இது வட்டவடிவினது; மேற்குத் திக்கில் உள்ள குண்டத்தில் அமைந்திருக்கிறது.

சூரியன்: இது தாமரைப்பூ வடிவம்; இது வடக்குத் திக்கில் அமைந்திருக்கிறது.

சந்திரன்: இது எண்கோண வடிவினது; இது வட கிழக்கு மூலையில் அமைந்திருக்கிறது.

இயமானன்: என்னும் ஆன்மா மாயாதத்துவத்தைக் குறித்து, அரசிலை வடிவாய் தென்கிழக்கு மூலையில் அமைந்திருக்கிறது. இவை எட்டுத்திக்கிலும் அமைய ஈசானத்திற்கும் கிழக்கிற்கும் மத்தியில் வட்டவடிவமான பிரதான குண்டத்தில் சுயம்பிரகாசமூர்த்தியாய் அமைந்துள்ளதுதான் இறைவடிவம். இறைவன் மேலே குறித்த 8 வடிவமாகிய உலகத்தில் கலந்து இருக்கிறன் ஆகவே அவரை இந்த 8 வகையான குண்டத்தில் வைத்துப் பூஜித்து ஓமம் செய்து வணங்குகின்றோம். இது எப்படியெனில், நமது அருவமான உயிரை உருவமான உடம்பில் வைத்து அனுமானித்துக் காண்பது போல இறைவனை வழிபாடு செய்தலே 9 குண்டங்களின் அமைப்பாம். இன்னும் ஈசானம் முதல் சத்தியோசாதம் இறுதியாக உடைய பஞ்சப்பிரம மந்திரங்களும் மூலமந்திரமும் சிவபெருமானுடைய எல்லாம் அறியும் தன்மை, வரம்பில் இன்பம் உடமை, இயல்பாகவே பாசங்களில் நீங்கிய தன்மை, தன் வயத்தாகும் தன்மை, பேரறிவுடைமை, பேர் அருளுடைமை, அளவிலாற்றல் உடைமை, தூய உடம்பினனுதல் முதலிய எண் குணங்களும் பிரதான குண்டத்தில் இறைவனுக்குப் போல் அமைந்து விளங்கும். மேலும் பிரதான வேதிகையில் அமைந்தாசனம் முதல் உள்ள ஆசனங்கள் மேல் சர்வதேவதா சொரூபமான இறைவனை வைத்து வணங்கும் இடமும் சிறந்த யாகசாலையேயாம்.

<u>பதவின்யாசம்:</u> மூலஸ்தானத்து இறைவனை ஸ்தாபிக்க ஏற்படுத்தும் இடத்தைக் குறித்தல். இதை "ஆசார்யசில்பின சார்த்தம், பிரவிசேத்கர்ப கேககம்" என்ற காரணாகம விதிப்படி, ஆசாரியரும் சிற்ப சாஸ்திரியும் சேர்ந்து சிவன் அம்பாள் விநாயகர் முதலிய மூர்த்திகளைப் பிரதிஷ்டைசெய்வதற்குரிய இடத்தை வகுத்தலாம்

<u>ஸ்தூபிஸ்தாபனம்:</u> அதிஸ்டானம் முதல் (பட்டிகை) ஸ்தூபிவரியந்தமும் முறையே ஆறு அத்துவாக்களும் அமைய தூல லிங்கமாக அமைந்த பத்மத்தின் மேல் ஸ்தூபியை வைத்தலாம்.

தீபஸ்தாபனம்: இறைவன் சோதிவடிவினன்; அவனைச் சோதி வடிவாக வணங்குவதற்காக வைக்கப்படுவது தீபஸ்தாபனமாம். "இல்லக விளக்கது இருள் கெடுப்பது...... நல்லகவிளக்கது நமச்சிவாயவே" என்னும் தேவாரம் இங்கு நினைவு கூரத்தக்கது.

<u>இரத்தினஸ்தாபனம்:</u> நவரத்தினம், நவலோகம் முதலிய பல்துக்களை, ஆரோக்கிய, வீரிய பிரபா சக்திமயமானப் திரவியங்களைப் பீடத்தின் மேல் இட்டு, இந்திராதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லோகபாலகர்களைப் பூஜித்துப் பத்மாசனம் வரை பூசித்தல் இரத்தினஸ்தாபனம் ஆகும்.

இயந்திரஸ்தாபனம்: கோடுகளும், கோணங்களும் இறைவனின் மூல பிராசாத மந்திரங்களும் எழுதிப் பூசிக்கப்பட்ட யந்திரத்தை உரிய இடத்தில் வைத்தலாம். இது இறைவனுக்கு அருள் சக்தியை ஊட்டுவதாம். (இது பேட்டுக்கு பற்றரி போல எனலாம்.)

பிம்பஸ்தாபனம்: மூர்த்திகளை முறைப்படி வைத்தலாம்.

அஷ்டபந்தனம்: என்பது இறைவனின் அம்சமாகிய அஷ்ட மூர்த்திகளின் அருள் பெற்று, அணிமாதி அஷ்ட சித்திகளும் சித்தியடைந்த நிலையில் ஞானகிரியா சக்தியாகும். சங்கநிதி, பதுமநிதி, இரண்டும் தோன்றி பரம்பொருளின் ஆணையால் சாம்பிராட்சிய லட்சுமியும், அதில் இருந்து பயன் தரும் வகையில் தனலட்சுமி, தான்ய லட்சுமி, வித்தியா லட்சுமி, கீர்த்தி லட்சுமி, சௌபாக்கிய லட்சுமி, வீர லட்சுமி, ஜெயலட்சுமி, சந்தான லட்சுமி ஈருக அஷ்ட லட்சுமிகளும் உருக் கொண்டு உயிர்களை உய்விக்கும் வண்ணம் உள்ள கதிகளைத்தருவது அஷ்டபந்தன சமர்ப்பணமாம்.

சொர்ணபந்தனம்: தங்கத்தால் செய்வது.

தைலாப்பியங்கம்: லிங்கத்திற்கு தைலத்தினல் (எண்ணெய்) ஆசாரியரும், சிற்பாசாஸ்திரியாரும், அன்பர்களும் சாத்துதல்; அன்பர்கள் தங்களிடத்தில் உள்ள ஆணவ மல சம்பந்தந்தாலும், திரிகரணங்களாலும் ஏற்படும் குற்றம் நீங்கி சுத்தி அடைதற் பொருட்டு, எள்ளில் இருந்து எடுக்கப்பட்ட சுத்தமான நல் எண்ணெய்யை சுவர்ணத்தினல் தொட்டு இறைவனின் சிரசு, கண்கள், மூக்கு செவி, தொப்பிள், பாதம் முதலிய எல்லா அங்கங்களிலும் குளிரும்படி நிறையச் சாத்துவதாம்.

பிம்ப சுத்தி: தீட்சாயினர்கள் முதலானேரால் பரிசிக்கப்பட்ட தோச நீக்கத்திற்காகவும், உஷ்ண சாந்திக்காகவும், பிம்பத்திற்குச் சுத்தம் உண்டாவதற்கு உதகம், சந்தம், புஷ்பம், பத்திரம், காசாயம், மிருத்தி, பீஜம், பல்லவம், இரத்தினம், லோகம், தாது, அஸ்திரம், ஓசதி, கவ்வியம், குசம், சிருங்கம் முதலிய 16 வகையான திரவியங்கள் நிரம்பிய கலசங்களைப் பூசித்து, ஓமம் செய்து, பின் மூர்த்திக்கு முறைப்படி பஞ்சாமிர்தாதி முதலியவைகளால் அபிஷேகம் செய்து அலங்கரித்துப் பூசித்தலாம்.

பிம்பிரஷாபந்தனம்: கும்பாபிஷேக நிமித்தம் மூர்த்திகளுக்கு காப்புக்கட்டுதலாம்.

பூர்வசந்தானம்: மூர்த்திக்குப் பக்கத்தில் ஆசாரியர், சாதகர் உட்கார்ந்து ஆதார சக்தி முதல் பஞ்சமாவரணம் வரைபூசித்து, கலை முதல் மந்திரம் இறுதியாகச் சங்கோபாங்கமாக அவயவ பேதங்களாய் பிம்பத்திற்கு தர்ப்பை நுனியால் நியாசம் செய்தலாம்.

விசேடதிரவிய ஹோமம்: இறைவனை அக்கினி வடிவில் பூசித்தலாம். சகலவிதமான ஹோமத்திரவியங்களையும் சிவமயமாக்கி அதற்குரிய மந்திரங்களோடு பஞ்சப்பிரம மந்திரமும் வியாகிருதியும் சேர்த்துச் சொல்லி அக்கினியில் ஹோமம் செய்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்பரிசாகுதி: யாகத்தில் உள்ள மூர்த்தி, மூர்த்தீஸ்வரன், மூர்த்தீஸ்வரி, மந்திரம், ஆகியவைகளைப் பூஜித்து ஹோமம் செய்த முறைப்படி மூல மூர்த்தியிடம் சென்று அந்தந்தஸ்தானங்களில் முறையே தொடர்புபடுத்தலாம்.

ஸ்ரோத்திர வந்தனம்: ஆசாரியர் மூர்த்திபர்கள் செய்த தொடர்புகளில் கூடுதல், குறைவு ஏற்பட்டால் அவைகளைக் கருணையினால் பூர்த்தியாக்கி அருள் செய்ய வேண்டும் என்று பிரார்த்தித்தலாம்.

ஆசாரிய பூஜை: குருமாருக்கும், சர்வசாதர்களுக்கும் உடை, உத்தரீயம், உஷ்ணீசம், உருத்திராக்ஷம், மோதிரம், விபூதிப்பை முதலிய உபசாரங்கள் கொடுத்து மகிழ்வித்தலாம்.

அக்கினி சம்யோஜனம்: பிரதான குண்டத்தில் பூஜை செய்து எடுத்த அக்கினி மூர்த்தி முதலானவைகளைப் பிரதான ஆசாரியர் மூலம் குண்டத்தில் சேர்த்தலாம்

பூரணாகுதி: ஓமத்தைப் பூர்த்தி செய்யப்படும் கிரியை.

தீபாராதனை: சோடசோபசார விசேட பூஜையாம்.

வேத கோசம்: வடமொழி வேதம் முதலியன ஓதல்; தமிழ் வேதம்.

ஸ்தூபி கும்பாபிஷேகம்: விமானங்களில் உள்ள ஸ்தூபிக்கு அபிஷேகம் செய்தல்.

மகாகும்பாபிஷேகம்: அர்ச்சகர், ஸ்தானிகர் ஒருவரை நந்திகணத் தலைவராகப் பூஜை செய்து, அவருக்கு வேண்டிய உபசாரங்கள் செய்து அலங்கரித்து, அவரது சிரசின் மீது பிரதான கடத்தை வைத்து, சர்வசாதகர், பிரதான குரு, மூர்த்திபர்கள் முதலியோர் கும்பத்தை தொட்டுக் கொண்டு; எஜமான்கள், பக்த ஜனங்கள் சூழ்ந்து புஷ்பாஞ்சலி, வேதம், தேவாரம், தோத்திரம், சங்கு, மங்கள வாத்தியம்,பேரி, மணி முதலிய வாத்திய கோசங்களுடன் சிவநாம பஜனைசெய்து பக்தியுடன்மெதுவாக வீதிவலம் வந்து, மூலாலயம் சென்று, ஆசனத்தின் மீது கும்பங்களை வைத்து, கும்பத்திற்கும் மூர்த்திக்கும் நாடிசந்தானம் செய்து தொடர்பேற்படுத்தி, உரிய முகூர்த்தத்தில் இறைவனை ஆவாகனம் செய்து, மூல மந்திரம் உச்சரித்துப் பதமந்திரத்துடன் பக்தர்கள் ஹரஹர என்ற சத்தம் முழங்க, வேத சிவாகமம், தேவார, புராண திருமுறைகளைப் பக்தர்கள் ஓத, சகலவாத்திய கோசங்களும் ஒலிக்க மகாகும்பாபிஷேகத்தைச் செய்து எஜமானர்களும் சகல ஜீவராசிகளும் உய்தி அடைய பிரார்த்தித்துச் செய்வதே மகாகும்பாபிஷேகமாகும். வர்த்தனி கும்பத்தை ஆவுடையாருக்கும், வித்நியேஸ்வரக் கும்பங்களை ஆவுடையாரைச் சுற்றிலும் அபிஷேகித்து, மகாநைவேத்திய உபசாரம் செய்து அகண்ட தீபம் வைத்துப் பிரார்த்தித்த பின்னர் தேவர்களின் பூசைக்காக மூன்றே முக்கால் நாழிகைக்கு கதவைச் சாத்தி வைக்கவும்.

தசதர்சனம்: கதவைத்திறந்து பசு, ஆசாரியர், வேதபாரகர், கண்ணாடி, பூரணகும்பம், தீபம், கன்னிகை, சன்னியாசி, சுமங்கலி, எஜமான், பக்தசனம், முதலியோரைச் சகலவாத்திய உபசாரங்களுடன் தனித்தனியே தரிசிக்கச் செய்தல்.

பிராயச்சித்த ஆகுதி: இது யாகத்தில் செய்வது.

ஆசார்ய உற்சவம்: குருவழிபாடு.

எஜமானுக்குப் பலப்பிராப்தி: எஜமானுக்கு கும்பாபிஷேகப் பலனை ஒப்புவித்தல்.

இன்னும் இதைப்பற்றிய விளக்க விரிவுகள் அநேகம் உண்டு. அவைகளை இன்னும் அறிந்தோர் வாயிலாகக் கேட்டுப் பேரானந்தப் பெரு வாழ்வு அடைவோமாக:

நன்றி: திருக்கேதீச்சரம், திருக்குடத் திருமஞ்சன மலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதங்களின் வழிவந்த இந்துப் பண்பாட்டு மரபுகள்

பாரதத்தில் ஆன்மிக சிந்தனை வளர்ச்சிக்கு அடிப்படையாகத் திகழும் வேதங்கள் இந்துப் பண்பாட்டு மரபுகளின் ஊற்றாகவும் விளங்குகின்றன. வேதங்கள் இந்துசமயத் திருநூல்கள் வரிசையில் முதனூல்கள் எனப் போற்றப்படுவன. அவை அறிவின் கருவூலம் உயர்ஞானச் சிந்தனைகளை உள்ளடக்கமாகக் கொண்டிருப்பதால் சமய தத்துவ சிந்தனைகளின் வளர்ச்சிக்கும் வளத்திற்கும் அவை அடிப்படையாக விளங்குகின்றன. இந்து சமயத் திருநூல்களின் வரிசையில் முதன்மை வாய்ந்த நூல்களாகிய வேதங்கள் இந்துப் பண்பாட்டினை வளம்படுத்திய வரலாற்றை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

இந்துப்பண்பாடு பற்றி நாம் சிறப்பாக ஆராயும் முன்பு, பண்பாடு பற்றிய விளக்கங்களையும் சிறப்பியல்புகளையும் முதற்கண் அறிதல் அவசியமாகின்றது. மனிதனின் கைவண்ணத்தைக் காட்டுவதே பண்பாடு என்ற விளக்கம் தரப்படுகின்றது. இதற்குரிய வேறு விளக்கங்களில், மனிதன் தன் தேவைகளை நிறைவு செய்து கொள்ள உருவாக்கிக் கொண்டதுதான் பண்பாடு என்பதும் குறிப்பிடத்தக்கது. ஓர் இனத்தின் பண்பாடு அந்நாட்டின் இலக்கியம், வரலாறு, சமயம், சமுதாயம், கலை, அறிவியல் முதலியனவற்றின் மூலம் விளக்கமுறுகின்றது. (செயராமன், மன், இரா, பாட்டும் பண்பாடும், 1978, பக் 2) பண்பாடு உடலைப்பற்றியதா அன்றி உயிரைப்பற்றியதா அன்றி உள்ளத்தைப் பற்றியதா அல்லது அகப்பொலிவா என்பன போன்ற வினாக்களுக்கு உறுதியான விடையளிப்பதும் சற்றுக் கடினமே. நிலத்தை நல்லவகையில் மற்றவர்களுக்குப் பயன் கொடுக்கும் வகையாகப் பண்படுத்துதல் போல மனதை மற்றவர்களுக்கு உதவும் வகையில், மற்றவர்களை வாழ்விக்கும் நெறியில், நலம் பேணும் வகையில் சிந்தனையைப் பயன்படுத்தி நம்மை நாம் பண்படுத்திக் கொள்வதும் பண்பாடு ஆகும். பண்பாடு மனிதனின் தன்மையை இயல்பாக வெளிப்படுத்துவதாகும். பண்பாட்டின் வகைகளும் வெளிப்பாடுகளும் சூழ்நிலை, சமூகம், உள்ளம் ஆகியவற்றைச் சார்ந்து உருவானவை. பண்பாடு புறத்தில் இவ்வாறு எனக் காட்ட முடியாதது. ஆனால் உள்ளத்தால் செயல்வழி காட்டும் ஒப்பற்ற ஒன்றாகும்: தனிமனிதன் சமூகத்திற்குத் தருவதும் சமூகம்தனிமனிதனுக்குஉணர்த்துவதும் பண்பாடு. மனிதனை மனிதனாகவாழவைப்பதுபண்

**கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்**
தலைவர், இந்து நாகரீகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

பாடு. பண்பாடும் பண்பாட்டின்வழி அமையும் நல் இயல்பும் உலகை வாழ வைக்கின்றன. பண்பாட்டு உணர்வு தனிமனிதன் தொடங்கி வீடு, நாடு, சமூகம், உலகம் என விரிந்து கொண்டே செல்லும் சிறப்புடையது. பண்பாடு பற்றிய இத்தகைய பொது விளக்கத்தின் பின்னணியில் இந்துப்பண்பாடு பற்றி நோக்குவதும் பொருத்தமாகும். இந்துப் பண்பாட்டின் நுட்பமான இயல்புகளைச் சமயத்தின் வழியாக தத்துவமரபின் வழியாக, கலை வழியாக, மொழிவழியாக நாம் அறிய முடிகின்றது. சமயம், தத்துவம், மொழி ஆகியவற்றின் அடிப்படையில் இந்துப் பண்பாட்டை வேதங்கள் வளம்படுத்தியுள்ளன. இந்துப் பண்பாட்டின் மூலாதாரம் தர்மமாகும். எனவே இந்து மதம், சனாதன தர்மம், வைதிக தர்மம், ஆகிய பெயர்களால் சுட்டப்பட்டது. இத்தகைய தர்மங்

(இதன் தொடர்ச்சி 101ம் பக்கத்தில்பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்த்தாப்தத்திற்கு முன் ஈழத்தில் வாழ்ந்த பிராமண குலங்கள் பற்றிய இலக்கியச் சான்றுகள்

கலாநிதி சி. க. சிற்றம்பலம்,
தலைவர், வரலாற்றுத்துறை
யாழ் பல்கலைக்கழகம்

ஈழம், தமிழகம் ஆகியவை பண்டு தொட்டு நாகரிக வளர்ச்சி கண்ட பிரதேசங்களாகும். ஈழத்தில் பௌத்த மதம் கி. மு. 3ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கால் கொள்ள முன்னர் தமிழகத்தை ஒத்த நாகரிக வளர்ச்சி கண்டவர்கள் ஈழத்து மக்களாவர். இருபகுதியினரும் இந்துக்களாகவும் வாழ்ந்தனர். எனினும் அக்கால இந்துமத நடைமுறைகள் ஆரிய வட இந்திய வேதநெறி கலவாத ஒன்றாகவே ஆதிகாலத்தில் இரு நாடுகளிலும் காணப்பட்டாலும் கூட வட நாட்டில் ஏற்பட்ட வேதநெறிக் கலாச்சாரம் தமிழகத்திலும் ஈழத்திலும் தென்கிழக்காசிய நாடுகளிலும் பரவத் தொடங்கியது. இதனால் இப்பிராந்தியங்கள் இக்கலாச்சாரத்தின் அம்சங்களைக் கைக்கொள்ளுவதில் அக்கறை காட்டினாலும் கூட நகரங்களிலும் முக்கிய வணிக மையங்களிலுமே இதன் தாக்கம் காணப்பட கிராமிய மட்டத்தில் பழைய நடைமுறைகளே காணப்பட்டன. எனினும் காலகதியில் கிராமியமட்டத்திலும் குறிப்பாக கிறிஸ்த்தாப்த காலத்திற்குப் பிற்பட்ட காலத்தில் இதன் தாக்கம் ஏற்படத் தவறவில்லை.

தமிழகத்தில் பண்டைய சுதேச இந்து முறைகள் வலுப்பெற்றுக் காணப்பட்டாலும் கூட வட இந்திய வேதநெறிக் கலாச்சார அம்சங்கள் மெல்ல மெல்ல இதனுள் கலக்கத் தொடங்க, இரண்டும் காலகதியில் சங்கமமாகும் நிலையும் காணப்பட்டது. ஈழத்திலோ எனில் வேதநெறிக் கலாச்சாரத்திற்கு எதிராகத்தோன்றி வளர்ந்த பௌத்த கலாச்சாரம் கி.மு. 3ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வலுவுடன் காணப்பட்டாலும் கூட ஈழக்கலாச்சாரத்தில் வேதநெறிக் கலாச்சாரப்பண்புகள் பௌத்தம் வரமுன்னரும் அதற்குப் பின்னரும் கலக்கத் தவறவில்லை. துரதிஷ்டவசமாக சங்க இலக்கியங்கள் போலன்றி ஈழத்துப் பௌத்த வரலாற்று நூல்கள் யாவும் பௌத்த கண்ணோட்டத்தில் எழுதப்பட்டதால் இத்தகைய வேதநெறிக் கலாச்சார அம்சங்கள், சுதேச இந்துக் கலாச்சார அம்சங்கள் ஆகியனவற்றை வெறுப்புடன் நோக்கத் தவறவில்லை. இந்நூல்களில் இவை 'தவறான வழிபாட்டு முறைகள்' என அடிக்கடி விளிக்கப்படுவதால், இவை பற்றிய செய்திகள் பலவற்றை இவை தரவும் தவறிவிட்டன எனலாம். இருந்தும் தரப்பட்ட செய்திகளை நோக்கும் போதும், தமிழகத்தில் சமகாலத்தில் வேதநெறிக் கலாச்சாரம் பெற்றிருந்த முக்கியத்துவத்தினை காணும்போதும் பெருமளவுக்கு ஈழத்துப் பிராமண குலங்களின் செல்வாக்குப் பற்றி அறிய முடிகிறது.

இக்கலாச்சாரத்தினை எடுத்து வந்த தூதுவர்களாக விளங்கியவர்கள் பிரதானமாகப் பிராமண குலத்தவரேயாவர். இவர்களின் பங்களிப்பில் பிரதானமாக இரு அம்சங்கள் உள. அரண்மனை அக்கால அரசியலமைப்புமுறையில் இவர்களுக்கு பிரதான இடத்தைக் கொடுத்தது. பட்டாபிஷேகம் அக்கால அரச முறையில் ஒரு முக்கிய அம்சமாக விளங்கியது. மன்னன் முடிசூடும் போதும் வேதநெறி வழியான பட்டாபிஷேகத்தைச் செய்வதன் மூலம் அம் மன்னனுக்கு பலம், அரசாளும் திறன், தெய்வங்களின் ஆசி, பாதுகாப்பு, நீடிய ஆயுள் கிடைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்ற நம்பிக்கை அக்காலத்தில் நிலவியது.
பட்டாபிஷேகத்தின் போது இதனை நடாத்
தியவர்களில் அச்சாணியாக பிராமண குலத்
தினைச் சேர்ந்த ' புரோகிதர் ' விளங்கினர்.
புனித நதிகள், நீர் நிலைகள் ஆகியனவற்றி
லிருந்து எடுத்து வரப்பட்ட நீரில் புலித்
தோலில் மன்னர் இருக்க சாவித்திரி, இந்
திரன், பிருகஸ்பதி, மித்திரன், வருணன்
ஆகியோரை உச்சரித்து அபிஷேகம் செய்யப்
படும் வைபவமே இதுவாகும். இப்புரோகிதர்
இவ்வாறு செய்ய அரசன் தான் தர்மத்தின்
வழி ஒழுகுவேன் என்றும், பிராமணர்களு
க்கு ஒரு தீங்கும் செய்யமாட்டேன் என்றும்
கூறக் கடமைப்பட்டவன் ஆவான். இப்
புரோகிதனே அரசநெறி தனைத்தாங்கப்
பல்வகைப் கிரியைகளையும் யாகங்களையும்
செய்யும்தகுதி பெற்றவனாகவும் விளங்கினன்.
உண்மையிலே அரசனின் குருநாதனாகவே
புரோகிதர் விளங்கினர். இவர்உதவி இன்றி
அரசன் மேற்கொள்ளும் கிரியைகளோ அன்றி
யாகங்களோ எவ்வித பலனையும் தரா. இப்
புரோகிதர்கள் அரண்மனையில் பிறப்பு இறப்பு
சம்பந்தமான கிரியைகள், அரசனின் கனவு
கள் அவை பற்றிய விளக்கங்கள், அரச
குலங்களின் மங்கலக் குறியீடுகள் பற்றிய
விளக்கங்கள் ஆகிய கடமைகளில் ஈடுபட்டி
ருந்ததோடு பலவகைச் சாத்திரங்களிலும்
கைதேர்ந்திருந்ததனுல் அரசனின் பிரதம
ஆலோசகர்களாகவும் அரசை ஒரு வகை
யில் வழிநடாத்துவதில் செல்வாக்குடையவர்
களாகவும் காணப்பட்டனர். இதனுல் வெறும்
சமயக் கிரியைகளில் மட்டுமன்றி அரசியல்
நடவடிக்கைகளிலும் ஈடுபட்டவர்களாகக்
காணப்பட்டனர்.

பௌத்தம் ஈழத்தில் கால்கொண்ட
பின்னர் இவர்களின் செல்வாக்குக் குறையத்
தொடங்கியது. ஆனுலும் அக்கால அரச
அமைப்பு முறையில் இவர்களின் கடமைக
ளைப் பௌத்த பிக்குமார் நிறைவேற்ற முடி
யாததால் தொடர்ந்தும் இவர்கள் செல்
வாக்கு அரண்மனையில் காணப்பட்டது.
எனினும் சங்க இலக்கியங்களில் அரசர்கள்
மேற்கொண்ட பலவகையான யாகங்கள்
பற்றிய குறிப்புக்கள் உள உ—ம். மது,
ரைக் காஞ்சியில் (491 - 95) பல்யாகசாலை
முதுகுடுமிப் பெருவழுதி என்று வரும் செய்தி
யாகங்கள் பலவற்றில் ஈடுபட்டிருந்த மன்
னர்கள் பற்றிய தகவல்களுக்கு ஓர் உரை
கல்லாகவே விளங்குகிறது. (Kuppuswamy
T V, 1978 ). ஈழத்திலும் பல்வகை யாகங்
கள் பற்றியும் அவற்றை நடாத்துவதில்
பெருமை கண்ட மன்னர் பற்றியும் விர
மான தகவல்கள் காணப்படாவிட்டாலும்
கூட ' யாகம் ' ' பிராமணர் இருந்து மந்தி
ரம் உச்சரிக்கும் மண்டபம் ' போன்ற குறிப்
புகள் இங்கும் இவை நடைபெற்றிருக்கலா
மென எண்ண வைக்கிறது பிராமணர்கள் ஆசி
ரியர்களாக, பல்வகைத் தொழிலில் ஈடுபட்
டவர்களாகவும் சங்க இலக்கியங்களில் வரும்
குறிப்புக்கள் போன்று (Kuppuswamy. T.V.
1978) ஈழத்துப் பாளி நூல்களிலும் குறிப்
புக்கள் காணப்படுகின்றன இத்தகைய குறிப்
புக்கள் பல்வகைக் காலங்களில் எழுதப்பட்
டாலும் கூட இவற்றை வெறுக்கும் பொத்த
நூல்களில் இவ்வினு சமயகுலங்கள் பற்றி
வரும் குறிப்புக்களாக இவை விளங்குவதால்
இக்காலத்தில் தவிர்க்கப்படாததொன்று
கவே இவை காணப்பட்டதாலே தான் இந்
நூல்களில் இவை இடம்பெற்றன என்று
எண்ணத் தோன்றுகிறது. சங்க இலக்கியங்
களில் பிராமண தோத்திரங்கள் பற்றியும்
குறிப்புகள் உண்டு. துரதிஷ்டவசமாக இவை
ஈழத்து இலக்கியங்களில் காணப்படவில்லை
ஆனுல் ஈழத்துப் பிராமிக் கல்வெட்டுகளில்
பலவகைக் தோத்திரங்கள் பற்றிய செய்தி
யுண்டு.

ஈழத்தின் வரலாற்றுக்காலம் கி. மு
3ஆம் நூற்றுண்டின் நடுப்பகுதியில் ஆரம்ப
மாகிறது. இதற்கு முன்னுள்ள பகுதி ஈழத்
தில் பிற்கால நாகரிக வளர்ச்சிக்கு வித்திட்ட
குடியேற்றங்கள் நடைபெற்ற வரலாற்றுதய
காலமாகும். இக்காலத்தில் வரும் விஜயன்
- பண்டுகாபயன் கதைகள் வெறும் ஐதிகங்
களே எனினும் இக்காலப்பகுதியிலே வரும்
பிராமண குலங்கள் பற்றி வரும் குறிப்புக்
கள் அவதானிக்கத்தக்கவையாகும். விஜயன்
குடியேற்றம் நடைபெற்றகாலம் கி. மு 6 ஆம்
நூற்றுண்டாகும். மகாவம்சம் விஜயனுடன்
உபத்திஸ்ஸ என்ற பிராமணன் வந்து அநு
ராதபுரத்தின் வடக்கே ' உபதிஸ்ஸகம '



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற குடியேற்றத்தினை அமைத்தது பற்றிக் குறிப்பதோடு ( M. V. vii : 44 ) இவனே விஜயனின் புரோகிதராகவும் விளங்கியதனையும் எடுத்தியம்புகிறது ( M V. viii 4-5) பின்னர் விஜயன் வாரிசுரிமை இன்றி இறந்தபோது முறைப்படி வாரிசுரிமையுடைய பண்டுவாசுதேவ இந்தியாவிலிருந்து வந்து அரசாட்சிப் பொறுப்பினை ஏற்குமளவிற்கு ஒரு வருட காலம் அரசினை நிருவகித்தவனும் இவனே. இந்த நூலில் உபதிஸ்ஸவுக்குப் பின்னர் மந்திரங்களிற் கைதேர்ந்த பிராமணர்கள் பற்றியும் அரண்மனையில் ஆலோசகர்களாக இவர்கள் இருந்தது பற்றியும் குறிப்புக் காணப்படுகிறது. ( M. V. ix : 2)

யாழ்ப்பாண வைபவ மாலையில் விஜயனின் காலத்தில் அனுராதபுர அரசின் நாலு திசைகளிலும் அதற்குப் பாதுகாப்பாக அமைக்கப்பட்ட ஆலயங்கள் பற்றி வரும் குறிப்புக்கள் துறைமுகப்பட்டினங்களான இவற்றில் பௌத்தம் ஈழத்திற்கு வரமுன்னர் நிலைத்திருந்த ஆலயங்கள் பற்றிய செய்திகளாக மட்டும் காணப்படுவது மட்டுமன்றி இவ்வாலயங்களில் கிரியைகளில் ஈடுபட்ட பிராமணர் பற்றியும் வரும் மறைமுகமான குறிப்புகளாகவும் அமைகின்றன எனலாம். இக்குறிப்பில் தவறுதலாகத் திரிகோணமலையிலுள்ள கோணேஸ்வரத்திற்குப் பதிலாகத் தம்பலகாமக் கோணேஸ்வரம் குறிக்கப்பட்டுள்ளது எனலாம். யாழ்ப்பாண வைபவ மாலை தரும் குறிப்பு பின்வருமாறு அமைந்துள்ளது.

> அரசாட்சியை ஆரம்பிப்பதற்கு முன்பே விஜயன் தன அரசுக்குப் பாதுகாப்பாக நாலு திக்கிலும் நாலு சிவாலயங்களை எழுப்பிக் கொண்டான. கீழ்த்திசைக்குத் தம்பலகாமம் கோணேஸ்வரர் கோயிலை நிறுவி மேற்றிசைக்கு மாதோட்டத்துப் பழுதுபட்டுக்கிடந்த திருக்கேதீச்சரம் சிவாலயத்தைப் புதுப்பித்து தென்திசைக்கு மாத்தறையில் சந்திரசேகரீச்சரன் கோயிலை நிறுவி, வடதிசைக்குக் கீரிமலைச் சாரலில் திருத்தம்பலேசுரன் திருத்தம்பலேஸ்வரி கோயிலையும் அதன் பக்கத்தில் கதிரை ஆண்டார். கோயிலையும் கட்டுவித்தான். (குல சபாநாதன். 1953 : 6 )

விஜயன் பின்னர் அரசு செலுத்திய மன்னர்களில் பண்டுகாபயன் பிரதானமானவன் ஆவான். இளமையில் அரச வித்தைகளில் இம்மன்னன் தேர்ச்சி பெறுவதற்காக இவனின் தாயான 'உம்மத சித்த' செல்வந்தனும் வேதங்களில் தேர்ச்சிபெற்றவனுமாகிய (போகவாவேத பராகோ) பண்டுலா என்ற பிராமணனிடம் இவனை அனுப்பியதாகவும் அரசனுக்குரிய வித்தைகளில் இவனைப்பயிற்றுவித்த 'பண்டுல' இவ்விளவரசனுக்கு அநுராதபுர அரசாட்சியை பெறுவதற்குத் தனது மாமன்மாருடன் போரிடுவதற்காக ஒரு பெரும்படையைத் திரட்ட ஒரு இலட்சம் நாணயங்களை அளித்ததாகவும் மகாவம்சம் குறிக்கிறது. (M . V X . 19 - 23); பின்னர் அநுராதபுரத்தில் அரசாட்சியை அமைத்தபோது இவன் பண்டுலவின் மகனாகிய 'சண்டல' என்ற பிராமணனை தனது புரோகிதராக நியமித்தான். (M · V X . 79). பிராமணர் வாழுவதற்கென தனியான குடியிருப்புகளையும் இவன் ஏற்படுத்திக் கொடுத்தான். (M .V X . 102) அநுராதபுரத் தலைநகரில் அமைக்கப்பட்ட இவற்றைப் பாளி நூல்கள் 'பிராஉற்மணவட்ட' என அழைக்கச் சங்க இலக்கியங்கள் இத்தகைய குடியிருப்புகளைப் 'பிராமணச்சேரி' என அழைப்பதோடு பிராமணர் இல்லங்களின் தூய்மை பற்றியும் வியந்து பேசுகின்றன (வித்தியானந்தன், சு . 1954 ; 135 – 148).

பண்டுகாபய மன்னன் காலத்தில் அமைக்கப்பட்ட கட்டிடங்களாகச் 'சிவிகஸாலா' 'சோதிஸாலா' ஆகியவை குறிக்கப்படுகின்றன. ( M V . vii ; 102) மகாவம்சம் இவை பற்றிய விளக்கங்களைத் தராவிட்டாலும் கூட இதன் உரை நூலாகிய வம்சத்தப்பகாசினியில் (மகாவம்சதிகாவில்) இவற்றுக்கான விளக்கங்கள் உள. 'சோதிஸாலா' என்ற பதத்திற்கு இரு விளக்கங்கள் உள. ஒன்று 'பிராமணர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து மந்திரம் உச்சரிக்கும் இடம்; மற்றது 'வைத்தியசாலை' என்பதாகும். சிவிகஸாலா' என்ற பதத்திற்கும்' இரு விளக்கங்கள் உள, அவையாவன 'சிவலிங்கத்தைக் கொண்டுள்ள வீடு' 'வைத்தியசாலை' என்பனவாகும். (V . S . P . T . : 207 ) இக் கட்டிடங்கள் பிற சமயக் கட்டிடங்களோடு சேர்த்து விளிக்கப்பட்டுள்ளதால் இவை சமயக் கட்டிடங்களே எனக் கூறி இவற்றுக்கு 'பிராமணர் இருந்து மந்திரம் உச்சரிக்கும் இடம்' சிவலிங்கத்தைக் கொண்டுள்ள வீடு' என்ற விளக்கங்களே பொருத்தமானவை எனப் பரணவித்தான கருதுவது ஏற்புடைய கருத்தாகும் (Paranavituna, S. 1929 )இதனால ஈழத்தில் சிவவணக்கத்திற்கான பிற இலக்கிய கல்வெட்டுச் சான்றுகள் இருப்பதால் இவ்வணக்கத்திலீடுபட்ட பிராமணர் மந்திரம் உச்சரித்துக் கிரியைகளை நடாத்துவதற்குத் தனியான ஓர் கட்டிட அமைப்பினை கி மு 4 ஆம் நூற்றாண்டளவில் அநுராதபுரத்தில் பெற்றிருந்தனர் என்பதை மேற்கூறிய தகவல் எடுத்துக் காட்டுகின்றன எனலாம். இக் கட்டிடம் பல யாகங்களைக் கூட நடாத்துவதற்கு உரிய கட்டிடமாகவும் இருந்திருக்கலாம். காரணம் இக்காலக் கல்வெட்டுக்களில் 'யாகம்' பற்றிய குறிப்புக்கள் உண்டு.

தேவநம்பியதீஸனின் ஆட்சியுடன் ஈழத்தின் வரலாற்றுக்காலம் ஆரம்பமாகிறது. இம்மன்னன் அககால இந்திய மன்னனாகிய அசோக சக்கரவர்த்தியுடன் நெருங்கிய உறவு கொண்டிருந்தான் இதன் வெளிப்பாடாகவே இருவருக்குமிடையில் தூதுக் குழுக்களின் பரிமாற்றமும் பௌத்தத்தின் வருகையும் அமைந்தது. அசோகனுக்கு அனுப்பிய தூதுக்குழுவில் தேவநம்பியதீஸனின் மருமகனாகிய அரித்தவுடன் இவனின் புரோகிதரும (துவஜ) இருந்ததாக மகாவம்சம் குறிக்கிறது. M . v . xi 20 - 26 )பௌத்த மதத்தின புனித மரமாகிய அரசமரத்தின் கிளை ஈழத்திற்கு அனுப்பப்பட்டபோது அதனுடன் சம்பந்தப்பட்ட கிரியைகளை நடாத்துவதற்கு எட்டுப் பிராமண குலங்களும் இங்கு வந்தது பற்றியும் மகாவம்சம் குறிக்கிறது. (M . v . xx : 2) பின்னர் ஈழத்தில் எட்டு இடங்களில் இக்கிளை நாட்டப்பட்டதாக மகாவம்சம் குறிப்பதை நோக்கும்போதும் இவை ஒரு சமயம் இவ் எட்டுப் பிராமண குலங்கள் வாழ்ந்த இடங்களாகவும் இருக்கலாம் எனவும் யூகிக்க வைக்கிறது. எனினும் இவ்விடங்களில் ஒரு சில பற்றி மகாவம்சத்திலே குறிப்பு வருகிறது. வட பகுதியிலுள்ள சம்புகோள துறைமுகத்திலிருந்து தலைநகரான அநுராதபுரத்திற்கு அரசமரக்கிளை விழாக் கோலமாக எடுத்து வரப்பட்டபோது இதற்கு மரியாதை செய்வதற்காக நிறுத்தி வைக்கப்பட்ட இடங்களில் ஒன்றாக 'பிராமணன் திவகவின்' கிராமம் குறிக்கப்படுகிறது. (M v xix : 37 ) இதே பிராமணர் இக்காலத்தில் சிற்றரசர்கள் போன்று செல்வாக்கு வாய்ந்த ஒருவராகவும் காணப்பட்டார். காரணம் ரோகணைப் பகுதி சிற்றரசுகளாகிய கதிர்காமம், சண்டனுகம ஆகியனவற்றின் மன்னர்கள் அரச மரக்கிளை நாட்டு வைபவத்திற்கு அழைக்கப்பட்டது போன்று இப்பிராமணரும் அழைக்கப்பட்டார். (M . v . xix : 33 ) இவர்களின் இடங்களில் அரசமரக்கிளை நாட்டப்பட்டது பற்றியும் மகாவம்சம் குறிப்பதால் அரசமரக் கிளையுடன் வந்த பிராமண குலங்கள் அநுராதபுரத்தில் மட்டும் அன்றி ஈழத்தின் பிறபகுதிகளிலும் குடியேறியிருக்கலாமென்பது தெளிவு. இத்தகைய இடங்களில் ஈழத்தின் தென்கிழக்குப் பகுதியிலுள்ள ரோகணைப் பிரதேசம் போன்று வட பகுதியிலுள்ள சம்புகோள பட்டினமும் அமைந்திருந்தது. தேவநம்பியதீஸன் தலைநகராகிய அநுராதபுரத்தில் பௌத்த மதத்திற்கான கட்டிடங்களை அமைப்பதற்கான எல்லைக் கோட்டை அமைத்தபோது அக்கோடு பிராமணராகிய 'திபவச' என்பவரது கோயிலை அண்டிச் சென்றதாக மகாபோதி வம்சம் குறிக்கிறது (MBV : 136)

ஆதி ஈழத்தின் பௌத்த மத வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றிய சிங்கள மன்னர்களாகிய காக்கவன்னதிஸ துட்டகைமுனு வட்டகைமுனு போன்ற பெருமன்னர் காலத்தில் பிராமணர் பெற்றிருந்த முக்கியத்துவம் பற்றியும் செய்திகள் உள. காக்கவன்னதிஸன் பிராமணப் புரோகிதர்களை வைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்தான். இவனின் புரோகிதனின் மகள் பிக்குனி சாசனத்தில் சேர்ந்ததாகத் தீபவம்சம் குறிப்பிடுகிறது. ( D.V. xviii : 20-22). அத்துடன் மிருந்தலைக்குக்கிட்டவுள்ள துவாரமண்டலத்தில் வாழ்ந்த 'குண்டல' என்ற பிராமணன் காகவன்னதீசன், துட்டகைமுனு ஆகியோரின் நண்பராகவும் குறிக்கப்பட்டுள்ளான். (M.v. xxiii: 24-26) அத்துடன் பிராமணனாக இருந்தாலும் கூட இவனை அக் காலத்தில் வாணிபத்தில் ஈடுபட்ட முக்கிய வணிகனாகவும் மகாவம்சம் குறிப்பிடுகிறது ( M.v. xxiii : 23-24). இதே நூல் துவாரமண்டல, உபதிஸ்ஸாகம ஆகிய இரு கிராமங்களிலிருந்து, 500 பேர் கொண்ட இரு பிராமணக் குழுவினர் பிக்கு சாசனத்தில் சேர்ந்ததாகவும் குறிப்பிடுகிறது. ( M.V. xvii : 59-60 ) துட்டகைமுனு மன்னன் காலத்தில் பிராமணர் உயர் சாதியினராக இருந்தாலும் கூடச் சமூக அமைப்பில் தாழ்நத சாதியினரான 'சண்டாளரையும்' வெறுக்கவில்லை என்பதனை எடுத்துக் காட்டும் விதத்தில் சில கதைகள் காணப்படுகின்றன. இம்மன்னனின் மகனாகிய இளவரசன் சாலியா சண்டாளப் பெண்ணாகிய அசோகமாலாவுடன் காதல் கொண்டு மணம் புரிய விரும்பியபோது திருமணத்திற்கு முன்னர் அப்பெண்ணின் உடலில் காணப்படும் மங்கலக் குறியீடுகளைக் கண்டறியத் தனது பிராமணரான (புரோகிதரை) அனுப்பி அவனும் அவ்வாறு கண்டறிந்தான் என இராசவாகினி கூறுகிறது. ( R.S.V. ii : 119 ) இதே நூல் திருமண வைபவம் பிராமணக்குருமாரால சடங்குகள் மூலம் நடைபெற்றதையும் துட்டகைமுனு மந்திரியாரோடு அதில் பங்குபற்றி அசோகமாலா தயாரித்தளித்த உணவையும் அருந்திச் சென்றதையும் குறிப்பிடுகிறது. அத்துடன் இவ்வாறு சண்டாளப் பெண்ணை மணப்பதற்குப் பதிலாக அரசகுடும்பத்திலோ அன்றிப் பிராமண குலத்திலோ சாலியா ஒரு பெண்ணை மணந்திருக்கலாமென்று வருந்தியதாகவும் குறிப்பிடத்தவறவில்லை. ( Ellawala, H 1969 ).

வட்டகாமினி காலத்தில் ( கி.மு 89-77) அரசியல் நீதியில் பிராமணர் நடவடிக்கைகள் பற்றிய குறிப்புகளும் காணப்படுகிறது. இம்மன்னன் அநுராதபுரத்தில் மன்னனாக ஆட்சிப் பொறுப்பை ஏற்று 5 மாதங்கள் ( கி.மு 103 ) கழிய முன்னர் ரோகணையில் இருந்த திஸா என்ற பிராமணன் இவனது ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சியில் ஈடுபட்டதையும் ( M.v. xxxiii : 37-44 ) இவனின் வலிமையை அறிந்த வட்டகாமினி இவனுடன் நேரடியாக மோதுவதை விரும்பவில்லை எனவும் மகாவம்சம் குறிப்பிடுவதிலிருந்து ரோகணைப் பிரதேசம் பிராமணர் செல்வாக்குக்கு உட்பட்ட பிரதேசமாக விளங்கியதும் கிளர்ச்சியை நடாத்துமளவுக்கு இவன் வலிமை பெற்றுக் காணப்பட்டதும் தெளிவாகின்றது ( M.v. xxxiii 33 ) இவனது கிளர்ச்சியோடு ஆதி ஈழத்தில் மிகப் பெரிய பஞ்சமும் ஏற்பட்டது. பன்னிரண்டுவருடம் நீடித்த இப்பஞ்ச காலத்தில் மழை பெய்யவுமில்லை. ( M.v. xxxiii : 37-40) இப்பிராமணன் மாவட்டங்களைச் சூறையாடியவனாகவும் பௌத்த சாசனத்திற்குத் தீங்கிழைத்தவனாகவும் விளங்கினான். ( S.M.v. :445-6 ) ராசவாகினியோ எனில் சிறீநாக என்ற பிராமணன் பௌத்த வழிபாட்டிடங்களை சூறையாடி அநுராதபுரத்தில் அரசாதிகாரத்தைச் சிலகாலம் பெற்றிருந்தான் எனக் குறித்து திரவியங்களைப் பெறுவதற்காக இவன் பௌத்த தாதுகோபங்களை இடித்த போது இவனின் கொடூரத்தை அறிந்த ஒருவரும் இவனிடம் இவனின் பிழையை எடுத்துக் கூறத் தயங்கியதாகவும் குறிப்பிடுகிறது. (Ellawalla, H 1959: 15) சோரநாக மன்னனின் (கி.மு. 62-50 ) மனைவியாகிய அனுலாதேவி தமிழ்ப் பிராமணராகிய நீலவுடன் கொண்ட காமஆசையினால அவனை அரசனுக்கியதற்கும் மகாவம்சத்தில சான்றுகள உள. ( M.v. xxxiv . 16-28) இத்தகைய சான்று சங்ககாலத்தில தமிழப் பிராமணப் புலவர்கள் இருந்து சங்கப்பாடல்களைப் பாடியது போல ஈழத்திலும தமிழில தேர்ச்சி பெற்ற பிராமணர் இருந்ததனை எடுத்துக் காட்டுகின்றது எனலாம.

இக்காலத்தில் பிராமணர் வெறும் இந்து மத நடைமுறைகளில் மட்டும தேர்ச்சி பெற்றிருந்ததோடு இன்றிப் பௌத்த சாஸ்திரங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிலும் நன்கு பாண்டித்தியம் அடைந்திருந் தமைக்கான சான்றுகளும் உள. 'பத்திகா மன்னன் காலத்தில்(கி மு 19-கி.பி.9) ஈழத்துப் பௌத்த பீடங்களில் மிகப்பழைமைதான மகாவிகாரைக்கும் அதன் பின்னர் வந்த அபயகிரி விகாரைக்கும் இடையே பௌத்த தத்துவங்களுக்கும், சாஸ்திரங்களுக்கும் கொடுக்கப்பட்ட வியாக்கியானங்களில் முரண்பாடு காணப்பட்டபோது அதனைத் தீர்க்கும் பொறுப்பை பல்வகை மொழிகளிற் பாண்டித்தியம் பெற்ற (பண்டிதோ-பாஷாந் தர-குசலோ) தீககாராயன என்ற பிரா மணனிடம் ஒப்புவித்ததாகச் சமந்தபசாதிகா என்ற நூல் குறிப்பிடுகிறது. (S.M.P. :418

இச் சந்தர்ப்பத்தில் வரலாற்றுக் காலத் திற்கும் கிறிஸ்தாப்தத்திற்கும் இடைப்பட்ட 250 ஆண்டுகாலத்தில் ஏற்பட்ட தமிழர் படையெடுப்புக்கள் பற்றியும் குறிப்பிடுதல் அவசியம். மகாவம்சம் இக்காலத்தில் 1/3 ஒரு பகுதியில் தமிழராட்சி அநுராதபுரத்தை மையமாக வைத்து நடைபெற்றதைக் குறிக் கிறது. அத்துடன் தமிழர்கள் பற்றிக் குறிப் பிடுகையில் இவர்கள் உண்மையான நெறி யான பௌத்த நெறியில் நம்பிக்கையில்லா தவர்கள் என்ற அடை மொழியுடன் குறிப் பதும் இவர்களில் அநேகர் இந்துக்களாக விளங்கினர் என்பதும் வெளிப்படை. இதனால் இவர்கள் ஆட்சியும் இந்துமத நம்பிக்கைகள் தழைத்தோங்கவும், இந்துக்குருமாரான பிரா மணர் செல்வாக்குடையவர்களாக விளங் கவும் வழி வகுத்தது எனலாம். முதலாவது தமிழ்ப் படையெடுப்பை நடாத்தியவர் களாக சேனன் குத்திகன் ஆகிய குதிரை வணிகரின் புத்திரர் குறிக்கப்படுவதோடு அநுராதபுரத்தில் 22 வருடம் இவர்கள் ஆட்சி செய்ததாகவும் கூறப்படுகிறது. (கி மு 177-155) பாவங்கள் நீரினால் பரிசுத்த மடைந்தது கழுவப்படுகின்றன என்ற நம் பிக்கையில் திளைத்த இவர்கள் மல்வத்து ஓயா நதியை அநுராதபுர நகரை அண்மித்து ஓடத் திசை திருப்பியவர்களாகவும் குறிக்கப்படு வது இவர்களின் இந்துமத அனுஷ்டானங்களை எடுத்துக் காட்டுகிறது எனலாம். தமது அன்றுட சமயக் கடமைகளை செய்யவே இவ்வாறு நதி நீரைத் திசை திருப்பினர் எனலாம். பின் வந்த எல்லாளன் ஆட்சி (கி மு.145-101) 44 வருடம் நீடித்தது. (M.v XXI: 13-14) நீதி தவறாத மன்னன், எனப் பாளி நூல்கள் இவனைக் குறிக்கும் நேரத்தில் பௌத்த நெறி வழி ஒழுகாதவன் எனவும் குறிப்பது இவனுக்கு இந்து மதத் திலிருந்த ஈடுபாடு தெரிகிறது. மூன்றாவது படையெடுப்பு வட்டகாமினி மன்னன் காலத் தில் நடைபெற்றது. இதில் ஈடுபட்டவர்கள் பாண்டி நாட்டிலிருந்து வந்த ஏழு தமிழர் களாவர். இவர்களில் இருவர் நாடு திரும்ப ஐவர் மாறிமாறிப் 14 வருடமும் 7 மாதமும் ஆட்சி செய்தனர். இவர்கள் முறையே புல உறத்த, பசிய, பணயமாறக, பிலியமாறக' தாதிக ஆகும். இவர்களைப்பஞ்ச திராவிடர் எனவும் மகாவம்சம் குறிக்கிறது. (M.v.XX XIII:54-61)

மேற்கூறிய செய்திகள் பிராமணர் பற்றி ஈழத்துப் பௌத்த நூல்களிற் காணப்படு வனவே. எனினும் அவர்களின் வைதிகநெறித் தொழில் முறைகள் பற்றிய விரிவான தக வல்கள் இவற்றில் இடம்பெறவில்லை. காரணம் பௌத்த குருமாருக்கு இவற்றில் ஈடுபாடு இருக்காமையே. எனினும் இவை பற்றிச் சங்க நூல்களில் வரும் குறிப்புகள் ஈழத்துப் பிராமண குலங்களின் ஒழுக்க நெறிகளையும் சரிவர அறிந்து கொள்ள உதவும். ஆகையால் இவை பற்றிச் சில குறிப்புக்கள் கூறுவது அவசியமாகிறது. (வித்தியானந்தன், சு. 1654). புறநானூறு அந்தணரை ,நான்மறை முதல்வர்' அறி தொழிலந்தணர் எனக் கூற, திருமுரு காற்றுப்படை

> 'மந்திரம் விதியின் மரபுளி வழாஅ
> வந்தணர் வேள்வி யோர்க் கும்மே
>
> (திருமுருகு. . . 95-96)

எனக் கூறுவதன் மூலம் வேதச் சடங்குகளைத் தவறாது கடைப்பிடிப்பவர்கள் இவர்கள் என் கின்றது. தொல்காப்பியம் அந்தணரின் அறு தொழில்களாக (1) வேதமோதல் (2)வேதம் கற்பித்தல் (3) வேதத்துடன் சம்பந்தமான கிரியைகளைச் செய்தல் (4) பிற கிரியைகளை நடாத்துதல் (5) பிறருக்குத்தானம் வழங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தல் (6) தானத்தினை ஏற்றல் ஆகியன வற்றைக்குறிப்பிடுகின்றது. (Kuppuswamy, T.v.1978) பிராமணர் இருப்பிடங்கள் பற்றி மகாவம்சம் குறிப்பிட்டாலும் கூட பெரும்பாணாற்றுப்படையில் அவை எவ்வாறு இருந்தன என வரும் வர்ணனை அவற்றின் தூய்மைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாக அமைகின்றது இதிலே கோழி, நாய் ஆகியன அங்கில்லை எனவும், ஆனால் அவர்கள் வளர்க்கும் கிளி கூட வேதப்பயிற்சி பெற்றுள்ளது எனவும் போற்றப்படுகிறது.

> ' செழுங் கன்றியாத்த சிறுதாட் பந்தர்ப்
> பைஞ்சேறு மெழுகிய படிவ நன்னகர்
> மனையுறை கோழியொடு ஞமலி துன்னாது
> வளைவாய்க் கிள்ளை மறைவிளி பயிற்று
> மறை காப்பாளர் உறை பதி.

# உசாத்துணை நூல்கள்


1. யாழ்ப்பாண வைபவ மாலை. 1953. குலசபாநாதன் (பதிப்பு) கொழும்பு.
2. வித்தியானந்தன் சு. 1954. தமிழர் சால்பு. கண்டி.
3. D. V. Dipavamsa 1959. (Ed. & Trans) Law B. C. Ceylon Historical Journal: Vol III. Colombo.
4. Ellawalla, H. 1959. Social History of Early Ceylon (Colombo)
5. Kuppuswami, T. V. 1978 'Brahmins and Brahmanism in Sangam Literature' Bulletin of the Institute of Traditional Cultures,, Madras. July - December pp. 131 - 164
6. M. B. V. Mahabodhivamsa 1891. (ed) Strong, A. S. P. T. S. (Lond.)
7. M. V. Mahavamsa 1960. (Ed. & Trans) Geiger, W. Colombo.
8. Paranavitana, S. 1929. 'Re-Buddhist religious beliefs in Ceylon J. R. A. S (C. B) xxx. No. 82. (pp. 302 - 28)
9. R. S. V. Rasavahini. 1901, 1899. (Ed) Sarana Tissa Thera, Part i 1901, Part II 1899, (Colombo)
10. S. M. P. Samantapasadika 1915 (Ed) Ekanayaka 1915 U. P. Vol I (Colombo).
11. S. M. V. Sammohavinodani, 1923 (Ed) Buddhadatta Thera P. T. S. (Lond).
12. V. S. P. Vamsatthappakasini (Mahavamsa Tika) 1935, 1936 (Ed) Malalasekara G. P. P. T. S.
13. Vol I. 1936, Vol II 1935 (Lond ).




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவுப்பகுதியின் இடஞ்சார்பு அபிவிருத்தித் திறமுறைகள்

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
புவியியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணக் குடாநாடு தனித்த ஒரு புவியியற் பிரதேசமாகக் காணப்படினும் நுணுக்கமாக நோக்கின், தீவுப்பகுதி, வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், பெரிய யாழ்ப்பாணம் போன்றவை தமக்கேயுரிய புவியியற் பண்புகளையும், அபிவிருத்தியில் பிரச்சனைகளையும் கொண்டு காணப்படுகின்றன. ஒரு பிரதேசத்தில் அபிவிருத்தியில் எவ்வாறு துறைசார் அபிவிருத்தி முக்கியமோ அதே அளவு அப்பிரதேசத்தின இடஞ்சார்பு அபிவிருத்தியும் முக்கியமானதாகும் இரு துறைகளுக்கும இடையே நெருங்கிய தொடர்பற்ற அபிவிருத்தித் திட்டம் வெற்றிதரா. மேலும் தரமான, சரியான, இடஞ்சார்பு அபிவிருத்தியுடன், பௌதிக அபிவிருத்தித திட்டமும சேரும்பொழுதுதான் குறிப்பாக அவ்வப் பிரதேசங்களில காணப்படும் இயற்கை வளங்கள் நலல முறையில பயன்பாட்டுக்கு உடபடுத்தலாம்.

தீவுப்பகுதி பொருளாதார -சமூக ரீதியில் நீண்டகாலமாகப் பின்தங்கி நின்று யாழ்ப்பாண நகருக்கும், தீவுப்பகுதிககும் 1961 ஆம் ஆண்டு வீதி அமைக்கப்பட்ட பின்னரே ஓரளவு அபிவிருத்தியடையத் தொடங்கியது. தீவுப்பகுதி மக்கள் மத்தியில் ஏற்பட்ட அபிவிருத்திக்கு ஏற்ப பிரதேச வளர்ச்சியடையவில்லை இதனால அபிவிருத்தியில் ஓர் இடைவெளி ஏற்பட்டுள்ளது இந்நிலை காரணமாக சமூக- பொருளாதார ரீதியில விருத்தியடைந்த குறிப்பாகக் கல்வியில் முன்னேறிய குடும்பங்கள் வர்த்தகத்தில் முன்னேறிய குடும்பங்கள் தீவுகளிலிருந்து யாழ்ப்பாண நகருக்கு இடம் பெயர்ந்து செல்கின்றன. குடாநாட்டுக்குள் எவ்வாறு தீவுப்பகுதி தனிப் புவியியல் பண்பைக் கொண்டுவிளங்குகின்றதோ அவ்வாறே தீவுகள் ஒவ்வொன்றினதும் அபிவிருத்திப் பிரச்சனைகள் தனித்தன்மை கொண்டனவாகக் காணப்படுகின்றன.

இத்தீவுகளின் பொருளாதாரம் 1960 களுக்கு முன்னர் விவசாயம், மீன்பிடி, குடிசைக்கைத்தொழில்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இன்று முதனிலைத் தொழில்களில் கிடைக்கும் வருமானத்தின் முக்கியத்துவம் குறைவடைந்து வர்த்தகமும், பிறநாடுகளிலிருந்து உழைத்து அனுப்பும் பணமும், அரசசேவைகளிலிருந்து கிடைக்கும் பணமும் முக்கியத்துவம் அடைந்துள்ளன விவசாயமும மீனபிடியும் இன்றும் பிரதான தொழில்களாக இருப்பினும் விவசாய நடவடிக்கை குறைவடைந்து கொண்டு நிச்சயமற்ற தன்மைககுச் செல்வதையும் காணமுடிகின்றது. விவசாயத்தில் புதிய நுட்பங்கள், புதுப்பயிர்கள், நிலம் துண்டாடப்படுவது நிறுத்தப்பட்டு அவற்றினை இணைக்கும், முயற்சிகள் மேற்கொளளபபடாவிடின தீவுபபகுதியின் விவசாய நடவடிக்கைவருங்காலத்தில விழச்சியுறலாம. ஆயினும விவசாயத்தில் தங்கியிருப்போரின எண்ணிக்கை குறைந்து வருவது நல்லதொரு போக்கெனலாம். ஏற்கனவே நயினாதீவு, எழுவைதீவு, நெடுந்தீவு போன்ற இடங்களில விவசாய நடவடிக்கை மிகவும குறைவுற்று வர்த்தக, சேவைத் தொழில்களில ஈடுபடுகின்றனர். வேலணைத் தீவு, அனலைதீவு ஆகியவற்றில் இன்றும் விவசாயம ஓரளவு முக்கியம பெற்றுள்ளதெனலாம்.

தீவுப்பகுதி மீன்பிடியில் பாரம்பரிய மீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிக் குடியிருப்புக்களே காணப்படுகின்றன தமிழ மீன்பிடிக் குடியிருப்புக்கள் குடா நாட்டில் அராலி, கொழும்புத்துறை, பெருநிலத்தில் பூநகரியிலும் காணப்படுகின்றன. முக்குவ இனத்தைச் சேர்ந்த மீன்பிடி மக்கள் வேலணை தெற்குக் கடற்கரைப் பகுதியில் வாழ்கின்றனர். தீவுப்பகுதி மீனவர்கள் பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கியவர்களாகவும், மிகவும் பழைய தொழில் நுட்பங்களைக் கையாளுபவர்களாகவும் இருக்கின்றனர். பண்ணைப்பாலம் அமைக்கப்பட்ட பின்னர் குடாநாட்டைச் சேர்ந்த மீனவர்கள் குறிப்பாக நாவாந்துறை, கரையூர் மீனவர்கள், மண்டைதீவு அல்லைப்பிட்டிக்கு இடம் பெயர்ந்து ஈடுபடுவதுடன் குறிப்பிடத்தக்க தொகையினர் அங்கு நிரந்தரமாக வாழ்ந்தும் வருகின்றனர். புங்குடுதீவு, நெடுந்தீவு பகுதிகளுக்கு பருவகால மீனவ இடப் பெயர்வுகள் இடம்பெறுகின்றன யாழ்ப்பாணம், நவாலி மற்றும் வலிகாமம் மேற்குப் பிரிவைச் சேர்ந்த இறால் தொழிலாளர்கள் பண்ணை, புங்குடுதீவு கடற்பரப்புகளில் தினசரி தொழில் செய்கின்றனர்.

தீவுப்பகுதியின் குடிசன இயக்கத்தில் குடிவெளியேற்றம் முக்கியமான அங்கமாகவுள்ளது. 1950 - 60 ஆண்டுகளில் நெடுந்தீவு, புங்குடுதீவு மற்றும் தீவுகளில் இருந்து குறிப்பாக வருமானம் குறைந்த விவசாயக் குடும்பத்தினர் பெருநிலப்பகுதி குடியேற்றத்திட்டங்களுக்கு இடம் பெயர்ந்தனர். இதேகாலத்தில் ஊர்காவற்றுறை, கரம்பன், நாரந்தனையைச் சேர்ந்த குறிப்பாக சமூக -பொருளாதார ரீதியில் முன்னேறிய கத்தோலிக்க மக்கள் யாழ்ப்பாண நகரப் பகுதிக்கும் கொழும்புக்கும் இடம்பெயர்ந்தனர். 1970 களின் பின்னர் குறிப்பாக நயினாதீவு, புங்குடுதீவு வேலணையைச் சேர்ந்த மத்திய தர குடும்பங்களும் சேவைத்தொழிலில் ஈடுபட்ட பிரிவினரும் பெரிய யாழ்ப்பாணப் பகுதிக்கு இடம்பெயர்ந்து கொண்டிருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகவுள்ளது. ஆரம்ப காலத்தில் தீவுப்பகுதியின் பொருளாதார பின்னடைவே இடப்பெயர்வுக்குக் காரணமாக அமைந்தது. ஆனால் இப்பொழுது பொருளாதார ரீதியில் முன்னேறிய குடும்பங்களே குடிவெளியேற்றத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். இந்த பொருளாதார ரீதியில் முன்னேறிய குடும்பங்கள் தீவுப்பகுதியை அடிப்படையாகக் கொண்டு பொருளாதாரத்தில் முன்னேறாது வெளிப் பொருளாதாரத்தின் மூலமே முன்னேறியவர்களாக உள்ளனர். இதனால் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு ஏற்ப உள்ளூர் அபிவிருத்தி ஏற்படாத காரணத்தால் இவர்கள் பின்தங்கிய கிராமிய வாழ்க்கையிலிருந்து விலகி நகர வாழ்வை நாடுகின்றனர்.

தீவுப்பகுதியின் இடஞ்சார்பு அபிவிருத்தியில் பிரதான பிரச்சனையாக இருப்பது எல்லாத் தீவுகளுக்கும் பொதுவான தொரு திட்டத்தைத் தயாரிப்பதும், அதில் ஒவ்வொரு தீவையும் சேர்த்துக்கொள்வதாகும். இங்கு தீவுகள் ஒவ்வொன்றும் தனித்தனியாகஇருப்பதும், போக்குவரத்துப் பிரச்சனை காணப்படுவதும், நெடுந்தீவு, மிகவும் தொலைவில் தனிமைப்பட்டு இருப்பதும் இடஞ்சார்பு அபிவிருத்திப் பிரச்சனைகளை உருவாக்குகின்றன.

இப்பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்தியில் விவசாயம் எதிர்காலத்தில் அதிகளவு பங்கை வகிக்கக்கூடியதாக இல்லை. இதனால் சேவைத்தொழில் வருமானத்தை அடிப்படையாகக்கொண்ட விவசாயச்சார்பற்ற கிராமக் குடியிருப்புகளை அல்லது நகரக் குடியிருப்புகளை விருத்திசெய்ய வேண்டியதாகவுள்ளது. நிலப்பயன்பாட்டில் வாழிட அபிவிருத்தியும் அத்துடன் தொடர்புடைய மெய்யாதன அபிவிருத்தியிலேயே முக்கிய இடத்தைப் பெறவேண்டும்.

தீவுப்பகுதியின் இடஞ்சார்பு அபிவிருத்தியில் பின்வரும் திறமுறைகள் முக்கியஇடம் பெறல் வேண்டும்.

1. தீவுகளின் சமூக- பொருளாதார வளர்ச்சிக்கு தீவுகளுக்கும்- குடா நாட்டிற்கு மிடையே போக்குவரத்துத் துறையில் அபிவிருத்தி காணப்படவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. தீவுகளுக்குள் பொதுவாக இருந்து வரும் சமூக- பொருளாதார உறவினை மேலும் வலுப்படுத்த தீவுகளுக்கிடையிலான கடல்வழி, தரைவழிப் போக்குவரத்து அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்

111. தீவுப்பகுதிகளில் இடஞ்சார் அபிவிருத்தியைத் துரிதப்படுத்த குடிசன மீள்பரம்பல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்,

iv. தீவுப்பகுதிகள் எல்லாவற்றிற்கும் பொதுவானதொரு சேவை நிலையம் விருத்தி செய்யப்பட வேண்டும்.

v. ஒவ்வொரு தீவின் குடிசனத் தொகை, பொருளாதாரப் பண்பிற்கு ஏற்பசேவை நிலையங்கள் விருத்தி செய்யப்பட வேண்டும்.

vi. வேலணைத்தீவின் கிழக்குக்கரைப் பகுதியில் புதிய குடியிருப்புகளும் நகர்களும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

vii. ஊர்காவற்றுறை நகரம், புதிய முறையில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

viii. புதிய குடியிருப்புகளை அபிவிருத்தி செய்வதற்கும் போக்குவரத்து, மின்சாரம், குடிநீர் விநியோகம் போன்றவற்றின் வளர்ச்சிக்கும் புதிய பல பாதைகள் திறக்கப்பட வேண்டும்.

iX. தீவுப்பகுதியில் காணப்படும்குறித்த சில நிலப்பகுதிகளை குறிப்பிட்ட தேவைகளுக்கு ஒதுக்கும் நிலப் பயன்பாட்டுக்கொள்கை கடைப் பிடிக்க வேண்டும்.

வனப்புக்கும் சூழல் பாதுகாப்புக்கும், இயற்கை இடஞ்சார் அபிவிருத்தியில் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்.

தீவுப்பகுதி சமூகப் பொருளாதார ரீதியில் நீண்டகாலமாகப் பின்நின்றதற்குக் காரணம், இது குடாநாட்டுடன் போக்குவரத்துத் துறையில் கொண்டிருந்த நிலையாகும். தீவுப்பகுதியின் அபிவிருத்திக்கு இதனைக்குடாநாட்டுடன் தொடர்புபடுத்தும் போக்குவரத்துப் பாதைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இதில் வேலணைத்தீவிற்கும் குடாநாட்டிற்கும் அராலித்துறை வழியாகப் பாதை நிர்மாணிக்கப்பட வேண்டும். 1950ம் ஆண்டுகளுக்கு முன்னர், வேலணைக்கும் குடாநாட்டிற்கும் இடையேயான போக்குவரத்தில் இப்பாதை முக்கியத்துவம் பெற்றிருந்தது. பண்ணைப்பால அமைப்பின் பின்னர் இதன் முக்கியத்துவம் குறைவடைந்தது. 1986, 1987ம் ஆண்டுகளில் பண்ணைப்பாலம் தீவுப் பகுதிகளின் போக்குவரத்துக்கு மூடப்பட்ட போது தீவுப்பகுதி மக்கள் அராலித்துறை வழியாகவே யாழ்ப்பாணப் போக்குவரத்தை மேற்கொண்டனர். இக்காலப் பகுதியில் அராலிப்பகுதியில் இருந்து 300 அடி தூரமும் வேலணைப்பகுதியில் 100 அடி தூரம் அரசாலும் வேலணைப் பகுதியிலிருந்து 750 அடி தூரம் பொதுமக்களாலும் பாதை அமைக்கப்பட்டது. 1987 ஆம் ஆண்டு யூலைக்குப் பின்னர் இப்பாதை வேலை நிறுத்தப்பட்டு இன்று கைவிடப்பட்டு நிலையில் இருப்பதுடன் அமைக்கப்பட்ட பாதையும் முழுமையாக நிறைவேற்றப் படாமையால் வானிலையால் தாக்குண்டும் சமூக விரோதிகளால் பொருட்கள் அகற்றப்படும் நிலையிலும் காணப்படுகின்றது. இப்பாதை அமைப்பில் தீவக அபிவிருத்திக்கழகம் எடுத்தமுயற்சிகள் வரவேற்கத்தக்கன.

இப்பாதை அமைக்கப்படுமாயின் தீவுகளுக்குப் பல நன்மைகள் கிட்டும். இது பண்ணைப் பாதைக்கு மாற்றுப்பாதையாக வருவதுடன் தீவுப்பகுதிகளையும் வலிகாமம் மேற்கு நகரங்களான சங்கானை, மானிப்பாய், பண்டத்தரிப்பு ஆகியவற்றுடன் நெருங்கின சமூகப் பொருளாதாரத் தொடர்புகளை வளர்க்கக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடியதான வாய்ப்புக்கள் ஏற்படும். அராலிப்பாதை வழியாக வேலணையிலிருந்து பண்டத்தரிப்பு, 16 கிலோ மீற்றர் தொலைவாக இருக்க, வேலணையிலிருந்து யாழ்ப்பாணம் வழியாகப் பண்டைத்தரிப்பின் தூரம் 27 கிலோ மீற்றராக உள்ளது. ஆகவே இப்பாதை அமைக்கப்படுமிடத்து வலிகாமம் பகுதிக் தொழிலாளர் தீவுப்பகுதிக்குச் சென்று வரும் நிலை தோன்றுவதுடன் மற்றும் நயினாதீவுக்குப் போகும் யாத்திரிகர்களின் எண்ணிக்கையும் பல மடங்காக அதிகரிக்கலாம்.

வேலணைத்தீவையும் அராலியையும்பிரிக்கும் கடற்பரப்பு ஒரு மைலுக்கு சற்றுமேலாக இருப்பதுடன் ஆழமற்ற ஒரு பரவைக் கடலாக உள்ளது. இப்பாதை அமைப்பால் அராலிக் கடற் பகுதியில் மீன்வளம் குறையலாம் என்ற கருத்தை அராலி மீனவர்கள் முன்வைத்துள்ளனர். என்பது குறிப்பிடத்தக்கது எனினும், மீனவ சமூக நலன் பேணப்படக் கூடிய முறையில் இப்பாதை அமைக்கப்பட வேண்டும். அவ்வாறு அமைப்பது சிரமமல்ல.

தீவுகளுக்கு இடையேயான கடல்வழி தரைவழிப் போக்குவரத்துக்களின் விருத்தியில் தான் தீவுகளின் ஒருமைப்பாடு பெருமளவில் தங்கி உள்ளது. இவ்வளர்ச்சியின் மூலம் ஏற்கனவே இருந்துவரும் சமூகப் பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவதுடன் மேலும் நிலைப்படுத்தலாம். இதற்குப் பின்வரும் பாதைகள் இறங்குதுறைகள் அமைப்பதில் கவனம் எடுக்கப்படவேண்டும்.

1. மண்டைதீவு - அல்லைப்பிட்டிப் பாதை, இப்பாதை தற்போது அபிவிருத்தியடையாத நிலையில் உள்ளது. இதனை எல்லா வானிலைப் பருவங்களிலும் பெரிய வாகனங்கள் குறிப்பாகப் பேருந்து வண்டிகள் போக்குவரத்துச் செய்யக் கூடிய பெரிய பாதையா அமைக்க வேண்டும் இப்பாதை திருத்தியமைக்கப்படின் வேலணைத்தீவையும் மண்டைதீவையும் இணைக்கவும் இவைகளுக்கூடாகப் போக்குவரத்து நடக்கவும் வழிவகுக்கும். தற்போது வேலணைக்கும் மண்டைதீவுக்குமிடையே பொதுப்போக்குவரத்து வசதிகளின்மை குறிப்பிடத்தக்கது.

2. காரைதீவு-நாரந்தனைப் பாதை இப்பாதை வேலணைத்தீவையும் காரைதீவையும் பாலமுனை-தோப்புக்காடு ஆகிய இரு இடங்களையும் இணைப்பதன்மூலம் உருவாக்கலாம். இந்நீரிணை சற்று ஆழமாக இருப்பினும் மிக ஒடுக்கமாக இருப்பதனால் இப்பாதை அமைப்பது சிரமம் அன்று. இப்பாதை அமைக்கப்படின் இவ்விரு தீவுகளுக்கு மிடையேயான போக்குவரத்து ஏற்படுதப்படுவத்துடன், ஊர்காவற்றுறை நகரை வலிகாமம் பகுதிகளுடன் நேரடியான வீதிப் போக்குவரத்தால் இணைக்க முடியும், இதன்மூலம் நலிவுற்றிருக்கும் ஊர்காவற்றுறை நகருக்குப் புத்துயிர் கொடுக்க முடியும். மேலும் காரைதீவு மக்களையும் மீண்டும் தீவுப்பகுதியின் செல்வாக்குக்கீழ் கொண்டுவரலாம்.

3. எழுவைதீவு - உறுண்டமுனைப் பாதை. உறுண்டிமுனையில் இறங்குதுறை அமைக்கப்பட்டு எழுவைதீவுக்கும் உறுண்டிமுனைக்கும் இடையே கடற்போக்குவரத்து வசதி விருத்தியாக்கப்பட்டால் எழுதீவு மக்கள் கூடிய பலனைப் பெறுவர்.

4. அனலைதீவு - கண்ணகியம்மன் இறங்குதுறை. கண்ணகியம்மன் இறங்குதுறை அமைக்கப்படின் அனலைதீவுக்கும் வேலணைக்குமிடையேயுள்ள போக்குவரத்து வசதி அதிகரிக்கும். இதனால் இத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திவின் ஒதுக்குத்தன்மை குறைவடையலாம்.

5. குறிக்கட்டுவான் – நயினாதிவு. இவ்விரு இறங்குதுறைகளுக்குமிடையே வாகனங்களை எடுத்துச் செல்லக்கூடிய பாதைச்சேவைகள் ஈடுபடுத்தப்பட வேண்டும். இதன்மூலம் நயினாதிவுக்கு யாத்திரிகர்கள் நேரடியாகப் போக்குவரத்துச் செய்யும் வாய்ப்புக் கிட்டும். இதன்மூலம் இத்தீவின் பொருளாதாரம் மேம்படலாம்.

தீவுகளின் இடஞ்சார்பு அபிவிருத்தியில் குடிசனமீள் பரம்பல் எவ்வளவு முக்கியமானது என விளைவுமிடத்து வேலணைத்தீவில் மாத்திரம் குறிப்பிடத்தக்க மீள்பரம்பல் நடவடிக்கை மேற்கொள்ளுவதற்கேற்ற சூழ்நிலை காணப்படுகிறது. ஏனைய தீவுகள் பரப்பில் மிகச்சிறியனவாக இருப்ப தனாலும் நெடுந்தீவு மிகத்தொலைவிலும் குடிசனப் பிரச்சினை இன்றி இருப்பதாலும் குடிசனமீள் பரம்பல் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டிய நிலை ஏற்படாது. வேலணைத்தீவில் கிழக்கு அரைப்பகுதியில் குடிசனமீள் நடவடிக்கை மூலம் காணி அபிவிருத்தி நடவடிக்கைகளுடன் வாழிடத் தேவைக்கான காணிப் பற்றுக் குறையையும் ஓரளவு தீர்க்கமுடியும். இப்பகுதியில் குடியிருப்புக்களை விருத்தியாக்கக்கூடிய நிலப்பரப்புகள் நன்னீர் வசதியுடன் காணப்படுவதால் குடியிருப்பு விருத்திக்கு இவற்றைப் பயன்படுத்தலாம். வேலணைத்தீவில் குறிப்பாகத் தெற்குப்பகுதி குடிநெருக்கம் மிக்கதாகவும் சமூகப்பொருளாதார ரீதியில் மெலிந்தோர் பிரிவினரைக் கூடுதலாகக் கொண்டதாகவும் உள்ளது. இதனால் வேலணைத்தீவின் தெற்கு, மேற்குப் பகுதிகளில் இருந்து வேலணைத்தீவின் கிழக்குப் பகுதிக்கு இடம் பெயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும். சாட்டி, மணியங்காடு, மண்கும்பான், அல்லைப்பிட்டி ஆகிய இடங்களில் புதிய குடியிருப்புகளை அமைக்கக்கூடிய இடப்பரப்புகள் காணப்படுகின்றன. ஆயினும் மணல் அகற்றுதல் காரணமாக இவ்வசதியுள்ள பரப்புகளும் மீள் பரம்பலுக்கு பொருத்தமற்றதாகலாம்.

தீவுப்பகுதியின் இன்றைய குடிசனத்தொகை 85, 000 க்கு மேற்பட்டுள்ளது. இந்த நூற்றுண்டின் இறுதியில் ஒரு லட்சம் மக்கள் வாழும் பிரதேசமாக இருக்கும். இப்பிரதேச மக்களின் பல்வேறு சமூக பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடியதொரு சேவை நிலையமாக வேலணை வங்களாவடி விருத்தியாக்கப்படல் வேண்டும். யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்தில், இது யாழ்ப்பாணம், கொடிகாமத்துக்கு அடுத்து மூன்றுவது முக்கிய நிர்வாக மையமாக வளர வழிவகுக்கும்.

தீவுப்பகுதி மக்கள் மத்தியில் ஏற்பட்டு வரும் சமூக-பொருளாதார வளர்ச்சி காரணமாக நகராக்கப் பண்புகள் வளர்ந்து வருவதால் இதற்கேற்ப வேலணை வங்களாவடிப் பகுதியை ஒரு நகராக விருத்திசெய்தல் வேண்டும். தற்போதைய நகரமைப்பு, புதிய முறையில் விருத்திசெய்யப்படுவதுடன், வீதியமைப்பு முறையில் பல முன்னேற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இச்சேவை நிலையம் தீவுகள் முழுவதற்கும் பொறுப்பான காரியாலயங்கள் உயர் மட்ட வர்த்தக நிறுவனங்கள், வங்கிகள் போன்ற பல பொருட்களையும் சேவைகளையும் வழங்குமிடமாக இருக்கவேண்டும். தீவுப்பகுதியின் முன்னணிக் கல்வி நிலையமாக வேலணை சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயம் விளங்குகின்றது. இக்கல்லூரியைச் சார்ந்து தீவுப்பகுதிக்குரிய தொழில்நுட்பக்கல்லூரி அமைக்கப்படவேண்டும். யாழ்ப்பாண மாவட்டத்தின் அடுத்த தொழில்நுட்பக்கல்லூரி தீவுப்பகுதியிலேயே இடமமைவு பெறவேண்டும். மேற்படி கல்லூரியில் கவனிப்பாரற்று இருக்கும் விடுதிக்கட்டடங்கள் இதன் ஆரம்ப நிலைக்குப் பொருத்தமானவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு தீவில் குடிசனத்தொகைப் பண்பு, பொருளாதாரப் பண்புகளுக்கு ஏற்ப சேவை நிலையங்கள் விருத்தியாக்கப்பட வேண்டும். வேலணைத்தீவும், புங்குடுதீவும் குடிசனத்தொகை கூடுதலாக இருப்பதால் ஒன்றுக்கு மேற்பட்ட சேவை நிலையங்களையும் ஏனைய தீவுகள் ஒவ்வொரு சேவை நிலையத்தையும் கொண்டிருக்கலாம். புங்குடுதீவில் பெருங்காட்டுச் சந்தியும், நெடுந்தீவில் ஆஸ்பத்திரியடியும் நயினாதீவில் நயினாதீவு-மத்தி, அனலைதீவில் அனலைதீவு- மத்தியும், மண்டைதீவில், மண்டைதீவு- மத்தியும் எழுவைதீவில் எழுவைதீவு மத்தியும் அவ்வவ் தீவுகளின் முக்கிய சேவைநிலையங்களாக விருத்திசெய்யப்பட வேண்டும். இந்நிலையங்களில் முக்கிய காரியாலயங்கள் தபாற்கந்தோர், பாடசாலை, கூட்டுறவுச்சங்கக்கடை கிராமியவங்கி மற்றும் வர்த்தக நிறுவனங்கள் இடம்பெறவேண்டும். புங்குடுதீவில் இறுபிட்டி, கிழக்கூர் பகுதிகளில் சிறிய சேவை நிலையங்கள் விருத்திசெய்யப்படவேண்டும். வேலணைதீவில் வேலணை வங்களாவடிக்கு அந்தது புளியங்கூடல் மற்றும் அல்லைப்பிட்டி, மண்கும்பான், சரவணை, நாரந்தனை, கரம்பன் ஆகிய இடங்களில் சிறிய சேவை நிலையங்கள் விருத்தியாக்கப்படவேண்டும்.

புங்குடுதீவு 15, 000 மேற்பட்ட மக்களையும் 28 . 9 சதுர கிலோ மீற்றர் பரப்பும் உடையது இத்தீவிலிருந்து குடிசன வெளி இடப்பெயர்வு முக்கியமாக இருப்பினும் குடிசனத்தொகை அதிகரித்து வருவதனைக் காணலாம். மேலும் இடம் பெயர்ந்து சென்றவர்கள் தங்கள் கிராமத்துடன் உள்ள தொடர்புகளைத் துண்டிக்காதவர்களாக இருக்கின்றார்கள். இக்கிராமத்தினது பொருளாதாரம் வெளிப்பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதுடன் இது விவசாயம் சாராத கிராமியக் குடியிருப்பாகவுள்ளது. மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வாக இருப்பதால் சிறந்ததொரு சேவை நிலையம் தேவைப்படுகின்றது. ஏற்கனவே பெருங்காட்டுச் சந்தி ஒரு சேவை நிலையமாக வளர்ச்சி பெற்றுள்ளது. இங்கு மகாவித்தியாலயம், தபாற்கந்தோர், வங்கி, ஆஸ்பத்திரி, கூட்டுறவுச்சங்கம், விவசாய விஸ்தரிப்புக் காரியாலயம் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் காணப்படுகின்றன. புங்குடுதீவு நயினாதீவு ஆகிய இரு தீவுகளை உட்படுத்திய ஒரு உதவி அரசாங்க அதிபர் பிரிவும், புங்குடுதீவுக்கு ஒரு பிரதேச அபிவிருத்திச்சபையும் அமைக்கப்பட்டு இவற்றின் தலைமைக் காரியாலயம் பெருங்காட்டில் அமைய வேண்டும். இத்தீவின் ஏனைய இடங்களுக்கும் இந்நிலையத்திற்கும் இடையே போக்குவரத்து வசதி ஏற்படுமிடத்து இந்நிலையத்தின் வளர்ச்சி அதிகரிக்கும்.

நெடுந்தீவு 6000 மக்களைக் கொண்டதாகவும் 147.8 சதுர கிலோ மீற்றர் பரப்பையும் உடையது. இத்தீவின் குடிசனத்தொகை ஏறக்குறைய இவ்வளவிலேயே இருக்கலாமெனக் கருதலாம். இதனது இடவமைவு காரணமாக ஏற்கனவே பல அரச செயற்பாடுகளைப் பெற்றுள்ளது. உதவி அரசாங்க அதிபர் பிரிவு, பிரதேச அபிவிருத்திக்காரியாலயம், ஆஸ்பத்திரி மற்றும் பல காரியாலயங்கள் இங்கு விருத்தி பெற்றுள்ளன. வர்த்தக நிறுவனங்களும் காணப்படுகின்றன. இங்கு வேலைசெய்யும் அரச ஊழியர்கள் கூடியளவில் பிறபகுதிகளைச் சேர்ந்தவர்களாக இருப்பதாலும் இதுவொரு கஷ்டப்பிரதேசமாக இருப்பதாலும் சிறந்த சேவையைப்பெறுவது கடினமாக இருக்கிறது. மேலும் இத்தீவின் வளர்ச்சிக்கு குடிநீர், மின்சாரம், போக்குவரத்து விருத்திகள் தேவையாக உள்ளன. நெடுந்தீவு பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்கள் கூடிய எண்ணிக்கையில் வடமாகாணத்தில் பல பகுதிகளில் வாழ்கின்றனர். இவர்களை நெடுந்தீவுக்கு வருடத்தில் ஓரிரு முறை வந்துபோகக்கூடிய சூழ்நிலைகள் உருவாக்கப்படுவதுடன் சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.

நயினாதீவு 4000 மேற்பட்ட மக்களையும் 5.7 சதுரகிலோ மீற்றர் பரப்பையும் உடையது. இங்கு இந்து பௌத்த யாத்திரிகர்கள் பெருமளவில் வந்துபோகுமிடமாக இருந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவருகின்றது. இதனால் யாத்திரிகர்களை அடிப்படையாகக்கொண்ட விடுதிகள் வளர்ச்சிக்கு இடமுண்டு. தீவின் இறங்கு துறைகள் நாகபூசணி அம்மன் ஆலயத்திற்கு அருகிலும் வங்களாவடியிலும் அண்மைக்காலத்தில் பௌத்த விகாரைக்கு அருகிலும் அமைந்துள்ளன. கிராமத்தின் முக்கிய சேவை நிலையம் தீவின் மத்தியில் காணப்படுகின்றது. இங்கு காணப்படும் மகாவித்தியாலயம் தபாற்கந்தோர் மற்றும் அரச காரியாலயங்கள், வர்த்தக நிறுவனங்கள் மேலும் விருத்தி செய்யப்படவேண்டும்.

எழுவைதீவு 400க்கு மேற்பட்ட மக்களையும், இரண்டு சதுர கிலோ மீற்றர் பரப்பையும் கொண்டுள்ளது. இங்கு இந்து கத்தோலிக்க மக்கள் சமமாக வாழ்கின்றனர். சிறிய தீவாக இருப்பது மாத்திரமல்லாமல் இரண்டு சமூகம் சரிசமனாக வாழ்வதால் இரு பகுதியினரையும் பூர்த்தி செய்ய வேண்டியதாகவுள்ளது. மீன்பிடி, பனையோலை வேலைகள், கோழிவளர்ப்பு முக்கிய தொழில்களாக இருக்கின்றன. தீவின் சனத்தொகை குறைவாக இருப்பதால் பல சேவைகள் உருவாக்கக்கூடிய ஆதார சனத்தொகை இல்லை. மக்களின் பல தேவைகளைப் பூர்த்தி செய்ய பல பகுதி நேரக் காரியாலயங்கள் அமைக்கப்படவேண்டும். இக்காரியாலங்களை ஊர்காவற்றுறை அல்லது அனலைதீவிலிருந்து செயற்படுத்தலாம்.

வேலணைத்தீவில் புளியங்கூடல் சந்தி ஒரு முக்கிய சேவை நிலையமாக உள்ளது. இக் கிராமத்து மக்கள் புதிய தொழில் நுட்பங்களை அறிமுகம் செய்வதில் திறன்மிக்கவர்கள். தீவுப்பகுதி பஸ் கொம்பனியை நடத்தியவர்களுள் இக்கிராமத்தைச் சேர்ந்தவர்களே கூடுதலாக காணப்பட்டனர். மின்சார உற்பத்தி யந்திரம், ஒலிபெருக்கி, நீர் இறைக்கும் யந்திரம், உழவுயந்திரம், மா, தூள் அரைக்கும் ஆலை, அச்சு யந்திரம் போன்றன புளியங்கூடற் சந்தியிலேயே முதல் வளர்ச்சி பெற்றன. மேலும் கூட்டுறவு அபிவிருத்தி முயற்சிகள், இளைஞர் மாத சங்க நடவடிக்கைகளுக்கு இக்கிராமத்தின் பங்களிப்பு பெருமைக்குரியது. இதனால் இச்சந்தி கைத்தொழில் தொழில்நுட்ப தொடர்பான சேவை நிலையமாக வளர வாய்ப்புண்டு.

அல்லைப்பிட்டி, மண்கும்பான், செட்டிபுலம், சரவணை, நாரந்தனை, செருக்கன் கரம்பன் ஆகிய இடங்களில் கீழ்மட்ட சேவை நிலயங்கள் விருத்தியாக்கப்படவேண்டும். மக்களின் அன்றாடத்தேவைகள் பலவற்றைப் பூர்த்தி செய்யும் வர்த்தக சேவைநிறுவனங்கள் இடம்பெற வேண்டும். வேலணைத்தீவின் கிழக்கு அரைப் பகுதியில் புதிய குடியிருப்புகளை விருத்தியாக்கக்கூடிய வாய்ப்புகளுண்டு. அல்லைப்பிட்டிச் சந்தியைச் சூழவுள்ள பிரதேசத்தில் ஒரு சிறு நகர் வளர வாய்ப்புண்டு அல்லைப்பிட்டி யாழ்ப்பாண நகருக்கு அண்மித்திருப்பதாலும் ஓரளவு வெற்று நிலம் காணப்படுவதாலும் கிட்டிய தூரத்தில் நன்னீர் இருப்பதாலும் இதனை யாழ்ப்பாண நகரத்தின் ஒரு உப நகரமாக விருத்தி செய்கலாம். இதன்மூலம் யாழ்ப்பாண நகரில் நெருக்கமாக வாழும் தீவுப்பகுதி மக்கள் இந்நகரில் குடியேறி யாழ்ப்பாண நகருக்குச் சென்றுவரக்கூடிய நிலைமை ஏற்படலாம். ஏற்கனவே இச் சந்தியைச் சூழ பல விடுகள் அமைக்கப்பட்டிருப்பதனைக் காணலாம்.

அனலைதீவு 4000 க்கு மேற்பட்ட மக்களையும் 6 . 7 சதுர கிலோ மீற்றர் பரப்பையும் கொண்டுள்ளது. இத்தீவில்குறிப்பிடத்தக்க விவசாய நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. இத்தீவின் மத்தியில் காணப்படும் சேவை நிலையத்தைச் சார்ந்து ஆஸ்பத்திரி உயர்தரப் பாடசாலை, உபதபாற்கந்தோர் கிராமசபைக்காரியாலயம், சங்கக்கடை மற்றும் சில வர்த்தக நிறுவனங்கள் காணப்படுகின்றன. இத்தீவு பரப்பில் சிறியதாக இருப்பினும் மக்கள் அடர்த்தி உயர்வாக இருப்பதாலும் இக்கிராமத்தைச் சேர்ந்தவர்கள் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் வாழ்வதால் ஓரளவு உயர்ந்த வாழ்க்கைத்தரத்தை அனுபவிக்கின்றனர். போதிய ஆசிரியர்கள் மற்றும் அரச ஊழியர்கள் பற்றுக்குறைவால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு கிடைக்கும் சேவைகள் தரம் குறைந்தனவாக உள்ளன. இதனால் அனலைதீவு மத்தியில் விருத்தி பெற்றுள்ள சேவை நிலையத்தின் தரம் சேவையாலும், பௌதிக வசதிகளாலும் உயர்த்தப்பட வேண்டும்.

மண்டைதீவும் 4000 க்கு மேற்பட்ட மக்களையும் 10.1சதுரகிலோ மீற்றர் பரப்பையும் கொண்டுள்ளது. இத்தீவின் சிறப்பான நிலப்பயன் பாட்டு ஒழுங்கை கொண்டுள்ள இத்தீவின் தென்கிழக்குப்பகுதி தோட்ட நிலங்களையும், மேற்கு, வடக்குக் கரையோரப் பகுதி சதுப்பு நிலங்களையும் இதற்கு அடுத்த உட்பகுதி தரவை நிலமாகவும் இதற்கு அடுத்து நெல்வயலாகவும் இருக்கின்றது. தீவின் நடுப்பகுதியில் குடியிருப்புக் காணப்படுகின்றது குடியிருப்புப் பகுதியின் நடுவில் மண்டைதீவின் சேவை நிறுவனங்கள் காணப்படுகின்றன. மகாவித்தியாலயம், உபதபாற்கந்தோர், அபிவிருத்திச்சபை கிளைக்காரியாலயம், கிராமசேவகர் பிரிவுக்காரியாலயம் கூட்டுறவுச்சங்கக்கடைக்கிளைகள், தனியார் சிறு பலசரக்குக் கடைகள் காணப்படுகின்றன. இங்குள்ள அரச நிறுவனங்களால் வழங்கப்படும் சேவைகள் தரக்குறைவாக இருப்பது இத்தீவின் வளர்ச்சிக்குத் தடையாகவிருக்கின்றது. இதனால் இத்தீவின் சேவைநிலையத்தின் தரம் சேவைகளாலும், பௌதிக வசதிகளாலும் உயர்த்தப்பட வேண்டும். இவ் உப நகரின் ஏற்ற வீடமைப்புத் திட்டத்துடன் இந் நகரும் திறம்பட இயங்குவதற்குத் தேவையான பல நிறுவனங்கள் இடவமைவு பெறவேண்டும். 5000க்கு மேற்பட்ட மக்கள் வாழக்கூடிய நகரமாக விருத்தி செய்யக்கூடிய உள்ளார்ந்த நிலவளத்தைப் பெற்றுள்ளது. மேலும் இப்பிரதேச நிலப்பகுதி உவர் நிலமாக இருப்பதால் விவசாயச் செய்கைக்கு உட்படுத்த முடியாது.

மண்கும்பான் பிள்ளையார் கோவிலடியைச் சூழவுள்ள பிரதேசத்தை விருத்தி செய்வதன்மூலம் ஒரு விவசாய சார்பற்ற கிராமியக் குடியிருப்பை விருத்தி செய்யலாம். இக்கிராமமும் யாழ்ப்பாண நகருடன் நெருங்கிய பொருளாதாரத் தொடர்பு கொண்டதாக அமையும். இக்கிராம மக்கள் நகரப் பொருளாதார நடவடிக்கைகளுடன் இணைந்தவர்களாக இருக்கலாம். பிள்ளையார் கோவிலுக்கு வடக்கிலிருக்கின்ற உயரமான பனைவளப்பகுதி மற்றும் கோயிலுக்கு தெற்கு, கிழக்குப் பகுதிகள் குடியிருப்புக்கு ஏற்ற பகுதியாக இருக்கின்றன. ஏற்கனவே கோயிற் பகுதியில் நிரந்தரக்கடைகள் சில காணப்படுகின்றன. மண்கும்பான்- பாடசாலை உபதபாற்கந்தோர் ஆகியனவும் தூரத்தில் இல்லை. நன்னீர் மண்கும்பான் கிராமத்திலிருந்து பெறவேண்டும்.

வேலணை கிழக்கில் குறிப்பாக இடிவிழுந்த குண்டுக்கு தெற்காக அமைந்துள்ள மணியங்காட்டுப்பகுதி பெரிய குடியேற்றத் திட்டம் அமைக்கக் கூடிய நிலநீர் வளங்களைக் கொண்டுள்ளது இப்பகுதி ஊர்காவற்றுறை யாழ்ப்பாண வீதிக்கு அணித்தாக இருப்பதுவும் குடியிருப்புகள் இல்லாத பெரியளவு காணிகள் காணப்படுவதும் வாழிடக் குடியேற்றத்துக்கு ஏதுவாக இருக்கிறது. இத்திட்டத்தில் வேலணையில் நிலமில்லாத குடும்பங்களுக்கு வீடமைப்புத்திட்டம் உருவாக்கப்படவேண்டும். இத்திட்டமும் விவசாய சார்பற்ற கிராமியக் குடியிருப்பாகவே அமையும். இத்திட்ட விருத்திக்கு பல சேவைகள் விருத்தி செய்யப்படவேண்டும். வெட்டுக்குளம் வீதி அமைக்கப்பட்டால் இக்குடியேற்றத்திட்டம் வேலணை தெற்கு பகுதிகளுடன் நேரடியாக இயங்க முடியும். வங்களாவடி நகரின்பின்னணி நிலங்களில் முக்கியமானது வேலணை மேற்கு. வேலணை புங்குடுதீவு வீதிக்கும் புளியங்கூடல் சந்தி சுருவில் வீதிக்கும் இடைப்பட்ட வேலணை மேற்கு வேலணைத்தீவின் வழமையான பயிர்ச்செய்கைப் பகுதியாகும். 1970- 77க்கு இடைப்பட்ட காலத்தில் இதன் தென்பகுதியில் உள்ள செம்மண்காட்டுப் பிரதேசங்கள் பயிர்ச்செய்கை நிலங்களாக மாற்றப்பட்டன. சில இவற்றுள் நீர் வரட்சியற்ற வருடம் முழுக்க நீர் கிடைக்கும் பகுதியாக உள்ளது. செறிவான மிளகாய், புகையிலைச் செய்கை இங்கு இடம் பெறுகின்றது. இன்னும் இந்த வருமானத்தில் இங்குள்ள மக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் தங்கியிருந்தாலும் வெளிநாட்டு வேலை வாய்ப்பால் இங்கும் பாதிப்புண்டு. இப்பகுதியில் மீள் குடிப்பரம்பலுக்கு ஏற்ற வாய்ப்பு காணப்படுகிறது. வேலணை சந்திராச் சந்தியில் இருந்து செம்மண்காட்டுப்பகுதியூடாக கைத்தனை வீதியைச் சந்திக்க வீதி அமைப்பதால் மீள் பரம்பலுக்கு வழி ஏற்படுத்தலாம்.

ஊர்காவற்றுறை இன்று 3500 மக்களைக் கொண்ட சிறிய நகராக இருக்கிறது. 1960 களுக்கு முன்னர் இந்நகர் பல துறைகளில் தீவுப்பகுதியின் முன்னணி நகராக இருந்தது. இதன் துறைமுகச் செயற்பாட்டு வீழ்ச்சியும், பண்ணைப்பாலம் திறக்கப்பட்டதால் இதனது முக்கியத்துவம் குறைவடைந்ததும் யாழ்ப்பாணம் தீவுப்பகுதி மக்களின் பிரதான நகராக மாறியது.

இந்நகரின் எதிர்காலம் இந்நகரின் அமைந்துள்ள துறைமுக விருத்தியிலேயே தங்கியுள்ளது. இதனை வட இலங்கையின் முக்கிய மீன்பிடித்துறைமுகங்களுள் ஒன்றாக விருத்தி செய்யவேண்டும். இங்கு மீன்பிடி தொடர்பான கைத்தொழில்கள் குறிப்பாக ஐஸ் தொழிற்சாலை, கப்பல் கட்டல், கப்பல் திருத்தல் போன்ற நடவடிக்கைகள் விருத்தியாக்கப்படவேண்டும். மேலும் உல்லாசப் படகோட்டம், விளையாட்டுத்துறையை இங்கு விருத்தி செய்யவேண்டும். மேலும் இந்நகர் கைத்தொழில் சுற்றுலாத்துறை நகரமாக விருத்திசெய்வதன் மூலமே இதற்கு புனர் வாழ்வு கொடுக்க முடியும். தீவுப்பகுதியில் உள்ளூர் போக்குவரத்துக்கு ஏற்ற போதிய தெருக்கள் இன்மை இப்பகுதியின் இடஞ் சார்பு விருத்தியைப் பெரிதும் பாதித்துள்ளது. ஒரு சில பிரதான தெருக்களைத் தவிர இரண்டாம் தர பாதைகள் குறைவாகவுள்ளன. புதிய வீதிகள் அமைப்பதன் மூலம் பயன்படுத்தப் படாமலிருக்கும் நிலப் பகுதிகளை குறிப்பாக வாழிடத்தேவைக்குக் கீழ் கொண்டுவரமுடியும். பின்வரும் பாதைகள் அமைப்பதற்கு முன்னுரிமை வழங்கப் படவேண்டும்.

1. சுருவில்- சாட்டிவீதி சுருவிலிருந்து தீவின் தெற்குக் கரையோர மாகச் செட்டிப் திருக்கடலூர், கல்லாண்டமுனை, செட்டிபுலம் வழியாக சாட்டிவரை இப்பாதை அமைக்கப்படவேண்டும். இப்பாதை அமைப்பின் மூலம் தீவின் பகுதியில் காணப்படும் காட்டுப் பகுதிகளை விருத்திசெய்யக்கூடியதாக இருக்கும். இவ்வீதி பிரதானமாக பின் தங்கியமீன் பிடிக்குடியிருப்புகளுடாக அமைக்கப்படவிருப்பதால் இக்குடியிருப்புகளின் அபிவிருத்திக்கு வழிவகுக்கும். சுருவில்- செட்டிப் ஊடாக வேலணைத்துறை வரை அமைக்கப்பட்ட வீதி சிறப்பான எடுத்துக்காட்டு (விளக்கப் படம் 01)

2. செட்டிபுலம்- இடிவிழுந்த குண்டு வீதி. இப்பாதை செட்டிபுலம், மேட்டுக்குளம் சந்தியிலிருந்து சாட்டி, உப்புதளி, மணியங் காடு, சோனகன்காடு வழியாக யாழ்ப் பாணம் ஊர்காவற்துறை வீதியை இடி விழுந்த குண்டடியில் சந்திக்கும். இப்பாதை அமைக்கப்படின் வேலணை கிழக்கில் காணப் படும் பெருமளவு நிலப்பரப்புக்குப் பாதை முகப்பு கிடைக்கும். இப்பாதை செல்லும் வழி நன்னீர் பிரதேசத்தைச் சார்ந்திருப்ப தால் வாழிட நில அபிவிருத்திக்குக் கூடிய வாய்ப்புண்டு.

3. அல்லைப்பிட்டி- நாரந்தனை வீதி. அல்லைப்பிட்டி மண்கும்பான் கிராமங் களூடாக கிழக்கு மேற்காக செல்லும் பாதை மண்கும்பான் சந்தியிலிருந்து மேற்கு நோக்கி அண்ணமார்கோயில், நாவலடிப்புலம், ஆர வியல்பிட்டி, பள்ளபுலம் சரவணை வழியாக நாரந்தனை செங்கேரிஸ் தேவாலயம் வரை விஸ்தரிக்கப்பட்டு ஊர்காவற்துறை பாதை யுடன் இணைக்கப் படவேண்டும். இப் பாதை அமைக்கப்படின் அல்லைப்பிட்டி மண்கும்பான், வேலணை, ஆகிய கிராமங் களின் பெரும்பகுதிக்கு போக்குவரத்து வசதி கிட்டுவதுடன் இடஞ்சார் அபிவிருத் திக்கு வழிவகுக்கும். இப்பாதை செல்லும் பாதை நன்னீர் பிரதேசமாக இருப்பது. முக்கியமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. புங்குடுதீவு சுற்றுப்பாதை. புங்குடுதீவின் தற்போதைய பாதையமைப்பு இதன் கரையோரப் பகுதிகளை நன்கு பயன்படுத்த முடியாதுள்ளது. இத்தீவைச் சுற்றிப்பாதை அமைப்பதால் இத்தீவின் குடியிருப்புகளான மடத்துவெளி, வல்லன், மாவுதடை பெருங்காடு, குறிகாட்டுவான், கழுதைப்பிட்டி, ஊரதீவு, பல்லதீவு ஆகியவற்றை இணைக்கக்கூடியதாக இருப்பதுடன் கரையோர நிலப்பரப்புகளையும் நன்கு பயன்படுத்த முடியும்.

5. ஊர்காவற்றுறை- சரவணை கரையோரப்பாதை. இப்பாதை வேலணைத்தீவின் வடகரையோரமாக ஊர்காவற்றுறையிலிருந்து விருட்டிமுனை, வடக்கு நாரந்தனை வழியாக சரவணை 8ம் கட்டை வரை அமைக்கப்படவேண்டும்.

6. சரவணைச்சந்தி- அராலி இறங்குதுறை. இப்பாதை சரவணை சந்தியிலிருந்து ஏற்கனவேயுள்ள அணைக்கட்டு வழியாக அராலிப் பாலத்துறை வரை அமைக்கப்படவேண்டும். அராலிப் பாதை அமைக்கப்படின் இப்பாதை அமைப்பு முக்கியமானதாகும் (படம் - 1).

தீவுப்பகுதியில் 25% மேற்பட்ட நிலப்பரப்பு தரவை நிலங்களாகவும் சதுப்பு நீர்ப்பரப்புகளாகவும் இருக்கின்றன. வேலணைத்தீவு, புங்குடுதீவு, நெடுந்தீவு, பகுதிகளில் இத்தகைய நிலப்பரப்புகள் முக்கியத்துவம் பெற்றுள்ளன. வேலணைத்தீவில் யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை வடக்கு வீதியில் வீதிக்கு வடக்கேயுள்ள பகுதி தரவை நிலமாகவுள்ளது. புங்குடுதீவின் வடபகுதியும், மண்டைதீவின் மேற்குப் பகுதியும் தரவை நிலமாவுள்ளது. புங்குடுதீவின் வடபகுதியும், மண்டைதீவின் மேற்குப் பகுதியும் தரவை நிலங்களாகவுள்ளன. இந்நிலப்பரப்புகள் மாரியில் வெள்ளம் நின்று பங்குனி சித்திரை மாதங்களில் வெள்ளம் வற்றி மேச்சல் நிலங்களாக மாறுகின்றன. யூலை, ஓகஸ்ட் மாதங்களில் சோளகக் காற்றின் தாக்கத்தால் புழுதி எழுப்பப்படுகின்றது. இத்தரவை நிலங்களில் புல் செருக்கல், மண் அகழ்தல், சிப்பி எடுத்தல், ஆகியவற்றால் உயிர்ச்சூழல் பெரிதும் மாசுபடுகின்றது. இக்காரணிகள் அரச காரணிகளாக இருப்பதுவும். இந்நிலங்களின் சூழல் நல்ல முறையில் பேணப்படுவதுடன் மந்தை மேச்சலுக்குரிய நல்ல மேச்சல் தரவை நிலங்களாக மாற்றப்படவேண்டும்

7 மண்டைதீவு-அல்லைப்பிட்டி பண்ணைக்கு இடைப்பட்ட முக்கோண கடற் சதுப்புக் கண்ணாக்காட்டுப் பகுதியை இயற்கை ஒதுக்குப் பகுதியாக மாற்றவேண்டும். இது ஒரு இயற்கை அழகு கொண்ட பகுதியாக இருப்பதுடன் நகரத்துக்கு அண்மித்து இருப்பதால் சுற்றுலாத்துறையில் சிறந்த எதிர்காலம் உண்டு. இப்பகுதி நன்கு பாதுகாக்கப்பட்டால் பறவைச் சரணாலயமாக விருத்தியாக்குவதற்கு வாய்ப்புண்டு. விறகுத் தேவைகளாக இப்பகுதியிலுள்ள கண்ணாக்காடுகள் கட்டுப்பாடற்ற முறையில் வெட்டப்படுவது கவலைக்குரியதொன்றாகும். இதனைக் கட்டுப்படுத்தாவிட்டால் தீவுகளின் சூழலைப்பாதிக்கும். தீவுப்பகுதியின் கடற்கரைவிருத்தியினால் சுற்றுலாத்தொழில் வளர்ச்சிக்கு சிறந்த எதிர்காலம் உண்டு.

சாட்டியிலிருந்து அல்லைப்பிட்டி வரையிலான வெள்ளைக்கடற்கரை சுற்றுலாவுக்கு ஏற்றதாகவுள்ளது. இக்கடற்கரை வெண்ணிற மணலைக்கொண்டும், ஆழமற்ற மணற் கடற்பரப்பையும் கொண்டதாகவுள்ளது. 8

ஏற்கனவே மண்கும்பான் பள்ளிவாசல் பகுதி முக்கிய சுற்றுலா மையமாக மாறி வருவதனைக் காணலாம். யாழ்ப்பாண நகருக்கு அண்மையிலிருப்பதால் நல்ல முறை பயன்படுத்தலாம். புங்குடுதீவு கண்ணகியம்மன் கடற்கரையும் சிறந்த மணற்கடற்கரையாக இருக்கிறது 9

மேற்குறிப்பிட்ட சில திட்டமுறைகளை இடஞ்சார் அபிவிருத்தி திறமுறையில் சரியான முறையில் அமுல் செய்யப்படுமிடத்து சிறந்த அபிவிருத்தி இலக்கையடையலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டுத் தரத்துக்குக் கோயில்களின் பங்களிப்பு

கவிஞர், இ. முருகையன் M. A. (Jaffna.)
சிரேஷ்ட உதவிப்பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

ii

இப்பொழுதெல்லாம் கோயில்களைக் கட்டுவதிலும் திருத்தித் திருப்பணி செய்வதிலும் நம்மவர்கள் பெரிதும் ஆர்வங் காட்டுகின்றனர். கொட்டில்கள் கட்டிடங்கள் ஆகின்றன; கோபுரங்கள் நிமிருகின்றன, மதில்கள் எழுகின்றன; சுவர்களிலே ஓவியங்கள், தூண்களிலே சிற்பங்கள், சித்திரத் தேர்கள் செய்யப்படுகின்றன. ஒவ்வொரு கோயிலிலும் ஒவ்வோர் ஒலிபெருக்கித் தொகுதி— திருவிழாச் சமயத்திலே பயன்படுத்த ஜெனறேற்றர்கள்... சுவாமி வீதி வலம் வரும் பொழுது மின் விளக்கு அலங்கார வசதிகள், மாபிள் பதித்த கர்ப்பக்கிருகங்கள்... இப்படியெல்லாம் நமது கோயில்களைச் சுற்றிப் புதியதொரு நாகரிக எழுச்சி அலை எழுந்து வருவதை நாம் அநுபவத்திலே காணுகிறோம். இந்த எழுச்சி எண்பதுகளின் முன்பாதியிலேயே தொடங்கி விட்டதென்று தோன்றுகிறது.

நம்மவர்கள் அதிகமதிமாக வேலை தேடி வெளிநாடு செல்லும் போக்கு அதிகரித்த பின்னர் கோயில்களுக்கு நிதி உபகரிக்கும் பழக்கமும் வளர்ச்சி பெற்று வருகிறது என்று கூறலாம். இது உண்மை தானா என அறிய வேண்டுமானால் புள்ளிவிபர அடிப்படையிலே பகுப்பாய்வு ஒன்று செய்தல் வேண்டும். அது சமூகவியல் அறிஞரின் வேலை.

ஆயின், இங்கு நாம் கோயில் சார்ந்த புதிய நாகரிக எழுச்சி அலையின் பண்புகளைப் பற்றிச் சிறிது சிந்திப்போம், இந்த எழுச்சியினால், நமது இன்றைய வாழ்வு விழுமியங்களுக்கும் பண்பாட்டு நிலைக்கும் கோயில்கள் செய்யும் பங்களிப்பு எத்தகையது என்று காண்போம். அவ்வாறு காண்பதற்கு. கோயில்களின் பங்களிப்பு பற்றிய பழைய செய்திகளை மீட்டுப் பார்ப்பதும் ஓரளவு அவசியமாகிறது.

பழைய மரபுகளின்படி ஊரின் மையமாகக் கோயில்கள் இருந்து வந்துள்ளன. "ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே" என்பது சிவஞான போதச் சூத்திரப்பகுதி. திருக்கோயில் வழிபாட்டின் பல பரிமாணங்களையும் அப்பர் சுவாமிகள் வாய்மொழிகளிலே நாம் நன்கு உணர்ந்து கொள்ளலாம்.

"ஆக்கையாற் பயன் என்?
அரன்
கோயில் வலம் வந்து
பூக்கைக் கொண்டு அரன்
பொன்னடி போற்றிடா
ஆக்கையாற் பயன் என்"

என்று அந்த நாவேந்தர் பாடினார். வேறொரு தேவாரத்திலே,

"......
புலர்வதன்முன் அலகிட்டு
மெழுக்கும் இட்டு,
பூமாலை புனைந்தேத்தி புகழ்ந்து பாடி
தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடிச்
சங்கரா சயபோற்றி போற்றிஎன்றும்
அலைபுனல் சேர் செஞ்சடை எம்
ஆதி என்றும்
ஆரூரா என்றென்றே அலறு நில்லே"

என்று அறிவுறுத்துகிறார். இது மற்றவர்களுக்குச் செய்த உபதேசம் அன்று அப்பர் அடிகள் தமது நெஞ்சத்துக்கு இட்ட கட்டளை; அந்த விதத்திலே, சமயவான் ஒவ்வொருவனும் தன்னளவிலே, கோயிலிற் செய்யக் கூடிய பணிகள் எவை எவை என்பதை இந்தத் தேவாரம் உணர்த்துகின்றது. பிற்காலத் தமிழ் மன்னர்களின் ஆட்சிக்காலத்திலே கோயில்களும் அவற்றைச் சார்ந்த அலுவல்களும் நிறுவனங்களாக வளர்க்கப் பட்டன. அப்பொழுது, கோயிற் பணிகள் விரிவடைந்து வளர்ந்து நிலையூன்றின. கோயி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லைச் சுற்றி ஒரு சிறு சமூகமே தொழிற்பட்டு இயங்கலாயிற்று.

“பூமாலை புனைந்து ஏத்துதல்” சாத்துப்படி என்னுங் கலை ஆயிற்று. சப்பறம் வாகனம், சிகரம், மஞ்சம் என்றெல்லாம் அலங்காரக் கலைத்தொழில்கள் விருத்தி அடைந்தன.

புகழ்ந்து பாடுதல், ஓதுவார்களின் பண்ணிசைப் புலமையை அடிப்படையாகக் கொண்ட தனித்துறையாக விருத்தி அடைந்தது

கூத்துகள் ஆனந்தக் கூத்தாகத் தொடங்கி, பின்னர் முத்தமிழின் ஒரு கூறாகி, நாட்டுக்கூத்து, தெருக்கூத்து, கரகம், காவடியாட்டம், பொய்க்காற்குதிரையாட்டம், வசந்தன் ஆட்டம், பரதம், சதுராட்டம் என்றெல்லாம் பலபட விரிந்தன. வெறியாட்டு முதலான பழங்கூத்துகள் பழைய முறைகளின் சிற்சில கூறுபாடுகளைத் தக்கவைத்துக் கொண்டிருக்கும் அதே சமயத்தில், சன்னதம் ஆடுதல் வாக்குச் சொல்லுதல் என்னும் பல்வேறு விகற்பங்களையும் பெறலாயின.

இவ்வாறான வளர்ச்சிகளோடு பலவாறான வாத்தியங்களை இசைக்கும் கலைத்திறன்களும் விருத்தி ஆயின. சிறப்பாக, நயனக் கலைஞர்களும் தவில் வித்துவான்களும் தமது தனித்திறமைகளை வளர்த்து சாதனைகளின் உச்சங்களை எய்துவதற்கு, கோயில்களின் ஊக்குவிப்புப் பெரிதும் உதவிற்று.

இப்படி எல்லாம் பார்க்கும்போது, கோயில்கள் வழிபாட்டு நிலையங்களாக இருந்ததுடன் கலைகளின் வாயிலாகவும், ஊற்றுக் கண் ஆகவும், முறைசாராக் கல்வி நிறுவனங்களாகவும் இருந்து வந்துள்ளமை புலப்படும். இப்பொழுதெல்லாம் கோயில்களில் இடம் பெறும் கதாப்பிரசங்கங்களும், வில்லுப் பாட்டுகளும், 'வீதி நாடகங்களும், சொற்பொழிவுகளும், பட்டி மண்டபங்களும் முறைசாராக் கல்வியாக மலரக்கூடிய சாத்தியப் பாடுகளின் வித்துகளைத் தம்முள்ளே கொண்டிருக்கின்றன. இந்த உண்மையும் கவனிக்கத் தக்கது.

iii

கோயில்களும் திருவிழாக்களும் சிற்சில கைவினைஞர்களையும், கலைஞர்களையும் வளர்த்தன ஆயினும் சமய அறிஞர்களும் ஆகம அபிமானிகளும் திருவிழாக்களின் பெயரினாலும் சமயச் சடங்குகளின் பேரினாலும் இடம் பெறும் வேடிக்கைகளையும் விளையாட்டுகளையும் ஒழுக்கக் கேடுகளையும் கண்டிக்கலாயினர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியிலும் இந்த நூற்றாண்டின் முதற்பகுதிலும் இவ்வித விமரிசனக் குரல்கள் ஒலித்தன. வாண வேடிக்கை, சதுர்க்கச்சேரிகள், மிருக பலி என்பன ஆகம அபிமானிகளின்' கண்டனத்துக்கு இலக்காயின. வட இலங்கையைப் பொறுத்தவரை, நாவலர் பணிகளின் வாரிசு என்று கருதக்கூடிய சைவபரிபாலன சபையார் நடத்திவரும் இந்துசாதனமும், பிற பிரசுர, பிரசார சாதனங்களும் மேற்சொன்னவாறான கருத்துகளை ஆதரித்தன எனலாம்.

இந்த நிலையில், கோயில்கள் கலைகளின் வாயிலாகவும் பண்பாட்டுக் கேந்திரங்களாகவும் விளங்கிய தன்மையில் ஒரு வித மாற்றம் ஏற்பட்டது. ஒரு வகையான சோர்வும் தளர்ச்சியும் உண்டாயின என்று கூடக் கருதலாம். அத்துடன் கோயில்கள் சாதியத்துக்கும் சாதி வாதிகளின் மேலாண்மைக்கும் துணைபோவனவாய் இருந்தமையால், அவை (கோயில்கள்) “கொடியவர் கூடாரங்கள்” என்று குறிப்பிடப்பட வேண்டிய நிலைமையும் தோன்றிற்று. தென்னகத்திலிருந்து இலங்கையினையும் நோக்கி வீசிய பகுத்தறிவு அலைகள் இங்குள்ளவர்களின் ‘கோயிற் பற்றுகளையும்’ ஓரளவு தளர்ச்சி காணச் செய்தன.

iv

ஆனால் அண்மைக் காலங்களிலே வெளிநாட்டுப் பணவரவினால் உண்டான புது நாகரிக அலைகள் கோயில் பற்றிய நோக்குகளையும் மாற்றி வருகின்றன. பொதுநலப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணி மனப்பான்மையின் மையங்களாகவும் அடையாளங்களாகவும் கோயில்கள் இன்று கொள்ளப்படுகின்றன. 'ஊருக்கு நல்லது செய்வோம்' என்று கிளம்புகிறவர்கள், கோயிலின் மூலமாகவும் இவற்றை நிறை வேற்ற முற்படுகிறார்கள்.

அத்துடன் ஒடுக்கமான கோட்பாடுகள் பலவற்றைச் சோர விட்டு, பரந்த உலக நோக்கையும் தாராள மனப்பாங்கையும் கடைப்பிக்கும் போக்குகளும் இன்று அதிக மாகி வருகின்றன.

இந்தச் சூழ்நிலையிலே, கோயில்கள் பற்றிய வினாக்கள் நம்மிடையே விடைகோரி நிற்கின்றன

(1) கோயில்கள் சமூக வாழ்வின் மையங்களாகவும் கலைகளின் வாயில்களாக வும் எந்த அளவுக்கு இனிப்பயன்படப் போகின்றன?

(2) மக்களின் சமூக ஒருமை உணர்வை இறுக்கமாக்குவதற்கும் பண்பாட்டுத் தனித் தன்மையைத் திரட்டிக் கொள்வதற்கும் கோயில்கள் துணைநிற்குமா?

இந்த வினாக்களுக்குச் சரியான விடை காணுதல் முக்கியமாகும். அந்த விடை ளின் வழிகாட்டலுடன் பயனுடைய பணி கள் சில செய்யப்படலாம்.

ஓர் எச்சரிக்கை: கோயில்கள் விளம்பர வேட்கையையும் தனிமனித மேலாண்மைக ளையும் விம்புகளையும் வளர்த்தல் கூடாது.

பக்தி யுடையார் காரியத்திற் பதறார். மிகுந்த பொறுமையுடன்
வித்து முளைக்குந் தன்மைபோல் மெல்லச் செய்து பயனடைவார்
சக்தி தொழிலே அனைத்துமெனிற் சார்ந்த நமக்குச் சஞ்சலமேன்?
வித்தைக் கிறைவா! கணநாதா மேன்மைத் தொழிலிற் பணியெனையே.

கடமைதானேது? கரிமுகனே! வையத்
திடம் நீ யருள்செய்தாய் எங்கள் - உடைமைகளும்
இன்பங் களுமெல்லாம் ஈந்தாய் நீ, யாங்களுனக்கு
என் புரிவோம் கைம்மாறியம்பு

இயம்பு மொழிகள் புகழ் மறையாகும்; எடுத்தவினை
பயன்படும்; தேவர் இருபோதும் வந்து
பதந்தருவார்
அயன்பதி முன்னோன் கணபதி சூரியன் ஆனைமுகன்
வியன்புகழ்பாடிப் பணிவார் தமக்குறும் மேன்மைகளே.

- பாரதியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேதங்களின் வழிவந்த...

-80ஆம் பக்கத் தொடர்ச்சி

கள் அனைத்துக்கும் வேதங்களே அடிப்படை. இக்கருத்து காலங்காலமாக உணரப்பட்டு வந்துள்ளது. வைதிக தர்மம் அல்லது வேதம் போதிக்கும் சமயத்தில் ஆன்மநேயம், ஆன்மிக ஒருமைப்பாடு பெரிதும் வற்புறுத்தப் பட்டுள்ளது.

வேதங்கள் சமயத்திற்கும் தத்துவத்திற்குமிடையே நெருங்கிய உறவினை ஏற்படுத்துவதில் வெற்றி பெற்றுள்ளன. இந்துமரபில் வாழ்க்கையின் மையக் கருத்து யாது என்பதை ஆராயும் நோக்கம் இறுதியில் இரண்டிற்கும் ஒன்றேயாதலால் இவை ஒரே மூலத்தில் ஒன்றாகவே தொடங்குகின்றன. ஆனால் அவை தமக்கேயுரிய வகையில் வளர்ச்சிபெற்ற போதும் இத்தகைய வேறுபட்ட வளர்ச்சி அவற்றிடையே எத்தகைய முரண்பாட்டையும் உணர்த்துவதாக இல்லை. இவ்விரண்டுக்குமிடையிலான நெருங்கிய உறவினை நாம் பகவத்கீதையிலும் சைவ சித்தாந்தத்திலும் காண முடிகின்றது. இந்தியாவில் தத்துவம் என்பது வாழ்க்கை நெறியாக ஆன்மிக உணர்வைப் பெறுவதற்குரிய ஒரு பாதையாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. தத்துவ விசாரம் அல்லது சத்தியத்தைப் பற்றியதான ஆராய்ச்சி என்பது ஆன்மிக விடுதலைக்குரிய வழியாகக் கொள்ளப்படுகின்றது. இதற்கு மூலமாக அமைபவை வேதங்களேயாகும்.

இத்தகைய ஆழ்ந்த அகன்ற நுண்ணிய கருத்துச் செறிவு கொண்ட வேதங்கள் மிகவும் பரந்துபட்ட பகுதிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளன. வேதங்களுக்குரிய சிறப்பான பெயர்களில்ஒன்று சுருதி என்பதாகும். சுருதி என்றால் 'காதால் கேட்கப்படுவது' என்று பொருள்படும். இவைதவிர்ந்த அல்லது இவற்றை அடிப்படையாகக் கொண்டெழுந்த ஏனைய நூல்கள் ஸ்மிருதி எனப்படுகின்றன. ஸ்மிருதி என்பதன் பொருள் 'நினைவிற் கொள்ளப்படுவது' என்பதாகும். சுருதி முதன்மையானது. ஏனெனில் அது நேரடியான இறையனுபவத்தினால் கிடைக்கப்பெற்றது என்ற பெருமைக்குரியது. ஸ்மிருதி இரண்டாந்தரமானது. ஏனெனில் வேதங்களிலிருந்து பெறப்பட்ட அனுபவங்களையும், உட்கருத்துக்களையும் நினைத்துச் செய்யப்பட்டது. வேதங்கூறும் நெறிகளை நடைமுறைக்குச் கொண்டுவரும் சிறப்பு இவற்றுக்கேயுரியன. ஸ்மிருதிகளால் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டாலும் சுருதிகளாகிய வேதங்கள் தந்த ஆத்மிகப்பண்பு என்றும் மாறாமல் இத்தகைய மாற்றங்களுமே இழையோடி இன்னும் தொடர்ந்தும் நிலவுவது இந்து சமய வரலாற்றில் நாம் அவதானிக்கக் கூடிய முக்கிய அம்சமாகும். இந்துக்கள் தமது சமய மரபுகளுக்கு வேதங்களையே பிரமாணமாகக் கொள்வதோடு அவற்றை எழுதாமறை எனப் போற்றுகின்றனர். வேதங்கள் என்றுமுள்ளவை என்ற காரணத்தால் நித்தியம் என்ற சிறப்புப் பெயரைப் பெறுகின்றன. தனிமனித சார்பற்றவை என்பதினால் அபௌருஷேயம் என்ற பெயரால் சுட்டப்படுகின்றன. ரிஷிகளுக்கு உணர்த்தப்பட்ட உண்மைகளாக அவை விளங்குகின்றன.

'ரிஷி' என்ற சொல்லும் சிந்தனைக்குரிய தொன்றாகும். சம்ஸ்கிருதத்தில் 'திருஷ்' என்ற வினையடி 'பார்' என்ற பொருளைத் தரும். இதனையடிப்படையாகக் கொண்டு பிறந்த சொல்லே 'ரிஷி' ஆகும். எனவே ரிஷி என்ற சொல் 'காண்பவன்' என்ற சிறப்புப் பொருளையும் உணர்த்தும். ரிஷிகள் ஆழ்ந்த உண்மைகளை தம் உள்ளத்தினால் கண்டு உணர்ந்தவர்கள், இக்காரணத்தினால் ஒவ்வொரு பாடலுக்கும் ஒவ்வொரு ரிஷியின் பெயர் வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் மந்திரங்களை உள்ளொளியால் கண்டவர்கள் எனப்போற்றப்படுவர். மந்திரங்களைச் செய்தவர்கள் அல்லர் என்பது மரபுவழி நம்பிக்கையாகும் (தெய்வத்தின் குரல், 1-ம் பகுதி, 1976-பக்-128), தாம்பெற்ற தெய்வ அனுபவத்தை தலைமுறையாக வாயால் ஓதி வழங்கி வர அதனை ஏனையோர் கேட்டு உணர்ந்தனர். எனவே வேதங்கள் இந்திய நாட்டின் பழம்பெரும் ஞானிகளின் அனுபவங்களைக் கொண்டுள்ளன.

இந்துப் பண்பாட்டை உருவாக்குவதில் வேதகால ரிஷிகளினதும் பரம்பரையாக வாழ்ந்த ரிஷிகளினதும் பங்கு அளப்பரியது. இந்தியாவில்ஞானிகளாகவும் ஆசார அனுஷ்டானங்களிற் சிறந்தவர்களாகவும் பேரறிவும் பரந்த உள்ளமும் படைத்தவர்களாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரிய கருத்துக்கள் உள்ளவர்களாகவும் இருந்தவர்கள் ரிஷிகள் எனப்பட்டனர். உயர்ந்த கருத்துக்களைத் தாங்கி எளிய வாழ்க்கையை நடத்திவந்தவர்கள் அவர்கள். தர்மத்தின் நுணுக்கமான விடயங்கள் குறித்துச் சிந்தித்தும் எளிய முறையில் தூய வாழ்க்கை நடத்தியும் சமுதாயத்திற்கு நேரிய வழியைக் காட்டிக் கொண்டு இருந்தவர்களாவர். வைதிகஇலக்கியம் முழுவதும் இந்த ரிஷி முனிவர்கள் படைத்து அளித்ததே. அவர்கள் விட்டுச்சென்ற வைதிகச் செல்வம் பல்லாயிரமாண்டுகளுக்கு முன் போல காலந்தோறும் மக்களுக்குப் பண்பாட்டுக்குரிய வழிவிளக்காய் இருந்து உதவி வருகின்றது. (ஸ்ரீ கிருஷ்ணதத்த பட் 1987 பக்-07) இந்துப்பண்பாட்டை உருவாக்குவதில் வேத ரிஷிகள் கொண்ட பங்கினைப் பற்றி பாரதியார் குறிப்பிடுமிடத்து

> மரணமில்லாத இந்த ஹிந்து நாகரிகமாகிய கற்பக விருக்ஷத்திற்கு ஆதியிலே விதை யூன்றியவர்கள் வேத ரிஷிகள். அவர்கள் எக்காலத்திலே-எத்தனை நூற்றுண்டுகளின் முன்னே இருந்தார்களென்பதைக் கணக்கிட்டுச் சொல்ல நவீன ஆராய்ச்சி யாதொரு கருவியுமில்லாதிருக்கிறது. ஹிமவத் பர்வதம் எப்போதுண்டாயிற்று? யாருக்குத் தெரியும்? வேதரிஷிகள் எக்காலத்தில் வாழ்ந்தனர்? எப்படிச் சொல்வது? (பாரதியார், [வேதரிஷிகளின் கவிதை] பக்-2-3) எனக்கேள்வி எழுப்புகின்றார்.

வேதங்கள் காலத்தால் தொன்மையானவை என்ற காரணத்தால் அவற்றிலிருந்து பெறப்படும் சமயதத்துவ சிந்தனைகளைப் நாம் பழைமை என்று ஒதுக்கிவிடமுடியாது. வேதங்களின் தொன்மை பற்றி நாம் குறிப்பிடும்போது சில விடயங்களைச் கவனிக்க வேண்டும். வேதங்கள் இயற்றப்பட்ட மந்திர காலம் வேறு; அவை தொகுத்த சம்ஹிதை காலம் வேறு. இச்சம்ஹிதைகள் பலரிஷிகள் குடும்பங்களிலே பேணப்பட்டன. இதனால் பல கிளைகள் சாகைகள் என்ற பெயரில் எழுந்தன. சம்ஹிதை என்றால் 'தொகுக்கப்கட்டவை' என்று பொருள். வேதங்கள் தொகுக்கப்பட்ட நிலையிலும் எத்தகைய இடைச் செருகல்களும் ஏற்படாதவாறு ஸ்வரங்கள் மூலம் வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டன. உதாத்த, அனுதாத்த, ஸ்வரித ஸ்வரங்கள் முறையே ஓசையை உயர்த்தியும் தாழ்த்தியும் சமநிலையிலும் பேண உதவியதோடு வேதங்களை எளிதில் மனதில் பதியச் செய்யவும் துணைபுரிந்தன.

வேதங்களில் புரோகித மண்டல வேதங்களாக இருக்கு, யசுர், சாமம் ஆகிய மூன்றும் திரயீவித்யா என்ற நிலையிற் சிறப்பிக்கப்பட்டன. இவை எடுத்துக் கூறிய கருத்து உயரிய தெய்வக் கொள்கையாகும். தெய்விக வழிபாட்டை அடிப்படையாகக் கொண்டு மக்களின் நல்வாழ்வுக்குரிய ஆற்றல் வழிபாட்டின் வழிகிட்டியது. பூரணவாழ்வுக்கும் ஆன்ம ஈடேற்றத்திற்கும் இவை உதவின. மக்கள் பண்புடன் வாழ்வதற்கேற்ற உயர்ந்த அறவுரைகள் வேதங்களில் இடம் பெற்றுள்ளன. இருக்குவேதம் இறுதியாகக் கூறும் ஒரு பாடலில் உயர்ந்த பண்பாட்டுச் சிந்தனைகள் உள்ளடங்கியுள்ளன.

> 'எல்லா மாந்தரும் இணக்கமாய் வாழ்ந்து வருவார்களாக. எல்லோரும் அன்புடன் உரையாடட்டும். அனைவர் உள்ளங்களிலும் ஒற்றுமை உணர்வு நிலவட்டும். எல்லோரும் பகைமையை வளர்க்காத அறிவைப் பெறட்டும். மூதறிஞரான பெரியோர் எந்தக்காலத்திலும் கடவுள் அறிவுபெற்று அவரை வழிபடுவதிலேயே தம் காலத்தைக் கழித்ததுபோல நீங்களும் நல்லறிவு பெற்று கடவுள் வழிபாட்டில்முனைந்திருங்கள். உங்கள் அனைவர் உள்ளங்களிலும் ஒரேவகையான உயர்ந்த பாவனை இருந்துவரட்டும். நீங்கள் அனைவரும் ஒருவர் மற்றவருக்கு உதவிக் கொண்டு தத்தம் காரியங்களைச் சிறப்பாகச் செய்து முடியுங்கள்'' (இருக்கு வேதம் 10. 191, 2;4)

மக்களிடையே அன்பு வளர வேண்டுமென்றபண்பாட்டு உணர்வைவேதங்கள் அறிவுறுத்தியமை குறிப்பிடத்தக்கது. யசுர் வேதத்திலும் இத்தகைய சிந்தனைகள் காணப்படுகின்றன.

> ''எல்லா உயிர்களும் என்னை நண்பனுகக் கருதட்டும். நானும் எல்லா உயிர்களையும் என் நண்பனுகவே கருதுவேனுக.'' (யசுர்வேதம், 36, 18)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மூன்று வேதங்களை விட நான்காவது வேதமாகிய அதர்வவேதம் தெய்வங்களை விட வேறான சக்திகளுக்கும் முக்கியத்துவம் அளித்தது. பெரும்பாலும் உலகியல் விருப்பங்களைப் பூர்த்தி செய்ய மந்திரங்களை உச்சாடனஞ் செய்தனர். அதர்வவேதம் கூறும் சமயத்தின் முக்கிய நோக்கங்கள் சாந்தப்படுத்தல், ஆசிர்வாதம் பண்ணுதல், துதித்தல், சபித்தல் ஆகியவையாகும். மாந்திரீகக் கிரியைகள் முக்கியம் பெற்றன. எனினும் வேதங்களில் ஒன்றாக வைத்தெண்ணப்படத்தக்க பல சிறந்த சமய தத்துவப் பாடல்களும் இதில் உள்ளன. இங்கு மக்களின் சமய நம்பிக்கைகள் பற்றி நன்கு அறியக்கூடிய வகையில் பல பகுதிகள் காணப்படுகின்றன. இந்துக்கள் தமது நல் வாழ்வுக்காக இல்லறங்களில் மேற்கொள்ளும் கிரியை மரபுகளுக்குரிய கிருஹ்ய சூத்திரங்களையொத்த மந்திரங்கள் அதர்வவேதத்தில் காணப்படுகின்றன. மக்களின் நம்பிக்கை பற்றிய விடயங்களில் குறிப்பாக சோதிடம், வைத்தியம் பற்றியும் இவ்வேதம் கூறுகின்றது. சமூகத்தில் மன்னருக்குப் பயன்படும் மந்திரங்கள், பெண்களின் நன்மைக்குரிய மந்திரங்கள். மக்களது நீண்ட வாழ்வை அளிக்க வல்ல மந்திரங்கள், நோய் நீக்கும் மந்திரங்கள், நாட்டின் செழிப்புக்குரிய மந்திரங்கள் போன்றவை குறிப்பிடத்தக்கன. இயற்கைச் சக்திகளைப் பெற்றோராகக் கொண்டு சமத்துவ உணர்வை வற்புறுத்துவதில் அதர்வவேதம் சிறப்படைகின்றது.

> 'பூமி நமது தாய்; நாம் பூமியின் பிள்ளைகள். மேகம், நம் தந்தை; அவை நம்மைப் புனிதமாக்கி நமக்குத் தென்பு ஊட்டுகின்றன.
>
> (அதர்வவேதம் 12. 1. 12)

யாகங்களில் கடமையாற்றும் பல வகைப் புரோகிதர்களின் தேவையை ஒட்டி எழுந்ததே யசுர்வேதம். யாகங்களில் ஓத வேண்டிய மந்திரங்களை விட வேள்வியுடன் தொடர்புடைய பல்வேறு கிரியைகளைச் செய்யும் முறையையும் இவை பற்றிய விளக்கங்களையும் விவாதங்களையும் காணமுடிகின்றது. இந்து சமய மரபில் கிரியைகளின் விளக்கமான நடைமுறைகளை எடுத்துக் கூறிய சிறப்பு யசுர் வேதத்திற்கே உரியது. மந்திரங்களின் புனித நிலை இவ்வேதத்தில் சிறப்பாக காணப்படுகின்றது. பிற்காலத்தில் இந்துக்களின் பண்பாட்டு மரபுக்கு வழி வகுத்த நூல் களிற் சிறப்புடையது பகவத்கீதையாகும். இது பிரஸ்தானத்திரயத்தில் ஒன்று. இது வற்புறுத்தும் உயர்ந்த சிந்தனை கர்ம சந்நியாசம் ஆகும். பலனில் பற்று வைக்காத மனப் பக்குவத்தோடு ஒருவன் கடமையைச் செய்தல் வேண்டும் என்ற உயர்ந்த கருத்தை வற்புறுத்தியது கீதை. இந்த சிந்தனைக்கு முன்னோடியாக யசுர்வேதத்தில் பல கருத்துக்கள் வற்புறுத்தப்பட்டுள்ளன. வாழ்க்கை வளமாக அமைய இக்கருத்து பெரிதும் துணைபுரியும் என்பது யசுர் வேதத்தின் கோட்பாடாகும்.

> இந்த உலகத்தில் கர்மம் அல்லது செயல் புரிந்தவாறே நூறு ஆண்டுகள் வாழ விரும்பு. இவ்வாறு பயன் கருதாது பணிபுரிகையில் உனது செயல்கள் உன்னைப் பற்றமாட்டா. விடுதலை பெறுவதற்கு உள்ள வழி இதுவே.
>
> (யசுர்வேதம் 40, 2)

இவ்வாறு தனிமனித மேம்பாட்டுக்கு மாத்திரமன்றி வழிபாட்டு மரபிலும் பல புதிய மாற்றங்களை ஏற்படுத்துவதில் இவ்வேதம் சிறப்படைகின்றது. வேத காலத்திலே சிறப்புற்ற யாகத்தையே இவ் வேதம் வற்புறுத்திய போதும் வேறு வழிபாட்டு மரபையும் எடுத்துக் கூறியுள்ளது. வழிபடப்படும் தெய்வத்தைக் குறித்துப் பல பெயர்களைக் கூறும் புதிய முறை யசுர்வேதத்தில் முதன் முதலாக இடம் பெறுவதைக் காண்கிறோம். இம் மரபு பிற்காலத்து தெய்வ வழிபாட்டு முறையில் உயரிடத்தைப் பெறுகின்றது. இம் மரபைந் பின்பற்றிய நிலையில் புராணங்கள் வழிபடப்படும் தெய்வங்களுக்கென பெயர்களை நூறாகவும் ஆயிரமாகவும் தொகுத்துக் கூறுகின்றன. சிவாகம வழிபாட்டு நெறியில் இவ்வழிபாட்டு மரபு சிறப்படைந்தது. தென்னாட்டு ஆலயங்களில் நித்திய வழிபாட்டில் இத்தகைய பல பெயர்களைக் கூறி இறைவனை சிறப்பித்து வழிபடும் முறை இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. பெயர்கள் பல கூறி வழிபடும் முறையினை யசுர் வேதத்தில் வரும் சதருத்திரியம் என்ற பகுதியில் முதன் முதலாகக் காணமுடிகின்றது. இங்கு உருத்திரன் என்ற தெய்வத்தின் நூறு பெயர்கள் கூறப்படுகின்றன. அத்துடன் சைவ சமயத்தில் சிறப்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டம் பெறும் 'நமச்சிவாய' என்ற ஐந்தெழுத்து மந்திரம் இங்கு இடம்பெறுவதும் குறிப்பிடத்தக்கது. (யசுர்வேதம் 4.5.1.41) சதருத்திரியம் இருவகையில் முக்கியத்துவம் பெறுகின்றது. உருத்திரன் இதிகாச காலச் சிவனோடு இனங்கண்டு கொள்வதற்கு ஏதுவான பலவேறு பொதுப் பெயர்களைக் கொண்டு விளங்குகின்றான். இந்து விக்கிரகவியல் பற்றிய விளக்கத்திற்கும் சிவனது தெய்வ வரலாற்றியல் (My thlogy) பற்றிய கருத்துக்களை அறியவும் யசுர்வேத சதருத்திரியம் முக்கியத்துவமுடையது.

வேத வரிசையில் முதன்மை பெறும் இருக்குவேதம், பக்திநெறி, தோத்திரமரபு ஆகியவற்றுக்கு முன்னோடியாக விளங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. பக்தியின் ஆரம்பக் கருவை வருணனது பாடல்களில் காண்கின்றோம். (இருக்குவேதம், 7. 86) வழிபடுவோருக்கும் வருணனுக்கும் இடையே நெருங்கிய நட்பு நிலவியது. தோழமை பாராட்டிய சிறப்பைக் காண முடிகின்றது. பக்தி நெறியில் இறைவனை தந்தையாக, தாயாக, சகோதரனாக, நண்பனாகக் கருதி வழிபடுவது சிறப்பம்சமாகும். இத்தகைய பக்தி நிலைபற்றிய சில குறிப்புகள் இருக்கு வேதத்திலும் ஏனைய வேதங்களிலும் காணப்படுகின்றன. ''இறைவன் எங்கள் தந்தையாக எம்மைப் படைத்தவனாக எமது நண்பனாக உள்ளான்.'' (அதர்வவேதம் 2.1.3) என்ற கருத்து அதர்வவேதத்தில் இடம் பெறுகின்றது. இதே கருத்த யசுர்வேதத்தில் சற்று வேறுபட்டு வருகின்றது. ''இறைவன் எங்கள் நண்பன்; எங்கள் தந்தை; எம்மைப் படைத்தவன். அவன் எல்லா நிலைகளையும் அறிந்தவள்; அனைத்து படைப்புக்களையும் அறிந்தவன்.'' (யசுர்வேதம் 32 - 10) இருக்கு வேதத்தில் ''இறைவனே! நீயே எங்கள் தந்தை; எங்கள் சகோதரன்; எங்கள் நண்பன்.'' இவ்வாறு வேதங்களில் பக்தியின் பல்வேறு நிலைகள் இடம்பெறுகின்றன.

இறைவனை இத்தகைய நிலைகளில் வழிபடுவதற்குரிய சாதனங்களாக அமைந்தவை தோத்திரங்கள் ஆகும். இந்துசமய மரபிலே தோத்திரங்கள் வேதங்களிலேயே தமது ஆரம்பத்தைக் கொண்டுள்ளன எனலாம். ''பிரபஞ்சத்தின் தந்தையாகிய இறைவனை நாம் இரவும் பகலும் பாடல்களால் போற்றுவோமாக'' என்று இருக்குவேதம் கூறும். இங்கு 'கீர்' என்ற பதத்தால் தோத்திரம் குறிக்கப்படுகின்றது. (இருக்குவேதம் 4 . 49 - 10) வழிபாட்டின் நோக்கம் இறைவனது திருவருளைப் பெறுவதாகும். இக் கருத்துக் கமையவும் இருக்குவேதப் பாடல்கள் உள்ளன. ''வரையாது வழங்குபவனே! நீயே எங்கள் தந்தையும் தாயுமாக விளங்குகின்றாய்! உனது அருளை வேண்டி வழிபடுகின்றோம்'' (இருக்குவேதம், 8 - 96 - 11) ''தூய்மையான இறைவனை தூய பாடல்களால் போற்றுவோமாக'' என்ற பொருளில் வரும் பாடலில் தோத்திரத்தின் சிறப்பு கூறப்படுகிறது. (இருக்குவேதம் 7 - 95 - 7) பிறிதோர் பாடலில் வரும் கருத்து, இந்து சமய மரபில் தோத்திரங்களால் வழிபடும் முறையை நன்கு இடம்பெறச் செய்துள்ளதோடு அம்மரபுக்கு முன்னோடியாகவும் விளங்கியுள்ளது. ''இசைப் பிரியனே! எனது தோத்திரப் பாடல் உன்னைச் சுற்றிலும் சிறந்து விளங்குவதாக'' என்ற இருக்குவேதம் தரும் பாடல் இங்கு பொருத்தமாக அமைகின்றது. (இருக்குவேதம் 1 - 10 . 12) இவ்வாறு சிறப்புப் பெறும் வழிபாட்டுக்குரிய தோத்திரங்கள் வேதங்களில் ரிக் (பாடல்) சூத்தம் (நன்கு சொல்லப்பட்ட) கீர் (புகழ்மாலை) ஸ்தோம் (புகழ்மாலை) ஸ்தோத்திரம் (புகழ்மாலை) பிரமன் (வழிபாடு) போன்ற சொற்களால் சிறப்பாகச் சுட்டப்படுகின்றன. இறைவனைப் புகழும் பாடல்கள் இருக்குவேதத்தில் பிரமன் என்று குறிக்கப்பட்டன. இச்சொல் மந்திரங்களை குறித்தது. வழிபாட்டில் இறைவனையும் வழிபடுவோனையும் இணைக்கும் சாதனங்களில் தெய்வீகப் பாடல்களாகிய தோத்திரங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. அம்மரபு பிற்காலத்துச் சமயமரபில் பக்தி உணர்வை வளர்ப்பதற்குரிய சிறந்த சாதனமாக அமைந்தது. வடஇந்திய பக்திநெறியிலும் தென்னிந்தியாவில், சிறப்புற்றோங்கிய பக்திநெறியிலும் அருளாளர்கள், சிவனடியார்கள், ஆழ்வார்கள் ஆகியோரது பாடல்களில் இம்மரபின் ஆழத்தை நாம் காணமுடிகின்றது. தோத்திர லட்சணங்கள் பின்வருமாறு வரையறுக்கப்படுகின்றன.

நமஸ்காரஸ் ததாசீச்ச ஸித்தாந்தோக்தி:
பராக்ரம:
விபூதி: ப்ரார்த்தநா சேதி ஷட்விதம்
ஸ்தோத்ர லக்ஷணம்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணக்க ரூபமாகவுள்ள தோத்திரம், வாழ்த்து ரூபத்துதி சித்தாந்த பரமான கூற்றுத் துதி, பராக்கிரமத்துதி, மகிமைகளைக் கூறித் துதித்தல், பிரார்த்தனைக் கூற்றுத் துதி ஆகிய ஆறும் தோத்திரத்தின் இயல்பு. இதற் கேற்ப வேதகாலத் தெய்வங்கள் போற்றித் துதிக்கப்பட்டன்ர்.

பிற்கால சமய வழிபாட்டு மரபில் இறைவன் வழிபாட்டின் கண்ணே தேவார திருவாசகமாதி பன்னிரு திருமுறைத் தோத்திரப் பாடல்களையும், ஆழ்வார்களின் திவ்வியப் பிரபந்தப்பாடல்களையும் திருவருட் செல்வர்களாகிய அருணகிரிநாதர், குமரகுருபரர், தாயுமான சுவாமிகள் போன்ற பெரியார்கள் பாடிய தோத்திரப் பாடல்களையும் பாடித் துதித்தல் விசேட அம்சமாயுள்ளது. ஆன்மார்த்த பூசை, பரரார்த்த பூசையாகிய கோயிற் பூசை, கடவுட் பிராத்தனை, ஆலய வழிபாடு முதலிய நியமங்களில் ஈடுபடும் போது தோத்திரப் பாடல்கள் பாடித் துதித்தல் பெருமை வாய்ந்த நெறிமுறையாகும். வடமொழியில் உள்ள சகஸ்ர நாமங்கள், ஸ்ரீருத்ரம் முதலிய வேதப்பகுதிகள், புராண இதிகாசங்கள், சௌந்தர்யலஹரி, மகிஷாசுரமரத்தனி ஸ்தோத்திரம், ஸ்ரீதேவீ மஹாத்மியம் போன்றவையும் பாராயண நியமஸ்தோத்திரங்களாகப் போற்றி அனுசரிக்கப்பட்டு வருகின்றமை மரபாகும்.

இத்தகைய தோத்திரங்களை இசையுடன் பாடுதல் எமது மரபாகும். வேதப்பாடல்களை இசையுடன் பாடவழிவகுத்தது சாமவேதம். வேதங்களை ஸ்வரத்தோடும் தேவாரங்களைப் பண்ணோடும் பாடுவதே எமது சமய மரபாகும். இறைவனுக்குரிய பூசையில் உபசாரங்களில் ஒன்ருக இது அமைகின்றது. சாமவேதத்தில் பாடல்களுக்குரிய இராகங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. இந்தியாவில் எழுச்சி பெற்ற இசைபற்றியும் அதன் வரலாறு பற்றியும் ஆராய சாமவேதம் பெரிதும் துணை புரிவதாகும். இசைத்துறை வளம் பெற வேதங்கள் பெருமளவு உதவியுள்ளன.

பக்திநெறியுடன் கூடிய தோத்திரம் யாகம் ஆகியவற்ருல் இயற்கை சக்திகளைத் தெய்வீக நிலைப்படுத்தி வேதகாலத்தில் வழிபாடு நிகழ்ந்த விடத்தும் இவற்றின் ஊடே இழையோடி நின்றது ஒரு தெய்வக் கோட்பாடு. சத்தியமான பரம்பொருள் ஒன்றே: அதனை அறிஞர் பலவாறு விதந்து போற்றுவர் (இருக்கு வேதம் 1. 174) என்ற கருத்து ஒரே பரம்பொருட் கொள்கையை வற்புறுத்தியது. இப்பரம் பொருளை ஒளியாக வழிபடுவது முக்கிய பண்பாக அமைந்தது. ஒளியை வழிபடுவதனுல் பெறப்படும் அனுபவம் இறைவன் பற்றிய உணர்வாக விளங்கியது. சாமவேதத்தில்,

அக்கினியே ஒளி; ஒளியே அக்கினி
இந்திரனே ஒளி; ஒளியே இந்திரன்
சூரியனே ஒளி; ஒளியே சூரியன்.

(சாம வேதம். 1831)

எனவரும் இக்கருத்து பிற்காலத்தில் பிருகதாரண்யக உபநிடதத்தில் சிறப்படைந்தது. ''இருளிலிருந்து என்னை ஒளிக்கு இட்டுச் செல்வாயாக'' என்ற தொடரில் ஒளியே பிரமமாகக் குறிப்பிடப்படுகிறது.
(பிருகதாரண்யக உபநிடதம் 1. 3. 28)

இக்காலச் சமயத்தின் பிறிதோர் முக்கிய அம்சம் யாதெனில் பல தெய்வங்களில் ஒரே பரம் பொருள்தத்துவத்தைக் காணும் முறையாகும். வைதிக சமயத்தின் முக்கிய பண்பு ஒருமையிற் பன்மையையும் பன்மையில் ஒருமையையும் இனங்காணும் முயற்சியாகும். அக்கினியை ஏனைய தெய்வங்களாகிய இந்திரனுகவும் விஷ்ணுவாகவும் பிரம்மனுகவும் வருணனுகவும் மித்திரனுகவும், அதிதியாகவும் போற்றும் மரபு இதற்குச் சிறந்த உதாரணமாகும். (இருக்கு வேதம் 11. 1. 1-11). ஆத்மிக சிந்தனைகளுக்கு வழிவகுத்த வேதப் பாடங்களில் பரம்பொருட் தத்துவம் சிறப்பாக இடம்பெறுகின்றது. உள்ளொளி பெருக்கி நின்ற வேதரிஷி ஒவ்வொரு தெய்வத்திற்குமிடையேயுள்ள பரம் பொருநிலையை உணரத் தவறவில்லை. பகவத் கீதையில் விபூதியோகத்தில் சிறப்பிடம் பெறும் பரம்பொருள் தத்துவத்தோடும் கந்தபுராணத்தில்முருகனது திருப்பெருள் வடிவத்தோடும் ஒத்தநிலையில் இருக்குவேதம் கூறும் பரம்பொருளை நாம் உணரமுடிகின்றது. பகவத்கீதையில் மேம்பட்ட நிலையில் விரித்துக் கூறப்படும் பரம்பொருட் தத்துவச் சிறப்புக்கு வேதப்பாடல்கள் வகுத்துக்கூறும் கருத்துக்கள் முன்னேடியாக விளங்கியவை போற் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதங்கள் தெய்வங்களது வீரதீரச் செயல்களை விதந்து போற்றுகின்றன. இந்திரன், விஷ்ணு, உருத்திரன், புருஷன் பற்றிய பாடல்களில் வீரச் செயல்கள் சிறப்பிடம் பெறுகின்றன. இந்நிலை புராணங்கள் போற்றும் பரம்பொருள் தத்துவச் சிறப்புக்கும் முன்னோடியாக அமைந்திருக்கலாம். புராணங்களில் வழிபாடிற்குரிய பிரதான தெய்வங்களின் வீரத்திற்கே முதன்மையளிக்கப்பட்டுள்ளது. புராணங்கள் சித்தரிக்கும் சிவனது அட்ட வீரட்டங்களையும், விஷ்ணுவின் தசாவதாரச் சிறப்பினையும், ஸ்ரீ தேவி மாஹாத்மியத்தையும் உதாரணங்களாகக் குறிப்பிடலாம். இவ்வகையில் இந்துசமயத் திருநூல்களிற் சிறப்பிக்கப்படும் பரம் பொருள் தத்துவ மரபிற்கு வழிவகுத்த பெருமை வேதங்களுக்கே உரியது. இருக்கு வேதத்தில் உள்ள பத்தாம் மண்டலப்பாடல்கள் கடவுட் கோட்பாடு பற்றிய சில அடிப்படைக் கருத்துக்களை உருவாக்கிக் கொள்ள பெரிதும் துணை புரிகின்றன.

இருக்கு வேதத்திற் காணப்பட்ட மறுமை பற்றிய சிந்தனைகளும் உபநிடத சிந்தனை வளர்ச்சிக்கு வித்திட்டுள்ளன எனலாம். வேதத்தில் இடம்பெறும் சிறப்புப் பற்றிய பாடலும் (இருக்கு வேதம் 10 . 14) பிதிரர் பற்றிய பாடலும் (இருக்குவேதம் 10 . 15) யமன் பற்றிய பாடலும் (இருக்கு வேதம் 10 . 135) இறப்புக்குப் பின் ஆன்மா பற்றிய கருத்துக்களைக் கொண்டுள்ளன. ஆன்ம விசாரணைக்குரிய மூலக் கருத்துக்கள் இப்பாடல்களிற் காணப்படுகின்றன. உபநிடதங்களுள் சிறந்ததாகிய கடோபநிடதம் ஆன்ம விசாரணைக்கு முக்கியத்துவம் அளித்துள்ளது இறப்புக் கடவுளாகியயமனேகுரு. அவனிடம் சென்ற சிவனே சீடன் - வேதகாலத்து மறுமை பற்றிய பாடல்கள் உபநிடத சிந்தனைகள் விரிவு பெற வழி கோலியுள்ளன எனலாம்.

இவ்வாறு வேதங்கள் இந்துப் பண்பாட்டின் பல்துறை சார்ந்த அம்சங்களை வளம் படுத்தியுள்ளன - சமயம், தத்துவம் ஆகிய இரு துறைகள் முக்கிய இடம் பெறுகின்றன. பரம்பொருட் கொள்கை, வழிபாட்டு மரபு, பக்தி நெறி, தோத்திர மரபு, இசை மரபு, தெய்வீக வரலாறு, உலகியல் நம்பிக்கைகள், மறுமைக் கோட்பாடு போன்ற இன்னோரன்ன பண்பாட்டுச் சிந்தனைகள் வளம்பெற வேதங்களே கருவூலமாக விளங்கியுள்ளன எனில் மிகையில்லை. இத்தகைய அம்சங்களை ஆராயுமிடத்து வேதங்களின் முதன்மையை நாம் நன்குஉணரமுடிகின்றது.

## உசாவியவை


அதர்வ வேதம்: ஆண்ட் பதிப்பு.

இருக்கு வேதம், தாமோதர பட்டர், ஸ்ரீபாத சர்மா (பதி.) 1957.

உபநிஷத்ஸாரம், (பாகம்2) சாந்தோக்கிய, பிருஹதாரணியக உபநிஷத்துக்கள், அண்ணா (உரை), ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை, 1957.

உபநிஷத்ஸாரம், ஈச - கேன - கட உபநிஷத்துக்கள். அண்ணா (உரை), ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை, 1964.

தைத்திரிய சம்ஹிதை, தொகுதிகள் 18, 19, எச். ஒ. எஸ் தொகுதி - 1914.


பாரதியார் நூல்கள் - வசனங்கள்: வேதரிஷிகளின் கவிதைகள். பாரதியார்,

தெய்வத்தின் குரல், (1ம் பகுதி), ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதீஸ்வர ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி சங்கராச்சாரிய ஸ்வாமிகள், வானதி பதிப்பகம், சென்னை, 1976.

இந்துமதம், (பாகம் 1), ஸ்ரீ கிருஷ்ண தத்த பட், காந்தி இலக்கிய சங்கம், மதுரை, 1986.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தீவகம் : போக்குவரத்து
ஆலயம்
காரைதீவு
யாழ்ப்பாணம்
குடாநாடு
எழுவைதீவு
அனலைதீவு
வேலணைத்தீவு
யாழ்ப்பாண
நகரம்
சாட்டி
மண்கும்பான்
அல்லைப்பிட்டி
தீவு
நயினாதீவு
புங்குடுதீவு
நெடுந்தீவு
முடிப்பிள்ளையார்
ஆலயம்
வீதி
சிறு வீதி
780
778
778
ஆலயம் நோக்கிய பேருந்து
சாலை இலக்கம்
4 2 0 4
மைல்


படம்-1.



படம் - 2.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்வளத்தைப் பேணுவோம்

செ. பாலச்சந்திரன்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
புவியியற்றுறை
யாழ். பல்கலைக்கழகம்

நீர்வளம் இன்றியமையாதது. நீர் இன்றி நாடு இல்லை. ஆகவே நமது பிரதேசம் பேணப்பட நீர்வளம் பேணப்பட வேண்டும். நீர்வளத்தைக் குன்றாது பாதுகாக்க வேண்டும். கட்டுப்பாடுடைய பாவனை வேண்டும். எதிர்காலச் சந்ததியினருக்குப் பேணிக்கொடுக்க வேண்டும். தீவகத்தில் நாற்பதுக்கும் மேற்பட்ட ஆலயங்களில் மகோற்சவங்கள் நடைபெறுகின்றன. நூற்றுக்கும் மேற்பட்ட கோவில்களில் நித்திய நைமித்தியங்கள் நிகழுகின்றன. திருப்பணிகளும் கும்பாபிஷேகங்களும் விமரிசையாக நிகழ்த்தப்படுகின்றன. ஆயினும் இவற்றுக்கு அடிப்படை ஆங்காங்கு அமைந்திருக்கின்ற நன்னீர்த் தாழிகள் ஆகும். இந்த நன்னீர்த் தாழிகளின் நீர்மட்டம் குன்றாது இருந்தால் தான் நாமும் நமது ஆலயங்களும் சிறப்புற இயங்க முடியும்.

## 1 தீவகம்

தீவகம் பல தீவுகளைக் கொண்டது. ஆயினும் ஒரு சில தீவுகளில்தான் நன்னீர் வளமும் அதிக குடிசனத்தொகையும் உண்டு. இந்த நன்னீர் வளப் பகுதிகளை நோக்கி குடிசனப் பெயர்ச்சி இடம் பெறுகிறது. இவற்றின் பரப்பளவையும், குடிசனத் தொகையையும், குடிசன அடர்த்தியையும் நிர்வாக நிலைமையையும் அட்டவணைகள் 1, 2 மூலம் அறியலாம்.

அட்டவணை 1

தீவுகள் – பரப்பு

| | | | |
|---|---|---|---|
| 1. | நெடுந்தீவு | 45.35 | ச.கி.மீ. |
| 2. | நயினாதீவு | 4.66 | ,, |
| 3. | அனலைதீவு | 6.08 | ,, |
| 4. | எழுவைதீவு | 1 68 | ,, |
| 5. | புங்குடுதீவு | 30.30 | ,, |
| 6. | காரைதீவு | 17.59 | ,, |
| 7. | வேலணைத்தீவு | 66.88 | ,, |
| 8. | மண்டைதீவு | 10.95 | ,, |

அட்டவணை 2

பரப்பும் குடிசனத்தொகையும்

| உ. அ.அ.பி. | பரப்பு | குடிசனத்தொகை | குடிசனஅடர்த்தி |
|---|---|---|---|
| தீவுப்பகுதி வடக்கு | 52.33 ச.கி.மீ. | 37583 | 719 ச.கி.மீ. |
| தீவுப்பகுதி தெற்கு | 91.53 ,, | 38411 | 419 ,, |
| நெடுந்தீவு | 43.35. ,, | 5608 | 123 ,, |

## 2. நீர்வளம்

நீர்வளத்தைத் திர்மானிப்பதில் மழைவீழ்ச்சி முக்கியமானது ஆகும். இயற்கையாக மயோசின் சுண்ணக் கற்பாறை காரணமாக தரைக்கீழ் நீர் காணப்பட்ட போதிலும் மழைவீழ்ச்சியின் போக்குக்கு ஏற்ப அதன் மட்டம் மாறுதலடைகிறது. மழைவீழ்ச்சி நிலையை அட்டவணை 4 எடுத்துக் காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மாதச்சராசரி மழைவீழ்ச்சி

| | ஊர்காவற்றுறை அங் | | நெடுந்தீவு அங் | |
|---|---|---|---|---|
| ஜனவரி | 3.14 | 32% | 3.16 | 33% |
| பெப்ரவரி | 1.12 | | 1.08 | |
| மார்ச் | 1.12 | 7% | 1.37 | 7% |
| ஏப்பிரல் | 1.37 | | 1.52 | |
| மே | 1.82 | 11% | 1.03 | 11% |
| ஜூன் | 0.44 | | 0 34 | |
| ஜூலை | 0.76 | | 0.26 | |
| ஒகஸ்ட் | 0.76 | | 0 80 | |
| செப்டம்பர் | 1.47 | | 1.59 | |
| ஒக்டோபர் | 9.36 | 50% | 7.89 | 48% |
| நவம்பர் | 13.82 | | 10.94 | |
| டிசம்பர் | 10.6 | | 9.4 | |

மழைவீழ்ச்சி வருடம் முழுக்கச் சமனாகப் பெறப்படவில்லை. மொத்தத்தில் 50% மழை ஒக்டோபர், நவம்பர் மாதங்களிலேயே பெறப்படுகிறது. ஏனைய மாதங்களில் மிகக் குறைந்த மழையையே பெறுகின்றது. குறிப்பாக மே மாதம் தொடக்கம் செப்ரெம்பர் மாதம் வரை மிகக் குறைந்த மழையையே பெறப்படுகிறது. இது மிக வரட்சிக் காலமாகும். அதிக மழை பெறுகின்ற மாரி காலத்தில் தரைக்கீழ் நீர்மட்டம் உயர்வது வழக்கம். கோடை காலத்தில் இம்மட்டம் குறைந்து நீர்ப் பிரச்சினையை அதாவது நன்னீர்ப் பிரச்சினையை உருவாக்குகிறது. மாரி காலத்தில் கூடிய மழை நீரை தரைக்கீழ் நீராகச் சேமித்தல் மிக அத்தியாவசியமாகிறது. தரைக்கீழ் நீர் சேமிப்பு குறைகின்றபோது பல பிரச்சினைகளை எதிர் நோக்க வேண்டி வருகிறது. ஒவ்வொரு தீவிலும் காணப்படுகிற தரைக்கீழ் நீர் சேமிப்பு குறைகின்றபோது பல பிரச்சினைகளை எதிர் நோக்க வேண்டி வருகிறது. ஒவ்வொரு தீவிலும் காணப்படுகிற தரைக்கீழ் நீர்ப் படுக்கை (நன்னீர்) பருமனில் மிகச் சிறியது. இதனால் நீர்ச் சேமிப்பை அதிகரித்தலும், பாவனையை மட்டுப்படுத்தலும் மிக முக்கியமாகிறது.

## 3. தரைக்கீழ் நீர்

நீர்வளம் என்று கூறுகின்றபோது நன்னீர் வளம்தான் கருத்திற் கொள்ளப்படுகிறது. இது தரைக்கீழ் நீராக இருப்பதால் அந்த வளம் பேணப்பட வேண்டும். பின் வரும் சமன்பாடு தரைக்கீழ் நீர் உருவாக்கத்தைக் காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UW=R–E–ET–SS–SF

UW: தரைக்கீழ்நீர்
R: மழைவீழ்ச்சி
E: ஆவியாக்கம்
ET: ஆவியுயிர்ப்பு
SS: மேற்பரப்பு நீர்நிலைகளிற் சேமிப்பு
SF: மேற்பரப்பு நீர் வெளியேற்றம்

சுண்ணாம்புப் பாறையின் நீர் உட்புக விடும் இயல்பு காரணமாக உட்செல்லும் நீர் அப்பாறையின்கண் காணப்படுகின்ற மூட்டுக்கள், உடைவுகள், குழிகள் ஆகியவற்றில் நீர் தேங்கியிருக்க வழியிருக்கின்றது. காலம் காலமாகப் பெறப்பட்ட மழைவீழ்ச்சி இதற்குக் காரணமாகின்றது. மழைவீழ்ச்சி நீண்ட காலத்திற்கு குறைவாகப் பெறப்படுகின்றபோது, ஆவியாக்க ஆவியுயிர்ப்பு அதிகரிக்கின்றபோது, மேற்பரப்பு நீர் நிலைகளில் சேமிப்பு குறைகின்றபோது, மேற்பரப்பு நீர் அதிகளவு கடலையடைகின்றபோது தரைக்கீழ்நீர் சேமிப்பு பாதிப்படைகிறது. இத்துடன் நீர்ப்பாவனையும் கூடுகின்றபோது மேலும் பாதிப்படைகிறது. தீவகத்தில் இந்தச் சேமிப்பை அடையாளம் காணலாம். வேலணைத் தீவில் சாட்டி, மண்கும்பான், அல்லைப்பிட்டி வலயம் சிறந்த நன்னீர் சேமிப்பு கொண்ட வலயமாகும். வேலணை மேற்கு, புளியங்கூடல் ஆகியன அதற்கு அடுத்தாற்போல் நீர் கொண்ட வலயமாகும். புங்குடுதீவில் அப்படியான வலயமே இல்லை. நன்னீர்த்தன்மை மிகக் குறைந்த பகுதியே உண்டு நெடுந்தீவின் மேற்கில் ஒரு சிறு பகுதியிலும் காரைதீவின் வடக்குப் பகுதியிலும் குறிப்பிடத்தக்களவு உண்டு. (படம் 2) நயினாதீவு, அனலைதீவு, மத்திய பகுதிகள் குறிப்பிடத்தக்கன. இவற்றுள் சாட்டி, மண்கும்பான், அல்லைப்பிட்டி வலயம் தவிர ஏனையவை ஓரளவிற்கு ஏனும் உவர்த்தன்மையைக் கொண்டன.

அட்டவணை 5

நீரின் உவர்த்தன்மை

| | | |
|---|---|---|
| நன்னீர் | 150PPM | மனித பாவனைக்கு உகந்தது |
| சாதாரண நீர் | 150-500 ,, | |
| சவர் நீர் | 500-1000 PPM | |
| உவர்நீர் | 1000 ,, | |
| கடல் நீர் | 20,000 ,, | |

## 4. நீர்ப்பாவனை

மாரி காலத்தில் நன்னீர் பிரச்சினை இல்லை. மழை குறைந்த வருடத்தின் ஏனைய மாதங்களில் குறிப்பாக ஏப்ரல் மாதம் தொடக்கம் செப்ரெம்பர் மாதம் வரை நன்னீர் சேமிப்பு வளம் அற்ற பகுதிகளில் நன்னீர் பாவனையில் பிரச்சினை ஏற்படுகிறது. இதற்காகப் பல நீர்ப்பாசனத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு தோல்வியடைந்துள்ளன (அட்டவணை 6). குடிசனப் பெருக்கம் அதன் காரணமாக வாழ்விட அதிகரிப்பு, உபஉணவுப் பயிர்ச்செய்கை அதிகரிப்பு என நீர்ப்பாவனை அதிகரித்துள்ளது கால் நூற்றாண்டுக்கு முற்பட்ட நிலப் பயன்பாடு இப்போது பலமடங்கு அதிகரித்துள்ளது. நன்னீர் இடங்கள் நெருக்கமான குடிசனப் பகுதிகளாக, உபஉணவுப் பயிர் நிலங்களாக மாறி வருகின்றன. நீர் இறைக்கும் இயந்திரங்கள் மிக அதிக அளவில் ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களில் நீரை வாரி இறைக்கின்றன. ஒவ்வொரு வீட்டுக்கும் கிணறுகள் பாவனையில் உள்ளன. இப்போது வீடுகளுக்கும் மின்சக்தியால் இயங்கும் நீர் இறைக்கும் இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. இதனால் என்றுமில்லாத அளவுக்கு நீர்ப்பாவனை அதிகரித்துள்ளது. (அல்லைப்பிட்டி, சாட்டி, மண்கும்பான் வலயம் விதிவிலக்கு). இதனால் பல நன்னீர்ப் பகுதிகள் உப்பு நீர் பகுதிகளாக மாறி வருகின்றன. நன்னீர் வளம் அற்ற பகுதிகளை நோக்கின் தீவுப் பகுதியின் பெரும் பகுதி இதில் அடங்குகிறது. ஏப்ரல் மாதத்திலிருந்து நீர்ப்பிரச்சினையை இவை எதிர்நோக்குகின்றன.

## 5. நீர் விநியோகம்

மேற்குறிப்பிட்ட மாதத்திலிருந்து தீவுப் பகுதியிற் பெரும் பாகத்துக்கு வீட்டுத் தேவைக்காக நன்னீரை விநியோகிக்க வேண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிய துர்ப்பாக்கிய நிலை உருவாகிறது இதற்காக தீவுகளில் நன்னீர் காணப்படும் இடங்களில் இருந்து குழாய்கள் மூலம் நீர் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டன. (அட்டவணை 6). புங்குடுதீவு, மண்டை தீவு போன்ற பகுதிகளுக்கு சாட்டியிலிருந்து கொள்கலன்கள் மூலம் நீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. குழாய் மூலம் விநியோகம் வேலணை தவிர ஏனைய இடங்களுக்கு வெற்றிகரமாக அமையவில்லை. தொடர்ந்து பல ஆண்டுகளுக்கு நீரை ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருந்து பெறுகின்ற போது அந் நீர்வளம் குறைகின்றது அவ்வாறு குறையும்போது அந்த

அட்டவணை 6

நீர் விநியோகத் திட்டங்கள்

| | | |
|---|---|---|
| 1 | நாரந்தனை – ஊர்காவற்றுறை | 1952 |
| 2. | நெடுந்தீவு | 1967 |
| 3. | புங்குடுதீவு | 1977 |
| 4. | நயினாதீவு | 1952 |
| 5. | வேலணை | 1979 |
| 6. | காரைநகர் வடக்கு | 1976 |
| 7. | அனலைதீவு | 1983 |

8. அல்லைப்பிட்டி – ஊர்காவற்றுறை அமைப்பு வேலைகள் நடைபெறுகின்றன.

இடத்தை உப்பு நீர் நிரப்புகின்றது. இது குழாய் நீர் விநியோகத்துக்காக அமைக்கப்பட்ட கிணறுகளுக்கு மட்டுமல்லாமல் பொதுக் கிணறுகள், தோட்டக்கிணறுகள் போன்ற அதிக நீர் பெறப்படும் இடங்களுக்கும் பொருந்தும்

கொள்கலன்கள் மூலம் விநியோகிக்கின்றபோது தேவைப்படும் அளவு கொடுக்க முடியாத நிலை தோன்றுகிறது. எடுத்துக்காட்டாக புங்குடுதீவுக்கு நாள் ஒன்றுக்கு 30,000 கலன் நீர் தேவைப்படுகிறது. தற்போதைய நிலையில் 8000 கலன் மட்டும் விநியோகிக்கப்படுகிறது. 15000 கலன் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மண்டைதீவுக்குப் போதிய நீர் வழங்கப்படுவதில்லை. நயினாதீவு, நெடுந்தீவு மக்கள் போதிய நன்னீர் இல்லாமல் கஷ்டப்படுகின்றனர். சாட்டி, மண்கும்பான், அல்லைப்பிட்டி வளத்தைக் கொண்டு ஊர்காவற்றுறைக்கு குழாய் மூலம் நீர் விநியோகிக்க அமைப்பு வேலைகள் நடைபெறுகின்றன. இதற்கு மேல் இங்கிருந்து மேலும் நீர் விநியோகத் திட்டங்கள் அமைக்க அந்த நீர் வளம் இடம் கொடுக்காது. ஆகவே நீர் விநியோகம் தொடர்ந்தும் தீராத பிரச்சினையாக இருந்து கொண்டேயிருக்கும்.

## 6. நீர்வளம் பேணுதல்

அதிக நீர்ப்பாவனை, அதிக நீர் விநியோகம் ஆகியவற்றால் ஏற்படுகின்ற நீர் பற்றுக்குறையை ஈடுசெய்ய நீர்வளம் பேணப்படுதல் மிக முக்கியமாகும். நீரைச் சேமித்தல், நீர்ப்பாவனையை மட்டுப்படுத்தல் நீர் அசுத்தமாவது தடுத்தல். உயிர்ச்சூழல் ஒழுங்கினைப் பாதுகாத்தல், கடல் நீர் உட்புகாது தடுத்தல், பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் ஆகியன நீர்வளம் பேணுதலின் முக்கிய அம்சங்கள் ஆகின்றன.

## 6.1 நீரைச் சேமித்தல்

நீரை வெளியிடத் தொட்டிகளில் சேமிக்க முடியாது. இங்கு சேமித்தல் என்று கூறும்போது மழை காலத்தில் பெறப்படும் நீரை வீணடிக்காமல் நிலத்தினுள் புகவைத்து தரைக்கீழ் நீராக மாற்றுதல் என்னும் பொருள்படும். மணல் இலகுவில் நீரை உட்கொள்ளும். களிமண் அதற்கடுத்ததாக நுண்டுளைமையைக் கொண்டிருக்கும் (அட்டவணை 8)

அட்டவணை 8

| நீரின் ஊடுவடிதல் | (நுண்டுளைமை) |
|---|---|
| மணல் | 50 – 60% |
| களிமண் | 45 – 55% |
| வண்டல்மண் | 40 – 50% |
| சிரான மணல் | 30 – 40% |
| பரல் | 30 - 40% |
| பரலும் மணலும் | 20 - 35% |
| மணற்கல் | 10 - 20% |
| சுண்ணாம்புப்பாறை | 1 - 10% |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழைநீரை தரைக்கீழ் நீராக மாற்றப் பல வழிகள் உண்டு. மேலதிக நீரை கடலுக்கு அனுப்பாமல் குளங்களுக்கு வழிப்படுத்துதல் மூலம் குளத்தினூடாக நீரை உட்செல்லவைக்கலாம். குளங்களின் அடிமட்டம் எண்ணிறந்த சுண்ணாம்புக்கல் உடைவு வழிகளைக் கொண்டிருக்கும். குளங்களில் படிந்துள்ள சேறுகளை அகற்றுதலும் இன்னொரு வழியாகும். அத்துடன் குளங்களை அகலுவிக்கவும் வேண்டும். குளத்தின் அணைகள் உயர்த்தப்படவும் வேண்டும் பிரதான குளங்களில் இப்படியான செய்முறைகளைப் பின்பற்றினல் அதிக வெள்ள நீர் குளத்தில் தேங்கி நின்று தரைக்கீழ் நீராக மாற வாய்ப்புண்டு (அட்டவணை 9). ஒவ்வொருவரும் தமது வளவு நீரை வெளியேற்றுது உட்செல்ல வைக்க வேண்டும். தாம் வாழ்ந்தால் போதும் என்று வெளியில் நீரைவிடக் கூடாது.

அட்டவணை 9

குளங்களும் கிணறுகளும் (மதிப்பீடு)

| | கிணறு | குளம் |
|---|---|---|
| மண்டைதீவு | 800 | 09 |
| நெடுந்தீவு | 3100 | 34 |
| புங்குடிதீவு | 3200 | 06 |
| வேலணைத்தீவு | 4500 | 26 |
| நயினதீவு | 2000 | 11 |
| அனலைதீவு | 1000 | 08 |
| எழுவைதீவு | 150 | 01 |
| காரைதீவு | 2400 | 07 |

அதிக கிணறுகள் தோண்டுவதும் பிரச்சினையை உருவாக்குகிறது. அதாவது ஒரே காலத்தில் ஒரே இடத்தில் பல கிணறுகள் மூலம் நீர் வெளியேற்றப்படுகிறது. அதே சமயம் தரைக்கீழ் நீர் மட்டத்தை அதிகரிக்க எவ்வித செயற்பாடும் செய்யப்படுவதில்லை. ஆழமற்ற அகலமான கிணறுகளே உகந்தவை. ஆகவே மழைநீரின் ஒரு துளியும் வீணே கடலுக்குச் செல்ல அனுமதிக்காது தரைக்கீழ் நீராக மாற்ற நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

## 6.2 பாவனையை மட்டுப்படுத்தல்

ஏதோ ஒரு வகையில் கட்டாயமாக நீர்ப்பாவனை மட்டுப்படுத்தப்படல் வேண்டும். இவ்வாறு மட்டாக, சிக்கனமாக இல்லாமல் விரும்பியபடி நீரை இறைத்ததால் குறிப்பிட்ட பகுதிகள் உவர் நீர் வலயமாக மாறிவிட்டன. ஆகவே இதை இனியாவது தடுக்க சில வழிகளைக் கடைப்பிடித்தாக வேண்டும். குறைந்த பட்சம் மார்ச் மாதம் வரையிலாவது இயன்றவரை குளங்களை நீர்ப்பாய்ச்சிப் பயன்படுத்த வேண்டும். நீரைப் பாய்ச்சிப் பயிரிடும் நடவடிக்கைகள் மார்ச் மாதத்தின் பின் தடுக்கப்பட வேண்டும். தேவைக்கதிகமான நீர் இறைக்கும் இயந்திர உபயோகம் கட்டுப்படுத்தப்பட வேண்டும். குறிப்பாக வீடுகளில் மின்சார சக்தியில் இயங்கும் இயந்திரம் பொருத்துவது தடுக்கப்பட வேண்டும். மழையற்ற மாதங்களில் கிணற்று நீர் பாவனையைக் கட்டுப்படுத்த வேண்டும். குழாய் மூலமோ, கொ கலன் மூலமோ தேவைக்கதிகமாக நீர்விநியோகம் செய்யக்கூடாது. சிறு தீவுகளில் அல்லது மிகச் சிறுஅளவான நன்னீர்ப் படுக்கையைக் கொண்ட நயினதீவு, அனலைதீவு, காரைதீவு போன்றவற்றில் குழாய் மூலமான நீர் விநியோகம் வெற்றியளிக்காது. வேகமாக நீர் வெளியேற்றப்படுவதால் உவர்நீராக மாறுதலடையும்.

## 6.3 கடல் நீர் உள்வருதலைத் தடைசெய்தல்

கடல் நீர் இரு வழிகளால் உள்வருகிறது. மாரி காலத்தில் கடல் நீர் மட்டம் கூடுகின்றபோது உள்வந்து நன்னீர் தேங்கி நிற்கும் இடங்களில் கலக்கின்றது. இதனல் உள்நாட்டு நீர் நிலைகள், பயிரினங்கள் பாதிக்கப்படுகின்றன. இது தடுக்கப்படவேண்டும். இதற்காக தீவுகளில் 30 தடுப்பு அணைகள் போடப்பட்டு இருப்பதாக அறியப்படுகிறது. இவற்றுள் வேலணை வடக்கு, மண்டைதீவு, சரவணை வடக்கு, காரைதீவு கிழக்கு-வடக்கு, புங்குடுதீவு ஊரதீவு, நெடுந்தீவு, போன்றவை குறிப்பிடத்தக்கவை. ஆயினும் இவை எல்லாம் இன்று தூர்ந்து விட்டது. ஏற்ற இடங்களில் இவை புதுப்பிக்கப்பட்டு அமைக்கப்பட வேண்டும்

கடல்நீர் உள்வரும் இன்னொரு வழி தரைக்கீழ் பாதைகளால் ஆகும். குறிப்பிட்ட இடத்தில் நன்னீர் கூடுதலாகப் பாவிக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படும்போது அந்த இடத்திற்குக் கடல்நீர் வந்து சேர்கிறது. நன்னீர் பாவனையைக் குறைத்து தரைக்கீழ் நீர் மட்டத்தை அதிகரித்தால் மட்டுமே இவ்வாறு உப்புநீர் உள் வருதலைத் தடுக்க முடியும்.

## 6. 4 உயிர்ச்சூழல் ஒழுங்கு

பனை தான் முக்கிய தாவரமாக இருந்தாலும் அதை யாரும் இப்போது பயிரிடுவதில்லை. அழிப்பதுதான் முக்கிய தொழிலாக இருக்கிறது. மணல் அகற்றுவதும் ஒரு பிரதான தொழில். இது மண்கும்பான், அல்லைப்பிட்டியில் வேகமாக நடைபெற்று அதிக தூரத்துக்கு மண் எடுக்கப்பட்டுள்ளது. கடல் நீர் மட்டத்துக்குக் கீழும் சில இடங்களில் எடுக்கப்பட்டுள்ளது. எனவே இங்கு பள்ளமான இடங்கள் மணலினால் நி ப்பப்பட வேண்டும். நன்னீர்ப் பகுதிகள் இவை எனப் பிரகடனம் செய்யப்பட்டு அவற்றின் உயிர்ச்சூழல் ஒழுங்கு பாதுகாக்கப்பட வேண்டும். மரங்கள் அழிக்கப்படாமல் பாதுகாக்க வேண்டும். மண்ணின் ஈரத்தைச் சமப்படுத்தும் தொழில் தாவரங்கள் செய்கின்றன. ஈரப்பதனை அதிகரிக்கின்றன. மழை ஈர்ப்பு நிலையினையும் உருவாக்குகின்றன. இதனால் மரங்கள் வளர்க்கப்பட வேண்டும். பனை, புளி, யூகாலிப்டஸ், இப்பில் - இப்பில், சவுக்கு, வேம்பு மரங்கள் ஏற்றவை. குளங்களைச் சுற்றி சதுப்பு நிலத் தாவரங்கள் வளர்க்கப்பட வேண்டும். குளங்கள் மத்தியில் தாமரை, அல்லி, ஆம்பல் போன்றவற்றைப் பயிரிடல் ஆவியாக்கத்தைக் குறைக்கும். புல் நிலங்கள் மேய்ச்சல் நிலங்கள் போன்றவற்றைப் பாதுகாக்கவும் வேண்டும்.

## 6.5 நீர் அசுத்தமாகுதல்

நீர் அசுத்தமாகுதல் இலகுவில் தடுக்கக்கூடியதாகும். பெரும்பாலான குளங்கள் மாரி காலத்தில் நீர் நிலைகளாகவும், கோடை காலத்தில் குப்பை கொட்டப்படும் பள்ளங்களாகவும் இருக்கின்றன. பாவனையில் இல்லாத கிணறுகளும் குப்பை போடும் குழிகளாகக் காணப்படுகின்றன. மலசல கூடங்கள் கிணற்றுக்கு அண்மையில் அமைக்கப்படுகின்றன. மழை காலத்தில் வெள்ளமும், கிணறுகளும் இரண்டறக் கலக்குகின்றன. இவை ஒரு வகையான நீரை மாசுபடுத்தும் செய்முறைகள். இன்னொரு வலையில் உரமாக்கிகள், கிருமிநாசினிகள் மூலமும் நீர் மாசுபடுத்தப்படுகின்றது. பெரும்பாலான கிணறுகளின் நீர்மட்டம் தோட்டப்பயிர் காலங்களில் உயர இருக்கும். தோட்டத்தில் பயிர்களுக்கு இடப்படும் உரமாக்கிகள் மண்ணினூடாக கிணற்று நீர் மட்டத்தை அடைகின்றன. நெல் வயல்களில் நீர்வெள்ளமாக நிற்கும் சமயம் உரமாக்கிகள் வீசப்படுகின்றன. கிருமிநாசினிகள் தெளிக்கப்படுகின்றன. இவை கட்டுப்படுத்தப்படுதல் வேண்டும். மக்களின் பாவனையில் நீர் சுத்தமாக்கப்பட்டு பாவிக்கப்பட வேண்டும். அடையவிடல், வடிகட்டல், திரளவிடல், குளோரினேற்றல் ஆகிய முறைகள் மூலம் நீர் சுத்தமாக்கப்படலாம்.

## 6 6 மக்களுக்கு அறிவுறுத்தல்

தரைக்கீழ் ர் அதன் சேமிப்பு, கட்டுப்பாடான பாவனை, நீர் பாதுகாப்பும் பேணுதலும், உயிர்ச் சூழலியல், நீர் மாசுபடல், எதிர்கால சந்ததி என்பன பற்றி பொதுமக்கள், அறிவுறுத்தப்பட வேண்டும். கூட்டங்கள் துண்டுப் பிரபரங்கள், பாடசாலைக் கல்வி ஆகியன மூலம் அறிவுறுத்தலாம்.

## 7 0 நிறைவு

தீவகம், அதன் நீர்வளம், நீர் வளத்தில் தரைக்கீழ் நீரின் முதன்மை, அதனைச் சேகரித்தல், அதன் பாவனையைக் குறைத்தல், அதனை அருகிப் போகாமல் பாதுகாத்துப்பேணி எதிர்கால சந்ததியினருக்கு அளித்தல் என்பன பற்றிச் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு நாம் பின்பற்றுவிட்டால் நாம் திருப்பணி செய்து போற்றும் ஆலயங்கள், மதம் மொழி, இனம், பிரதேசம் அனைத்துக்கும் எதிர்காலம் இல்லை. ஆகவே இனத்தை, மொழியை, பிரதேசத்தைப் பேணுதல்போல், பாதுகாத்தல்போல், அபிவிருத்தி செய்ய உழைப்பதுபோல், தரைக்கீழ் நீரையும் நாம் பேண வேண்டும். பாதுகாக்க வேண்டும். சேமிக்க வேண்டும். இது தீவகத்துக்கு மட்டுமல்ல யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கும் பொருந்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பணி வளர்ச்சிக் கண்ணோட்டம்

வேலணைத்தீவு தனக்கெனத் தொன்மையான கலாச்சாரம் பாரம்பரியத்தைக் கொண்டதாகும். இத்தீவில் வேலணை மேற்கு ஒரு சிற்றூர். இவ்வூருக்குச் சிறப்பான அம்சம் மறுசமயக் கலப்பின்மை, மக்கள் சைவ சமய அனுட்டானங்களிலும், வாழ்க்கை முறைகளிலும் தனித்துவமானவர்கள். அதனால் இவர்களது சைவ வைதிக வாழ்க்கை முறை இலங்கையில் மாத்திரமல்லாது தமிழ் நாட்டிலும் பிரசித்தி பெற்றிருந்தது. இவற்றை பல ஆண்டுகளுக்கு முன்பு வருகை தந்த சி. கே. சுப்பிரமணியம் முதலியார் அவர்கள் ''சைவசித்தாந்தம்'' என்ற பத்திரிகையில் வைதிக சைவஅனுட்டானத்துடனமைந்த வாழ்க்கை முறையைக் காண வேண்டுமாயின் யாழ்ப்பாணத்துக்கு அப்பால் அமைந்த தீவுப்பகுதியில் காணலாம். என எழுதியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பொ. கேதாரநாதன் B. Sc,
Dip in Ed. (Cey)
கோத்தணி அதிபர்
சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி
ம. ம. வி, வேலணை.

இப்படிப்பட்ட வாழ்க்கை முறைக்கு அடித்தளமாய் அமைந்தது அவ்வூரின் சிறப்பு மிக்க ஆலயமான பெரியபுலம் மகாகணபதிப் பிள்ளையார் ஆலயம் இவ்வாலயத்தை மையமாக வைத்து அமைந்தவை சைவபிரகாச வித்தியாலயம், நடராஜ வித்தியாலயம், குரு மடாலயம் ஆகியன, இவையாவும் சைவ அனுட்டானங்களான நித்திய பூசை விசேட பூசை, உற்சவங்கள், புராண படனம், குரு பூசைகள், மகேசுரபூசைகள், உபந்நியாசங்கள், சிவதீட்சை வித்தியாரம்பம் ஆகியன நடைபெற இடமளித்தன. எனவே இவ்வாலயங்கள் சைவசமய பாரம்பரியத்தின் மையமாயின.

இச்சைவசமயாசார வாழ்க்கைக்கு உகந்த மூலாதாரமாய் அமைந்தது நெல் லாவில், மண்ணில் முளைத்த கொழுந்துகள் கந்தப்பு உபாத்தியார், நாகலிங்க உபாத்தியார், தம்பு உபாத்தியார், இராசா உபாத்தியார். இவர்களின் பேச்சு, எண்ணம், செயல் யாவும் சிவமயமானவை அதனாலன்றோ ''கந்தப்பனுதிப் பண்டிதன் வாழ் வேலணையூர் .. ......'' என்று இறும்படக் கூறினர். இவர்களது வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்து இருந்தவை இவ்வாலயங்கள். இக்காலம் பெரியபுலம் மகாகணபதிப்பிள்ளையார் ஆலயத்தின் பொற்காலம் எனலாம். கீர்த்தியும் புகழும் மிகுந்த ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட வேண்டிய நிலையில் இருந்தமையால் ஆலயத்தை மாற்றியமைக்க சைவப் பொதுமக்கள் சேர்ந்து புதிய ஆலயமொன்றை நிர்மாணிக்க நிர்மானித்து ஐயனை பாலஸ்தாபனமும் செய்தார்கள்(?). பாலஸ்தாபனம் செய்த நிலையில் ஐயன் நீண்டநாள் இருக்க நேரிட்டது துரதிஷ்ட வசமானது. எனினும் அக்காலச் சைவப் பெரியார்களின் விடா முயற்சியினால் புதிய ஆலயத்திற்கான கருங்கற்கள் சைவ மக்களின் பங்களிப்புடன் காலிமாநகரிலிருந்து எடுப்பதற்கு திருவருள் கூடிற்று. கருங்கல் திருப்பணியை நிறைவேற்ற முழுமனதுடன் முயன்றவர்களுள் தலையானவர்கள் சிவஸ்ரீ நமசிவாய தேசிகர், சே. நாகலிங்கம். க. வைத்திலிங்கம், படிகலிங்கம், தம்பு உபாத்தியார் ஆ. அம்பலவாணர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். திரு. சே. பொன்னையா அவர்களின் உதவியுடன் காலியிருந்து 1921ம் ஆண்டு கருங்கற் பாறைகள் சப்பல்கள் மூலம் ஊர்காவற்றுறைத் துறைமுகம் வந்தடைந்தன. அத்திவாரம் இடப்பட்டு ஆலய நிர்மாணப் பணி தொடங்கிற்று. எனினும் ஆலய நிர்மாண வேலையைத் துரிதப் படுத்த ஒரு நிர்மாக சபை சே. பொன்னையா அவர்களைத் தலைமையாகக் கொண்டு நிறுவப்பட்டது. இக் காலப்பகுதியில் கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டப வேலைகள் பூர்த்தியாயின. 1939ம் ஆண்டு திரு. சே. பொன்னையா சிவபதமெய்தினார். அதனைத் தொடர்ந்து 1940ம் ஆண்டு சே. கந்தையா அவர்களைத் தலைவராகவும் ஆ. வி. நாகலிங்கம் அவர்களைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலாளராகவும் கொண்ட நிர்மாணசபை தெரிவாயிற்று. இக்காலத்தில் சபையின் முயற்சிகளை செவ்வனே செய்து முடிக்க சைவமக்கள் தமது பேராதரவை நல்கினர். ஆலய வேலைகள் ஓரளவு பூர்த்தியாக்கப் பெற்று 1948 ம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து ஆலய நித்திய நைமித்தியங்கள் செவ்வனே நடக்கத் திருவருள் பாலித்தது. ஆலயத்தின் பரிணும வளர்ச்சிப்பணி இனிதே நடந்திடத் ஆலயத்தின் சோடிக்கப்பம், சகடை, வாகனுதிகள், தேர் ஆகியன பெறப்பட்டன. சகடையை முன்னின்று செய்தளித்தவர் சி. ம. கணபதிப்பிள்ளை. என்பது குறிப்பிடத்தக்கது. ஆலயத்திற்கு தேவையானவற்றை ஆடம்பரபேதமின்றி அளிப்பது இவரது பண்பாகும். ஆலயத்தின் நிர்மாணவேலையிலும் கும்பாபிஷேகத்தையும் திறம் படநடாத்திஆலயத்திற்கு தேவையான தேரையும் உருவாக்கிய திரு மு குமாரசுவாமிப் பிள்ளை அவர்களை நாம்மறக்க இயலாது. கருங்கல் திருப்பணி வேலையில் தம்மை அமைதியாக ஈடுபடுத்தியும் நிர்மாணவேலைக்கு போதிய நிதியம் காணுதபோது இரு கும்பாபிஷேகங்களையும் தமது செலவிலே செய்வித்து ஆலயத்திற்கான கொடித் தம்பத்தையும் செய்வித்து அளித்தவர் வெல்லப் பிட்டியார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆலயத்தின் தொடர்ச்சியான அபிவிருத்தியில் எந்தவொரு படாடோபமுமின்றி பங்களித்த வே. நாகலிங்கம்' சோ. சிவரெத்தினம், சி. கந்தையா கா. சுபதிப்பிள்ளை செ. நமசிவாயம், மு நாகநாதபிள்ளை ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள் இவர்களின் சேவை நினைத்தற்பாலது.

ஆலயத்தில் பக்தியுளர்ச்சியை வளர்ப்பதில் தேவார ஓதுதல், கூட்டுப்பிரார்த்தனை, நடாத்துதல், புராணபடனம் ஆகியவற்றில் தம்மை முழுமையாக அர்ப்பணித்த வே . பசுபதிப்பிள்ளை அவர்களை குறிப்பிடுவது முக்கியமாகும்.

1965 – ல் திரு. சே. கந்தையா அவர்கள் சிவபதமெய்தினர் பின்பு ஆலயத்தின்வழிபாட்டாளர் கூட்டம் கூடி சே. நா. சரவணமுத்து தலைவர் நா. க. ப. அரசகேசரி செயலாளர், க. சண்முகலிங்கம் பொருளாளர் ஆகக் கொண்ட புதிய பரிபாலன சபையைத் தெரிவு செய்தனர். சிலகாலத்தில் திரு அரசகேசரி' செயலாளர் பதவியிலிருந்து விலக ந. கணேசபிள்ளை செயலாளராக நியமிக்கப் பெற்றுர். இக்காலத்தில் முற்றுப் பெறுமலிருந்த சுற்றுக் கொட்டகைகள் பூர்த்தியாக்கப் பெற்று சீமெந்து சாறையிடப் பட்டதுடன் ஆலயம் புனரமைக்கப்பட்டு மீண்டும் மகா கும்பாபிஷேகம் 1969ம் ஆண்டு இனிதே நடைபெற்றது.

சைவ அன்பர்களான அ. கணபதிப்பிள்ளை குடும்பத்தினரால் புதிய வசந்த மண்டபமும், ஆ. வி. நாகலிங்கம் குடும்பத்தினரால் சந்தான கோபாலருக்கு தனி ஆலயமும் ச. பழனிநாதன் அவர்களால் சண்டேசுரருக்கு தனி ஆலயமும் அமைக்கப் பெற்று கும்பாபிஷேகமும் நடைபெற்றன. ஆலயத்திற்கு தேவையான நந்தவனம் மு. நா. சண்முகம் அவர்களால் அமைக்கப்பட்டது. புதிய மணிக்கூட்டிற்கு அத்திவாரமிடப்பட்டது. ஆலயத்தின் முழுமையான அமைப்பிற்கு வேண்டிய இராசகோபுரத்தை தமது செலவிலேயே அமைக்கத் திடசங்கற்பம் பூண்டு அதற்கான கருங்கல் முதலியவற்றைக் கொணர்ந்து அத்திவாரமிட்டு தொடங்கி வைத்தவர் க. இராசதுரை அவர்கள். கோபுர வேலைகள் தொடர்ந்து செயற்பட்டு முடியும் தறுவாயில் உள்ளது.

கோபுர வேலையை விரைவில் செய்து முடிக்கும் எண்ணத்துடன் வழிபாட்டாளர்கள் க இராசதுரை அவர்களைத் தலைவராகக் கொண்ட பரிபாலன சபையை உருவாக்கினர். சில ஆண்டுகளின் பின் ஆலயத்தின் வளர்ச்சிக்கு குந்தகமாய் அமைந்த காரணிகளைப் புரிந்து உணர்ந்து, வழிபாட்டாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரது சம்மதத்துடன் ஒரு புதிய பரிபாலன சபையைத் தெரிவு செய்ய பெரு முயற்சி செய்து வெற்றியும் கண்டது வேலணை மேற்கு நல்லிணக்கசபை. இச்சபை விதந்துரைத்த தீர்வின்படி ஆலயத்தின் பரிபாலன சபை பதினொரு திருவிழாக்காரரின் பதினொரு பிரதி நிதிகளையும். ஆலயத்தின் பதிவு செய்யப்பட்ட வழிபாட்டாளரால் தெரிவுசெய்யப்பட்ட பதினான்கு அங்கத்தவர்களையும் கொண்டிருக்கும். இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட இருபத்தைந்து உறுப்பினர்களும் ஒன்பது பேர் கொண்ட நிர்வாக சபையைத் தெரிவு செய்வர். இவர்களே ஆலயத்தின் பரிபாலனத்திற்குப் பொறுப்பானவர்களாவர். இவர்களின் பதவிக்காலம் ஒரு வருடமாகும், இத்தீர்ப்பின் அடிப்படையில் ச. நல்லைநாதன் – தலைவர், மு. சுந்தரலிங்கம் - செயலாளர், மு. மகேந்திரன்-பொருளாளராகக் கொண்ட பரிபாலன சபை தெரிவாயிற்று. ஒரு வருடத்தின் பின் இதே அடிப்படையில் மீண்டும் ச. நல்லைநாதன் – தலைவர், யா. இராமநாதன் - செயலாளர், மு. மகேந்திரன் - பொருளாளராகக் கொண்ட பரிபாலன சபை தெரிவு செய்யப்பட்டது. இக்காலத்தில் முற்றுப் பெறாது இருந்த மணிக்கூட்டுக் கோபுரங்கள் பூர்த்தியாக்கப்பட்டு ஆலய மண்டபங்கள் திருத்தி அமைக்கப்பட்டு மகா மண்டபம் மறுசீரமைக்கப்பட்டது, பரிவாரமூர்த்திகட்கும் நவக்கிரக நாயகர்க்கும் ஆலயங்கள் அமைக்கப் பெற்று கும்பாபிஷேகம் செய்வித்தமை ஒரு பெரும் பேறாகும், இப்பாரிய திருப்பணிகளை பொது நிதியிலும் தனித்தனி உபயமாகவும் செய்வித்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வுபயங்களைச் செய்தவர்களான க. யோகலிங்கமும் சகோதரர்களும், ஆ. பொ. பரராசசிங்கம் குடும்பத்தினர், நா. சுப்பிரமணியம் குடும்பத்தினர், வே செல்லத்துரை குடும்பத்தினர் ச. சண்முகராசா, க. மோகனதாஸ், வா. த. செல்வம், க. சிவசரணம் குடும்பத்தினர், செ. சிற்சொரூபன் குடும்பத்தினர், வெல்லைப்பிட்டிக் குடும்பத்தினர். ந. கேசவநாதன் குடும்பத்தினர் அனைவர்க்கும் ஐங்கரனின் அருள்நோக்கு உண்டு. மேலும் எம்பெருமானின் சப்பரம் க. பொன்னுத்துரை அவர்களின் உபயத்தில் செய்யப்பட்டுவருகிறது தேர்த்திருவிழா உபயகாரர் புதிய சித்திரத் தேரை உருவாக்கத் திட்டமிட்டுள்ளார்கள் இப்பாரிய கைங்கரியத்தைத் தொடங்கி சிறப்புற நிறைவேற்றுவதற்கு முன்னின்றுழைத்த அடியார்க்கும் பரிபாலன சபையினர்க்கும் குறிப்பாகப் பொருளாளர் மு. மகேந்திரன் அவர்கட்கும் சைவப் பொதுமக்கள் நன்றியுடையோராய் இருப்பர்.

போற்றி! கலியாணி புதல்வனே! பாட்டினிலே
ஆற்ற லருளி அடியேனைத் - தேற்றமுடன்
வாணிபதம் போற்றுவித்து வாழ்விப்பாய்! வாணியருள்
வீணையொலி என்நாவில் வீண்டு

—பாரதியார்

மேன்மைப் படுவாய் மனமே! கேள்
விண்ணின் இடிமுன் விழுந்தாலும்,
பான்மை தவறி நடுங்காதே.
பயந்தா லேதும் பயனில்லை;
யான்முன் னுரைத்தேன் கோடிமுறை,
இன்னுங் கோடி முறைசொல்வேன்,
ஆன்மா வான கணபதியின்
அருளுண்டு அச்சம் இல்லையே.

—பாரதியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயம் கனிந்த நன்றி உரித்தாகுக.

வேலணை மேற்கு, பெரியபுலம் மகாகண பதிப்பிள்ளையார் கோயில் புனராவர்த்தனப் பிரதிஷ்டா திருக்குடத் திருமஞ்சன மகா கும்பாபிஷேகம் சுக்ில ஆண்டு 'பங்குனித் திங்கள் 29-ம் நாள் (11-04-1990) புதன் கிழமை காலை 9.00 மணி 7நிமிடத்தின்மேல் 10.00 மணிக்குள்ளாக அமைந்த சுபதினத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மண்டலாபிஷேகப் பூர்த்திவிழா இன்று சிறப்பாக நிறைவுபெறுகிறது.

இப் பெருவிழா எம்பெருமான் திருவருளினாலும், அடியார்களின் கூட்டு முயற்சியினாலும் திட்டமிட்டவாறு மிகச் சிறப்பான முறையில் நடந்தேறியது. இப் பெருவிழா சிறப்புற உழைத்த அத்தனை பேரையும் நெஞ்சம் நிறைந்த நன்றியுடன் எண்ணிப் பார்க்கிறோம்.

பாரிய திருப்பணி வேலைகளை தாமே பொறுப்பேற்று மிகக் குறுகிய காலத்துள் நிறைவேறுவதற்கு உதவிய திருப்பணி உபயகாரர்களுக்கும், கும்பாபிஷேகத்திற்கான நிதியினை பண உதவியாக அளித்த உள்ளூர், வெளியூர் அடியார்களுக்கும் நமது இதயம் கனிந்த நன்றி.

புனராவர்த்தனப் பிரதிஷ்டா நவகுண்ட மகாயாகத் திருக்குடமுழுக்கு நன்னீராட்டு விழாக் கிரியைகளில்பங்காற்றிய பிரதமகுருக்கள் சிவஸ்ரீ.ச.பா. வைத்தியநாத சிவாச்சாரியார் அவர்களுக்கும், அவருடன் உதவியாக பங்காற்றிய ஏனைய சிவாச்சாரியார்களுக்கும் ஆலய பிரதம அர்ச்சகர் பிரம்மஸ்ரீ. இ. சோமாஸ்கந்தசர்மா அவர்களுக்கும் ஏனைய அந்தணப் பெருமக்களுக்கும் நமது நன்றி உரித்தாகின்றது.

கும்பாபிஷேகத்திற்காக திருப்பணி வேலைகளை சிறப்பானமுறையில் நிறைவேற்றி உதவிய நாகமுத்து கோபால இரத்தினம் குழுவினருக்கும், வர்ணவேலைகளை நிறைவேற்றிய செல்லையா மனோகரன் குழுவினருக்கும், ஏனைய உள்ளூர் கட்டிட, சிற்பாசாரிய கலைஞர்களும் நாம் நன்றி கூறுகின்றோம்.

கும்பாபிஷேக தினத்தில் வீரகேசரி, உதயன் பத்திரிகைகளில் சிறப்பிதழ்களைவெளியிடுவதற்கு உதவிய கொழும்பு வர்த்தகர்களுக்கும், யாழ் நகர் வர்த்தகர்களுக்கும் நாம் நன்றி நவில்கின்றோம்.

கும்பாபிஷேகப் பெருவிழா சிறப்பான முறையில் நிறைவேற அயராது அல்லும் பகலும் பாடுபட்ட ஐங்கரன் அடியார்களுக்கும், பொருள் உதவி, சரீர உதவி, வாகன உதவி நல்கிய அனைவருக்கும், கிரியைகளுக்கு தேவையான செம்பு, குடம் முதலியவற்றை உதவிய ஏனைய தேவஸ்த்தான பரிபாலன சபையினர்களுக்கும் நமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகிறது.

ஆலய செயற்பாடுகளில் எமக்கு துணையாக நின்ற முடிப்பிள்ளையார் இந்து இளைஞர் மன்றம், ஐங்கரன் அன்னதான சபை, வேலணை மத்திய கல்லூரி சாரணர்கள் ஆகியோருக்கும் எமது நன்றிகள்.

உங்கள் கரங்களில் தவழ்கின்ற கும்பாபிஷேக சிறப்பு மலர் சிறப்பான முறையில் அமைய இடைவிடாது உழைத்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. செ. பாலச்சந்திரன் அவர்களுக்கும், அவருடன் ஒத்துழைத்த யாழ். இந்து ஆரம்பபாடசாலை அதிபர் திரு. மு. திருஞானசம்பந்தபிள்ளை அவர்களுக்கும், யா/நாரந்தனை, கணேச வித்தியாசாலய உபஅதிபர் திரு. பொ. அருணகிரிநாதன் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

இன்றும் இவ்வரிய புனிதப்பணி சிறப்பான முறையில் நிறைவேற உழைத்த எமது ஆலய பரிபாலன சபை உறுப்பினர்களுக்கும் அடியார்களுக்கும் நாம் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்த இடத்தில் தனித்தனியாக எல்லோருக்கும் நன்றி தெரிவிப்பது பொருந்த மற்றதாக இருப்பதால் இப்பெருவிழா சிறப்புற பல வழிகளிலும் எமக்கு உதவிய அத்தனை அடியார்களுக்கும் எம்பெருமான் நல்லருள் புரிய வேண்டுகிறோம்.


திருப்பணி வேலைகள் இன்னும் முடிவடையவில்லை அவற்றைத்தொடர்ந்தும் நிறைவேற்றுவதற்கு அடியார்களின் அன்பும் ஆதரவும் எமக்குத்தொடர்ந்துகிடைக்கும் என்ற நம்பிக்கை உண்டு. எல்லாம் வல்ல எம்பெருமான் பாதாரவிந்தங்களை வணங்கித் துதித்து நல்லருள் பெறுவோம்

**மு. மகேந்திரன்**

பொருளாளர், ஆலய பரிபாலனசபை
பெரியபுலம் மகாகணபதிப்பிள்ளையார்
ஆலயம், வேலணை மேற்கு, வேலணை.

107500
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பணிகள்
தொடரட்டும்
திருவருள்
பாலிக்கட்டும்



யோகு ரேடிங் கோ.
332, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐங்கரன் அருள் வேண்டி,

''சந்தநன் மலரணி தாழ் சடையன்
தந்தம தத்தவன் ருதையோதான்
அந்தமில் பாடலோ னழகனல்ல
எந்தவ விராமன தீச்சரமே.''

# சண்முகா ரேட் சென்ரர்.
**167, கே. கே. எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம்.**

---

மகா கும்பாபிஷேகம் சிறப்புற நிகழ திருவருள் பாலிக்குக.

''கல்லா னிழல் மலை
வில்லா ரருளிய
பொல்லா ரிணை மலர்
நல்லார் புனைவரே''

# கருணா ஸ்ரோர்ஸ்
**234, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்துக்கும் ஆண்டவனை வேண்டுகிறோம்.

"ஞான மாமத
யானை மேவுறின்
மான மாயையஞ்
சேனை யோடுமே."

**நா. மு. சண்முகம் அன் சன்ஸ்.**
272, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

புந்தியில் வைத்தடி போற்றுவோம்.

"ஐந்துகரத்தனை ஆனைமுகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே."

**ஸ்ரீ நாதன் ஜுவல்லர்ஸ்.**
309, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெவ்வினைகள் வேரறுக்கும்
வேலணையூர்ப் பெரியபுலம் விநாயகப் பெருமானின்
மகாகும்பாபிஷேகம் காண்போம்.

எம்பெருமான் அருள் வேண்டி நிற்கும்

**ருகுணாஸ் ரேடிங்,**
**284, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

மகாகும்பாபிஷேகமும் மண்டலாபிஷேகமும்
இனிதே நிறைவெய்த வேழமுகத்தான் அருள்வேண்டி.

''வேழ முகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுந்து வரும்...''

**ரூபநிதி ஸ்ரோர்ஸ்**
**151, கே. கே. வீதி,**
**யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலமிசை நீடு வாழ்ந்து நின் தொண்டு புரிய அருள்க.

''ஆடும் பரிவேல் அணிசே வலெனப்
பாடும் பணியே பணியா அருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியானை சகோதரனே.''

**சீமாட்டி நகை மாளிகை.**
**220 A, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

வழிபடு மவரிடர் தீர்த்தருள்வாய்.

''பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.''

**குமரன் றேடர்ஸ்.**
**322 (B), ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீயாக நானிருந்தால்

பெற்றெடுத்த அன்னையென உன்னை யேஎண்ணிப்
பெரும் பகுதி நெருப்பினேலே மெழுகாய் வேக
வெற்றறிவிற் குள்ளத்தை விற்றெடுத்தார்
வெம்பும் வகை ஏது தெய்வம் என்றே கூற
சற்றுமசையாமல் நீ இருக்கலாமோ
சக்தியோடு தரணிக்கு நேரில் வந்தால்
நற்றுணையாய் நம்புவர் துடிப்படங்கும்
நகைப்பவரின் துடுக்கிங்கே சேர்ந்தடங்கும்.

(சௌந்தரா கைலாசம்)


# றைஸ் மில்
## கைலாயபிள்ளை - சுதுமலை.


## நீயாக நானிருந்தால்

எல்லையில்லா உன்திறமை உன்றன் சக்தி
எனக்கிருந்தால் பரம் பொருளே! உன்னைப்போல
தில்லையிலா பழனியிலா குடியிருப்பேன்?
தெருத்தெருவாய் என்பெருமை பேசித் தீர்ப்பேன்!
இல்லையென்பார் தமைப்பொறுக்க மாட்டேன்! அன்பர்க்
கென்வலிமை காட்டிடுவேன்! அதனால்தானே
தொல்லையுறும் மனிதனென நானிங் கேங்கத்
தூய பெரும் தெய்வமென உள்ளாய் நீயே.

(சௌந்தரா கைலாசம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மனிதராகப் பிறத்தல் அரிது.
பிறந்தாலும் அவயவக் குறைவில்லாமல்
பிறத்தல் அரிது. அப்படிப் பிறந்தாலும்
கல்வியில் சிறத்தல் அரிது. அப்படியே
ஆயினும் ஐங்கரன் பக்தியுடன்
இருத்தல் அரிது.''

**கபிலன் ரெக்ஸ்**
**வங்களாவடிச் சந்தி,**
**வேலணை.**

''வரப்புயர நீருயரும்
நீருயர நெல்லுயரும்
நெல்லுயர குடியுயரும்
குடியுயர நாடுயரும்''

அனைத்துக்கும்
ஐங்கரன் பாதம் பணிவோம்.

**விஜிதா மில்**
**கொக்குவில்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானத்தில் சிறந்தது அன்னதானம்.
கும்பாபிஷேகம், மண்டலாபிஷேகம், மகோற்சவ
காலங்களில் அன்னதானம் செய்க.

வந்தனையைப் பொறுத்திடலாம் எண்ணி எண்ணி
மகிழ்ந்திடலாம்; ஆனால் இவ் வையந்தன்னில்
நிந்தனையை யார் பொறுப்பார் இன்பத்தேவா?
நீயாக நானிருந்தால் நேரில் நேரில் சென்றே
என்றனையே இல்லையென்றாய் என முழங்கி
என் பெருமை முழுதுணர்த்தத் தவறேன்! ஆமாம்
உன்றனையார் தோன்றாமல் இருக்கச் சொன்னார்?
ஓகோஓ அதுதான் உன்றன் பெற்றி!

(நீயாக நானிருந்தால்; சௌந்தரா கைலசேம்)


# ரவீந்திரா அரிசி ஸ்தாபனத்தினர்
கொக்குவில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்தும் உணர்ந்தவன் அருள் வேண்டுவோம்.

"திருவுளங் கல்வியும் சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகு மாடத்துப் பிள்ளையைப் பேணுவாம்."

**உதயம் ரேடர்ஸ்.**
**232, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

---

குடமுழுக்கு விழா நிறைவடைய அருள் பாலிக்குக.

"நல்லார் தொழும் வெண்ணெய் நல்லூர்ச் சிவாலயத்துட்
பொல்லார் தாள் யாம் ஆடும் போது."

**ஸ்ரீ மாதா ஸ்ரோர்ஸ்.**
**126, பாங்ஷால் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஹா கும்பாபிஷேகம் சிறப்புற ஐங்கரனை வேண்டுகிறோம்.

''கைத்தல நிறைகனி அப்பமொ டவல் பொரி
கப்பிய கரிமுக னடிபேணி''

**அரஸ் ரெக்ஸ்ரைல்ஸ்**
**146, நவீனசந்தை,**
**மத்திய வீதி,**
**யாழ்ப்பாணம்.**



மஹா கும்பாபிஷேகம் சிறப்புற திருவருள் புரிக.

''விநாயகனே வெவ்வினையை
வேரறுக்க வல்லான்''

**அன்னராசா ஸ்ரோர்ஸ்**
**156, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பாபிஷேகம் இனிதே நிகழ எம்பெருமான் அடி பேணுகின்றோம்.

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழா அ ரெனின்"

**ஸ்ரீ காந் புத்தகசாலை**
**165, மின்சார நிலைய வீதி,**
**பஸ்நிலைய முன்புறம்,**
**யாழ்ப்பாணம்.**

**மக்மிலன் புத்தகசாலை**
**3, பஸ் நிலையம்,**
**யாழ்ப்பாணம்.**

மகா கும்பாபிஷேகமும் மண்டலாபிஷேகமும்
மகிழ்ச்சிகரமாக நிறைவெய்த விநாயகன்
அடி வேண்டுகின்றோம்.

**பெற்ரு ஏஜென்சி**
**ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகா கும்பாபிஷேகம் சிறக்க அருள் புரிவாய்.

"நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலை ஞானம்
கற்குஞ் சரக்கன்று காண்."

## நியூ அம்பாள் ரேடர்ஸ்.

**324, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

குடமுழுக்கு விழா சிறக்க பிரணவப் பொருளை வேண்டுகிறோம்.

"அப்புரம் எரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடி செய்த அதிதீரா..."

## அலங்கார் ஜுவல்லர்ஸ்.

**169, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகா கும்பாபிஷேகம் நிகழ்ந்து
மண்டலாபிஷேக பூர்த்தியும் காண
எம்பெருமான் ஆசீர்வதிப்பாராக.

**ரங்கம் ரேடர்ஸ்**
**16, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

அனைத்தும் இனிதே நிறைவெய்த
ஐங்கரன் பாதம் பணிகிறோம்.

**ஈசன் ரேட் சென்ரர்**
**வங்களாவடிச் சந்தி,**
**வேலணை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனராவர்த்தனத் திருக்குடத்
திருமஞ்சன குடமுழுக்கு விழா
நிறைவெய்த எம்பெருமானை
துதிக்கின்றோம்.

## நிக்காடோ ரேடிங் ஏஜென்சி

வங்களாவடிச் சந்தி,
வேலணை.

---

திருப்பணிகள் நிறைக!
திருமஞ்சன குடமுழுக்கு விழா நிறைவுற
ஐங்கரன் அருள் வேண்டுகிறோம்.

## அம்பாள் ஸ்ரோர்ஸ்

வங்களாவடிச் சந்தி,
வேலணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலணை மேற்கு அருள்மிகு முடிப்பிள்ளையார்
ஆலய கும்பாபிஷேகம் சிறப்புறவும்
அடியார்களுக்கு ஐங்கரன் அருள் கிடைக்கவும்
அவனை இறைஞ்சுகிறோம்.


**மல்லிகா கிறீம் ஹவுஸ்**
**ஆலடிச் சந்தி,**
**மானிப்பாய்.**


அருள் வேண்டுகிறோம்.

ஆனை முகத்தான் அடியினைத் தாழ் தொழ
ஞான மனைத்தும் வரும்.


**மு. மார்க்கண்டு**
**வேலணை கிழக்கு.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விஜயா அழுத்தகம், 551, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

University of Jaffna
107500
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய தேர் செய்திடுவோம்...



ஐந்து தசாப்தங்களாக ஐங்கரன் அடிபணிந்து

ஆலயமும் அழகுத் தேரும் அமைய

அரும் பாடுபட்டு. ஈற்றில்

அவர் தம் அடிக்கமலத்தே

வீற்றிருக்கும் அமரர்

மு. குமார சுவாமிப்பிள்ளை

நினைவாக

**மு. குமாரசுவாமிப்பிள்ளை குடும்பத்தினர்,**

120, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரைபு:- செ. பாலச்சந்திரன்

# வளர்க இறைபக்தி, வாழ்க சைவம்.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | யே | | | | | |
| | | | | ண | ப | தி | | | | |
| | | | | க | கா | ம | | | | |
| | | | பு | ல | ம | ம | ர் | | | |
| | | | ய | ரி | பெ | னே | வ | | | |
| | | ம | மை | ய | அ | ரு | ள் | ப | | |
| | | ர | பு | கோ | ஜ | ரா | இ | ர் | | |
| | க் | கு | ம் | ஒ | ளி | யா | னே | உ | ய | |
| | லி | ஒ | தை | த் | வ | து | த் | த | ர | |
| ரு | ளு | ம் | ஐ | ங் | க | ர | னே | ஓ | ங் | கா |
| த | த் | ர் | தீ | ர் | ட | ரி | வ | ய | டி | அ |
| | | ண | ப | | | | தி | யே | | |
| | | க | கா | | | | ம | ர் | | |
| | | பு | ல | | | | ம | ம | | |
| ய | ரி | பெ | ர் | ய | கு | ற் | மே | ணே | ல | வே |
| மு | டி | யு | ட | ன் | வி | ள | ங் | கி | டு | ம் |

(ஆக்கம்: செ. பாலச்சந்திரன்)


## பிள்ளையார் ஸ்ரோர்ஸ்

**31, மானிப்பாய் வீதி,**

**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org